உ
சிவமயம்
ஓம் நவநாதம்

# நவநாதம்







வெளியீடு:

நாவலப்பிட்டி - குயின்ஸ்பரி
ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயம்
ஸ்ரீ தேவசேனாபதி முருகன் ஆலய

## மகாகும்பாபிஷேக சிறப்புமலர்

05-01-1998

252
நவநா
SL/PR

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஓம் நவநாதம்!

# நவநாதம்

## 1998

நாவலப்பிட்டி - குயின்ஸ்பரி

## ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம்

(ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயம்)

வெளியீடு:

**ஸ்ரீ தேவசேனாபதி சுவாமி ஆலய**
**மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர்**

நிர்வாக ஆசிரியர்:
**இரா. இராஜகோபால்**

மலராசிரியர்:
**க. பொன்னுத்துரை J. P.**

பதிப்பாசிரியர்:
சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி
**கனகசபாபதி - நாகேஸ்வரன் M. A.**
முதுநிலை விரிவுரையாளர் சபரகமுவ பல்கலைக்கழகம்,
பரம்பரை அறங்காவலர் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஓம் நவநாதம்!

17615

# விநாயகர் வணக்கம்



திருச்சிற்றம்பலம்

பாலினால் நறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங்குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான் கணபதியீச்சரத்தானே.

(சம்பந்தர்)

இரும்பினின் வலியரேனும் எழுத்தறிவில்லாரேனும்
மருப்பினாற் பாரதத்தை வரையினிற் பொறித்தான் தன்னை
விருப்பொடு அர்ச்சனையியற்றி விரதமுமநுட்டித்து அன்னோன்
திருப்பதம் மறவார் என்றும் திருவருள் பெறுவரன்றே.

(விநாயக புராணம்)

திருச்சிற்றம்பலம்.



ஸ்ரீ நவநாத சித்தசிவனை
இலங்கைக்கு வரவழைத்த
ஸ்ரீமதி நாகன் பெருமாளம்மாள்



"அன்னபூரணி"
திருமதி சண்பகவல்லி ஜெயராம்

உ

சிவமயம்

ஓம்நவநாதம்

திருச்சிற்றம்பலம்

# சமர்ப்பணம்



கொல்லிமலைச் சித்தருக்கும், குயின்ஸ்பரிக்கும் மிக நெருங்கிய தொன்மை வாய்ந்த தொடர்புண்டு என்பதையும் இப் புனிதத்தலத்தின் சித்தர் பரம்பரையில் அவதாரம் செய்த ஸ்ரீ நவநாதசித்தரின் மகிமையையுணர்ந்து அவர்களின் அருளாசி பெற்றவர்கள் குயின்ஸ்பரி அன்னை நாகன் பெருமாளம்மாள் அவர்கள். இந்த ஆன்மிகத்தாயாகிய அன்னபூரணி அவர்களின் வழித்தோன்றல்களான அமரர்கள் திரு. எம். ஜெயராம், திருமதி சண்பகவள்ளி ஜெயராம் அவர்களின் நினைவாக இம்மலரை ஸ்ரீ நவநாத சித்தர்கள் சுவாமி அவர்களின் பொற்பாதகமலங்களுக்கே நிவேதனம் செய்கிறோம்.


நன்றி

**இரா. இராஜகோபால்**

பரம்பரை அறங்காவலர்

நிர்வாக ஆசிரியர்

"நவநாதம்"



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஓம் நவநாதம்!

# பொருளடக்கம்

பக்கம்


(1) விநாயகர் துதி

(2) ஸ்ரீமதி நாகன் பெருமாளம்மாள்

(3) சமர்ப்பணம்

(4) பதிப்புரை - வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M. A. 05

(5) திருவருள் நிறைந்த நல்லாசிகள் - பிரதிஷ்டா கலாநிதி சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் 08

(6) வாழ்த்துமலர் - சுவாமி ஆத்மகனாநந்தா 09

(7) Message From Swami Tantradeva 10

(8) ஞாயிறாய் வாழி - அருட்கவி சீ. விநாசித்தம்பி 11

(9) வாழ்த்துச் செய்தி - கௌரவ பெ. சந்திரசேகரன் (பா. உ.) 12

(10) வாழ்த்துச் செய்தி - கௌரவ வீ. புத்திரசிகாமணி, J. P. 13

(11) வாழ்த்துரை - கௌரவ இரா. தங்கவேல், J. P. 14

(12) வாழ்த்துச் செய்தி - திருமதி இ. கைலாசநாதன் 15

(13) வாழ்த்துச் செய்தி - இறைபணிச்செம்மல் எஸ். முத்தையாபிள்ளை J. P. 16

(14) வாழ்த்துரை - திருக்கேதீச்சரம் சரவணமுத்து அடிகள் 17

(15) வாழ்த்துச்செய்தி - பரோபகாரமணி K. K. சுப்பிரமணியம் 18

(16) வாழ்த்துச் செய்தி - க. எழில்வேந்தன், B. A. (Hons) 19

(17) ஆன்மிகப் பெருமலர் - க. பொன்னுத்துரை, J. P. (மலராசிரியர்) 20

(18) சித்தரின் வித்து - மு. கோ. செல்வராஜா, J. P. u. m 21

(19) சுவாமி விவேகானந்தரின் தெய்விகச் செய்தி 22

(20) தாயுமான சுவாமிகள் பாடல் 23

(21) லிங்காஷ்டகம் / மகிஸாஸுரமர்த்தனி துதி 24

(22) ஸ்ரீ நவநாதசித்த சிவன் துதி - நயினைக் கவி தியாகர் அருணாசலம் 25

(23) சித்தர்கள் யார்? - பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் 26

(24) திருமூலர் கண்ட சிவம் - பேராசிரியர் கலாகீர்த்தி சி. தில்லைநாதன் 29

(25) இந்துக்கள் ஏன் கல்லைக் கும்பிடுகிறார்கள்? - கலாநிதி வித்துவான் க. ந. வேலன் 34

(26) சித்தர்கள் - ஒரு கண்ணோட்டம் - அறிஞர் குமாரசாமி சோமசுந்தரம், M. A. 36

(27) அமுதக்கடவுள் - அருள்மொழியரசி, வித்துவான் வசந்தா வைத்தியநாதன் J. P. 41

(28) சிவலிங்கமும் தத்துவங்களும் - சிவாகமஞானபானு சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் 43

(29) திருவாசகம் சுட்டும் முல்லைப் பண்ணின் பூர்வீகம் இலங்கையா?
- திருநெறியதமிழிசை அரசு, நா. வி. மு. நவரத்தினம் 48

(30) கும்பாபிஷேகத் தத்துவம் - வைத்தியகலாநிதி சோமசேகரம் சபாநாதன் 51

(31) நவநாதேஸ்வரம் - வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M. A. 56

(32) சித்தரும் சிவனும் - நயினை சுப்பிரமணியம் கனகரத்தினம் 61

(33) எம் குலதெய்வம் குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதசித்தர் - இரா. இராஜகோபால் 67

(34) மகான் நவநாதசித்தர் - அமரர் எம். ஜெயராம் 69

(35) தமிழ்ச்சித்தர்கள் - செல்வி ரேவதி ஜெயராம் 71

(36) சித்தர்களுள் நவநாதசித்தர் - தமிழ்மணி ந. பரமேஸ்வரி 74

(37) சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்கள் - சைவப்புலவர் நா. விசுவலிங்கம் 77

(38) இலங்கையும் சித்தர் சிவாலயங்களும் - சைவநன்மணி புலவர் சி. விசாலாட்சி 79

(39) சித்தரின் நினைவில் சிவாலயம் - நயினை நாகமுத்து யோகநாதன், B. A. (Cey) 83

(40) நயினைச் சித்தரும் நவநாத சித்தரும் - தமிழ்நாவலர் க. இ. க. கந்தசுவாமி 87

(41) நயினை ஸ்ரீமத் முத்துலிங்க சுவாமி அவர்களின் திவ்விய சரித்திரச் சுருக்கம் 90

(42) சீவன் சிவலிங்கம் - கவிஞர் முருகவே. பரமநாதன் 92

(43) தேவாரம் வேதசாரம் - முத்தமிழ்மணி சு. கணேசசுந்தரன் 96

(44) சிவன் தடுத்த சுந்தரர் - அருள்மாமணி ப. க. கனகசபாபதி 99

(45) ஜெய் சீத்தாராம் - அருணாசலம் வைத்திலிங்கம் J. P. 102

(46) புண்ணிய பூமியில் ஞானப்பயிர்கள் - பெ. சு. இராஜேந்திரன் 104

(47) மெய்யடியார்கள் சொல்லும்
பொய்யும் மெய்யாகும் - திருமதி வாமதேவன் 109

(48) ஞானமது கைகூடும் ஞானத்திருத்தலம் - திருமதி கனகமாலினி சுப்புரத்தினம் (திருச்சி) 111

(49) நீதியே சைவம் - திருமதி விஜயலெட்சுமி ராமஜெயம் 112

(50) ஞானச்சேரி ஸ்ரீ யோகஆனந்தமயி மாதா - பெ. சு. இராஜேந்திரன் 114

(51) சைவ சமய அனுட்டானங்கள் - திருமதி மா. கனகலெட்சுமி 116

(52) அகங்காரம் தவிர் நெஞ்சே - இணுவில் வி. என். தில்லைநாதன் 118

(53) கல்விமான் அமரர் ஜெயராம் - ஆழ்கடலான் 120

(54) இதனை எல்லோரும் படியுங்கள் - நவரஸக்கலைஞானி 122

(55) பக்திவயல் விளைத்த பாரதி - ஆழ்கடலான் 126

(56) படங்கள் 131

(57) நன்றிக்குரியவர்கள் 141

உ
சிவமயம்
ஓம் நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# "நவநாதம்" - பதிப்புரை

**பதிப்பாசிரியர்**
அருள்மொழிச்செல்வர், செஞ்சொற்கொண்டல்,
சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி,
**கனகசபாபதி நாகேஸ்வரன்**, M. A. அவர்கள்
சிரேஷ்டவிரிவுரையாளர், சபரகமுவ பல்கலைக்கழகம்.
பரம்பரை அறங்காவலர், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.



நாதம்; நவநாதம்: 'நவ' என்றால் ஒன்பது புதுமை என்னும் பொருள்களிலே பேசப்படும். நவரஸம், நவக்கிரகம், நவகோள்கள், நவசக்திபேதம் என்பனவும் உண்டு. நவநீதம் என்றால் வெண்ணெய். நாதம் – சப்தம்: ஒலி. உயிர்க்குள் உயிர்ப்பாயிருப்பது நாதவொலி. எழுத்துக்கள் நாதத்தோடு ஒலியமைப்பை இயல்பாகவே கொண்டியங்குகின்றன. சுடுதண்ணீர்ப் போத்தலுள் நாதம் 'கும்' என்று சப்திப்பது போல மலைக்குகைக்குள்ளும், பாறைக்குள்ளும் 'நாதம்' ஒலித்துக் கொண்டேயிருக்கும். 'நாதம்' ஒரு சக்தி: நாதாந்த சக்தி. நாதாந்த சக்தி நயினை ஸ்ரீ நாகபூஷணி. நாதம் – இசையில் வருவது: பண்ணாயிருப்பது: குரல் வளத்தால் தெரிவது. குரல்வளம் தெய்விகமாயமைவது: பிறப்பால் உண்டாவது. அருணகிரிநாதர் 'நாதவிந்து கலாத் நமோநம' என்று திருப்புகழிலே பாடுகின்றார்.

கண்டாமணியொலியில் நாதமுண்டு: மந்திர ஒலியிலே நாதமுண்டு: பாடல்களிலே நாதமுண்டு: கற்களிலே நாதமுண்டு; மண்ணிலும் நாதமுன்டு: விண்ணிலும் நாதமுண்டு; விண்ணிலிருந்து வரும் நாதமே இடிமுழக்கம்.

ஸ்ரீ நவநாதசித்தர் பல்வேறு சித்துக்களைச் செய்து நாதப்பிரம்மமான சிவனுடன் இரண்டறக் கலந்து மகா சித்தி பெற்றவர். ஸ்ரீ தியாகப் பிரம்மம் நாதப்பிரம்மமே. இசைநாதம் விசித்திரமான, விஸ்தாரமான ஒலிபேதம் மிக்கது.

'நா' வளமிக்கவர் நவநாதர். அதிகங்கதைப்பவரல்லர். தமிழிலே நாவலர், நாராயணன், நாரம், நாரந்தம், நாவரசர், நாவல், நாட்பணி, நாடகம், நாடு, நாகரிகம், நாணம், நாள், நாம்பன், நாளங்களாடி, நாளேடு, நாட்காட்டி, நாட்கூடமை, நாட்கூலி, நாளிகேரம், நாய், நா, நாவளம், நாகம், நாகப்பிரதிஷ்டை, நாககன்னி, நாகன், நாரி (பெண்), நாடோடி, நாணன், நாகத்வு (நயினாத்வு), நாவாந்துறை, நாகர்கோயில், நாவலந்தீவு, நாகம்மை, நாமகள், நாயனம், நாகபூஷணி, நாகேந்திரன், நாகேஸ்வரன், நாபி (தொப்பூள்), நாமம், நாமசங்கீர்த்தனம், நாகசாந்தி, நாவலப்பிட்டி, நால்வேதம், நாசம், நாசகாரி, நாதன், நாம், நார், நாற்கோணம், நாற்றிசை, நாவலடி என்னுஞ் சொற்கள் மிக்க புகழ்பெற்றவை. இலங்கையின் 'நாப்பன்' இலங்குவது ஸ்ரீ நவநாத சிவாலயம் (நாப்பண் – மத்தி). மலையிலேயிருந்து தெய்வ அருள் பரப்பும் பீடம் ஸ்ரீ நவநாதசித்தர் நிலையம்; ஆலயம்.

இதுவரை குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயத்து முருகன் கோயிலின் மூலவர் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் என்று கருதப்பட்டு இப்பெயரே வழங்கிவந்தது. சென்ற ஆண்டு 19-11-1997 அன்று இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றபோது தான் இவ்வாலய மூலவர் ஸ்ரீ தேவசேனாபதி

என்று சிவாச்சாரியர்களாலும், எம்மாலும் தீர்மானிக்கப்பட்டது.

தேவசேனாபதியின் சிலையை நோக்கும்போது காலொன்றை மயில்மீது ஊன்றியவாறும், நிலத்திலே மறுகாலைத் தாங்கியவாறும் நான்கு கரங்களிலும் வில், அம்புகளுடன் ஆயுதங்களைத் தாங்கியவாறும் அமைந்துள்ள இச் சிலா விக்கிரகத்தின் தேஜஸ் வீசும், அழகொழுகும் திருமுகம் தரிசிப்போரை ஈர்த்துநிற்கிறது.

குயின்ஸ்பரியிலே நவநாதசித்தர் சிவலயம், ஸ்ரீ தேவசேனாபதி முருகன் ஆலயம், குகை என்பன ஆலயத்தின் மூர்த்திச் சிறப்பைப் பறைசாற்றி நிற்கின்றன. குறிஞ்சி தலச்சிறப்பு; முருகன் விரும்பி உறையும் தலம்; நிலம். ஆறு வளைந்து வளைந்து தலத்துக்குப் பேரெழில் தந்து 'தீர்த்த' மகிமையைக் காட்டிநிற்கிறது; இயற்கை அமைப்பு இது.

பாழடைந்து கிடக்கும் குயின்ஸ்பரி தேயிலைத் தொழிற்சாலை ஆலயத்துக்கு முன் அருகிலே தொழிற்படாமலே, இயங்காமலேயே கம்பீரமாக நிற்கிறது. சைவசமயத்தைச் சார்ந்த தோட்டத் தொழிலாளர்கள் வெகுதூரம் சென்று பெருஞ் சிரமப்பட்டு அலைந்து, நடைநடந்து கொழுந்து பறித்து பிறிதொரு தொழிற்சாலையிலே கொழுந்து அரைக்கப்பட்டு வருகிறது. தொழிற்சங்கப் போட்டி உந்தலாலே சிதறுண்டு கிடக்கும் மக்கள் ஐக்கியப்படக்கூடியதொரு ஒளிக்கீற்று இந்நவநாதசித்தர் சிவாலயத்தால் – இவ்வாலய எழுச்சியால் உண்டாயிருக்கிறது. மதமாற்றம், பெயர் மாற்றம், கலாசார மாற்றம் பற்றி எவருமே கவலைப்படுவதாயில்லை. சகலதையும் அழியவிட்ட அவலநிலை; கலாசாரம் ஆற்றோடு கரைந்தழியும் பேரவலம்; தனிமனிதப் போட்டிகள் 'தம்மை' முதன்மைப் படுத்தும் வகையில் உள்ளன. ஒற்றுமையீனம்; கல்வி வளர்ச்சி பற்றிய நிலையில் விழிப்புணர்ச்சியற்ற – சுறணையற்ற போக்கு. கூலிக்கு மாரடிக்கும் ஆசிரியர்களின் அக்கறையின்மையும் சமய, தமிழறிவைப் புறக்கணிக்கும் போக்கும் மனவருத்தம் தரும் வகையில் உண்டு. மாணவ மாணவிகள் கவனிக்கப்படாத நிலை. வெறும்போலி நாகரிகத்திற்கான – குடும்பக் கௌரவங்களைக் காப்பாற்றும் நோக்கில் கலை முயற்சிகள். போட்டியும் பூசலும் கொண்டவர்களது உக்கிரத் தொழிற்பாடுகள். இவை தோட்டத்து மக்களைப் பின்நிலைப்படுத்தி நிற்கும் அவலம். இத்தனைக்கும் மத்தியில் சைவஞ்சார்ந்த ஸ்ரீ நவநாதசித்தர் ஆலயம் எமது முயற்சியால் பதிநான்கு ஆண்டுகளின் பின் திருப்பணிக் கமிட்டி அமைத்து மகாகும்பாபிஷேகம் துரிதப்படுத்தப்பட்டது. குயின்ஸ்பரி தோட்டத்து மக்களையும் இணைத்து மகாகும்பாபிஷேக கமிட்டி அமைக்கப்பட்டது.

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் தற்போதைய அறங்காவலர் சபைத் தலைவரும், நாவலப்பிட்டி ஸ்ரீலங்கா ஸ்ரோர்ஸ் அதிபருமான இறைபணிச்செம்மல், சமாதான நீதவான், எஸ். முத்தையாபிள்ளை அவர்கள் தலைமையில் திருப்பணிக் கமிட்டி அமைக்கப்பட்டது. தலைவரும், பொருளாளரும் ஆகிய பதவியை இறைபணிச் செம்மல் ஏற்றுக் கொண்டார். அவரது நெறிப்படுத்தலினாலும், பரிபூரண ஒத்துழைப்பினாலும், பணங்கொடுத்து இத்திருப்பணியை ஒப்பேற்றுவதற்கு முன்வந்தமையினாலும் அவருக்கு நமது ஒத்துழைப்பும் உறுதுணையும் கிடைத்து 19-11-1997 அன்று குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதசித்தர் ஆலய ஸ்ரீ தேவசேனாதிபதி ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிகழ்ந்தேறியது. மங்கள வாத்தியங்கள் முழங்க ஆகம முறையிலே யாகசாலைகள் அமைத்து ஹோமம், தீபாராதனை, வேதபாராயணம், திருமுறைப்பாராயணம், அருளுரைகள் என்பவற்றுடன் வெகுசிறப்பாக மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி 28-11-1997 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு ஒலிபரப்பியது. திரு. ரி. உருத்திராபதி, திரு. பி. அபர்ணாசுதன், திரு. மயில்வாகனம் (கண்டிச்சேவை) ஆகியோர் இலங்கை வானொலி நிகழ்ச்சிக்காக குயின்ஸ்பரித் தோட்டத்திற்கு வந்திருந்தனர். இவர்களுக்கு எமது மனங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக. மகாகும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை 1008 மகாசங்கா பிஷேகம் நடைபெற்றது.

குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலய அறங்காவலர் அன்பும் பண்பும் நிறை இரா. இராஜகோபால் அவர்கள் நாவலப்பிட்டியிலே எம்மைச் சந்தித்துப் பேசியபோது குயின்ஸ்பரி ஆலயத்தை அரசாங்கமே பொறுப்பேற்று நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை இந்துசமய கலாசாரத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு கடிதமூலம் கோரி விண்ணப்பித்துவிட்டேன் என்று கூறினார். அத்துடன் தோட்டத்து மக்களின் பொருளாதாரநிலை, போட்டிபூசல், மதமாற்றம், அக்கறையின்மை என்பன காரணமாக கோயிலை நல்லபடியாக நடத்த முடியாதுள்ளது என்றும் அதற்கான எதுவித உதவியோ, ஒத்துழைப்போ எதுவும் கிடையாது என்றும் கூறினார். பூசகர் கோவிந்தசாமி அவர்கள் "இக் கோயிலிலே கைவைப்பவர் எவருமிலர். அப்படி யாரும் செய்துவிட முடியாது. பொல்லாத தெய்வம் சித்தர். நானே இதனைப் பாதுகாத்து வருகிறேன். எதற்கும் விடமாட்டேன்" என்றார். இவற்றுக்கும் பின்னர் ஓரிருதடவை என் சொந்தப் பணச்செலவிலே வாகனம் ஏற்பாடு செய்து குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதச் சித்தர் சிவாலயத்துக்குச் சென்று திருமுறைப் பண்ணிசையும், சமயப் பேருரையும் நிகழ்த்தித் திரும்பினேன். மக்கள் கோயிலுக்கு வரத்தொடங்கினர்.

சிவாச்சாரியார் கைலை வாமதேவக் குருக்கள் அவர்களின் தொடர்பும் கிடைத்தது. கொழும்பு வர்த்தகப் பிரமுகர் ஒருவர் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரதிஷ்டை பண்ண விரும்புவதாகவும் அதற்கான செலவுகளைத்

தாம் பொறுப்பேற்பதாகவும் தம்மிடம் தெரிவித்தார் என்றும் குருக்கள் தெரிவித்தார். அதன்பிரகாரம் ஸ்ரீ நவநாதசித்தர் பீடத்திற்கு நேரெதிரேயுள்ள தலவிருட்சமான ஷெண்பக மரத்தினடியில் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் சிவனைத் தழுவிய பாவனையில் ஐந்துதலை நாகப்பின்னணியிலே நிறுவப்பட்டது. இந்த நவநாத மலரின் முன் அட்டைப்படமாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் சிலையும் இலங்குகிறது. சிவனும், சக்தியும், முருகனும் இணைந்த கீர்த்திபெற்ற திருத்தலமாக தற்போது குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயம் இலங்குகின்றது. இக்காரியங்கள் எப்படித்தான் ஈடேறின என்பது இன்றும் அதிசயமே.

19-11-1997 அன்று நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தில் அன்றே பிற்பகல் வனத்துக்கும், குகைக்கும் போவதற்குத் திருவருள் கைகூடியது. இறைபணிச் செம்மல் திரு. திருமதி முத்தையாபிள்ளை தம்பதியர், சிவமயச்செல்வி-புலவர் சி. விசாலாட்சி அவர்கள், அறங்காவலர் இரா. இராஜகோபால், ஆசிரியர் க. கந்தசாமி, திரு. ஜெயராம், திரு. புஸ்பராஜ் நாகேஸ்வரி குடும்பம், என் மனைவி ரதிமலர்தேவி, மக்கள் பிரகாஷ், குருபரன், தாரணி அனைவரும் குகைக்குட் சென்று அக்குகைக்குள்ளே 5 நிமிடம் “சிவ சிவ” மூலமந்திர பஜனை செய்து கண்களை மூடித் தியானித்து மன அமைதி பெற்றோம். பெரும் சாந்தி, நிம்மதி எமக்குக் கிடைத்தது; பேரானந்தம் கொண்டோம்.

குகைக்குச் செல்லும் தனிவழிப்பாதை காட்டுவழிப்பாதையாகும். குகைக்குச் செல்ல 2 மணித்தியாலம் நடக்கவேண்டி இருந்தது. ஆற்றையும் கடந்தோம். பாறைகள் மீது ஏறியும் இறங்கியும் வினைப்பயன் தீர்த்தோம். அட்டைக் கடியினால் கால்களிலே இரத்தமும் பீறிட்டது. பச்சிலைகளைக் கசக்கிப் பிழிந்தும், சாம்பல்கரி பூசியும் காயங்களை ஆற்றினோம்.

மூன்று, நான்கு திரிசூலங்கள் காணப்பட்டன. கற்பூரம் கொழுத்தி, பஞ்சபுராணம் ஓதியும் வழிபட்டோம். குகைக்கண்மையில், திரிசூலங்களுள்ள இடத்திலே உள்ள பாறை இடுக்கில் முட்டைகளையும் வைத்தோம். வனபோஜன வைபவத்தின் போது பக்தர்கள் பல்லாயிரக் கணக்கில் முட்டைகளை வைப்பதாகவும், அவை பின்னர் காணாமற் போவதாகவும் இன்றும் ஐதீகம் உண்டு. இன்றும் இவ்வழமை நிகழ்ந்து வருகிறது. முட்டைகள் எப்படி மாயமாய் மறைகின்றனவா? யார் அவற்றை எடுக்கிறார்கள்? என்பது பற்றிய விளக்கம் தற்போது எவருக்குமே இல்லை; தெரியாது. இதுவும் அதிசயமே!

‘நவநாதம்’ சிறப்பு மலருக்குக் கட்டுரைகளையும், வாழ்த்துச் செய்திகளையும் கேட்டு அறிஞர்க்கும், மதத்தலைவர்கட்கும் எழுதியபோது அவர்கள் அவ்வேண்டுதலைப் பெருமனதோடு ஏற்று வாழ்த்துச் செய்திகளையும், கட்டுரைகளையும் எமக்கு அனுப்பிவைத்தனர். கட்டுரைக் கருத்துக்கள் அனைத்திற்கும் அவ்வக் கட்டுரையாளர்களே பொறுப்பு. நாம் எதுவித மாற்றமுஞ் செய்யவில்லை. ‘சித்தர் வரலாறு துலங்கவேண்டும்’ என்பதே எமது நோக்கம். கட்டுரைகளையும் வாழ்த்துக்களையும் நல்கிய பெரியார்கள் அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

அரசாங்கப் பரீட்சைகளிலே இந்துசமயம், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களுக்குச் சித்தர்கள் வரலாறு சேர்க்கப்பட்டுள்ளது. க. பொ. த. உயர்தரம், சாதாரணதரம் மாணவர்களது நன்மைகளைக் கருதியும் இந் நவநாதம் மலர் சில தகவல்களை வெளியிடுகிறது. ‘நவநாதம்’ ஓர் ஆரம்ப முயற்சியே. இந்து தத்துவம் ஒரு பெரும் துறை. ‘நவநாதம்’ முயற்சியை அனைவரும் 10தித்து ஊக்குவித்து, ஆதரவு நல்கி எமது சமயப்பணிக்கு உறுதுணை புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். இம்மலரைப் பணம் கொடுத்து வாங்குவோர் சிவ புண்ணியத்திற்கு உதவியோராவர். இதற்கு உதவுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

‘நவநாதம்’ சிறப்புமலர் உயரிய நோக்கத்தோடு வெளியிடப்பட்டது. ஆலயத்திலே நடைபெற்ற நிகழ்வுகளின் நிழற்படங்கள் இம்மலருக்குத் தனிச்சிறப்பை அளித்துள்ளன. படப்பிடிப்பாளர்க்கு எமது நன்றிகள். சுவாமி தந்திரதேவா அவர்கள், அன்பு இல்லத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் அவர்கள், இணு வில் வி. என். தில்லைநாதன் அவர்கள், திருமதி பரமசாமி B. A. (Hons) அவர்கள் ஆகியோர் குயின்ஸ்பரி மக்களாலே மறக்கப்பட முடியாதவர்கள். இவை அனைத்தும் எமக்கு அப்பாற்பட்ட, எம்மிலும் மேம்பட்ட திருவருளாலே நமக்கு வாய்த்தவை. ‘நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே’ என்ற வாக்குக்கமைய எம்மைக் கருவியாக்கி இயக்குவித்த சித்தர் அருளுக்கு ஈடிணையேது - நிகரேது?

‘நவநாதம்’ சிவாலயம்; முருகனாலயம். வீடுகளில் இலங்கத்தக்க தெய்விக மலர். எனவே ஞானக் களஞ்சியமான, நல்லறிவு தரும் நவநாதத்தைத் தேடிச் சென்று, பணங்கொடுத்துப் பெற்று மதிப்போடு பேணி எல்லோரும் சைவநெறிபரப்புவோம்.

சாத்விகநெறியே சைவநெறி
அதுவே சித்தர் நெறி
வாழ்க! நவநாத சித்தர் புகழ்!
“மேன்மைகொள் சைவநீதி! விளங்குக உலகமெல்லாம்”.

**வணக்கம்**

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு – பிரதிஷ்டா கலாநிதி
**சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்களது**
(ஆதீன குரு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம் – நயினை)

# திருவருள் நிறைந்த நல்லாசிகள்

ஸ்ரீ நவநாத சித்தர் சிவாலயம் (ஸ்ரீ பாலசுப்பிரமணியர்) கோவில் புனருத்தாரணஞ் செய்யப்பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அழிவில்லாத புண்ணியப்பேறாகும். கும்பாபிஷேகம் செய்வதனால் சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சிய முத்திகள் கிட்டும் என ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. சரியை, கிரியை, யோகம், செய்தவர்க்கு இறைவன் ஞானத்தை அருளுவார். சித்தர்கள் அநேகர் இருந்ததாக சமய வரலாறுகள் கூறுகின்றன.

அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரணியர் (நவநாத சித்தர் சிவாலயம்) ஆலய மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறவும், பக்தர்கள், அடியார்கள் கண்டுகளித்து இறைஅருட்பேறு பெறவும், ஆலயத்தின் சிறப்புக்களையும் பேரறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகளையும் கொண்டு "நவநாதம்" சிறப்புடன் மிளிரவும், நவநாதசித்தர்சிவன் அருளால் யாவரும் பயன்பெற அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருவடியை மனமொழி மெய்யால் வணங்கி நல்லாசிகூற வாழ்த்துகின்றோம்.

– திருச்சிற்றம்பலம் –

74/02, விவேகானந்தமேடு,
கொழும்பு-13.
22-06-1997

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் தலைவர்
**சுவாமி ஆத்மகனாநந்தா**
**அவர்களின்**

# வாழ்த்து மலர்

நாவலப்பிட்டி, குயின்ஸ்பரி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ நவநாத சித்தர் சிவாலயத்தில் மகாகும்பாபிஷேக விழாவையொட்டி 'நவநாதம்' என்ற சிறப்புமலர் ஒன்று வெளியிடப்பட இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். மலருக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

மக்கள் மனதில் ஆன்மிக சிந்தனைகளையும், உணர்வுகளையும் வளர்க்க நமது முன்னோர்கள் ஆலயங்களை அமைத்து, தினசரி வழிபாட்டிற்கும் உற்சவங்களுக்கும் ஏற்பாடு செய்தனர். வழிபாடு நிஷ்காமியமாக அமையும் அளவிற்கு, மனதில் தூய்மையும் பக்தியும் பெருகும். காமிய வழிபாட்டை விட நிஷ்காமிய வழிபாடு உயர்ந்தது என்பது சமய உண்மை.

மகாகும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்று நாட்டில் அமைதியும் சமாதானமும் மலர இறைவன் அருள்புரிவாராக எனப் பிரார்த்தனை செய்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

Aum
Navanatham

# Message From Swami Tantradeva

I am very glad to participate in the Mahakumbhabishekam of the Navanatha Siddhar Sri Balasubramanya (Thevasenapathi) Temple at Queensbary Estate, Nawalapitya. The places where saints have resided radiate a holy vibration and are pre places for the construction of places of worship such as Temples, Ashrams for Sadhana, etc. I am confident the Temple Commitee will conduct the Temple as a carter for Hindu religious Activities for the whole Nawalapitya Region.

With Divine Wishes
**Swami Tantradeva**
Trincomalee
19-11-1997

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# ஞாயிறாய் வாழி

சிவயோக சித்தஞானி திகழ்பெருந் தத்துவத்துத்
தவஞானி உடம்பினுள்ளே சச்சிதா னந்தம் பெற்றுப்
பவவாதை யறுத்த மேலோன் பயின்றிடு சாரல்மேவும்
நவநாத சித்தமூர்த்தி நற்கழல் போற்றி போற்றி.

எண்ணு வார் இதயந்தங்கும் இலிங்கமாய் உலகமெல்லாம்
புண்ணிய சைவநீதி பொலிந்திட வேதவாய்மைத்
தண்ணடி யார்சிறக்கச் சாரலின் பாங்கமர்ந்த
கண்ணு தல் நவநாதர்பொற் கமலத்தாள் போற்றி போற்றி.

கந்தஈ சுரத்திலோங்கும் கார்த்திகை நான்கு புந்தி
வந்தநாள் புநர்பூசத்தில் மகாகும்பா பிஷேகம் ஏற்றுச்
சுந்தர வேலன்பால சுப்பிர மணிய னோடு
நந்தனக் கோயில் கொண்ட நவநாதர் போற்றி போற்றி.

புவனாதி யண்டமெல்லாம் பொலிந்திடப் பூத்துக்காக்கும்
நவநாதப் பெருமானுக்கு நடந்த பொற் குடமுழுக்கை
திவமாக விளக்கி அன்னான் சேவடிப் புகழ்பரப்பும்
நவநாத(ம்) மலர் சிறந்து ஞாயிறாய் வாழிவாழி.

அருட்கவி சீ. விநாசித்தம்பி
(தலைவர் - இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்;
அறங்காவலர் - ஸ்ரீ நாகவரத நாகேஸ்வர தேவஸ்தானம்,
அளவெட்டி)
18-10-1997

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சர்

## கௌரவ பெ. சந்திரசேகரன், பா. உ. அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தொன்மை வாய்ந்த சைவசமய வளர்ச்சிக்கு மலையகத்தில் ஆற்றப்படும் சேவை அளப்பரியது.

அவ்வப் பகுதிகளில் நடைபெறுகின்ற சமய நிகழ்ச்சிகளும் உற்சவங்களும்தான் எமது தனித்துவத்தையும், பாரம்பரியங்களையும் காத்து வருகின்றன.

குயின்ஸ்பரி தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நவநாதசித்தர் பணிகள் பற்றியும் இவ் ஆலயத்தினை நோக்கி இப்பிரதேச மக்கள் மட்டுமன்றி வெளிப்பிரதேசங்களிலிருந்தும் மக்கள் பெருந்தொகையாக வருவதும் இவ்வாலயச் சிறப்பினையே காட்டுகின்றது.

இவ்வாலயத்தின் தனித்துவத்தினையும், பிரபல்யத்தையும் எல்லாப்பகுதிகளிலும் விளங்கச் செய்வதற்கு ஆலய பரிபாலன சபையினர் மேற்கொள்ளும் சகல முயற்சிகளும் பாராட்டுக்குரியது.

இம்முயற்சிகளும் ஆலய பணிகளும் சிறக்க வாழ்த்துகிறேன்.

'நவநாதம்' சிறப்புமலர் பேரொளிபரப்பட்டும்.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

மத்திய மாகாணசபை கல்வி (தமிழ்) கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி
வர்த்தக வாணிப, சுற்றுலா இந்துக்கலாசார அமைச்சர்

**கௌரவ. வீ. புத்திரசிகாமணி J. P. அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



மலையகத்தில் மிகவும் பிரசித்தி வாய்ந்த ஸ்ரீ நவநாத சித்தர் சிவாலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இவ்வேளையில் "ஸ்ரீ நவநாதம் சிறப்பு மலரை" வெளியிட திருப்பணிச்சபை எடுத்து இருக்கும் முயற்சி பாராட்டுக் குரியதாகும்.

எமது சமய பன்பாடுகளின் சித்தர் வழிபாடும் ஓர் உன்னத ஸ்தானத்தை வகிக்கின்றது. அதிலும் நவநாத சித்தரின் பெருமை நாடாளவிய ரீதியில் மட்டுமன்றி எமது இலங்கை திருநாட்டிற்கு வெளியேயும் பரவி இருப்பது யாவரும் அறிந்ததே. அவ்வகையில் இன்று நடைபெற இருக்கும் மகா கும்பாபிஷேகமும் இச்சித்தரின் பெருமையைப் பறைசாற்றுவதற்கு மேலும் அறநிகழ்வாகும்.

இம்மலரில் அடங்கவிருக்கும் இதழ்கள் நிச்சயமாக எம் சமயத்தின் தாற்பரியங்களையும் பெருமைகளையும் வெளிக்கொணரும் என்பதோடு அல்லாமல் இம் மலரைக் கண்ணுற்று அதனுட் பொதிந்திருக்கும் சமய சித்தாந்தங்களையும், வழிகாட்டல்களையும் இம்மலரை கையிலேந்தும் பாக்கியம் பெற்றவர்களையும் நுகர்ந்த அவ் வாசனையை மற்றவர்களுக்கும் அறிந்து கொள்வதற்கு வழிச்மைக்க எல்லாம் வல்ல இறைவனை கேட்டுநிற்பதோடு ஸ்ரீ நவநாத சித்தரின் தரிசனமும் கிடைக்கவேண்டுமென இவ்வேளையில் பிரார்த்திக்கிறேன்.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

கண்டி, மத்திய மாகாண சபை, பிரதித் தலைவர்,

## கௌரவ. இரா. தங்கவேல், ஜே. பி.

## அவர்களின்

# வாழ்த்துரை

மலையகத்திலே மிகப் பிரசித்தி பெற்றுள்ள ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயம் இன்று வரலாற்றுப் பெருமைமிகு சின்னமாக அருள்ஒளிவீசும் கலங்கரை விளக்காக இந்துக்கள் மாத்திரமன்றி அனைத்து மக்களையும் அரவணைக்கும் அரிய அருட்கொடை ஊற்றாக விளங்குகிறது.

இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியாத் துணைக்கண்டம் முழுதும் அதிசயிக்கும் வண்ணம் பல அரிய அற்புதங்களைத் தமது காலத்தில் நடத்தி அனைத்து மக்களையும் தம்பால் ஈர்த்த அருட்கொடைவள்ளல் நவநாதசித்தர்; அவர் ஒருமகான்.

குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாத சித்தர் சிவாலய ஸ்ரீ தேவசேனாபதி முருகன் ஆலய மகாகும்பாபிஷேகம் 19.11.97 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. 5.1.98 அன்று 1008 மகாசங்காபிஷேகமும் நடைபெற்றுள்ளது.

இவ்வாலய வரலாற்று ஏடாக 'நவநாதம்' சிறப்புமலர் வெளிவருவது மிகமிகப் பொருத்தமானது. 'நவநாதம்' சிறப்புறமலரவும் மணம்பரப்பவும் வாழ்த்துகிறேன்.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# வாழ்த்துச் செய்தி

நாவலப்பிட்டி குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழாவையொட்டி வெளியிடப்படுகின்ற 'நவநாதம்' எனும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

இலங்கையின் நான்கு திசைகளிலும் ஒரு சித்தர் பரம்பரை இருந்து வந்துள்ளமையை சமய உலகம் நன்கறியும். சித்தர்கள் ஆரவாரமின்றி, சமூக வாழ்வினின்றும் விலகி வாழ்ந் தாலும் தம்மை அண்டி அணைத்தோரை அரவணைத்து ஆன்மீக நெறியும், அமைதியும் நல்கி வந்துள்ளனர்.

அத்தகைய அருட்பெருஞ்சித்தர்களுள் ஒருவரே நவநாத சித்தராவார். தமிழகத்தைச் சேர்ந்த இச்சித்தர், மலையகத்தின் நாவலப்பிட்டிப் பகுதிக்கு வந்து, நீண்ட காலம் அங்கு வாழ்ந்தோடு, பல அன்பர்களின் வழிகாட்டியாகவும் திகழ்ந்துள்ளார். தாம் வாழ்ந்த காலத்தில் பல சித்துக்களையும் செய்து பக்தர்களுக்கு அருள்பாலித்துள்ளார்.

இத்தகைய அருள்ஞானம் நிறைந்த சித்தரின் பீடம் நாவலப்பிட்டிக் குயின்ஸ்பரி தோட்டத்தில் அமைந்துள்ளது. இப்பீடத்தில் எழுந்த ஆலயம் திரளான பக்தர்களால் தொழப்படுவதாகும்.

தற்பொழுது இந்த ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

"நவநாதம் அருள் மணம் பரப்புக"

-திருச்சிற்றம்பலம்-


திருமதி இ.கைலாசநாதன்
மேலதிக செயலாளர்,
கலாசார சமய அலுவல்கள் அமைச்சு
16-07-1997

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

திருப்பணிச் சபை கமிட்டித் தலைவர் சமாதான நீதிவான் இறைபணிச்செம்மல்

## எஸ். முத்தையாபிள்ளை ஜே. பி. அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



நாவலப்பிட்டி குயின்ஸ்பரி தோட்டத்தில் இருக்கும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலிலே (ஸ்ரீ நவநாதசித்தர் சிவலாயத்தில்) மகாகும்பாபிஷேகம் நிகழவேண்டும் என்ற பெருநோக்கோடு அன்பர்கள் சிலர் எம்மை அணுகினார்கள். குயின்ஸ்பரியில் நடைபெற்ற சமய வழிபாட்டின் போது பொதுமக்களால் திருப்பணிச் சபை கமிட்டித் தலைவராகவும் பொருளாளராகவும் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டேன். என்னாலியன்ற மட்டும் செயற்பட்டு 19.11.1997 அன்று திருக்குடமுழுக்குத் திருப்பணியை நிறைவேற்றினேன். இப்பெரும் பணியினை நிறைவேற்றுவதற்குரிய சகல வல்லமையையும் எமக்குத் தந்தவர் ஸ்ரீ நவநாதசித்த சிவனேயாவார். அவர் திருவருளுக்கு ஈடினணயில்லை.

ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலய ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமியின் கீர்த்தி பெரியது. மத்திய மலையகத்தின் மத்தியிலிருந்து பேரொளி பரப்பி அருளாடல் புரியும் பாலசுப்பிரமணியன் தமிழ்க்கடவுள். சித்தர் சிவனின் கருணையும், சுப்பிரமணியரின் பரங்கருணையும் உலகுக்கு ‘நவநாதம்’ எனும் சிறப்பு மலரினூடு பரவுகிறது. இப்பணிகள் எமது வல்லமைக்கப்பாற்பட்டவை. எனினும் இவற்றை ஈடேற்றுவதற்கு இறைவனருள் உறுதுணை புரிந்துள்ளது. ‘நவநாதம்’ மலர் சிறப்புற எமது மனமுவந்த நல்வாழ்த்துக்கள்.

-திருச்சிற்றம்பலம்-

இறைபணிச்செம்மல்
எஸ். முத்தையாபிள்ளை J. P.

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

திருக்கேதீச்சரம் திருவாசக மடாதிபதி

## ஸ்ரீ மத் சரவணமுத்து அடிகள்

வழங்கிய

# வாழ்த்துரை

ஸ்ரீ நவநாதசித்தரது புகழ் பரப்பும் 'நவநாதம்' சிறப்புமலர் போற்றத்தக்க மலராக வெளிவரும் என்றே நம்புகிறேன். சித்தர்களது தத்துவமும், சிவதத்துவமும் இணைந்த அரும்பெரும் பொக்கிஷமாக 'நவநாதம்' விளங்கும் என்பது திடமான நம்பிக்கையாகும்.

'நவநாதம்' சிறப்புமலர் நமது சமயத்தின் வரலாற்றில் பிறிதொரு குறிப்பிடத்தக்க வெளியீடாகும். இம்மலர் மலர்ந்து புகழ்பரப்ப கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சர மகாலிங்கரது பரிபூரண திருவருளைப் பிராத்தித்து வாழ்த்துகிறேன்.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

**"பரோபகாரமணி" கே. கே. சுப்பிரமணியம் அவர்கள்**
(ஓய்வு பெற்ற சுங்கத் திணைக்கள ஆணையாளர்)
வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

மத்திய மலையகத்தின் அருள் நிலையமாக மிளிரும் ஸ்ரீ நவநாத சித்தர் சிவாலயம் என்றும் புகழப்படும் நிலையமாகும். குன்றிலே இருந்து முருகனும் சிவனும் ஈழமணித் திருநாட்டைக் காத்தருளும் அற்புதம் மிகவும் போற்றி வணங்குதற்குரியது. இவ்வாலயத்தில் மகாகும்பாபிஷேகமும், மண்டலாபிஷேகமும், 1008 சங்காபிஷேகமும் நடைபெற்றுள்ளதோடு 'நவநாதம்' என்னும் பெயரிலே சிறப்புமலர் ஒன்றும் வெளிவருவது பாராட்டி வாழ்த்துதற்குரியது.

'நவநாதம்' அருள் ஒளிபரப்பி சமய இன்பம் பெருக்கவேண்டும் என்று ஈழத்துச் சிதம்பரேசன் திருவடிகளைத் தொழுது வாழ்த்துகிறேன்.

**வணக்கம்**

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

நாவலப்பிட்டி
க/கதிரேசன் மத்திய கல்லூரி அதிபர்
**கே. எழில்வேந்தன்**, B. A. (Hons)
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

சைவத்தையும் தமிழையும் காப்பதும் வளர்ப்பதும் மலையகத் தமிழர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ள இக் காலகட்டத்தில், விடிவெள்ளிகளாக ஒரு சில நிறுவனங்களும் சைவ அபிமானிகளும் தமது காலத்தின் தேவையை, காலத்தின் பணியை மேற்கொள்ள முனைவது தமிழும், சைவமும் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்" என்ற நம்பிக்கையை எனக்கு ஊட்டுகின்றது. இந்தவகையில் சிவனடியார்களையும், சித்தர்களையும் போற்றி வழிபடும் எமது சமயத்தின் பாரம்பரிய செயலாக 'நவநாதம்' சிறப்புமலரும், யோகர் சுவாமிகளின் அருள்வாக்குப்போல் 'எப்பவோ முடிந்த காரியம்' என்று ஆண்டவன் கட்டளையாகக் கைகூடியிருப்பது பெரும்பேறு.

பல்வேறு நெருக்கடிகள் உள்ள இவ் வேளையில் தொண்டர்கள் சிலர் ஒன்றுகூடி இப்பெரு முயற்சியான கும்பாபிஷேகத்தை மேற்கொண்டு சிறப்புமலராக 'நவநாதம்' ஒலிக்கச் செய்தமையை பாராட்டதவர் சைவரல்லர். அந்த வகையில் எனது பாராட்டும் 'நவநாதம்' சிறப்புற எனது வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். 'நவநாதம்' சைவமும், தமிழும் வாழுமிடமெல்லாம் ஒலித்து அனைவரினதும் துயர் துடைக்க இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்


# ஆன்மிகப் பெருமலர்

'நவநாதம்' புதியதோர் சிந்தனை மலர். மலையக மக்கள் செய்த அருந்தவப் பயனால் ஸ்ரீ நவநாசித்தர் குயின்ஸ் பரியில்பேபராலயம் கொண்டு திருவருள் புரிகிறார். ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவில் புதிய பரிமாணம் பெற்றுள்ளது. இச்சிறப்பு மலரில் அரியபல கட்டுரைகள் இடம் பெறுகின்றன. சமயத் துறையில் பாண்டித்தியமிக்கவர்கள் எம்மோடு நெருங்கிவந்து, கட்டுரைகளை உதவியுள்ளனர். இதுவும் அதியசயமே; அற்புதமே.

'நவநாதம்' மலையகத்தின் சமயப் பெருமிதத்தைப் பறைசாற்றும் அற்புதமலர். எமை ஈர்த்து இப்பணி இயற்றச் செய்த இறையருளை என்றும் பணிவோம். சித்தர் புகழ்பரப்புவோம். அனைவரும் 'நவநாதம்' மலருக்கு ஆதரவு நல்குவார்களாக.

-திருச்சிற்றம்பலம்-

க. பொன்னுத்துரை J. P.
(மலராசிரியர்)



உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சித்தரின் வித்து

மு. கோ. செல்லராஜா J.P.u.m.
தலைவர், திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபை

தமிழ்நாட்டின் நாமக்கல் ஆத்தூர் தாலுக்காக்களில் உள்ளது தான் கொல்லிமலைக் குன்றுத்தொடர். இதனை கொல்லி அறப்பள்ளியெனவும் அழைப்பர். இங்கு பல சித்தர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் ஒருவர் நவநாதசித்தர். இவரது பெருமை யாதெனில் ஒரே நேரத்தில் பல இடங்களிலும் காட்சி தரும் அருட் சக்தியாகும்.

நுவரெலியா, கொத்மலை நெடுஞ்சாலையில் குயின்ஸ்பரி என்ற தேயிலைத் தோட்டம் உண்டு. அத்தோட்டத்தில் திரு. நாகன் கங்காணியாக கடமையாற்றினார். அவரது மனைவி பெருமாள் அம்மையார். இவ் அம்மையார் சிறந்த பக்தியும், அடியார் பக்தியும் உடையவர். அத்தோடு சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்தார்.

நவநாதசித்தர் மீது நாகன் அம்மையார் குறைவற்ற பக்தியுள்ளவர். சித்தரும் அவரை "ஆயா" என அன்பொழுக அழைப்பார்.

கங்காணி நாகன் பெருமாளம்மாள் அவர்கள் தமது குயின்ஸ்பரி தோட்டத்தில் சுப்பிரமணிய சுவா்மிக்கு கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்யத் திருவுள்ளம் கொண்டுள்ளதால் இலங்கைக்கு வருகைதந்து தமது பணிக்கு ஆசி வழங்குமாறு வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

இவ் அழைப்பை ஏற்றுக்கொண்ட சித்தர் அவர்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகைதந்து முதலாவது கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டார். மேற்படி தலத்தில் வலது பக்கத்தில் கோணத்திசையாக தம்மை சமாதி வைக்கவேண்டும் எனத் திருவுள்ளம் கொண்டார்.

அவரது வேண்டுகோளின் பிரகாரம் சாமதி வைக்கப்பட்டமையால் நவநாதசித்தர் சிவன் ஆலய மெனப் பெயர் பெற்றது என்பது வரலாறு.

இத்தகைய அருளாளரால் சிறப்புப் பெற்ற இவ்வாலய புனராவர்த்தன கும்பாபிஷேகப் பணி வெகுவிரைவில் நிறைவுபெற்று இவ் ஆலயம் எந்நாட்டவர்க்கும் அருள்பாலிப்பதாக.

மகாகும்பாபிஷேகம் காணும் ஒருவன் பன்னிரண்டு வருடங்கள் கோயிலுக்குச் சென்று பெற்றுக் கொள்ளும் அருள் அமுதை பெறும் பாக்கியவானாவான் என்று எமது வேதங்கள் கூறுகின்றது.

அந்த வழியில் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி நவநாதசித்தர் ஆலய அறங்காவலர் குடமுழுக்குச் செய்ய முன் எடுத்த திருப்பணி சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய திருகோணநாதப் பெருமான் அருள் புரியுமாறு ஏழிசையா இசைப்பயனாக விளங்கும் கோணேசப் பெருமானின் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றோம்.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சுவாமி விவேகானந்தரின் தெய்விகச் செய்தி



நான் கூறுவதை கவனத்திற் கொள்க;

"ஹிந்து" என்ற பெயரைக்கேட்ட மாத்திரத்தி லேயே உங்களுக்குள்ளே சக்தி மின் அலையைப்போலப் பாயவேண்டும். அப்பொழுதுதான் - அப்பொழுது மட்டுமே - நீங்கள் "ஹிந்து" ஆவீர்கள்.

ஹிந்து என்ற பெயர் தாங்கிய மனிதன், எந்த நாட்டினனாயினும், நமது மொழியோ அல்லது வேற்று மொழியோ பேசினாலும், அந்தக் கணமே உங்களுக்கு மிகமிக நெருங்கியவனாகவும் இனியவனாகவும் ஆகிவிடவேண்டும். அப்பொழுதுதான் - அப்பொழுது மட்டுமே - நீங்கள் "ஹிந்து" ஆவீர்கள்.

ஹிந்து என்ற பெயர் தாங்கிய மனிதனுக்கு ஏற்படும் துன்பம், உங்களது உள்ளத்தை வந்து தாக்கி, உங்களது மகனே துன்பப்படுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் - அப்பொழுது மட்டுமே - நீங்கள் "ஹிந்து" ஆவீர்கள்.

மகா புருஷனான குரு கோவிந்த சிங்கனைப்போல இந்துக்களுக்காக எதையும் தாங்கச் சித்தமாக இருக்கும்பொழுதுதான் - அப்பொழுது மட்டுமே நீங்கள் ஹிந்து ஆவீர்கள். ஹிந்து சமயப்பாதுகாப்புக்காகத் தனது ரத்தத்தைச் சிந்திய பிறகும், தனது குழந்தைகள் போர்க்களத்தில் கொல்லப்படுவதைக் கண்டபிறகும் - ஆஹா! அந்த மகா புருஷனான குருவின் உதாரணந் தான் என்னே! யாருக்காகத் தமது, உதிரத்தையும் தமது நெருங்கிய மக்களின், இனியவர்களின் உதிரத்தையும் சிந்தினாரோ அவர்களே தம்மைப் புறக்கணித்துக் கைவிட்ட பிறகும்கூட - அவர், அந்தப் படுகாயமுற்ற சிங்கம் - களத்திலிருந்து ஒய்ந்து வெளி வந்தது, தெற்கே வந்து மடிய! நன்றி கெட்டுத் தம்மைக் கைவிட்டவர்களைக் குறித்து ஒரு பழிச்சொல்லைக்கூட அவர் தப்பித்தவறியும் வெளியிடவில்லை.

நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு குரு கோவிந்தசிங்கனாக ஆக வேண்டும். உங்களது நாட்டு மக்களிடையே ஆயிரக்கணக்கான குறை பாடுகள் நீங்கள் காணலாம். ஆனால் அவர்களது ஹிந்து இரத்தத்தைக் கவனியுங்கள். உங்களைத் தாக்கி புண்படுத்த அவர்கள் நினைத்தாலும் அவர்களே உங்கள் முதல் வழிபாட்டிற்குரிய தெய்வங்கள். அவர்களில் ஒவ்வொருவரும் சாபமாரி பொழிந்தாலும் நீங்கள் அவர்க ளுக்கு அன்பு அருள்மொழிகளையே திருப்பியளிக்க வேண்டும். உங்களை அவர்கள் வெளியே துரத்தினால் மகா சக்தியாளியான அந்த சிங்கத்தைப் போல குரு கோவிந்தசிங்கனைப் போல, வெளியே வந்து அமைதியாக இறக்கவேண்டும்.

ஹிந்து என்ற பெயர் தாங்க அத்தகைய மனிதனே தகுந்தவன். அத்தகைய லட்சியத்தையே நாம் எப்பொழுதும் நம் முன் வைத்திருப்போமாக.

நம்மிடையேயிருக்கும் வேறுபாடுகளைக் குழிதோண்டிப் புதைத்து விடுவோம். நாற்றிசையும் இந்த அபாரமான அன்புணர்ச்சி அலையைப் பரப்புவோம்.

சென்னையிலிருந்து......
செல்வி தபா மகாதேவன் B. Com.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# தாயுமான சுவாமிகள் பாடல்

சோதி யேசுட ரேசுக மேதுணை
நீதி யேநிச மேநின்ற வேநிலை
ஆதி யேயுனை யானடைந் தேனகம்
வாதி யாதருள் வாய்அருள் வானையே. (1)

நாத கீதன் என் னாதன்முக் கட்பிரான்
வேதவேதியன் வெள்விடை யூர்திமெய்ப்
போத மாய்நின்ற புண்ணியன் பூந்திருப்
பாத மேகதி மற்றிலை பாழ்நெஞ்சே. (2)

அருளெ லாந்திரண் டோர்வடி வாகிய
பொருளெ லாம்வல்ல பொற்பொது நாதவென்
மருளெ லாங்கெடுத் தேயுளம் மன்னலால்
இருளெ லாமிரிந் தெங்கொளித் திட்டதே. (3)

மதியுங் கங்கையுங் கொன்றையும் மத்தமும்
பொதியுஞ் சென்னிப் புனிதநின் பொன்னடிக்
கதியை விட்டிந்தக் காமத்தி லாழ்ந்தவென்
விதியை வெண்ணி விழிதுயி லாதன்றே. (4)

குன்றவிலா நிறைவாய் ஞானக் கோதிலா னந்த வெள்ளத்
துறையிலே படிந்து மூழ்கித் துளைந்து நான் தோன்றா வாறுள்
குறையிலே யுணர்த்தி மோன வொண்சுடர் வைவாள் தந்த
இறைவனே யுனைப்பி ரிந்திங் கிருக்கிலேன் இருக்கிலேனே. (5)

சிவன்செய லாலே யாதும் வருமெனத் தேறேன் நாளும்
அவந்தரு நினைவை யெல்லாம் அகற்றிலேன் ஆசைவெள்ளம்
கவர்ந்துகொண் டிழுப்ப அந்தக் கட்டிலே யகப்பட்டையோ
பவந்தனை ஈட்டி ஈட்டிப் பதைக்கிறேன் பாவியேனே. (6)

வடிவனைத்துந் தந்தவடி வில்லாச் சுத்த
வான்பொருளே எளியனேன் மனமா மாயைக்
குடிகெடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மோன
குருவேஎன் தெய்வமே கோதிலாத
படியெனக்கா னந்தவெள்ளம் வடிந்து தேக்கும்
படியெனக்குன் றிருக்கருணை பற்று மாறே
அடியெடுத்தேன் முடியிலின்னம் வைக்க வேண்டும்
அடிமுடியென் றில்லாத அகண்ட வாழ்வே. (7)

-திருச்சிற்றம்பலம்-

## ஆசை; அன்பு; அருள்


"மணிதர்களில் மூன்று பிரிவுகள் உண்டு. மனிதரில் விலங்கு; மனிதரில் மனிதர்; மனிதரில் தேவர்.

ஆசை உள்ளம் படைத்தவன் விலங்கு, அன்புள்ளம் படைத்தவன் மனிதன், அருள் உள்ளம் படைத்தவன் தேவன்.


தனக்கென்று வாழ்கின்றவன் விலங்கு பாதிதனக்காகவும், பாதி பிறருக்காவும் வாழ்கின்றவன் மனிதன். பிறருக்கென்றே வாழ்கிறவன் தேவன். ஆசை வாழ்க்கை இருள் சூழ்ந்தது அன்பு வாழ்க்கை இன்பமானது அருள் வாழ்க்கை ஒளிமயமானது".

-திருமுருக கிருபானந்தவாரியார்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்



# லிங்காஷ்டகம்



(1) பிரம்ம முராரி ஸுராரர்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித ஸோபித லிங்கம்
ஜன்மய துர்க்க விநாஸக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்.
(பிரம்ம)

(2) ஸர்வ ஸுகந்தி ஸுரேபித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
சித்த ஸுராஸுர ஸேவித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்.
(பிரம்ம)

(3) குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கயகார ஸுஸோபித லிங்கம்
சஞ்சித பாப விநாஸக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்.
(பிரம்ம)

## மஹிஸாஸுரமர்த்தனி துதி

(1) அயிகிரி நந்தினி நந்தித மேதினி
விஸ்வ விநோதினி நந்தனுதே
ஹிரிவர விந்த்ய சிரோஹினி வாஸினி
விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணு நுதே.
(அயிகிரி)

(2) பகவதி ஹேசினி கண்ட குடும்பினி
பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜெஜெயஹே மஹிஸாஸுரமர்தினி
ரம்யக பர்த்தினி சைலசுதே.
(அயிகிரி)

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# "ஸ்ரீ நவநாத சித்த சிவன் துதி"

– நயினைக்கவி–
**தியாகர் அருணாசலம்**

(1) அகத்தினில் அன்பு வைத்து
அடியவர்க் கடியனாகி
செகத்தினில் உயிர்கள் தன்னைச்
சிறப்புடன் வாழவைக்கும்
இகத்தினில் எம்மைத் தந்த
எம்பிரான் அருளினாலே
மகத்துவச் சிவனேயான
நவநாதச் சித்தர் வாழ்க!

(2) "மருந்துமானவன் மந்திரமானவன்
வருந்துவோர்களை வாழவைப்பவன்
பொருந்தி நின்று புகழ் தரவல்லவன்
திருந்த நின்ற செல்வன் எம்மீசனே".

(3) "நட்டமாடிய நம்பனை உள்கினால்
திட்டமாகச் சிவனடி சேரலாம்
பட்டதுன்பம் பனி போலகலுமே
முட்டவந்து முன்னிற்பனீசனே".

(4) "கட்டபுலா குயின்ஸ்பரியில் தேவசேனாபதியிறையைத்
தெட்டநிற்கும் நவநாதசித்தர் சிவாலயத்தைக்
கிட்டவந்து அருள் சுரக்கச் சுயம்புருவாய மைத்தருளில்
தொட்டதெல்லாம் பொன்னாகச் செய்வானிச் சிவனாமே".

## 'நா' வாழ்வு உகந்தமை

"மாவாழ் பொதிய மலையிற் பிறந்து வரமுனிவன்
பூவாழ் கரமெனும் பொற்றொட்டிலாடிப் புலவர் சங்கப்
பாவாழ் பலகை இருந்த ஏட்டிலே தவழ்பாவையென்றன்
'நா'வாழ்வு உகந்தமை நான் முன்பு செய்திட்ட நற்றவமே"

– நவாலி –
க. சோமசுந்தரப் புலவர்

–திருச்சிற்றம்பலம்–

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சித்தர்கள் யார்?

## (பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் முப்பெரும் சித்தர்கள் என்ற நூலிற்கு வழங்கிய ஆய்வுரை)

திருமூலர் தொடங்கி குதம்பைச் சித்தர் கோரக்கர் வரை தமிழ் நாட்டிற் சித்தர் பதினெண்மர் இருந்தனரெனப் பொதுப்படக் கூறுவர். இவருக்குப் பிற்காலத்திலும் இவர்கள் வழியைப் பின்பற்றிய சித்தர்கள் பலர் தமிழகத்திலே தோன்றியிருக்கின்றனர். அத்தகைய சித்தர்களில் நால்வர் ஈழத்திற்கு வந்து சித்துகள் நடத்தி, ஈழத்தின் வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவியடியிலும் மேற்கே கொழும்பு முத்துவாரத்திலும் கிழக்கே காரைதீவிலும் மோனநிலை எய்தினர். அவர்களே முறையே கடையிற் சுவாமிகள், நவநாதசித்தர் பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள் ஆவோர். அந்நால்வருட் கடைசி மூவரைப்பற்றியதே ஆத்மஜோதி முத்தையா அவர்கள் எழுதிய முப்பெரும் சித்தர்கள் எனப் பெரிய நூல்.

"சித்" என்பது அறிவது. சித்தை உடையவர்கள் சித்தர்கள். எனவே, அறிவு படைத்தவர்கள் சித்தர்கள். அவர்கள் அறிஞர்கள், மேதைகள், நுண்ணறிவு படைத்தவர்கள், மெய்ஞ்ஞானிகள்.

சித்தர்கள் சாதாரண மக்களாற் செய்யமுடியாத பல அரிய செயல்களைச் செய்வார்கள். அவற்றை அற்புதங்களை பொதுமக்கள் போற்றுவர். நாம் எவற்றையெல்லாம் அற்புத காரியங்களெனக் கொள்கிறோமோ, அவற்றைச் செய்யும் ஆற்றல் சித்தர்களுக்குண்டு. இதனாலேயே சித்தர்கள் இயற்கைக்கு மாறான பல அற்புதங்களைச் செய்தனரெனக் கதைகள் வழங்குகின்றன.

சித்தர்கள் இறவா நிலையை உடையவர்கள். அழியாத உடலைப் பெற்றவர்கள். உடம்பை அழியவிடாது பாதுகாக்கும் ஆற்றலுடையவர்கள். தம்முடைய உடம்பை வைத்துவிட்டு மற்றொரு உடம்பிலே புகுந்து நடமாடும் வழி அறிந்தவர்கள். அவர்களுக்கு ஆகாய வழியாகச் செல்லும் சக்தி உண்டு. மூன்று காலம் பற்றியும் அறியும் ஞானம் உண்டு. பலவித அற்புதங்களைச் செய்யும் ஆற்றல் உண்டு.

முத்தையா அவர்கள் "முப்பெரும் சித்தர்கள்" என்ற நூலிற் சித்தர்களின் இயல்புபற்றி மேலே கூறப்பட்டவை அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் சித்தர்கள் எட்டுவகைச் சித்திகள் (அட்டமா சித்திகள்) பெற்றிருப்பார்கள் எனப் புராணங்கள் கூறும். அணுவிலும் மிகச் சிறிய உருவிலே உலவும் ஆற்றல், மலையிலும் பெரிய உருப்பெற்று நிற்கும் ஆற்றல், உடம்பை இலேசாகச் செய்து நீரிலும் சேற்றிலும் அழுந்தாமற் காற்றுப்போல் விரைந்து செல்லும் ஆற்றல், தான் எதை விரும்பினாலும் எதை நினைப்பினும் அவற்றை அடையும் ஆற்றல், தன் நினைப்பின் வல்லமையால் எல்லாவற்றையும் படைக்கும் சக்திக்கு எல்லாரும் தன்னை வணங்கும்படியான தெய்வ ஆற்றல், உலகம் முழுவதையும் தன்வசப்படுத்தி நடத்தும் ஆற்றல், ஐம்புலன்க்ள இன்பதுன்பங்களைப் பற்றிக் கவலைப்படாது அவற்றுடன் தொடர்புகொள்ளாமல் இருத்தல் என்பவையே எண்வகைச் சித்திகள். இச்சித்திகள் மூன்று சித்தர்களிடமும் காணப்பட்டமைக்குப் பல எடுத்துக் காட்டுக்கள் நூலில் தரப்பட்டுள்ளன.

கொல்லிமலையிற் பலகாலம் தவமிருந்த நவநாதசித்தர், நாவலப்பிட்டி குயின்ஸ்பரித் தோட்டத்துப் பெரிய கங்காணி நாகனின் மனைவியைத் தமது அடியாராய்ப் பெற்றவர். குயின்ஸ்பரியிற் பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகதிற்கு முதல்நாள் நவநாதசித்தருக்குக் கடிதம் எழுதித் (அந்தக்காலத்தில் கடிதங்கள் செல்லப் பலநாட்கள்

ஆயின) தபாற்கட்டிற் சேர்க்க சுவாமிகள் அடுத்தநாள் அதிகாலையிலேயே அங்கு வந்தடைந்த அற்புதம் கூறப்படுகிறது.

தோட்டத்துத் தொழிலாளரிடையே சுவாமிகள் சாதித்த சித்துக்கள் சில விபரிக்கப்பட்டுள்ளன. சுவாமியை அவமதித்த மூடர் மயங்கி விழுந்து பின்பு சுவாமி இழுத்து ஊதிய சிகரெற் புகையினால் மயக்கம் தெளிவித்தல், பெருமாள் அம்மையார் சிதம்பரம் சென்று தங்கியிருந்து சுவாமிகளை நினைந்து தியானிக்க சுவாமிகளின் உருத்திராக்கமாலை அவர் கைகளில் வந்து விழுதல், கொல்லிமலைச் சித்தர்களைப் பார்க்க விரும்பிய குருசாமி என்பவரைத் தம் சித்தியில் கொல்லிமலையில் இருப்பதாகச் செய்தல், ஆழ வெட்டியும் நீரில்லாமல் இருந்த கிணற்றில் நீர் ஊறிவரச் செய்தல் போன்றவை அச்சித்துக்களுட் சில. நவநாதசித்தர் குயின்ஸ்பரி தோட்டத்திலே மோனநிலை எய்தினார்.

இரண்டாவதாகக் கூறப்படும் பெரியானைக்குட்டிச் சித்தர் சிறுவயதிற் கண்டியிற் சலவைத்தொழிலாளி ஒருவரின் குடும்பத்தில் வாழ்ந்தார். தம்மை வளர்த்த தாய் தந்தையரோடு ஏற்பட்ட மனக்கசப்பாற் கண்டி கதிரேசன் கோயிற் படிக்கட்டில் வாழ்ந்து வந்தார். அவரைப் பலரும் பைத்தியக்காரன் என இகழ்ந்து வந்தனர். சுவாமிகள் மற்றவர்களுக்குத் தம்மைக் காட்டிக்கொள்ளாது, கடைவிதியிற் போடப்பட்ட எச்சில் இலைகளைப் பொறுக்கி எச்சில் உணவைச் சாப்பிட்டு, பக்குவநிலை அடைந்து இந்தியாவிற்குச் சென்று தாம் செல்ல முடியாத புகைவண்டிகளை நிறுத்தியும் பின்பு இயங்கச்செய்தும், ஊமைகளுக்குக் கன்னத்தில் அடித்துப் பேசச்செய்தும், வேறுபல சித்துக்கள் செய்தும் புகழடைந்தார்.

பின்பு பெரியஆனைக்குட்டி அவர்கள் கொழும புக்கு வந்து கப்பித்தான் கோயிலில் வாழ்ந்துவந்த ஈனமுத்து என்பவருடன் பலகாலம் தங்கிப் பல அற்புதங்களைச் செய்தார். ஈனமுத்து நிக்சோ இழுக்கும் கூட்டத்தின் தலைவன். சாராயம் நிரம்பக் குடிப்பவர். அவருடன்தான் சுவாமிகள் தங்கினார் என்றால் அது ஜீவன் முக்தர்களின் விருப்பு வெறுப்பற்ற நிலையையும் யார் எதை உவந்து கொடுத்தாலும் மறுக்காது வாங்கி உண்ணும் பணிவையும் காட்டுகிறது. கோயிலுக்கு வந்துசென்ற பிச்சைக்காரக் கும்பலோடு கும்பலாகத் தமது சீடன் சித்தானைக்குட்டியுடன் சுற்றித் திரிந்து பல அற்புதங்கள் செய்தபின்னர் கொழும்பு முகத்துவாரக் கடற்கரையில் சித்தி அடைந்தார்.

இந்நூலில் அடுத்ததாகக் கூறப்பெறுபவர் கிழக்கிலங்கையிற் காரைதீவிற் சமாதியடைந்த சித்தானைக்குட்டிச் சுவாமிகள். இவரை 1949ஆம் ஆண்டு தரிசிக்கும்பேறு நூலாசிரியருக்குக் கிடைத்தது. இதனாலேயோ என்னவோ இந்தச் சித்தரைப் பற்றியே நூலில் மூன்றில் இரண்டு பகுதியில் விரிவாகக் கூறிச்செல்கிறார்.

சித்தானைக்குட்டியின் குருநாதர் பெரியஆனைக் குட்டி அவர்களே, சித்தானைக்குட்டி பல சோதனைக் குள்ளாவாரென்றும், தம்மிலும் பெரியவனாய் இருப்பாரெ ன்றும், தீர்க்கதரிசனமாய்ச் சித்தானைக் குட்டியிடம் கூறினார். இதனைச் சித்தானைக்குட்டியின் வாழ்க்கை யிலிருந்து பல எடுத்துக்காட்டுகள் மூலம் நூலாசிரியர் விளக்குகின்றார். திசைமகாரகமவிற் கந்தையா ஓவசியர் மனைவி சேதாம்மா தமது கணவரின் விபத்திற்கு மாறா கச் சுவாமிகளை உபசரித்து, கணவரின் விருப்பத்திற்கு மாறாகச் சுவாமிகளை உபசரித்து, கணவனின் ஐயுறவைப் பொறுக்கமுடியாது தமது ஊராகிய கிழக்கிலங்கைக் கரைதீவிற்குச் சென்று சுவாமியுடன் குடியிருந்து தொண்டு செய்து பலரின் வம்புப் பேச்சுக்குட்பட்டுக் காரைதீவில் சமாதிநிலை அடைந் தார். இவ்வசைமொழிகளைச் சுவாமிகள் தமக்குச் சொந்தமில்லை என ஒதுக்கி வாழ்ந்தார்.

சித்தானைக்குட்டிச் சுவாமிகள் காரைதீவிற் பல சாதனைகளை நிலைநாட்டினார். கண்நோயை உமிழ்நீரைக் கொப்புளித்து நிக்கினார். அறியப்படாத கடவுகளை அறிவுறுத்தினார். மண்டைமீது தாமே கட்டையால் அடித்து ஏற்படுத்திய காயத்தைப் பின்பு வெற்றிலைத் தாம்பூலத்தால் காயச்செய்தார். மக்கள் மழையின்றி வருந்தியபோது மழையை வெள்ளமாகப் பெய்யச்செய்தார். பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு பிள்ளைப்பேறு அளித்தார். திருமணங்களை ஒழுங்குசெய்தார்.

காரைதீவு மட்டுமன்றி சித்தானைக்குட்டிகள் கிழக்கு மாகாணத்தின் ஏனைய கிராமங்களுக்கும் சென்று அவற்றைப் புனிதப்படுத்தினார். பனங்காடு, கோண்டாவில், கன்னன்குடா, அமிர்தகளி, தீவுமுனை, ஏறாவூர், கல்முனை, அக்கரைப்பற்று முதலிய இடங்களிற் சுவாமிகள் செய்த அற்புதங்க்ள பல. தீப்பிடித்த கதிர்காமத் திரையை கல்முனைச் சந்தியில் நின்று கசக்கி அணைந்தமை, கதிர்காமக் காட்டில் வழிதப்பியவர்களுக்கு வழிகாட்டியமை, மீன் கறியைக் கத்தரிக்காய்க் கறியாய் மாற்றியமை, மரவள்ளிக் கிழங்குக்கறி ஒரு கிழமைக்குச் சூடு ஆறாமல் இருந்தமை, ஒரேபெண் இரு இடத்தில் ஒரே நேரத்தில் சின்னமேளம் ஆடியமை, உடைந்த சாராயப்பீப்பா அடைபட்டமை, மன்னார் கடலில் அகப்பட்டவர்களை மீட்டமை, மாட்டிறைச்சி மல்லிகைப்பூ ஆனாமை, திமிர்வாதக்காரனை நிமிர்ந்து நடக்கச்செய்தமை போன்ற பல அதிசயங்களைச் செய்த சுவாமிகள் 1951 ஆம் ஆண்டில் மோனநிலை எய்தினார்.

சுவாமிகள் வரலாற்றிலிருந்து அவருடைய உண்மை நிலையைப் பலர் உணரவில்லையென அறியமுடிகின்றது. ஆவர் தமது கோலங்களையும் செயல்களையும் அடிக்கடி மாற்றி உலாவினார். சிலசமயம் மௌனமாய் இருந்தனர். யோகநித்திரையிலும் ஆழ்ந்திருந்தார். இருந்தாற்போலச் சுடலையிலும் தனியாக உலாவினார். யோகநித்திரையில் இருக்கும் காலங்களில் வேறு ஊரில் உலாவியதாகச் செய்திகள் வந்தன. இவற்றைச் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளவில்லையெனத் தெரிகின்றது. யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பாச் சுவாமிகளை விசர்ச்செல்லப்பா என்று அழைத்தமையும் இதனாலேயே.

இவ்வாறு நூலாசிரியர் மூன்று சித்தர்களின் வரலாறு மூலம் சித்தர்களின் மகிமையையும் ஆற்றலையும் பல எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கியுள்ளார். பரமசிவன் வலியவந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்டது போலச் சித்தர்கள் தமது அடியார்களைத் தேடிச்சென்று ஆட்கொள்வர் என இந்நூல் மூலம் அறியமுடிகின்றது.

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் முப்பெருஞ்சித்தர்கள் எனும் நூல் மூலம் ஈழத்திலே சித்துக்கள் செய்த மூவரின் வரலாற்றையும் தத்துவங்களையும் தமக்கேயுரிய நடையிற் சிறப்புற அமைத்துத் தந்திருக்கிறார். மக்கள் நன்னெறியில் நடக்கவும், அறிவு எனும் கருவியினால் முன்னேறி ஒழுகவும், எல்லோரும் இன்புற்றிருக்கவும் இந்நூல் வழிகாட்டுவதாக.

–திருச்சிற்றம்பலம்–

- "இறைவனை வாழ்த்தினால் எல்லா உயிர்களும் வாழும்"
- "உயிர்களிடத்து அளவு கடந்த கருணை வைத்தாலன்றி கடவுள் கருணையைப் பெறமுடியாதென்பது வள்ளுவரின் முடிந்த முடிவான கருத்து".
- "அறிவில்லாதவர் நட்பு மிகப்பெரிய கொடுமையைத் தரும்".
- "த்ரியம்பகம் என்பது ஒரு தலம். அது கோதாவரி நதி உற்பத்தியாகும் இடத்திலே உள்ளது. பன்னிரு ஜோதி லிங்கத்திலே ஒன்று".
- "அறிவுடையவர்கள் பேசும் பேச்சில் அழகு இருக்கும்; ஆழம் இருக்கும் நுணுக்கம் இருக்கும்".

**- வாரியார் -**

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# திருமூலர் கண்ட சிவம்

**கலாகீர்த்தி பேராசிரியர் சி. தில்லைநாதன்**
**தமிழ்ப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்.**

எமது வாழ்வு குறைவற்றதாகவும் அமைதியும் ஆனந்தமும் நிலவுவதாகவும் அமையவேண்டும் என்று எல்லோரும் விரும்புகின்றோம். ஆனால், எல்லோரும் விழையும் அந்த அமைதி வாய்த்தற்கு அரிய ஒன்றாகவே உள்ளது. எமது உலகியல் வசதிகளையும் பலத்தையும் பெருக்கிக் கொள்ளவென்று பலவழிமுறைகளையும் கருவிகளையும் ஆக்கிக்கொண்டிருக்கிறோம். ஆயினும், ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு வேண்டிய புரிந்துணர்வையும் வழிமுறைகளையும் விழுமியங்களையும் வளர்த்துக்கொள்ளவில்லை.

புறவசதிகளையும் வாய்ப்புக்களையும் தேடுவதில் மனிதனுக்குள்ள ஆர்வம் தன்னைத் தேடுவதிலும் தன் ஆற்றலை வெளிக்கொணர்ந்து வளர்ப்பதிலும் காணப்படவில்லை. தன் உடலையும், அதனுள்ளிருக்கும் உயிரையும் வளர்க்கத் தெரியவில்லை. கோள்கள், நட்சத்திரங்கள், புல்பூண்டுகள், பிராணிகள் முதலான வற்றிலும் பிற மனிதர்களிலும் தங்கிவாழும் மனிதன் தன் பங்கையும் கடமைகளையும் குறித்து அதிகம் சிந்திப் பதில்லை. சூழ்ந்திருக்கும் பிரபஞ்சத்திற்கும் தனக்கு முள்ள தொடர்பு யாதென்பதை எண்ணிப்பார்ப்பதில்லை.

இந்நிலையில், தொல்லைகள் கவலைகள் அழிவுகளால் அலைக்கழியும் மனிதகுலத்தின் ஆனந்தப்பேற்றுக்கு வழிகாட்டுபவராகவும் வாயிலாகவும் திருமூலர் விளங்குகிறார். இறையருளால் அனைவரும் அமைதியும் மகிழ்வும் பெறலாமென்பது அவரது செய்தி. சத்திய தரிசனம் பெறும் ஆற்றல் மனிதரிடமே உள்ளது என்பதையும், அவ்வாற்றலை வெளிக்கொணர்வதற்கு வேண்டிய சாதனமுறைகளையும் அவர் விளக்குகிறார். மனிதகுல அமைதிக்கான அவரது உத்தரவாதம் அன்புக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது.

தமிழ்நூற் பரப்பினை நோக்கும்போது, "நம்பிரான் திருமூலர்" என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "முழுத் தமிழின்படி மன்னுவேதத்தின் சொற்படியே பரவிட்டு என் உச்சி அடிமன்ன வைத்த பிரான் மூலன் ஆகின்ற அங்கணனே" என்று நம்பியாண்டார் நம்பியும், "நந்தி அருள்பெற்ற நான்மறை யோகிகள்" என்றும் "சைவநெறி மெய்யுணர்ந்தோர்" என்றும் சேக்கிழாரும், "சக்கரவர்த்தி தவராசயோகி எனும் மிக்க திருமூலன் அருள்மேவு நாள் எந்நாளோ" என்று தாயுமானவரும் பாடியிருப்பதை அவதானிக்கலாம்.

திருமூலர் வரலாறு குறித்து நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், உமாபதி சிவாச்சாரியார் முதலானவர்கள் கூறியிருக்கின்றனர். திருமூலரது வாக்குகளை அகச்சான்றாகக் கொண்டு அறியப்படும் சில செய்திகளும் உண்டு. "மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர் என்றவர் என்னோடு எண்மருமாமே" என்ற அடியிலிருந்து, தலைமைச் சித்தர் எனப்போற்றப் படும் சிவபிரானிடம் உபதேசம் பெற்றவர்கள் எனக்கருதப்படும் எண்மருள் (சனகர், சனந்தனார், சனாதனார், சனத்குமாரர், சிவயோகமுனி, பதஞ்சலி, வியாக்கிரமர், திருமூலர்) ஒருவராக அவர் கொள்ளப் படுகிறார். தமது ஞானாசிரியர் நந்தியெம்பெருமான் என்றும், சிதம்பரத்தை வழிபட்டதாகவும், திருவாவடு துறையினை அடைந்ததாகவும் திருமூலர் கூறுகின்றார். ஆங்கமர்ந்து நிட்டைகூடி உலகம் உய்ய 3000 மந்திரங்க ளைத் திருமூலர் அருளினரென்று திருத்தொண்டர் புராணம் கூறும்.

திருமூலர் உலகில் அவதரித்த நோக்கமும் அவரது

உலகநோக்கும் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே".

என்பது அவரது கூற்று. இறைவன் தன்னை நன்றாகப் படைத்தது ஆகமங்களைத் தமிழ்மொழியில் அறிவிப்பதற்காகவே என்பது அவரது நிலைப்பாடு. "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்பதிலிருந்து அவரது பார்வையில் வேதமும் ஆகமமும் பேதமற்றவை என்பதும் புலனாகும். அவரது பாடல்களை நோக்குமிடத்து வேதசாரம் பொதுவாகவும் ஆகமசாரம் சிறப்பாகவும் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

"நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே"

என்கிறார் திருமூலர். "இறைவன் தரிசனம் கிடைத்தவிடத்து யான் பெற்ற இன்பத்தினை இம்மண்ணு லகும் பெறவேண்டும். உயர்ந்த வேதப் பொருளை எடுத்துக்கூறினால், அதுவே நாவாகிய தசையினைப் பற்றிநின்ற உணர்ச்சியூட்டும் மந்திரமாகும். அம்மந்திரத்தை உச்சரிக்க உச்சரிக்க இறையருள் கிடைக்கப்பெறும்" என்பது அதன் பொருளாகும்.

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப"

என்று மந்திரத்துக்கு இலக்கணம் கூறுகிறார் தொல்காப்பியர். "நிறைமொழி மாந்தரென்பது, சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையவராவர் ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திரமெனப்படும்". என்பது அதற்கான பேராசிரியரின் உரையாகும்.

திருமூலர் அருளியவை என்றும் குறைவின்றிப் பயன்நல்கும் திறத்தவையாகையால் திருமந்திரம் எனப்பட்டன. திருமந்திரமாலை, மூவாயிரந்தமிழ், தமிழ்மூவாயிரம், செந்தமிழ் வேதாகமம் என்றெல்லாம் அவை போற்றப்பட்டன. "சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்" என்கிறார் திருமூலர். அதாவது, சதாசிவக் கடவுளுடைய தத்துவத்தினின்றும் வெளிப்பட்ட தமிழ் மறை. திருமந்திரம் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் கொள்ளப்படுகிறது. "தோத்திரமும் சாத்திரமுமானார் தாமே" என்று சம்பந்தர் இறைவனைப் பரவியமையும் இங்கு எண்ணிப்பார்க்கத்தக்கது.

"திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந்திரமே சிவமாம் – அருமந்த
புந்திக் குளேநினைந்து போற்றும்அடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்"

என்பது ஒரு தனிப்பாடல். "ஆகமங்களின் உட்பொருளையும், சிவன் சக்தி வழிபாட்டின் தத்துவத் தையும், யோகத்தின் உண்மையான தன்மையையும் மாண்பையும், ஆத்மஞானத்தின் ஒளியையும் பற்றித் திட்பமான தமிழ்ப் பாடல்களடங்கிய ஞானக்களஞ்சியம்" என்று ஏ. வி. சுப்பிரமணிய அய்யரும், "திருமுறைகளில் திருமந்திரம் புறநடையானது. அது தோத்திரமுமாம், சாத்திரமுமாம். அன்றி, சில பகுதி சித்த பரிபாஷையோடு கூடியதுமாம். திருமந்திரத்தையும் வேதாகம வரிசையில் வைத்துக்கொள்ளல் சாலும்" என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறியுள்ளவை எண்ணிப்பார்க்கத்தக்கவையாகும்.

எளிதில் பொருள் அறியப்படாத பகுதிகளும் யோகம் தத்துவம் அறம் சம்பந்தமான கருத்துக்களும் ஆங்காங்கு காணப்படுவதாலும் தேவார திருவாசகங்களைப் போல் அனுபவித்துப் பாடமுடியாததாலும் போலும் திருமந்திரம் போதிய கவனத்தைப் பெறவில்லை. ஆயினும், அது முக்கியமான ஒரு நூல்; பொருட்செறிவும் சொற்சுவையும் மிக்கது; சிலவியல்புகளிலே திருமுறைகள் அனைத்திலும் மேம்பட்டது; சைவசித்தாந்த தத்துவத்தின் மூலாதார ஊற்றெனத்தக்கது.

இறைவனை அடையும் வழியினை அனுபவவா யிலாக எடுத்துரைப்பது என்று கருதப்படும் திருமந்திரம்

பத்தாம் திருமுறையாகக் கொள்ளப்படு கிறது. நூல் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தந்திரமும் ஒவ்வொரு சைவ ஆகமக் கருத்தைக் கொண்டது என்பது சைவமரபாகும். திருவாவடு துறையில் மறைந்துகிடந்த திருமந்திர நூலைத் திருஞானசம்பந்தர் வெளிப்படுத்தியருளினார் என்பது செவிவழிச் செய்தியாக வழங்குகின்றது. தமிழகத்தில் திருமூலர் நீண்டகாலமாகப் போற்றப் பட்டமைக்குச் சான்றாகச் சுந்தரமூர்த்தி நாயனார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், தாயுமானவர் முதலானவர்களின் கூற்றுக்கள் உள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தாயுமானவர் தமது ஆசிரியர் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பர். தாயுமானவருக்கும் சீடர்கள் இருந்தனராகையால், திருமூலர் மரபு 18ஆம் நூற்றாண்டுக்குப் பின்னும் நிலைத்தமை தெளிவாகும்.

திருமூலர் உலகநோக்கும் குறிக்கோளும் தெளிவானவை. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றுரைத்த திருமூலர் மனுக்குலத்தை ஒக்க நோக்கியதோடு உயிருள்ளனவற்றிலும் இல்லாதனவற்றிலும் இறைவனைத் தரிசித்தார். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கூற்று அவரது உலகளாவி விரிந்த குறிக்கோளைப் புலப்படுத்துவதாகும். மனித குலத்துக்குப் புத்துயிரூட்ட விழைந்த திருமூலர் உலக ஆசாபாசங்களில் அலைக்கழிந்தவர்களிடையே ஆன்மீக ஒளியினைப் பாய்ச்சினார். உறுதியான பக்தியினால் ஒவ்வொருவரும் இறைவனின் பாதாரவிந்தங்களை அடைய முடியுமென்று எடுத்துக்காட்டினார். உடல் சார்பான வாழ்க்கையிலிருந்து ஆன்மீக வாழ்க்கையின் உச்சநிலையினை எய்துவதற்குச் செய்யவேண்டிய முயற்சிகளை விண்டுரைத்தார்.

இவ்வுலகத்து உடலின்ப வாழ்க்கை நிலையற்றது என்பதை வற்புறுத்திய திருமூலர், நீதிநெறி தவறாது நடுவுநிலை நின்று வாழவேண்டியமையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

"நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே."

என்ற திருமூலர் 'நடுவுநின் றார்நல்ல நம்பனும் ஆமே', அதாவது நடுநிலைமை தவறாதவர்கள் சிவனாக விளங்குவர் என்கிறார். நல்லவற்றைப் பேணித் தீயவற்றை விலக்கி நெறிப்படி வாழவேண்டியமையின் அவசியத்தை விளக்கக் கருதியவிடத்து,

"நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில் முள்பாயும்
நெறியில் வழுவாது இயங்கவல் லார்க்கு
நெறியில் நெருஞ்சில்முள் பாய கிலாவே."

என்றார். நெறியைப் படைத்த கடவுளே நெருஞ்சில் முள்ளையும் படைத்தது நெறிதவறி நடப்போருக்கு இடர்விளைவிக்கவேயாம்.

அறம் செய்ய வேண்டியதன் இன்றியமையாமையைத் திருமூலர் பலவாறாகப் பன்னிப்பன்னிக் கூறுகிறார்,

"அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும் திறம் அறியார்."

என்பது அவரது வாக்கு. செல்வத்தின் தேவையை மறுக்காத திருமூலர் அதனை அறவழிகளிற் செலவிட வேண்டியமையின் அவசியத்தை வலியுறுத்துகிறார். எல்லோரையும் காப்பாற்றக்கூடியது எதுவோ அதுவே அறம் என்ற அசோகச்சக்கரவர்த்தி கூற்றும் இங்கு நினைவுகூரத் தக்கது.

கல்வி; பெரியாரைத் துணைக்கோடல், தவம், துறவு, புலனடக்கம், அன்பு, பொறை, ஒழுக்கம், வாய்மை முதலானவற்றினால் உண்டாகும் நன்மைகளையும் கல்லாமை, கொலை, பிறன்மனை நயத்தல், புறங்கூறல், கள்ளுண்ணல், புலாலுண்ணல், அவா முதலியவற்றின் தீமைகளையும் திருமூலர் எடுத்துரைக்கின்றார்.

"கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய

வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்

இல்லான் இயமத் திடையில் நின்றானே."

என்பது திருமூலர் வாக்கு. கொலை, பொய், திருட்டு, குற்றம், கட்குடி, காமவேட்கை ஆகியவற்றை ஒழித்து நற்குணங்கள், அடக்கம், நடுநிலை, பகுத்துண்ணும் பண்பு ஆகியவற்றை மேற்கொண்டு ஒழுகுபவன் இயமம் எனப்படும் யோகப் பயிற்சியில் நின்றவனாவான் என்பது அதன் பொருள். இயமம் என்றால், தீயனவற்றில் செல்லாது சிந்தையைக் கட்டுப்படுத்தல். இயமத்தில் ஈடுபடுவோர் இறைவனிடத்து விரும்புவதைப் பெறுவர் என்பது நம்பிக்கையாகும்.

மக்கள் படும் துன்பங்கள் பலவற்றுக்கும் அடிப்படைக் காரணமாவது ஆசை என்றே சான்றோர் பலரும் செப்புகின்றனர்.

"ஆசை அறுமின்கள் ஆசை ஆறுமின்கள்

ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்

ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்

ஆசை விடவிட ஆனந்தம் ஆகுமே."

என்ற திருமூலர் செய்யுள் பலராலும் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுவதாகும்.

மக்கள் நலனில் ஆர்வம் கொண்ட திருமூலர் அரச நிர்வாகம் நல்லமுறையில் விழிப்புடன் நடைபெறவேண்டும் என்பதை விரும்பியதும் இன்று எண்ணிப்பார்க்கத் தக்கதாகும். "கல்லா அரசனில் காலன் மிகநல்லன்" என்றுரைத்த திருமூலர்,

"நாடொறும் மன்னவன் நாட்டில் தவநெறி

நாடொறும் நாடி அவன்நெறி நாடானேல்

நாடொறும் நாடு கெடும்மூடம் நண்ணு மால்

நாடொறும் செல்வம் நரபதி குன்றுமே."

என்றும் கூறியுள்ளார்.

சமயத்தை வாதப்பொருளாக்காமல் அதனை வாழ்கை நலன் நோக்கி அனுட்டிக்கப்பட வேண்டியதாகக் கொண்ட திருமூலர் சமூகத்தின் சாதாரண மனிதர்களையும் அவர்களது தேவைகளையும் மறந்துவிடவில்லை.

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்

நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா

நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்

படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே."

என்றது மனித நேயத்தின் விளைவான குரலாகும். இறைவனுக்குத் தருபவை மக்களைச் சேரமாட்டா என்பதும் மக்களுக்குத் தருபவை இறைவனைச் சேரும் என்பதும் திருமூலர் கொள்கை.

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து உயர் பேற்றினை எட்ட வழிகாட்டிய திருமூலர் இறைவனை அன்பின வடிவாகக் கண்டார். தூய அன்பினால் இறைவனை அடையலாம் என்றார்.

"அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

என்பதன் மூலம், அன்பே சிவம் என்பதை உணர்ந்த சில ஞானியர் கடவுள் தன்மை பெற்றவர் என்கிறார். அன்பு வடிவான உண்மைப் பரம்பொருளை அறியும் ஆர்வத்தினால் உந்தப்பட்டு ஒவ்வோர் ஆன்மாவும் உறுதியோடு முயற்சிமேற்கொள்ள வேண்டும் என்பது திருமூலர் கருத்தென்று தெரிகிறது. புறக்கருவிகளைப் பெருக்கி ஆதிக்கம் செலுத்த முனைபவர்கள் தம் உள்ளாற்றலை வளர்க்க முடியாதவர்களாய் உள்ளனர். திருமூலர் காட்டிய வழியில் உடம்பினை ஓம்பி உயிரினை வளர்த்தல் எளிதன்று. இன்று பலர் குறுக்குவழிகளில் இறையருள்பெற அவசர எத்தனங்களை மேற்கொள்கின்றனர். சிலர் அதனைப் பணங்கொடுத்துச் சுலபமாக வேண்டிவிடலாம் என்றும் நினைக்கின்றனர். சிவத்தையோ சத்தியத்தையோ அடையவேண்டுமாயின். அதனிடத்து உண்மையான இடையறாத அன்பு வேண்டும். கோயில்கள். கிரியைகள். வேதங்கள்.

தேவசாத்திரங்கள், சமயதத்துவங்கள், நோன்புகள், விரதங்கள் முதலானவை அன்பு மார்க்கத்தை அடைவதற்கான வழிமுறைகளே ஆகும். அன்போடு உருகி மனங்குழைவதனாலன்றி எலும்பை விறகாக்கித் தசைகளை வறுத்தாலும் இறைவனை அடைய முடியாதென்று மனித மேம்பாட்டில் ஆர்வமுள்ள திருமூலர் அறுதியிட்டுக் கூறுகிறார்.

"என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தஒண் ணாதே."

திருமூலர் கூற்றுப்படி அன்பே சிவம். அதனை அடைவதற்கான வழியும் அன்பேதான். சிவம் என்றால் உயர்வு என்றும் நன்மை என்றும் பொருள்படும். மனிதவாழ்வு ஆற்றலும் ஆனந்தமும் அமைதியும் உடைத்தாவதை உயர்வென்றும் நன்மையென்றும் கொள்ளவியலும். அத்தகைய வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படைகளாகத் திருமூலர் கருதியது அன்புடைமை, அறன்வழுவாமை, ஆர்வமுடைமை ஆகியவற்றையேயாம்.

முற்றும்

(நன்றி: சிவதத்துவ மலர் 1996)

-திருச்சிற்றம்பலம்-

## செய்யும் பாவங்கள்

உடம்பில் பலமும் கொழுப்பும் இருக்கும் வரையில் உடம்பினால் பெறுகின்ற இன்பமே பெரிதென்று தோன்றும். எத்தனைக்கு எத்தனை முதுமை கூடுகிறதோ அத்தனைக்கு அத்தனை பல்லோரும் இழிவுபடுத்தும் நிலைமை ஏற்படும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் என்று இடித்துரைப்பது போல இருக்கும்.

உடம்பு எப்படி வந்ததோ அப்படியேதான் அழியும். பிறப்பதும் இறப்பதும் நம்கையில் இல்லை. பிறந்தவர் இறப்பர் என்பது மட்டும் உறுதி. பிறப்பதையும் கண்ணால் பார்க்கிறோம், பிறந்தவர்கள் இறப்பதையும் கண்ணால் பர்க்கிறோம். இதற்காகப் பெரிய சாஸ்திரங்களைப் படிக்க வேண்டாம். பிறப்பே எல்லாவிதமான துன்பங்களுக்கும் மூல காரணம் என்பதை ஒருவகையில் உணர்கிறோம். பிறவாமல் இருந்தால் துன்பம் இல்லை என்று தெரிகிறது. பிறப்புக்கு மூல காரணம் பாவபுண்ணியச் செய்கைகள் எனப் பெரியவர்கள் சொல்கிறார்கள். அது தெரிந்தும் வாழ்க்கையில் நாம் செய்கின்ற பாவங்கள் எத்தனையோ?

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்
(காலையும் மாலையும் பக்.104)

"காவித்துணி வேண்டா
கற்றைச் சடை வேண்டா
பாவித்தல் போதும்
பரமனடி எய்துதற்கே".

– பாரதி –

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# இந்துக்கள் ஏன் கல்லைக் கும்பிடுகிறார்கள்?

வித்துவான், கலாநிதி க. ந. வேலன்

உலகிலுள்ள சமயங்களெல்லாம் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதில் ஒத்த கொள்கையுடையன. ஆனால் அந்தக் கடவுளின் உருவம், குணம், இயக்கம் இவற்றிலே கருத்து வேற்றுமை கொண்டிருக்கின்றன. கடவுளுக்கு உருவம் உண்டு என்றும் இல்லை என்றும் சமயங்கள் சொல்கின்றன. இந்து சமயம் உருவம் உண்டு என்னும் கொள்கையுடையது.

உருவம் உண்டு என்று கூறும் இந்து சமயம் கடவுளுக்கு உருவம் இல்லை என்றும் கூறுகிறது. இந்து சமயம் அருவம், உருவம் என்னும் இருநிலையோடு அருவுருவம் என்னும் மூன்றாவது நிலையையும் கூறுகின்றது.

இவ்வுலகம், இவ்வுலகிலுள்ள பொருள்கள் எல்லாமும் உருவமுடையன, உருவமற்றன, அருவுருவுடையன என்னும் மூன்று பிரிவுக்குள் அடங்கிவிடும். இப்பொருள்கள் எல்லாமாகவும் இவற்றோடு உடனாகவும் இவற்றின் வேறாகவும் இருக்கும் இறைவன் உருவம், அருவம், அருவுருவமாக இருக்கும் எல்லாப் பொருள்களோடும் அவையாகவும் அவற்றோடு உடனாகவும் அவற்றினின்று வேறாக்கவும் இருக்கிறான். இந்நிலையில் இறைவன் உருவமுடையவனாகிறான். அருவமுடையவனாகின்றான். அருவுருவமுடையவனாகின்றான்.

இந்த உண்மையைச் சைவசித்தாந்தம் நன்கு தெளிவு படுத்தியுள்ளது. திருமூலர், மெய்கண்டார் போன்ற சீவன் முத்தர்கள் ஐயம் திரிபற இதனை விளக்கிவிட்டார்கள். அத்துவிதம் என்னும் ஒரு தொடர் உபநிடதத்தில் இருக்கிறது. இத்தொடருக்கு ஒவ்வொருவரும் "தம் தம் அறிவு அறிவகை" பொருள் கொண்டதினால் உலகில் இறைவனைத் தவிரவேறு ஒரு பொருளுமில்லை. நம் கண்ணுக்குப் புலப்படும் இப்பொருள்களெல்லாம் ஒரு மாயை என அத் தொடருக்குப் பொருள் கொண்டார் சிலர்.

இறைவனைத் தவிர வேறு எதுவும் இல்லை. எல்லாம் இறைமயமே என்பதையும் சைவசித்தாந்தம் ஏற்றுக் கொள்கிறது. இறைவனும் உலகு உயிராகிய இருபொருள் தவிர வேறு பொருள் இல்லை எனப்பொருள் கொண்டார் வேறு சிலர். இறைவன் உலகமாக இருக்கின்றான். ஒன்றாக இருக்கிறான் என்னம் வேதாந்த அத்துவைதத்தை ஏற்றுக் கொண்ட சைவ சித்தாந்தம் இறைவன் வேறாக இருக்கிறான் என்னும் துவைத மார்க்கத்தையும் ஏற்றுக்கொண்டது.

இறைவனின் விஷிஸ்டமே இவ்வுலகும் உயிரும் என அத் தொடருக்கும் பொருள் கொண்டார் மற்றும் சிலர். இந்நிலை இறைவன் ஒன்றாகவுமின்றி, வேறாகவுமின்றி உடனாகநிற்கும் நிலையாகும். இந்த உடனாகிய நிலையையும் சைவசித்தாந்தம் ஏற்றுக் கொண்டுவிட்டது. சம்பந்தப் பெருமானின் "ஈறாய் முதல் ஒன்றாய்" என்று தொடங்கும் திருவீழிமிழலைப்பதிகமும் மெய்கண்டாரின் "அவையேதானே" எனத் தொடங்கும் சிவஞானபோத இரண்டாம் நுற்பாவும் இந்தக் கருத்தினைத் தெளிவுபடுத்தியுள்ளன.

இந்துமதம் பல தத்துவ உட்பிரிவுகளைக் கொண்ட போதும் உலகிலுள்ள எல்லா மதங்களையுமே தழுவிக் கொண்ட தாயுள்ளம் படைத்த ஒரு மதமாகும். இங்ஙனம் தழுவிக் கொண்டதைத் தோத்திரத்தாலும், சாத்திரத்தாலும் சொல்லிக் கொண்டிருக்கும் சமயம் சைவசித்தாந்தமாகும்.

அத்துவிதம் என்னும் தொடர் இந்திய தத்துவத்தில் பல உட்பிரிவுகளை ஏற்படுத்திய போதும் மேலே காட்டிய விளக்கங்களைக் கொண்ட உண்மைப் பொருளை அளவை மூலம் தெளிவு படுத்தியவர் மெய்கண்டார் என்னும் சீவன் முத்தராவார். அதனைத் தாயுமானவர் அத்துவிதம் என்னும் தொடருக்கு எல்லோரும் பொய்ப் பொருளே கண்டனர். உண்மைப் பொருளைக் கண்டதினால் இவரே மெய்கண்டார் என்னும் பொருள் தோன்ற.

“பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய் கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ”
எனப்பாடுகிறார்.

இறைவன் உருவம் உடைய உலகமாக இருக்கும் போது உருவமுடையவனாகின்றான்.

“பாரொடுவிண்ணாய்ப் பரந்த எம்பரன்”

பாரிடை ஐந்தாய்ப்பரந்து நின்ற போது பார் உருவமுடைய தெய்வமா கின்றது. தரையாக நின்று தாங்கும் தாய்த்தெய்வம் பூமியாகின்றது. தரையே தாரகம். அதுவே பூமாதேவி. அதுவே தாய்நாடு. அதுவே தஞ்சம். திருவூஞ்சல் தத்துவமும் இதுவே. அதனாலேயே உயிரற்ற பூமியை இறைவனாக வணங்குகின்றோம்.

நிலத்திற்கு உயிரில்லை. ஆனால் குணம் இருக்கின்றது. அதன்கண் ஓசை, ஊறு (உற்று, தொட்டு அறியும் அறிவு) ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்து குணங்களும் உள்ளன.

இந்தப் பூதத்தாலா நம்மிடமும் இந்த ஐவகை இயல்புகளும் உள்ளன. ஓசையில் இருந்து சத்தத்தையும், ஊற்றிலிருந்து பரிசத்தையும், ஒளியிலிருந்து ரூபத்தையும், சுவையிலிருந்து இரசத்தையும், நாற்றத்திலிருந்து கந்தத்தையும் நாம் உணருகின்றோம்.

இந்த ஐவகை இயல்புகளையும் நமக்குத்தருவது பூமியே. பூமியில் ஐவகையாக இருப்பவன் இறைவன். இதனாலேயே இந்துக்கள் பூமியை விழுந்து வணங்குகின்றார்கள். பெண்கள் அடி அழிக்கின்றார்கள். ஆண்கள் மண்ணாக இருக்கும் இறைவனை உடல் பொருந்த உருண்டு உருண்டு திருக்கோவிலைச் சுற்றிச் சுற்றி வணங்கு கிறார்கள்.

இறைவன் நீரிலே நான்காய் நிமிர்கின்றான். நாற்றம் தவிர்ந்த ஏனைய நான்கு தன்மைகளும் நீரிலுண்டு. இந்த நால்வகைத் தெய்வ இயல்பினை நீராகக் கண்ட இறைபக்தர்கள், நீரினை வெறும் நீராக அல்ல, தெய்வமாகவே வணங்குகிறார்கள். “தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே” என்பார்கள். தண்ணீரை வருணபகவான் என வணங்குகின்றார்கள்.

“எங்கள் பிராட்டியும் எங்கேனும் போன்றிசைந்த பொங்கும்மடு” என நீர் நிறைந்த குளத்தைக் கண்டார்கள்.

“முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே” மழை என மழை நீரைப் போற்றினார்கள்.

இறைவன் தீயிலே மூன்றாய்த் திகழ் கின்றான். தீயின்கண் சுவையும் நாற்றமும் தவிர்ந்த ஏனைய மூன்று தன்மைகளும் உள்ளன. அந்த மூவகைத் தெய்விகமாக இருக்கும் தெய்வத்தைத் தீயிலே கண்ட இந்துக்கள், தீயைத் தெய்வமாகத் தொழுகின்றார்கள்.

தீயானது தான் தூய்மைகெடாது தன்னிடம் அணைந்த எப்பொருளின் அசுத்தத்தையும் பொசுக்கித் தூய்மை செய்கின்றது. இந்த இறை இயல்பை உணர்ந்ததினால்தான் முத்தீ வளர்த்துக் கற்றாங்கு எரிஓம்பிக் கலியை வராராமற் செற்றுத் தீயை வலம் வந்து வணங்குகின்றார்கள்.

இறைவன், வளியிடை இரண்டாக மகிழ்கின்றான். காற்றின் கண் ஓசை, ஊறு, என்னும் இரண்டு தன்மைகளும் உள்ளன. இத்தெய்வத் தன்மையுடைய இறைவன் “என்னுள்ளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு நிற்கிறான்” என்பார் நாவுக்கரசர். இறைவனை மூச்சோடு மூச்சாகத் தம்முளே புகச் செய்து வாழ்பவர்கள் ஞானிகள்.

இங்ஙனமே ஓசை என்னும் ஒரு தன்மையோடு ஆகாயம் விளங்குகின்றது. ஐம்பூதங்களாகவும் அவற்றின் உடனாகவும் அவற்றின் பிறிதாகவும் நிற்கும் இறை நிலையை உணர்ந்து கண்ட இந்துக்கள், ஐம்பூதங்களை யும், ஐந்து லிங்கங்களாக ஐந்து அருஉருவத் திருமேனிகளாக அமைத்து வழிபடுகிறார்கள்.

அவற்றிற்கு இவை தலங்களென ஐந்து திருத்தலங் கள், திருக் கோவில்கள் அமைத்துள்ளார்கள்.

இறைவனையும் உயிர்களையும் தவிர உடம்பு உட்பட இவ்வுலகெல்லாம் ஐம்பூதங்களாகிய தத்துவங் களின் விரிவாகிய தாத்துவிகங்களே. பூத தத்துவமாயு ள்ள இறைவன், தாத்துவங்களிலும் ஒன்றாய் உடனாய் வேறாய் இருப்பன். இதனாலேயே நாமும் கல்லைக் கும்பிடுகிறோம்.

–திருச்சிற்றம்பலம்–

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சித்தர்கள் – ஒரு கண்ணோட்டம்

அறிஞர், குமாரசாமி சோமசுந்தரம் M.A.

சித்தர்கள் என்போர் யாவர்? அவர்கள் எத்திறத்தினர்? அவர்களின் ஆற்றல் எத்தகையது? அவர்களை எவ்வாறு இனங்கண்டு கொள்வது? - என இவ்வாறு பலவினாக்கள் சித்தர்கள் பற்றி எழுப்பப்படுகின்றன.

சித்தர்கள் என்று கூறப்படுபவர்கள் முனிவர்களா, அருளாளர்களா? எதற்குள் அடங்குவர்?

சித்தத்தை முழுமையாகச் சிவன்பால் வைத்தவர்கள், சித்தர்கள். அதனால் சித்தம் தெளிந்தவர்கள். சிவத்தை அறியும் தன்மையைப் பெற்றவர்கள்; வித்தை செய்பவர்கள் அல்லர். வேதாந்தம், சித்தாந்தத்திற்கு அப்பால் நாதாந்தம், தெளிந்த நாதர்கள் தான் சித்தர்கள்.

சிவம் எனும் உள்பொருள், பாசஞானம், பசுஞானம் என்பவற்றால் அறிய முடியாதது என்றும் பதிஞானம் கைவரப் பெற்றவரால் மட்டும் அறியப்படுதல் கூடும் என்றும் சைவ சித்தாந்த நூல்கள் கூறும்.

தத்துவங்களாகிய கருவி கரணங்களினால், தனு, கரண, புவன, போகங்களை மாத்திரம் உயிர்கள் அறிந்து கொள்ளும். அவை சடப் பொருள்கள் என்ற வகையைச் சார்ந்தவை. தோன்றி, கொஞ்சக் காலம் நின்று, பின் அழியும் பொருட்கள் சடப்பொருள்கள். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களுடன் சேர்ந்து நிற்கும் உயிர்களால் சடப் பொருள்களையே அறிந்து கொள்ள முடியும்.

மலங்களை நீக்கிச் சுத்தநிலையில் வந்துவிட்ட ஆன்மாக்களுக்கே பதிஞானம் கைவரும். மன அழுக்குகள் நீங்கப் பெற்ற தூயநிலையில், சிவத்தை அறியும் வாய்ப்பு அவற்றிற்கு ஏற்படுகின்றது. சித்தர்கள் இத்தகைய பரிசுத்த நிலையை எய்தியவர்கள்; பதிஞானம் வாய்க்கப் பெற்றவர்கள், தூய ஆன்மாக்கள்.

சிவம் என்னும் செம்பொருள், சித்து ஆகவும் சத்து ஆகவும் உள்ளது. சித்து என்பது அறிவுணர்வுள்ள பொருள். சித்து ஆகிய சிவத்தை தாம் எய்திய பதிஞானம் மூலம் அறிந்தவர்கள் சித்தர்கள். எனவே சித்தர்கள் தனிப் பெருமையுடையவர்கள். தனித்தன்மை வாய்ந்தவர்கள்; மிகவும் உயர்நிலையில் உள்ளவர்கள்.

சிவம் எவ்வாறு சாதாரண நிலையில், பாசஞானம் பசு ஞானங்களால் அறியமுடியாப் பொருளாக உள்ளதோ, அவ்வாறே சித்தர்களையும் எல்லோராலும் புரிந்து கொள்ள முடிவதில்லை. சித்தர்களின் வெளித்தோற்றத்தைக் கண்டு பைத்தியக் காரர்கள் என்று பட்டம் சூட்டியவர்களே பலர். உண்மையில் யாருக்குப் பைத்தியம் என்பது ஆய்விற்குரியது.

யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகள் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பெருஞ்சித்தர். அவர் சித்தர் பற்றிக் கூறும் போது,

> "தத்துவ மெல்லாஞ் சடமென்று தாங்கண்ட
> வித்தகரே சித்தர்" என்கிறார்.

மாயாகாரியங்களான தத்துவங்களில் ஆன்மாதன் வாழ்விற்குத் தங்கியிருக்கும்வரை, அதனால் அறியப் படுபவை சடப்பொருள்கள் மாத்திரமே. அவை அழிபொருள்கள். இதனை உணர்ந்து, உள்பொருளாகிய சிவத்தை, சித்தும் சத்துமாகிய சிவத்தை அறிந்து கொள்ளும் வித்தகரே, சித்தர் என்பது தெளிவாகக் கூறுப்பட்டுள்ளது. இது சைவசித்தாந்த அடிப்படையில் விளக்கப்பட்டமை நோக்கற்பாலது.

> "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
> முத்தர் மனமிருக்கும் மோனத்தே"

என்னும் நிலையில் சித்தர்கள் இருப்பர். முத்தர் என்போர் சித்தர். "மோனமென்பது ஞானவரம்பு" அல்லவா? ஆம், சிவஞானத்தை உணர்ந்து கொண்ட சிவஞானிகளே சித்தர்கள். சிவப் பற்றைத் தவிர வேறு பற்றற்றவர்கள் கருவி கரணங்களை அவித்தவர்கள். அதனால் அளப்பரிய ஆற்றல் மிகுந்தவர்கள்.

புலன்கள் அடங்கி விடுவதால், மனம் அடங்கி விடுகிறது. சித்தத்தில் தெளிவு ஏற்படுகிறது. மனம் ஆட்சி செய்யும் நிலை நீங்கிவிடுகிறது. மனத்தை ஆள்பவர்கள் செயற்கரிய செயல்களை ஆற்றக் கூடிய சக்தி பெற்றவர்கள். இத்தகைய சித்த சக்தி பெற்றவர்கள் சித்தர்கள். அவர்களின் எண்ணங்கள், பேச்சு, ஏச்சு, மூச்சு, செயல்கள் யாவற்றிலும் சித்த சக்தி வெளிப்படும். எமக்கு அவை ஆச்சரியத்தைத் தருவதால், அவற்றைச் சித்துக்கள், அற்புதங்கள் என்கின்றோம். அதனாலேயே, சித்தர் என்னும் சொல், சித்துக்கள் புரிபவர் என்னும் பொருளிலும் வழங்கக் காண்கின்றோம். பொதுவாக மக்கள் சித்தர்களை இந்த வகையிலேயே அறிந்து அவர்களைப் பயபக்தியோடு அணுகிப் போற்றிப் பயன்பெற விழைந்துள்ளனர். ஒரு சிலர் அவர்களின் போக்கைக் கண்டு அஞ்சி ஒதுங்கியுமிருந்தனர். சித்தர்கள் மீதுள்ள பயமும், பக்தியும் பயபக்தியாக வளர்ந்தது. எவ்வாறாயினும், சித்தர்களைச் சரிவர மக்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை என்றே கூறவேண்டும்.

சித்து ஆகிவிட்ட சித்தர்களை – சித்துப் பொருளை அறியும் ஆற்றல் சாதாரண உயிர்களுக்கு இல்லை. பாச ஞானத்தால் சித்துப் பொருளை அறியமுடியாது. அதற்குப் பதிஞானம் வேண்டும் என்பது சித்தாந்த முடிவு.

சித்தர்கள் சித்துக்கள் செய்தலையே நோக்காகக் கொண்டவர்கள் அல்லர் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் சித்துக்கள் செய்யும் பேராற்றல் உள்ளவர்கள் என்பதையும் மறுக்க முடியாது.

நல்லூரில் வாழ்ந்த செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமியின் ஞானகுரு. "முழுதும் உண்மை" என்று அவர் அருளிய மகுட வாசகம் பெரும் பொருள் பொதிந்தது.

"அன்பே சிவம்" என்று அருளினார். சித்தர்களின் மூலவர் ஆகக் கொள்ளப்படுகின்ற திருமூலர்.

திருமூலர் முதல் கோரக்கர் வரை பதினெண் சித்தர்கள் தமிழ்நாட்டில் இருந்தனர். மேலும் பலர் தோன்றினர். இன்றும் சிலர் உள்ளனர்.

"உண்மையே சிவம்" "சிவமே உண்மை" எனக் கொண்டு இந்த உலகம், மற்றும் அண்டங்கள் அனைத்தும் – முழுவதும் – அங்கிங்கெனாதபடி எங்கும் உண்மையே – சிவமே நிறைந்தும் வியாபித்தும் உள்ளது என்பதை "முழுதும் உண்மை" என்ற மகாவாக்கியம் உணர்த்துகிறது.

யோகர் சுவாமிகள் தனது குரு, செல்லப்பாச் சுவாமிகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தமை யாவும் சித்தரின் இலக்கணமாக அமைகின்றன.

"வித்தை ஒன்றுஞ் செய்து காட்டான்
விவேக மற்றோர் போலிருப்பான்"
"மந்திர தந்திரமு மானாபிமானமில்லாச்
சுந்தரன்"

சித்துக்கள் காட்டாத சித்தனாக விளங்கியமை தெரியவருகிறது.

அதுமட்டுமல்ல, சித்துக்களைச் செய்யத் தன்னையும் அனுமதிக்க வில்லை என்பதை

"இட்ட சித்திகள், எய்தவும் விட்டிலன்
வியக்க வொன்று மிலையென விட்டனன்
வியக்கும் மாந்தரைச் சேரவும் விட்டிலன்"
என்று கூறுகிறார்.

சித்துக்கள் செய்யும் ஆற்றல் தலைப்பட்டிருந்தும், சித்துக்களைச் செய்து மக்களை மயக்காதவர்களே சித்தர்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய சித்தர்களைத் தரிசித்தலாலும், பணிந்து வணங்குதலாலும், உபதேசம் கேட்டு ஒழுகுதலாலும், நம்மில் ஆன்மிகவளர்ச்சி ஏற்படுகின்றது என்பதும் உண்மை.

மனமற்ற நிலையை உடையவர்கள் சித்தர்.

"பாழான என்மனம் குவிய ஒரு தந்திரம்
பண்ணுவது உனக்கு அருமையோ?"

என்கிறார் மற்றொருசித்தரான தாயுமானவர்.

"சும்மா இருக்கின்ற திறன் அரிது" என்பதும் அவருடைய வாக்கே. உடல் சும்மா இருத்தல் அன்று; மனம் அங்கிங்க அலையாது சும்மா இருத்தலே இங்கு வேண்டப்படுகிறது. இதனையே,

"துள்ளும் மனத்தையென்றும் வெல்லு
சும்மா விருக்கும் நிலை நில்லு"

என்கிறார் சிவயோக சுவாமிகள்.

சும்மா இருக்கின்ற திறன் உடையவர்கள் சித்தர்கள். அதனால் மனதற்றநிலை – சித்தம், மலம் அற்றநிலை – சிவம் ஆகிய நிலை – சித்து ஆகிய நிலை எய்தப் பெற்றுச் சித்தர்கள் ஆயினர். சித்தர்களின் சித்தம் தூய வெறுவெளி. சித்தம் ஆகாசம் ஆகி – சிதாகாசம் எனப் பெயர் பெறுகிறது. எங்கும் எல்லாம் சிவமயம். சிதம்பரம் என்பதும் இதுவே. சிற்றம்பலம் – சித்தமாகிய அம்பலம் – இங்கேயே, நடராசமூர்த்தி, "குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்; பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்; இனித்த முடையே எடுத்த பொற்பாதமும்" ஆகச் சதா ஆனந்தத் தாண்டவம் ஆடுகின்றான். அதனை விடாமல் கண்டு பேரானந்தத்தில் திளைத்துக் கொண்டிருப்பவர்கள், சித்தர்கள். அந்தப் பேராப் பெருவாழ்வைப் பெற என்ன தவம் செய்தனரோ! அதிலிருந்து கீழிறங்கி மண், பொன், அந்தஸ்து, காமம், பைத்தியங்கள் நிறைந்த இவ்வுலகிற்கு மீள வருவார்களா?

மனதற்ற நிலையில் உள்ள இம் மகான்கள், மனதுள்ள நிலையில் வாழும் மனிதர்களுக்குப் பைத்தியக் காரர் போல் தோன்றுகின்றனர். "பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்" அறிவிலிகளுக்கு வேறெப்படித் தோன்றுவர். பைத்தியம் பிடித்தவர்கள், பைத்தியம் பிடியாதவர்களைப் பைத்தியம் என்று சொல்லுதல் நம் உலகில் ஒன்றும் புதுமை யில்லையே!

"புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து"

உலகத்தவர் பற்றிய, வள்ளுவரின் மதிப்பீடு இவ்வாறு உள்ளது. புறத்தோற்றத்தில் குன்றி மணிபோல் செம்மையானவராய் விளங்கி, அகத்தில் குன்றிமணியின் மூக்குப் போல் கறுத்திருப்பவர்களே உலகத்தவர். அத்தகையவர்களுக்கு, சிவத்தும், சிவத்துக்கு இடமளித்தும், இருக்கும் அகத்தையுடைய சித்தர்கள் வேறு மாதிரித்தான் தோன்றுவர்.

"ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தத்தில்" திளைப்பவர்கள் சித்தர்கள்.

"தன்னையறிதல்" என்பது தவம். "தன்னையறிந்தால் தவம் வேறில்லை" என்பர். தன்னை உணர்வதற்கே தத்துவங்கள் உதவுகின்றன. உணர்ந்த பின் தத்துவங்கள் (௯௬) யாவும் சடப்பொருள்கள், அவை சித்து அல்ல என்பது அறிய வரும். சித்தர்கள் தம்மை அறிந்து கொண்ட தத்துவாதீதர்கள்.

"தன்னையறிந்தவர் தத்துவாதீதரே" என்பது திருமூலர் வாக்கு.

யோகர்சுவாமிகளும் சித்தர்கள் பற்றிக் கூறும் போது, அவர்களுக்கு,

"சாதியுமில்லை சமயமுமில்லை
நன்மையும் தீமையும் நங்கட்கில்லை
தொன்மையும் புதுமையும் தூயோர்க்கில்லை
அன்னையும் தந்தையும் ஆன்மாவுக்கில்லை
காலமுமில்லைக் கட்டுமில்லை
மூலமுமில்லை முடிவுமில்லை
ஞாலமுமில்லை முடிவுமில்லை"

என்கிறார். கடவுள் நிலையை அடைந்தவர்கள். கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்தவர்கள்; தத்துவாதீதர்; காலாதீதர்; என்றும் வாழ்பவர்கள்; தன்னையுணர்ந்து தற்பரமானவர்கள் – அவர்கள் சித்தர்கள்.

அத்துவித நிலையை உணர்ந்து நிற்போர், உலகை ஒன்றாகக் காணும் பெற்றியர். இந்த நிலையில் பேதமில்லை, வேற்றுமையில்லை – சாதி, சமய, இன, மொழி, நிற, அந்தஸ்து, குலம், கோத்திரம் முதலியவற்றின் அடிப்படையில் சித்தர்கள் ஏற்றத் தாழ்வு காண்பதில்லை.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று கூறிய முதற் சித்தர் திருமூலரின் மொழிவிற்கு, என்றுமே முரண்பாடு இல்லை.

மனம் இருக்கும் வரை விரும்பு வெறுப்பு இருந்தேதீரும். மனதற்ற நிலையிலேயே இருமைநிலை நீங்கப் பெறும். சமரசம் – சமமாக நோக்குதல் – உண்மைச் சமத்துவ நிலை ஏற்படும். சமரச சன்மார்க்கம் கைகூடும்.

சித்தர்கள் வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டவர்கள்; அதேவேளை நாத்திகர்கள் அல்லர். சிவத்தைச் சித்தத்தில் கொண்டவர்கள் எங்ஙனம் நாத்திகர்கள் ஆவார்கள்.

சித்தர்கள் தாம் உண்மையெனக் கண்டு தெளிந்தவற்றைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் எவருக்கும் அஞ்சுவதில்லை. திருமூலர் திருமந்திரத்திலிருந்து யோகர் சுவாமிகள் நற்சிந்தனை வரை பல சித்தர்கள் பாடல்கள் பாடியுள்ளனர். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் தன்னை ஒரு சித்தனாகவே கூறிக்கொண்டுள்ளார்.

இவர்களுக்கு இடைப்பட்ட காலங்களில் வாழ்ந்த சிவவாக்கியர், பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், சட்டைமுனி, குதம்பைச் சித்தர், தாயுமானவர் முதலியோரின் பாடல்கள், சித்தர் பாடல்கள் எனத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. அவர்கள் வாழ்ந்த காலத்துப் பொதுவான சிந்தனைப் போக்கிலிருந்து வேறுபட்டவை என்று கொள்ளத்தக்க புரட்சிக் கருத்துக்களையும் எண்ணங்களையும் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். சித்தர்கள் சுயசிந்தனையாளர்கள்; எவ்விதக் கட்டுப்பாடுகள் அமைப்புக்கள் என்பவற்றுள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளாதவர்கள். சித்தம் ஏற்றுக் கொள்ளுகின்ற உண்மையை, சித்தினை மட்டுமே வெளிப்படுத்தியவர்கள் சித்தர்கள். அதனால் உலகியலுக்கு எதிரானவர்களோ, ஆன்மிகத்திற்கு முரண் ஆனவர்களோ, நாத்திகரோ அல்லர். ஆன்மிகம், கடவுள் வழிபாடு, பக்தி நெறி என்று சொல்லிக் கொண்டு அவற்றின் பெயரால் நடைபெற்ற அடாத செயல்களைத்தான் விமர்ச்சித்தார்கள். ஆத்திகத்தை அழிப்பதல்ல நோக்கம்; வளர்ப்பதே அவர்களின் நோக்கமாகும்.

"படமாடக் கோயிற் பகவர்க்கொன்றீயின்
நடமாடங் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயிற் பகவர்க்க தாமே"
என்னும் திருமூலர் பாடலும்.

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்திநீர்
சுற்றி வந்து முணுமுணென்று சொல்லுமந்திரம் ஏதடா
நட்ட கல்லு ப் பேசுமோ நாதனுள் இருக்கையில்"

என்ற சித்தர் பாடலும், ஆத்திகம், சமய உணர்வுக்குப் புறம்பானவை போல் மேல்வாரியாகத் தோன்றலாம். ஆனால், இறையுணர்வுக்கு எதிரான கருத்துக்கள் அல்ல என்பதை ஆழ்ந்து நோக்குவோர் விளங்கிக் கொள்வர். இறையுணர்வை மக்களிடம் வளர்ப்பதற்குச் சித்தர்கள் கையாண்ட வித்தியாசமான அணுகுமுறையென்றே கூறவேண்டும். உள்ளத்திற்குள்ளே உறுபொருள் கண்டவர்கள்; நாதன் நம்முள்ளே இருப்பதை உணர்ந்தவர்கள். அவர்களைக் கடவுளுக்கு எதிரானவர் என்று கருதமுடியுமா?

அட்டாங்கயோகம் – இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு வகைப்படும். இந்தயோக முறைகளைப் பயிற்சி செய்து இறுதியில் சமாதி என்னும் உயிரும் இறைவனும் ஒன்றிய நிலையை எய்தப் பெற்றவர்கள் சித்தர்கள் என்பர்.

யோகப் பயிற்சிகளின் விளைவாக, அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எண்வகைப் பேராற்றல்களைச் சித்தர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் என்று அறிஞர் கூறுவர். இவற்றையே அட்டமா சித்திகள் என்பர்.

இவற்றைப் பிறர் உய்விற்காகவும், மனிதர்கள் நன்னெறியில் வாழ்வதற்காகவும் பயன்படுத்துவர்.

சித்த வைத்தியத்திலும் ஈடுபாடு கொண்டவர்கள் சித்தர்கள். உள்ளத்தை, உயிரை ஓம்புவதற்கு முதற்படியாக, உடல் ஓம்பப்படவேண்டும் என்பதை உணர்ந்தவர்கள். "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்கிறார் திருமூலர். சித்தர்கள் கண்ட வைத்தியமுறை, சித்தவைத்தியம், இந்த நூற்றாண்டிலும் சித்தர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் ஒருவரான திருவண்ணாமலை சிவஞானி யோகி ராம்சுரத்குமார், "சித்து விளையாட்டெல்லாம் வீண்; சித்தமதை ஒடுக்குவதே சித்தி" என்கிறார். இதே கருத்தையே நமது சிவயோக சுவாமிகளும் கொண்டிருந்தார்.

எங்கள் இலங்கை நாட்டிலும், யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள், செல்லப்பாச் சுவாமிகள், சிவயோகர் சுவாமிகள் என்றொரு சித்தர் பரம்பரையைப் பெற்றுள்ளோம்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையின் முன்னோடிகளாக கடையிற் சுவாமிகள், நவநாசித்தர், பெரிய ஆனைக்குட்டிச் சுவாமிகள், சித்தானைக் குட்டிச் சுவாமிகள் ஆகிய நால்வரும் கொள்ளப்படுகின்றனர். அவர்கள் முறையே "வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவியடியிலும், தெற்கே நாவலப்பிட்டி குயின்ஸ்பரியிலும் மேற்கே கொழும்பு முகத்துவாரத்திலும், கிழக்கே காரைதீவிலும் சமாதிநிலை எய்தினர்" என்கிறார் பேராசிரியர் சு. வித்தியானந்தன். எனினும் ஈழத்துச் சித்தர்களின் உண்மை வரலாறு இன்னும் அறியப்படாமலே உள்ளது. இலங்கை "சிவபூமி" என்று பெயர் பெற்றது. சித்தர்கள் நிறைய இருந்திருத்தல் வேண்டும்.

நவநாதசித்தர் ஒரு பெரும் மகான்; மாபெரும் சித்தர். நாவலப்பிட்டி குயின்ஸ்பெரியில் இருந்து கொண்டு உலகம் எங்கும் சிவ ஒளி பரப்புபவர். அவர் காலாதீதர்; என்றும் வாழ்பவர்; சித்து ஆனவர். அம் மகாத்மாவின் அருள்பெற்று உய்வு பெறுவோமாக.

மனிதர்களைத் தெய்வநிலைக்கு உயர்த்த முயற்சித்த சித்தர்களைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அப்போது நாமும் நம் வாழ்வினைச் செம்மைப் படுத்திக் கொள்ளலாம். நம் பித்தம் தெளிய மருந்து சித்தர்களிடம் உண்டு.

–திருச்சிற்றம்பலம்–

## ஞானகண்டனம்

"ஞானியானவன் சகல விஷயங்களையும் துறந்து பேசு ஞான அறிவில்லாமல் இருக்கக்கூடிய நிர்மூடர்களுக்கு ஞான அறிவு ஏற்படும்படி கண்டித்துப் பேசுவார்கள். அவ்வளவு தூரம் கண்டித்து பேசவில்லையானால் அஞ்ஞானமையாகிய இருள் வந்து மூடி அனேக கெட்ட எண்ணங்களுக்கும் துர்க்குண, துர்ச்செய்கைகளும் சனங்களுடைய இருதயத்திலே ஏற்பட்டு அனேக தீவினைகளை உலகத்தில் செய்து அடியோடு உலகத்தைக் கெடுத்துவிடுவார்கள். ஆகையினால் எந்த எந்த மனிதர்களிடத்தில் எதைஎதை எடுத்துப் பேசவேண்டுமோ அதுகளை எடுத்துப்பேசி அவர்களைப் பக்தி மார்க்கத்தில் திருப்பி நல்வழியில் நடக்கும் படியான ஞானபோதனையை ஜனங்களுக்குச் சொல்வது ஞானிகளின் கடமையாகும்".

–ஞானயோக சக்தி–

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# அமுதக் கடவுள்

**அருள்மொழி அரசி,**
வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் J. P.

அமுதம் வேண்டி அமரர்களும் அசுரர்களும் பாற்கடலை மந்தரமலையிட்டுக் கடைந்தபொழுது முதலில் வெளிவந்தது உலகத்தையே தீய்க்கின்ற ஆலகாலவிஷம். அமுதம் வேண்டி வந்த தேவர்களும், அசுக்கர்களும் விஷத்தைக் கண்டவுடனே கால் பிடரிபட ஓடினார்கள். தியாகப் பொருப்பன் பரமசிவன் அவ்விஷத்தை உண்டு ஆலாலசுந்தரனாக விளங்கி னார். நன்மையை ஏற்க விரைவதும், தீமையைக் கண்டால் அஞ்சி ஓடுவதும் உலக இயற்கை தானே! இந்தக் காட்சியை ஆதிசங்கரர் சிவானந்த லஹரியில், அழகிய சொல்லோவியமாக்குகின்றார்.

"நாலம்வா பரமோபகாரகம் இதம் ஏகந்து பசூநாம்பதே!
பஸ்யான் குக்ஷிகதான் சராசரகணான் பாஹ்யஸ்தி தான் ரக்ஷிதும்
சர்வாமர்த்ய பலாய நௌஷதம் அதிஜ்வாலாகரம் பீகரம்
நிக்ஷிப்தம் கரளம்களே நகளிதம் நஉத்கீர்ண மேவத்வயா"
-சிவானந்த லஹரி-

(பொருள்) பசூநாம்பதே – உயிர்களுக்கு ஈசனே! குக்ஷிகதான் – வயிற்றை அடைந்தவர்களாயும்; பாஹ்யஸ்திதான் – வெளியில் இருப்பவர்களாயும் இருக்கின்ற; சராசரகணான் – அசைகின்ற அசையாத உயிர்களை; ரக்ஷிதும் – காப்பாற்றுமாறு; பஸ்யன் – பார்க்கின்றவனாகி; த்வயா – உன்னால்; அதிஜ்வா லாகரம் – அதிக வெப்பம் வீசுவதும்; பீகரம் – பயத்தைச் செய்வதுமாகிய கரளம் – பாற்கடலில் எழுந்த விஷமா னது; சர்வாமர்த்ய பலாய நௌஷதம் – அனைத்துத் தேவர்களின் ஓட்டத்திற்கும் நோய்க்கும் மருந்தாயி ருக்கும்படி; களே – கழுத்தில், நிக்ஷிப்தம் – வைக்கப் பட்டது; நகளிதம் – உள்ளே விழுங்கப்படவுமில்லை; ந உத்கீர்ணமேவ – வெளியே உமிழப் படவுமில்லை; பரம உபகாரம் – மிகப்பெரிய உதவியாகிய இதம் – இந்த; ஏகந்து – ஒன்றே; நாலம்வா – உமது அன்பையும் அருளையும் அறியப் போதாதா!

நீலகண்டனாக இறைவன் நஞ்சை உண்ட பிறகு அமுதகலசத்தைத் திருக்கரத்தில் ஏந்தியவாறு வந்தார். "தன்வந்தரி"க் கடவுளான திருமால். நான்கு திருக்கரங்கள் மேலே விளங்கும் கரங்களில் சங்கமும் சக்கரமும் திகழ, ஒருகலத்தில் அமுதகலசமும், மற்றைய கலத்தில் அட்டைமீனும் விளங்க திருமேனியை ஒளிகாலும் அணிபணிகள் அழகுசெய்ய சௌந்தர்யமே ஓருருக் கொண்டது போன்று தோன்றினார் பகவான்.

அமரர்களை அமரர்களாக்க அமுதத்தை அளித்ததோடு ஆயுர்வேதத்தையும் அளித்து பிணி மூப்புக்களின் அச்சத்தை அகற்றினார். உடலில் உள்ள துர்நீரை அகற்றி பின்பு சிகிச்சை அளிப்பதே ஆயுள்வேத முறையின் வழியாகும். அதனைக் குறிக்கும் முகமாகவே தன்வந்தரி பகவான் கெட்ட இலைத்தத்தை உடலினின்று உறிஞ்சும் அட்டைமைத் தாங்கிக் காட்சி நல்குகின்றார்.

ஆயுர்வேத மருத்துவர்களுக்கெல்லாம் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ தன்வந்திரியே. தன்வந்திரி மந்திரம், யந்திரம் பூஜா முறைகள் நாளடைவில் பிரபலமாயின. ஸ்ரீரங்கத்தில் தன்வந்தரிக்கெனத் தனிச் சந்நிதியே இருக்கின்றது.

ஐப்பசி மாதம் தேய்பிறை ஹஸ்த நக்ஷத்திரமும் மங்கள வாரமும் கூடிய நன்னாளிலே பகவான் அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன.

தேவர்களின் பிணி, மூப்பு, மரணம் இவற்றைத் தவிர்த்த ஆதி தேவரான ஸ்ரீ தன்வந்தரியே சத்திர

சிகிச்சையை விரிவாக போதிக்க விரும்பி மீண்டும் பூமியில் "திவோதாசர்" என்ற நாமத்துடன் அவதரித்தார் என்ற செய்திகளை ஸ்காந்த கருட, மார்க்கண்டே புராணங்களின் வாயிலாக அறிகின்றோம். சுச்ருதர் போன்ற ஆயுர்வேத ஆசிரியர்களுக்கெல்லாம் திவேரதாசரே குருவாக அமைந்து ஆயுர்வேதத்தில் சத்திர சிகிச்சையினை விரித்து விளக்கம் அளித்தார் என்ற தெரிய வருகின்றது. நூற்றுக்கணக்கான முனிபுங்கவர்கள் திவோதாசருக்குச் சீடராகி ஆயுர்வேத வைத்திய முறைபற்றி பற்பல அரிய நூல்களை யாத்து உலகிற்களித்தனர்.

திவோதாசரின் (தன்வந்தரி) முக்கிய சீடர்களாக ஔபதேனவர், ஔரப்ரர், பௌஷ்கலாதர், கரவீரியர், கோபுர ரக்ஷிதர், வைதரணர், ஸூச்ருதர், போஜர், நிமி, காங்காயனர், கார்க்யர், காலவர் ஆகிய பன்னிருவர் திகழ்ந்தனர். இவர்கள் மூலமாகத்தான் ஆயுர்வேத வைத்திய முறை நமக்குக் கிடைத்திருக்கின்றது.

தன்னலம் கருதாத அப்பெருந்தகைகள் விட்டுச் சென்ற பெருஞ்செல்வமாகிய சித்த வைத்திய முறைகள், ஆயுர்வேத வைத்திய முறைகள், மூலிகைகள், அபூர்வ மருந்து வகைகள் மந்மை உடல்நோயினின்றும், உள நோயினின்றும் மீட்டெடுத்து வாழவைக்கின்றன.

அச்சித்த புருஷர்களை வாழ்த்தி, வணங்குவது தான் நாம் அவர்களுக்குச் செய்யும் நன்றிக்கடப் பாடாகும்.

-திருச்சிற்றம்பலம்-

- "நல்ல எண்ணம், நல்ல நினைவு நல்லொழுக்கமிருந்தால் மனிதனே நமக்கு ஈசன்".
- "மெய்ஞ்ஞானிகளுக்கு எல்லா மதமும் சம்மதம் எல்லாம் ஒரே கடவுள் எல்லா இன்பமும் ஒன்று".
- "உலகமானது உங்களுக்குக் கட்டுப்பட்டதல்ல".
- துறவி பக்தியில்லாத நிர்மூடர்களுக்குப் பயந்தவன் அல்ல".
- "எந்த மனிதனிடத்தில் பக்தி இல்லையோ அந்த மனிதன் நமக்கு ஓர் பெரியதல்ல".
- "பரிசுத்தமில்லாமல் உலகத்தில் அனேகவிதமான தீவினைகளைக் செய்துவிட்டு ஆலயத்திற்குச் சென்றால் ஆலயத்தில் இவர்களைக் கண்டவுடன் பகவான் வெளியே ஓடிவிடுவான்".
- "தன்னுடைய மனத்தால் தான் கெட்டான் துரியோதனன். பாண்டவர்களை அடியோடு கெடுக்கவேண்டுமென்று நினைத்தான். அந்த நினைவுப்படி துரியோதனன் கெட்டானேயல்லாது பாண்டவர்கள் ஒருபோதும் கெட்டுப்போகவில்லை".
- "ஒருவன் ஏழையாவது அவனுடைய கன்மத்தினால்"

  "ஒருவுன் பிரவுவாக இருப்பது அவனுடைய புண்ணியத்தினால்".

-ஞானயோக சக்தி-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சிவலிங்கமும் தத்துவங்களும்

பிரதிஷ்டா கலாநிதி
சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் – நயினை

விடையின் மேல் வருவானை வேதத்தின் பொருளானை
யடையிலன்புடையானை யாவர்க்குமறி வொண்ணா
மடையில் வாளைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற் கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே.

உலகில் ஆரவாரம், ஆடம்பரப்பகட்டுகள், கட்டுப்பாடற்ற வாழ்வு ஆகியவற்றில் சிக்கித் தவிக்கும் மனிதனுக்கு வாழ்வைச் செம்மையாக்கிக் கொள்ள சமயசஞ்சீவியாகத் துணைபுரிவது சிவவழிபாடாகும். சிவபெருமான் இப் பிரபஞ்சத்தின் மூலமும் முதலுமாகத் திகழுகிறார். எங்கும் நிறைந்த சக்தியாக பல வடிவங்களில் வெளிப்படும் ஒளிமிகுந்த பேராற்றலாகத் திகழ்பவரும் அவரே.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்று மணிவாசகப் பெருமான் கூறியுள்ளது போல் இறைவன் தன் அடியார்களுக்கு அருள்பாலிக்க வேண்டித்தாம் நினைத்தபடி எல்லாம் வடிவேற்பார்.

குணமும் குறியும் கடந்த பேரொளியாகிய இறைவனை ஒரு குறியின்கண் வைத்து வழிபடும் பொருட்டுத் திகழ்வது சிவலிங்கமாகும். சிவலிங்க வழிபாடு மிகமிகத் தொன்மையானதாகும். உலகின் பல்வேறு இடங்களில் காணப்படும் சிவவழிபாட்டில் சிவலிங்க வழிபாடு சிறந்து காணப்படுகிறது.

இலிங்கம் என்பதற்குரிய பொருளைக் காரணம், சுப்பிரபோதம், வாதுளம் முதலான ஆகமங்கள் தெளிவாக எடுத்தியம்புகின்றன. ஆகமங்கள் வழிவந்த சித்தாந்த சாஸ்திரங்களும் இதனையே தெளிவுபடுத்துகின்றன. இலிங்கம் என்றால் அடையாளம் அல்லது சின்னம் என்ற பொருள்தரும். லி-லயம் அல்லது ஒடுங்குதல், கம்-வெளிவருதல் என்றும் கருத்துடன் பிரளய காலத்தில் பிரபஞ்சங்கள் அனைத்தும் ஒடுங்கி பின்னர் படைப்புக்காலத்தில் எதிலிருந்து மீண்டும் உற்பத்தியா கின்றதோ அதுவே இலிங்கம் என்று கூறப்படுகின்றது. சிவபெருமான் படைப்பு முதலான ஐந்தொழில்களாலும் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கின்றதால் சிவலிங்கம் எனப் பெயர் ஏற்பட்டது என்று வருணபத்ததி என்னும் நூல் கூறுகின்றது. "தேவர்கள் செல்வத்தை அடையும் பொருட்டு விசித்திர ரூபமாகிய மகாலிங்கமூர்த்தியை அபிஷேகம் செய்து வழிபட்டார்கள்" என்று ரிக்வேதம் சிவலிங்கம் பற்றிக் கூறியுள்ளது.

சிவம் எனும் மெய்ப்பொருள் உயிர்களின் அறிவைக் கடந்து நிற்கும் இடத்து சொரூபநிலை என்றும், உயிருக்குயிராக உள்நின்று அவற்றை இயக்கும் போது தடத்தநிலை என்றும் சைவசித்தாந்திகள் இறைவனுக்கு இரு நிலைகளைக் கூறுவர். சொரூபநிலை என்பது சிறப்பியல்பாகும். இது கடவுளின் குணம், குறி, பெயர், உருவம் அற்ற நிலையாகும். மனம், வாக்கு, காயங்களு க்கு அப்பாற்பட்டு, சொரூபநிலையில் பரமசிவமாக விளங்கும் இறைவன் உயிர்களிடத்துக் கொண்ட கருணையினால் தடத்த நிலையில் உருவத் திருமேனி தாங்கி வருகிறார். இந்நிலையில்தான் 64 மூர்த்தங்க ளைக் குறிப்பிடுவர். 64 சிவமூர்த்தங்களில் ஆதி மூர்த்தம் சிவலிங்கமாகும்.

மனம், வாக்குக்கு எட்டாததாக அளவிடற்கரிய பேரொளியாய்த் தனக்குவமை இல்லாதவனாய் குணங்குறி இலாததாக சாந்தமாக விளங்கும் கடவுள் ஆன்மாக்களின் தியான பாவனா நிமித்தம் திருமேனி கொள்கின்றார். இது அருவம், உருவம், அருவுருவம்

என்று மூவகைப்படும். கை, கால், முதலிய உறுப்புக்கள் இல்லாது மக்களின் கண் முதலிய ஐம்பொறிகளுக்குப் புலனாகாதது அருவத்திருமேனியாகும். சிவம், சக்தி, நாதம், விந்து என்னும் நான்கு தத்துவங்களும் இத்திருமேனியில் அடங்கும். இறைவழிபாட்டில் யோக நிலையிலுள்ளோர் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளைக் காணவல்ல பக்குவமு டையவர் ஆவர். இவர்களுக்கு தத்துவவடிவாக அருவத் திருமேனி புலனாகும். இதனை நிஷ்களத்திருமேனி என்றும் கூறுவர். அவயங்கள் ஏதுமில்லா இலிங்கமே நிஷ்களதிருமேனி ஆகும். நிஷ்களமாகிய இலிங்கம் ஆழ்ந்த தத்துவப்பொருளை உணர்த்தும் கடவுளின் அடையாளமாகும்.

தலை, உடல், கை, கால் முதலிய உறுப்புக்களோடு கூடி மக்களின் ஊனக்கண்ணுக்கு புலனாவது உருவத்திருமேனி ஆகும். ஐந்தொழில்களைச் செய்யும் பொருட்டும், பக்தர் தியான பாவனை செய்யும் பொருட் டும், வேதாகமங்களின் பொருளை உணர்த்தவும், ஆன்மாக்களுக்கு போகத்தைக் கொடுத்து, பாசத்தைக் கெடுத்து முக்தியை அழிக்கவும் இறைவன் உருவத்திரு மேனி கொள்வான் என்று அருணந்திசிவாச்சாரியார் கூறுகின்றார். இதுவே சகளத்திருமேனி என்றும் கூறப்படும். இவ்வாறு உருவத்திருமேனி கொள்ளும் இறைவனுக்கு இருபத்தைந்து வடிவங்கள் கூறப்படு கின்றன. சந்திரசேகர மூர்த்தம், நடராஜமூர்த்தம் முதலிய சகளத்திருமேனிகளாகும். மனிதன் இயற்கையானதும், முழுமையானதுமான வாழ்க்கையை வாழ்ந்து, வேண்டிய இலட்சியத்தை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெற உருவ வழிபாடே சிறந்த சாதனமாக உதவுகிறது.

கட்புலனாகாத அருவத்திருமேனிக்கும், கட்புலனாகும் உருவத்திருமேனிக்கும் இடைப்பட்டதே அருவுருவத்திருமேனி ஆகிய சகளநிஷ்களதிருமேனி ஆகும். உருவத்துக்கு வேண்டிய உறுப்புக்கள் இன்மையால் அருவமாயும், கண்ணால் கண்டு கையால் உணரத்தக்கதாக இருப்பதால் உருவமாயும், இருநிலை கலந்திருப்பதே அருவுருவம் ஆகும். இந்நிலையில் இறைவன் சதாசிவமாக விளங்குகிறான். உருவநிலை யில் மகேஸ்வரன், உருத்திரன், மால், அயன் ஆகவும் அருவுருவ நிலையில் சதாசிவனாகவும் விளங்குகின்றார். இச்சதாசிவ வடிவமே சிவலிங்கம் எனப்படுகிறது. சகளம், நிஷ்களம் ஆகிய இரண்டும் அமையப்பெற்ற முகலிங்கமே சகளநிஷ்கள திருமேனி எனக் கொள்வர்.

இவ் விலிங்க வடிவத்தினுள்ளே ஒன்பது திருமேனி வடிவங்கள் அடங்கியுள்ளன எனத் திருமந்திரம் கூறுகின்றது.

"மலர்ந்த வயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சிவன் வடிவாகி
மலந்தரு லிங்கம் பராநந்தி யாமே".

உருவமற்ற கடவுள் எல்லாப் பொருள்களிலும் வியாபித்து அவற்றுள் மறைந்தும் எல்லாவற்றுக்கும் நாயகமாகவும் விளங்குகின்றார். இதிலிருந்து பல தத்துவங்கள் உருவாகின. சிருஷ்டிக்காலத்தில் சாந்தி தத்துவமும், சாந்தி தத்துவத்திலிருந்து சக்தி தத்துவமும் தோன்றியது. பின் ஒவ்வொன்றிலிருந்து மற்றொன்றாக முறையே நாதம், பிந்து தோன்றின. சிவலிங்கத்தில் பீடமாக உள்ள பகுதி பிந்து என்னும் தத்துவத்தையும், லிங்கமாக உள்ள பகுதி நாதம் என்னும் தத்துவத்தையும் குறிக்குமெனவும் நாதவிந்து வடிவான இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்தலே பிரதிஷ்டை என்றும் "யோகஜம்" என்ற ஆகமம் கூறுகின்றது. இத்தத்துவத்திலே பிந்துவே மனோன்மணி என்றும், அதிலிருந்து ஈஸ்வரனும், ஈஸ்வரனில் இருந்து மகேஸ்வரனும், அவரிடம் இருந்து விஷ்ணுவும், விஷ்ணு தத்துவத்திலிருந்து பிரம்மாவும், அவரிடமிருந்து தேவர், ரிஷிகள், தானவர்கள், பல்வேறு ஜீவராசிகளும் உண்டாகின என்றும் கூறப்படுகின்றது.

இத் தத்துவங்களில் முதல் மூன்றாகிய இலிங்கம், சாந்தி, சக்தி, ஆகியவை சொல்லால் விபரித்து உணர்த்த முடியாதன, உருவமற்றன. இதனை நிஷ்களம் என்று சிற்ப ஆகம நூல்கள் கூறுகின்றன. சிவமே சகளம் எனப்படுகிறது. நாதம், பிந்து ஆகிய இரண்டும் சகளநிஷ்களம் எனப்படுகிறது. நாதமே இலிங்க வடிவமாகும். பிந்துவே பீடம் என்ற ஆவுடையார் ஆகும். இலிங்கம் சிவரூபம், யோனி சக்திரூபம், இவை இரண்டும் நெருப்பும் சூடும் போல ஒன்றாக விளங்கும். தியானம், பூஜை செய்தற் பொருட்டு இவை இலிங்கம் – யோனி என்ற பாகுபாட்டுடன் விளங்குகின்றன.

இத்தகைய தத்துவங்கள் நிறைந்து விளங்கும் இலிங்கமானது சலம் (அசைவது), அசலம் (அசையாதது), சலாசலம் (அசைவதும் அசையாததும்) என மூவகைப் படும். ஆகம முறைப்படியும் சொல்லப்பட்ட அளவுகளுக்கு அமைய இலிங்கமொன்றை அமைத்து ஆலயத்தில் ஸ்திரமாக பிரதிஷ்டை செய்யப்படும் இலிங்கமும், தானாகத் தோன்றிய சுயம்புலிங்கமும் அசலலிங்கம் எனப்படும்.

இஷ்டமான இடங்களுக்கு இஷ்டமான நேரத்தில் எடுத்துச் செல்லக்கூடியதாக அமைக்கப்படும் இலிங்கம் சலலிங்கமாகும். இது வீடுகளில் வைத்துப் பூஜிக்கப் படுவதாகும். இரத்னம், ஸ்படிகம், உலோகம், கல், மரம், மண் இவற்றாலான இலிங்கங்கள் இவ்வகையைச் சேர்ந்தன.

உரிய இடத்தில் நிலையாக நிறுவப்பட்டதுபோல் தோன்றுவதும் ஆனால் எடுக்கவும் வைக்கவும் கூடிய தாக உள்ள இலிங்கம் சலாசலம் எனப்படும். கல்லால் செய்யப்பட்டதும், பீடம், ருத்ரபாகம் ஆகிய இரண்டும் உடைய இலிங்கம் இவ்வகையைச் சார்ந்தது ஆகும்.

மேலும் இலிங்கங்கள் ஆன்மார்த்தலிங்கம், பரமார்த்தலிங்கம் என இருவகையாக நோக்கப்படும். சிவதீக்ஷா முடிவில் ஆசாரியரால் கொடுக்கப்பட்ட இலிங்கம் ஆன்மார்த்தலிங்கமாகும். பூஜீக்கும் தனக்கு மாத்திரம் பலன் கொடுப்பதால் ஆன்மார்த்தம் எனப்படுகிறது.

பரார்த்தலிங்கம் ஐந்து வகைப்படும். பிறருக்காக ஆலயத்தில் வைத்து ஆசாரியரால் பூஜிக்கப்படுவது பரார்த்தமாகும். ஆலயத்தில் நாம் வழிபாடு செய்வது இவ்வகை லிங்கமே.

சுயம்புலிங்கம் – தானே தோன்றியது.

காணலிங்கம் – விநாயகர் முருகன் போன்ற தெய்வங்களால் உருவாக்கப்பட்டது.

திவ்ய அல்லது

தெய்வீகலிங்கம் – பிரம்மா, விஷ்ணு , தேவர்களால் உருவாகியவை.

ஆரிஷலிங்கம் – ரிஷிகளால் போற்றப்பெற்றவை.

மானுஷலிங்கம் – மானுடர்கள் நிறுவியவை.

என்பனவே ஐவகைப் பரார்த்தலிங்கங்களாகும்.

மணல், அரிசி, அன்னம், ஆற்றுமண், சாணம், வெண்ணெய், சந்தனம், ருத்திராக்ஷம், பூ, கூர்ச்சம், வெல்லம், மா ஆகிய பொருட்களால் இலிங்கம் அமைத்து வழிபட்டு, வழிபாடு முடிந்ததும் நீக்கப்படுவது "க்ஷணிகலிங்கமாகும்". இவ்விதம் அமைத்து பூஜிக்கப்படும் க்ஷனிகலிங்கம் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான சித்திகளைக் கொடுக்கவல்லது என்று பல நூல்கள் மூலமாக அறியமுடிகிறது. குறிப்பிட்ட நேரத்தில் பயன்படுவதால் இவை இப்பெயர் பெற்றன. இவ்வாறான க்ஷணிகலிங்கம் ஒன்றைக் கொண்டோ இஷ்டலிங்கம் ஒன்றைக் கொண்டோ மந்திரம், கிரியை, பாவனை மூன்றாலும் செய்யப்படுவது ஆன்மார்த்த வழிபாடாகும். ஆன்மார்த்த பூஜையினை குருவழிமூலம் பெற்று அதன்படி நடந்தால் சிறந்தபயன் உண்டாகும். பரார்த்தலிங்க பூஜை ஆலயங்களில் ஆசாரியபிஷேகம் செய்யப்பெற்ற ஆசார்யர்களினால் செய்யப்படவேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது.

தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம், பித்தளை, உருக்கு, ஈயம் ஆகிய உலோகங்களில் செய்யப்படும் இலிங்கம் "லோகஜலிங்கம்" ஆகும். இவ்வண்ணமே முத்து, பவளம், வைடூரியம், ஸ்படிகம், புஸ்பராகம், மரகதம், நீலம் இவற்றால் செய்யப்டுவது "ரத்னஜலிங்கம்" எனப்படும். மேலும் சந்தனம், கருங்கல், வில்வம், தேவதாரு, அசோகம் முதலான மரங்களில் செய்யப்படுபவை "தாருஜலிங்கம்" என்று அழைக்கப்படும். நர்மதை முதலான புண்ணிய நதிகளில் கிடைக்கும் இலிங்கம் பாணலிங்கம் ஆகும். பாணாசுரன் என்னும் அரசன் சிவபெருமானிடமிருந்து தான் பெற்றுப் பூஜித்த இலிங்கங்களை சிவபூஜை முடிவில் புண்ணிய நதிகளில் சேர்த்துவிட்டான். இதுவே பாணலிங்கம் என்றும் கூறப்படுகிறது. பாணம் என்றால் நீர் என்றும் பொருள்தரும். பாணலிங்கமும் சுயம்புலிங்கமே. சுயம்புலிங்கங்களுள் உன்னதபெருமை பெற்றவை ஜோதிர்லிங்கங்கள். சிவன் ஜோதிவடிவாகக் காட்சி அளித்து எழுந்தருளிய தலங்களே ஜோதிர்லிங்க

தலங்களாகும். பாரதம் முழுவதிலுமாக பன்னிரண்டு ஜோதிர்லிங்க தலங்கள் அமைந்துள்ளன. இவற்றைவிட இயற்கையின் ஐந்து கூறுகளையும் ஐந்து இலிங்கமாக வழிபாடு செய்யும் மரபும் உள்ளது. பாரதத்திலே பஞ்ச பூதத்தலங்கள் தெய்விகம் பெற்று விளங்குவது இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

(1) மண்லிங்கம் – திருவாரூர்

(2) நீர்லிங்கம் – திருவானைக்கா

(3) அக்கினிலிங்கம் – திருவண்ணாமலை

(4) காற்று – திருக்காளத்தி

(5) ஆகாயம் – சிதம்பரம்

நமது நாட்டிலும் சிவாலயங்களில் பஞ்சபூதலிங் கங்கள் அமைத்து வழிபாடு செய்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நமது நாட்டில் காணப்படும் சிவாலயங்களில் திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடல்பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரமும், முன்னே ஸ்வரம், நகுலேஸ்வரம் மற்றும் ஒட்டிசுட்டானிலும், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோயிலும் காணப்படும் சுயம்புலிங்கமாகத் தோன்றிய தான்தோன்றியீஸ்வரர் ஆலயங்களும் குறிப்பிடத்தக்கன.

"ஆபா தாலநப: ஸ்தாலந்த புவநப்ரஹ் மாண்டமாலி ஸ்புரத்
ஜ்யோதி: ஸ்படிகலிங்க மௌலிவிலஸத் பூர்ணேந்து வஜ்தாம்னாத
ஆஸ்தோ காப்லுதம் ஏகம் ஈசம் அநிசம் ருத்ராவாகம் ஜபன்
த்யாயேத் ஈப்ஸிதசித்தயே அத்ருதபதம் விப்ரோபிஷிஞ் சேத்சிவம்.

பாதாளம் முதல் ஆகாய பரியந்தம் எல்லையில்லை யில்லாத அநந்த ஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்ற ஸ்படிகலிங்கத்திற்கு அபிஷேகம் பண்ணு கிறேன் என்று சொல்லுகிறது.

ஸ்படிகலிங்கம் நிர்லிப்பதமானது. அதற்கு ஒரு வர்ணமும் சொல்லமுடியாது. சுத்தமானது. எந்த வஸ்துவை அதில் அதில் வைக்கிறோமோ அதனுடைய பரிணாமத்தை அது அடையும். குணதோஷம் இல்லாதது. ஞானம் எப்படிப் பரிசுத்தமாக உள்ளதோ அப்படி ஸ்படிகலிங்கமும் இருக்கிறது. அதன் சிரசில் பூர்ணசந்திரகலை இருக்கிறது.

சகல பிரமாண்டமும் சிவலிங்கம். அபிஷேக காலங்களில் இப்படித் தியானம் பண்ண வேண்டும். மேற்படி ஸ்லோகத்தில் ஸ்ரீ ருத்ரத்தில் அதுதான் சொல்லப்பட்டுள்ளது. ஸர்வ பதார்த்தங்களும் நல்லது – கெட்டது எல்லாம் பகவத் ஸ்ரூபபம் என்று ஸ்ரீ ருத்ரம் கூறுகிறது. இலிங்கோற்பவ மூர்த்தியின் பெருமை அந்த ஸ்லோகத்தில் கூறப்படுகிறது. வட்டமான ஸ்வரூபத்திற்கு அடிமுடியில்லை. ஆதிஅந்தமில்லை. மற்ற வடிவங்களு க்கு இவை உண்டு. ஆதிஅந்தமில்லாதது என்பதையே லிங்காகாரம் காட்டுகிறது.

சிவனுக்கு ஈசானாம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்ற ஐந்து முகங்கள் அமைந்துள்ளன. ஆகாயத்தை நோக்கி அதாவது உச்சியில் ஒரு முகமும் ஏனைய நான்கு முகங்களும் நான்கு திக்குகளையும் நோக்கி அமைந்துள்ளன. இங்ஙனம் நான்கு முகங்களும் கொண்டு விளங்குவது முகலிங்கமாகும். இது சகளநிஷ்களத் திருமேனியாகும். இவ் உச்சி நோக்கிய ஈசான முகத்திலிருந்து 28 சைவாகமங்களும் ஏனைய 4 முகங்களிலும் இருந்து நான்மறைகளும் சிவ வடிவங்களும் தோன்றின என்பர்.

நன்மைகளை மக்கள் அடையும் பொருட்டுக் கூறப்படும் ஆகம விதிமுறைகளுக்கும் இலக்கணங்களு க்கும் அமைவாகவே கோயில்கள் விக்கிரகங்கள் யாவும் அமைய வேண்டும்.

சிவலிங்கமானது 3 கூறுகளை உடையது. அடிப்பாகம் நாற்கோணவடிவமாய் நிலத்திற்குத் தலைவ னான படைப்புக் கடவுளாய் பிரம்ம பாகத்தை உணர்த்து வதாகும். மத்திமபாகம் எட்டுப்பட்டமாகவும் திருமாலின் 8 சக்திகளும் அதனோடு பொருந்தி இருக்கும் ஆவுடையார் எனப்படும். 'ருத்ரபாகம்' (பாணம்) மேலுள்ள பாகமாகும். நெருப்பிற்குத் தலைவனும் அழித்தல், மறைத் தல், அருளல் ஆகிய முத்தொழிலுக்குத் தலைவனான சிவபாகம் ஆகும்.

பூமிக்கு அதிபதியான பிரமபாகம், பூமிக்குள் மறைந்து ஒடுங்கி நிற்கும். நீருக்கு அதிபதியான

திருமாலின் பாகம் அபிஷேக நீரைத் தாங்கி விரிந்து நிற்கும். நெருப்புக்கு அதிபதியான சிவபாகம் சோதியாய் நின்ற இலிங்கோற்பவ திருமேனி மேலோங்கி சோதிபோல் ஒளியுடன் இருக்கும்.

மானுஷலிங்கம் 12 வகைப்படும். அவற்றைச் செய்வதற்கு விரிவான இலக்கணங்கள் உண்டு. கல்லிலே உளி கொண்டு செதுக்கி அமைக்கப்படுவது இந்த லிங்கம். இதனைச் செய்யும்போது உளியின் ஒலி கேட்காவண்ணம் இருக்க சுற்றிலும் வாத்ய இசையை எழுப்பி அதில் உளியின் ஓசை மூழ்கிவிடுமாறு செய்தல் பண்டைய வழக்கமாகும்.

இலிங்கத்திற்கும் பீடத்திற்கும் சிறந்த கற்களையே உபயோகிக்க வேண்டும். மலை, கடல், புண்ணிய தீர்த்தம், ஸ்தலம் ஆகியவற்றிற்கருகில் கிடைக்கும் குற்றமில்லாத கற்களையே எடுக்க வேண்டும் என்பன போன்ற இலக்கணங்கள் சிற்ப நூல்களில் இடம்பெற்றுள்ளன.

யாரொருவர் தினந்தோறும் சிவலிங்க பூஜை செய்யாமல் காலத்தைக் கழிக்கின்றாரோ அவர் மகா பாபங்களைச் செய்தவராகின்றார். சகலவிதமான தானங்கள், பற்பல விதமான விரதங்கள், புண்ணிய தீர்த்தத்தில் நீராடல், யாகங்கள் முதலியனவும் சிவபூஜையும் சமமாகும் எனக் கூறப்படுகிறது.

சிவபெருமான் சிவலிங்கத்தில் எழுந்தருளி அடியார்கள் இடர்களைந்து முக்தியை அளிப்பவர் என்பதற்கு ஆதாரமாகப் பல அடியவரது வரலாறுகள் சான்றுபகர்கின்றன. வடதளியில் சிவலிங்கத்தை சமணர்கள் மறைந்துவிட்டு அவ்விடத்தில் சமணப்பள்ளி அமைத்திருந்தபோது இறைவன் அவ்வூர் அரசனிடம் "வாகீசன் நம்மைக் கண்டு வணங்க உண்ணா திருக்கிறான், நம்மை வெளிப்படுத்துக" என்று கூறி வெளிப்பட வைத்தான். சிவலிங்கத்தை சிவனெனவே வணங்கவேண்டும் என்பதற்கு இது தக்கதொரு உதாரணமாகும். மார்க்கண்டேயர் சிவலிங்கத்தை வணங்கி என்றும் பதினாறு வயதாக இருக்க வரம்பெற்றார். கண்ணப்ப நாயனார் வரலாறும் சிவலிங்க மகிமையை எடுத்தியம்புகின்றது. பிரம்மாவும் விஷ்ணு வும் அடிமுடி தேடிய வரலாறும் சிவலிங்கத்தின் சிறப்பை நமக்கு எடுத்துக்காட்டி உணர வைக்கின்றது. ஜோதிர்லிங்கத்தின் இடையில் தோன்றியதால் இம்மூர்த்தி இலிங்கோற்பவர் என அழைக்கப்படுகிறார். சிவராத்திரி விரதம் சிவனுக்குரிய விரதங்களில் முக்கியமானதாகும். நான்கு ஜாமங்களும் நித்திரையை விட்டு சிவலிங்க பூஜை செய்து விரதமிருப்பது இவ்விரதமாகும். நான்கு ஜாமங்களிலும் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெறும். வேடன் ஒருவன் தனக்கு மேலான தலைவனான இறைவன் இருப்பதை அறியாது புலி ஒன்றிடமிருந்து தப்புவதற்காக இலைகளைப் பறித்துப் போட்டான். அது கீழிருந்த இலிங்கத்தின் மேல் விழுந்தது. அதனால் அவன் மேலான சிவப்பேற்றை அடைந்தான். இவ்வாறான சிவராத்திரி விரதம் சிவலிங்க மகிமையை மேலும் உணர்த்துகின்றது.

சிவபெருமான் அறிந்தோம் என்பார்க்கு அறியப்படாமலும் அறிந்திலோம் என்பார்க்கு அறியப்பட்டவருமானவர் என்று கேனோபநிடதம் கூறுகின்றது.

கலியுகத்தில் சிவலிங்க பூஜையானது மிகவும் சிறப்புடையதாகும். சிவபூஜைக்கு இணையானது வேறொன்றுமில்லை. பக்தி முக்திகளை அளிக்கக் கூடியதாகும். பலவிதமான ஆபத்துக்களையும் விலக்கக்கூடியதுமான சிவலிங்கத்தை முறைப்படி பூஜிப்பவர்க்ள சிவசாயுஜ்யத்தை அடைவர் என்பதும் உண்மையாகும்.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# திருவாசகம் சுட்டும் முல்லைப்பண்ணின் பூர்விகம் இலங்கையா?

**நயினை நா. வி. மு. நவரெத்தினம்,**
சிரேஷ்ட இசை விரிவுரையாளர்,
இசைத் துறை, யாழ். பல்கலைக்கழகம்.

தேனினுமினிய திருவாசகத்தின் சிறப்பு வான்புகழ் உடையது. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்க வல்லது திருவாசகம். இறைவனுடன் இரண்டறக்கலந்த அருள் ஞானிகளது உள்ளத்தையுருக்கித் தேனாய் உணர்விக்கும் தன்மை திருவாசகத்திற்குண்டு.

திருவாசகத்தைத் தொன்று தொட்டு பண்டைத் தமிழ் மக்கள் முல்லைப் பண்ணிலேயே பாடிவருவதாக முல்லைப்பண் ஆய்வின்மூலம் தெரியவருகிறது. முல்லை இசை, முல்லைப் பாணி, முல்லை யாழ், முல்லை பண் என்பனவெல்லாம் ஒரோ கருத்திலிடம் பெறுவன.

'இசை' எனும் பதம் பண்டைத் தமிழ் வழக்கில் தொன்ற தொட்டுப் பயிலப்பட்டு வந்துள்ளது. இசையின் தொழிற்பாட்டிலே பிரதான மூன்று பண்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்க முடியும்.

1. உடலையும் உயிரையும் இயைவிப்பது.
2. ஜீவாத்மாவையும் பரமாத்வாவையும் இணைவிப்பது.
3. ஓரறிவு தொடங்கி ஆறறிவு ஈறாகவுள்ள எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களால் தோன்றும் உயிர் வர்க்கங்களை உளத்தால் பிணித்து மகிழ்விப்பது.

உலக சமுதாயமானது பல்வேறு வகையான இசை வடிவங்களைக் கொண்ட அமைப்பாக இருப்பினும் அவற்றிற் காணும் அடிப்படை நரம்புகள் அனைத்தும் தமிழர் முதலிற் கண்ட முல்லைப்பண் அல்லது முல்லை யாழ் நரம்புகளது மூலமாக இருப்பதைக் காணலாம்.

ஐரோப்பிய, கிரேக்க, ஜைன இசைகளுடன் இவை ஒப்பு நோக்கி ஆராயப்படும் போது முல்லைப் பண் திராவிட இன மக்களின் மூலக்கரு இசையாகவும் நாகர்கால இசைவடிவங்களின் முதன்மையானதாயவும் வரலாற் றால் பெறப்படுகிறது.

தமிழ்ப் பண்களின் தொன்மையை அறியவுதவும் சங்க இலக்கிய நூல்களான எட்டுத் தொகை பத்துப்பாட்டு என்பனவற்றக்கு முன்னரேயே அவை பயிலப்பட்டிருக்க வேண்டும் என அறிய முடிகிறது. தொல்காப்பியத்திலே குறிஞ்சி, பாலை, மருதம், செவ்வழி, முல்லை எனும் ஐவகை நிலங்களையும் விரித்து அவற்றில் இசைத்த ஐவகைப் பண், ஐவகை யாழ், ஐவகை இசைக்கருவி என வகைப்படுத்திக் குறித்தனர். சிவணிய நரம்பு என யாழின் பொருமையைக் குறித்தனர்.

சி+வண்+இய+நரம்பு=சிவணியநரம்பு. சிறந்து வண்மை பொருந்திய (திறன்கள். தந்திகளையுடைய என்று பொருள் கொள்ள வேண்டும். நரம்பால் சிறந்த இயல்புடைய எனவும் கொள்ளலாம்.

எட்டுத் தொகையில் இசையுடன் காணும் பரிபாடல் நாகரால் இயற்றப்பட்டு அவர்களாலேயே பண்ணமை க்கப்பட்டுள்ளது. அதன் கண் பெறப்படும். இலங்கையிலே நாகர் காலத்தில் இசை மகோன்னத நிலையில்

இருந்தமை அறியப்படும். மணியாக்கி அல்லது மணியாட்சி நாகன் என்ற மணி முடிநாகன் மணித்துவீலம் எனும் தாகதுவீயத்தில் இருந்து கல்யாணி எனும் களனியாவரை தனது அரசாட்சியின் எல்லையைக் கொண்டிருந்தான். இக்காலத்தில் இலங்கை முழுவதும் இசைத்தமிழ்ப் பெயர்களால் அழைக்கப்பட்டன. அவற்றுள் ஆறுமுல்லைகளும் கொண்ட பிரதேசம் (வந்த ஆறும் முல்லை) வந்தாறுமுல்லை உட்பட பெரியமுல்லை (பெரிமுல்லே) பத்தரமுல்லே (பத்தர மல்லை) உட்பட ஐம்பதிற்கும் அதிகமான இடங்கள் இசை வாசனையுடன் இன்றும் காணப்படுகின்றன. இசையுடன் இணைந்த இடப் பெயர்கள் பற்றிய நுண்ணாய்வு இனிமேல் தான் விரிவாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

பாணர்முல்லை (பான் முல்லே) நாகரினத்துட் சிறந்த இசைவாணர் வாழ்ந்த பகுதியாக பண் சமைத்தவர்களும் இசைத்தவர்களும் வாழ்ந்த பகுதியாகக் கொள்ளமுடியும்.

ஐந்திசை நரம்புகள் தழுவியிருந்த முல்லைப் பண் ஏழிசைப் பண்களாக - அதாவது பூரணமான நிரல்களையுடைய பெரும் பண்ணாக இலங்கையிலேயே தோற்றம் பெற்றிருத்தல் (பெரிமுல்லே) பெரியமுல்லை என்ற இட வரலாற்றை நோக்கும்போது உணர முடிகின்றது.

வில் யாழ்கள் உண்மையில் ஆரம்பத்தில் 1, 2, 3, 4, 5, என்ற வகையில் 7 தந்திகள் வரை வளர்ச்சி பெற்றுள்ளது வரலாற்றுண்மை. வரலாற்றின் மூலமாக 1 பத்தரமுல்லை (பத்தரமுல்லே) காணப்படுகின்றது.

யாழின் பிரதான உறுப்புகளில் பத்தர்மிக முக்கியமானது. இதுவே யாழின் நாதத்தை ஓங்கிடக் காட்டுவது. இதைக் குடம் என்றும் அழைப்பர். வில்யாழ் குடத்துடன் இணைக்கப்பட்ட பூரண வளர்ச்சி பெற்ற யாழாக பத்தர் முல்லை இலங்கையிற் காணப்படுகின்றது. இசை பற்றிய அறிவியல் ஆய்வு இலங்கையிலேயே நிலவியுள்ளது. இதை ஆய்வால் நிரூபணப்படுத்தலாம். இசைத்துறை, வரலாற்றுத் தொல்லியல் ஆய்வறிஞர்கள் இத்துறையிலே ஈடுபட்டுழைக்க முன்வருவார்களா?

இலங்கைப்பிரதேச இடவரலாறு கட்டும் முல்லைப் பண்ணுடன் தொடர்புடையதாகக் கருதும் உலக இசைகளின் அமைப்பைச் சிறிது நோக்கலாம்.

| | இலங்கைமுல்லை நரம்புகளும் தமிழ்ப் பெயர்களும் | | ஐரோப்பிய இசையில் | சீன இசையில் | வடமொழிகளில் வடநூல்களில் |
|---|---|---|---|---|---|
| 1. | குரல் | ச | C | கூங் | ஸட்ஜம் |
| 2. | இளி | ப | G | இட்சி | பஞ்சமம் |
| 3. | துத்தம் | ரி | D | சாங் | ரிஷபம் |
| 4. | விளரி | த | A | தைவத் | தைவத |
| 5. | கைக்கிளை | க | E | கியோ | காந்தாரே |

கிரேக்க இசையில் ஐந்திசை அலகுகளாக இவை பிரிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பிய காலத்திற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்தோன்றிய முல்லையாழே உலகில் தோன்றிய முதற் பண்ணாகும். அது இலங்கையிலே தோன்றி நிலை கொண்டிருக்கலாம் என்பது மேலும் ஆய்வுக்குரிய தாக்கப்படல் வேண்டும்.

-திருச்சிற்றம்பலம்-

## அடிக்குறிப்புகள்

1. History of Indian Music Dravidian Culture Kuptha
2. Karunamirtha Saqaram - Abragam
3. தொல்காப்பியம், பொளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை
4. பரிபாடல், உ. வே. சாமி நாதையர் பதிப்பு
5. தமிழிசைக் கருவூலம், பாகம் I
6. மட்டுநகரில் ஒரு பகுதி
7. றாகமவுக்கு அருகில் உள்ள ஒரு பகுதி
8. கொழும்பிலுள்ள ஒரு பிரதேசம்
9. கொழும்பை அண்டிய பகுதி
10. தமிழர் இசைவளம்.

### மனவலிமை

தனக்கு எந்த ஊறு வந்தாலும் பொறுத்துக் கொள்ளுதல், பிறருக்குத் தீமை செய்யாமல் இருத்தல் இவையிரண்டும் தவத்திற்கு இலக்கணம். முதலில் சொன்னது சகிப்புத் தன்மை; இரண்டாவது சொன்னது அகிம்சை. தனக்கு ஏற்படும் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு தனக்கு ஊறு செய்தவனுக்கும் தீங்கு நினைக்காமல் வாழ்வது என்பது நல்ல மன வலிமை உடையவர்களால் தான் முடியும். நம் குழந்தை நம்மைக் கிள்ளுகிறது. பதிலுக்கு நாம் குழந்தையையா கிள்ளுகிறோம்? நமக்கு அதன் மேலுள்ள அன்பால் அதனை அணைத்துக் கொள்கிறோம். அதைப் போலப் பண்புடைய மக்கள் எல்லா மக்களையும் அன்புடன் நேசிப்பதனால் அவர்களால் தங்களுக்கு வருகின்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு உண்டாகும். திரும்ப அவர்களுக்கு எவ்விதமான தீங்கும் செய்யாமல் அவர்களை அணைத்துக் கொள்கிறார்கள். இப்படி வாழ்வது துறவிகளுடைய நிலைமை. தவவேடம் தாங்கி, தவநெறியில் சென்று எப்போதும் இறைவனையே தியானம் செய்து வாழ்கின்ற துறவிகளுக்குப் பல படைக்கலங்கள் துணையாக இருக்கின்றன. அவர்களுக்குத் தாடி ஒரு படை, உடம்பில் பூசியிருக்கும் விபூதி ஒரு படை, இடையிலே அணிந்துள்ள காவி ஒரு படை, கழுத்தில் அணிந்துள்ள உருத்திராட்சம் ஒரு பண்ட, பகைவர்கள் இவற்றைக் கண்டு அஞ்சிநடுங்குவார்கள்.

புறத்திலே துறந்தவர்கள் போலக் கோலங் கொன்வது அகத்திலே கொண்ட திண்மைக்கு அடையாளம். மனத்திற்குள் துறவுத் தன்மை இன்றி வெறும் புறக்கோலம் மாத்திரம் இருந்தால் அவர்கள் துறந்தார்கள் ஆகமாட்டார்கள். உள்ளே பலம் இன்றிப் புறப்படையினால் பயன் இல்லை.

"மனத்தகத்து அழுக்கறுத்த மௌனயோக ஞானிகள்

முலைத் தடத்திருப்பினும் மனத்தகத் தழுக்குறார்"

என்று பேசுகிறார் சிவாக்கியர். மனசிலே மாசு இல்லாதவர்கள் மகளிருக்கு அருகில் இருந்தாலும் அவர்களுடைய மார்பிலே பழகினாலும் மனத்திலே அழுக்கு உறாமல் இருப்பார்களாம். அவர்களே உண்மை ஞானிகள். புலன்களை வென்றவர்கள்.

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்
(காலையும் மாலையும் பக்.120)

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# கும்பாபிஷேகத் தத்துவம்

**வைத்தியகலாநிதி சோமசேகரம் சபாநாதன்**
DIMS (Cey) M. Ac. F (Cey)
இடவைரவு விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ் பல்கலைக்கழகம், கைதடி.
(இந்துப்பண்பாட்டுத்துறை ஆய்வாளர்)

பாக்குமிடமெங்கும் நீக்கமற வியாபித்து நிற்கும் இறைவனை உருவத் திருமேனியில் தியானித்து ஆவாகித்து வழிபடவேண்டிய முறைகளை ஆகம நூல்கள் விரிகாக எடுத்தக்கூறுகின்றன. ஆவ்வுருவத்திருமேனியை வைத்து வழிபட வேண்டிய தலம் எவ்வாறு அமையவேண்டும் என்பவற்றையும் சிறப்பாக எடுத்துக் கூற ஆகம நூல்கள் தவறவில்லை. ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் உருவத் திருமேனியில் இறைவன் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கின்ற காரணத்தினால் தான் இறைவனின் உறைவிடத்தை "ஆலயம்" என அழைக்கிறோம். இதனால் போலும் நம்முன்னோர் ஆலயத்தின் அருமை பெருமைகளையும், அவசியத்தையும் உணர்ந்ததனால் "கோலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றனர்.

"பிரதிஷ்டை" என்னும் சொல்லின் உட்பொருளை உணரின் "கும்பாபிஷேகம்" என்பதன் அடிப்படை உண்மையை அறிந்து கொள்ளலாம்.

"பிர" என்னும் பகுதி "சிறப்பாக" என்றும் "நன்கு புலனாகும்படி" என்றும் பொருள்படும். "திஷ்டா" என்றால் நிற்றல் என பொருள்படும். ஆகவ பிரதிஷ்டை என்னும் போது சிறப்பாக அல்லது நன்கு புலனாகும்படி நிற்றல் என்று பொருள்படுகிறது. இச் சிறப்பையும், தனித்துவத்தையும் ஏற்படுத்தி வைப்பதே கும்பாபிஷேக்தின் நோக்கமாகும். கும்மாபிஷேகக் கிரியைகளை நான்காக ஆகம நூல்கள் வகுத்துள்ளன.

1) அநாவர்த்தனம்:- ஆலயம் இல்லாத இடத்தில் ஆகம விதிகளுக்கமைய புதிய தொரு ஆலயம் ஆமைத்து இறைவனை எழுந்தருளச் செய்தல்.

2) ஆவர்த்தனம்:- முறைப்படி ஏற்கனவே அமைக்கப் பட்ட ஆலயம் ஒன்றில் நித்திய, நைமித்தியங்கள் நடந்துவரும் வேளை எதிர்பாராதவாறு தீயினால்பாதிப்புறுதல், காடுபடர்தல், மண்மாரி ஆகியவற்றால் தடைகள் ஏற்படுமிடத்து அதனை நிவர்த்தி செய்ய நிகழும் பிரதிஷ்டை "ஆவர்த்தனம்" எனப்படும்.

3) புனராவர்த்தனம்:- நித்தியம், நைமித்தியம் ஒழுங்காக நடந்து வரினும் ஆலயத்தின் விமானம், கருவறை, மண்டபம், கோபுரம், பிரகாரம், பரிவாரகர், விக்கிரகங்கள் பழுதடைந்திருந்தால் பாலஸ்தாபனம் செய்து திருப்பணிகள் மூலம் நிறைவேற்றி பிரதிஷ்டை செய்தல்.

4) அந்தரிதம்:- திருடர் பிரவேசித்தல், எதிர்பாராத நிகழ்வுகள் போன்றவற்றால் நித்திய பூஜை தடைப் படின் உடன் நிவர்த்திர்கப்படும் பிரதிஷ்டை அந்தரிதம் எனப்படும்.

கும்பாபிஷேகம் தொடக்கம் முதல் இறுதிவரை எட்டுப்பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

முதலாவது பிரிவு:- வரித்தல், அனுமதிபெறல், பிரார்த்தித்தல் என்பவற்றை உள்ளடக்கியது.

அ) வரித்தல்:- கும்பாபிஷேகம் செவ்வனே நடத்தத்தக்க ஆக்சாரியரைத் தேர்ந்தெடுத்தல். ஆச்சாரியார் நல்லொழுக்க முடையவராகவும், ஆகம சாஸ்திர அறிவு நிரம்பப் பெற்றவராகவும், பக்திமானாகவும் இருத்தல் வேண்டும். விக்கிரகத்தில் தெய்வத்தன்மை பிரதிபலிக்க வேண்டுமானால் ஆச்சாரியருடைய

**தவவலிமை, உருவத்திருமேனியை தூய்மையாக்கி அலங்கரித்தல்** சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் **எனக்** கூறப்பட்டுள்ளது. தவவலிமை முதலில் கூறப்படு வதால் கும்பாபிஷேகத்திற்கு முதலில் ஆச்சாரிய வரணம் செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

ஆ) அனுமதிபெறல்:- ஆச்சாரியார் பலாலயம் சென்று இறைவனிடம் தருணாலயத்தில் பிரதிஷ்டை செய்ய அனுமதி வேண்டுதல். இது தேவானுக்ஞை என்பர். அடுத்து ஒழுக்க சீலர்களாகவும், வேதமந்திரங்க ளைக் கற்றுணர்ந்த அந்தணர் பெருமக்களை கிழக்குமுகமாக மண்டபத்தில் இருக்கச் செய்து அவர்களுக்கு சந்தனம், தாம்பூலம் கொடுத்து மலரால் அர்ச்சித்து அவர்களிடம் அனுமதிபெறுவதாகும்.

“கற்றுணர்ந்த சபையோர்களே! இறைவனைப் பாலாலயத்திலிருந்து தருணாலயத்திற்குக் கொண்டு சென்று பிரதிஷ்டை செய்ய இறைவனிடம் அனுமதிபெற் றோம். அக்கிரியைகளில் மந்திரங்களில் விட்டுப்போகா மலும் கிரியைகள் மாசுபடாமலும் நடத்தித் தரவேண்டும். மேலும் பிரதிஷ்ட செய்யக்கூடிய ஆற்றலையும் அருளவேண்டும்” என ஆச்சாரியார் பிரார்த்திக்க அவர்ளும் “இறைவனின் பிரதிஷ்டாகர்மாவை செய்து முடிக்க உமக்கு ஆற்றல் உண்டாகுக” என்று ஆசி கூறுவர். இதனைப் பிராமண அனுமதி பெறல் என்பர்.

இ) பிரார்த்தித்தல்:- எந்த ஒரு காரியமும் இடையூறுஇல்லாமல் இனிதே நிறைவேற விநாயகப் பெருமான் திருவருள் வேண்டும். காற்று, மழை, நெருப்பு, முதலிய உத்பாதங்கள் நிகழாது மங்களகரமாக கிரியை கள் நிறைவேற நவக்கிரகங்களின் அருள் வேண்டும். ஆகவே கணபதி ஓமம், நவக்கிரக ஓமம் இரண்டையும் சிவாச்சாரியார் நிறைவேற்றிவைக்கிறார்.

(2) சுத்திகரித்தல்:- எந்தவொரு காரியத்தையும் இனிதே நிறைவேற்ற பொருள் இன்றியமையாதது. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருளில்லார் க்கு இவ்வுலகம் இல்லை என்ற முதுமொழியை யாவரும் அறிவர். ஆகவே சிவதர்மம் செய்து முடிக்க பொருள் இன்றியமையாதது. அந்தப் பொருள் தூய்மையுடைய தாய் இருத்தல் வேண்டும். அதாவது! நேர்மையான வழியில் அப்பொருள் ஈட்டியதாக அமைய வேண்டும். சிவதர்மத்திற்காக ஈட்டிய பொருள் பல வழியாக வந்திருக்கக்கூடும். எனவே அப்பொருளை சுத்திகரித்தல் என்ற கிரியை மூலம் குருநடாத்துகிறார். சிவாஸ்திர மந்திரஜெபம், ஹோமம் முதலியவற்றைச் செய்து கும்ப நீரால் தெளித்து சுத்தமாக்கி பதினொருபாகமாகப் பிரித்து எஜமானிடம் கொடுத்து சிவதர்மத்தைச் செய்து முடிக்குமாறு ஆசாரியர் தெரிவிக்கிறார்.

பொருளைச் சுத்திகரித்தபின் குரு தன்னையும் இறைவன் உறைவிடமான ஆலயத்தையும் சுத்திகரிக் கிறார். “மதுபாகம்” என்னும் கிரியையைச்செய்து ஆன்ம சுத்தியைப் பெறுகின்றார். நெய், தேன், பழம் இவைகளில் ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்ற மூன்று தத்துவங்களையும் பூசித்து மதுபாகத்தை அருந்துகிறார். அறிந்தோ அறியாமலோ சிவநிந்தை, சிவசாஸ்திரநிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைச் செய்திருந்தாலும் தோஷம் நீங்கப் பெற்று குரு ஆன்ம சுத்தியுடையவராய் விளங்குகிறார். பின்பு பத்துவகை யாக நீராடி புறத்தூய்மை காக்கிறார். இதனால் உடல் ஆரோக்கியம், பலவகையான பாபங்கள் நீங்குதல், மனஒருமைப்பாடு திரிகரண சுத்தி இவைகளைப் பெறுகிறார்.

நல்லவற்றைச் செய்யும் போது தீயவர் தீயசக்திகளை உபயோகித்து இடையூறை விளைவிப்பர். அத்தீயசக்திகளை நீக்க ரட்சோக்த சாந்தியை குருசெய்கிறார்.

“நான்கு திசைகளிலிருந்து வரும் தீயசக்திகளை அழிக்கும் ஆற்றல் மிக்க தேவர்களே உங்களுக்கு வணக்கம். எம்மைக் காத்தருள் புரிவீர்களாக” என்று பிரார்த்தனை அமைகின்றது. தீய சக்தியை நீக்கியபின் ஆலயத்தின் வெளிவீதியில் எண்திசைகளில் நின்று அமைதியைக் குலைக்கும் யக்ஷர், அரக்கர், பூதங்கள், பிலா , பிரம்மராக்ஷர், மஹாகாளி, ஆகிய எண்மருக்கும் பலி உணவு கொடுத்து மரியாதைசெய்து நீங்கள் இவ்விடத்தை விட்டு நீங்கி மலையடிவாரம், காடு, ஆற்றங்கரை, பாலைவனம், மயானம் முதலியஇடங்களில் சென்றுவசியுங்கள். இங்கே இறைவனுடைய பிரதிஷ்டை

நடைபெறுகிறது என்று கூறி பிரவேசபலி என்ற கிரியையை குரு செய்கிறார்.

ஆலயம் மட்டும் சுத்தமானால் போதாது. அக்கிராமத்தில் வசிப்பவர்களும், நோய் பிணியற்றவர்களாய் அகாலமரணமற்றவர்களாய், வறுமையற்றவர்களாய், தீமையற்றவர்களாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆலயம் சிறப்புடையதாகும். அடியார்கள் வந்து தரிசிப்பதனால்த்தான் ஆலயம் தெய்வ சாந்நித்தியம் உடையதாய் விளங்கும். ஆகவே கிராம நன்மைக்காக செய்யப்படும் சாந்தியாதலால் அது கிராமசாந்தி எனப்பட்டது. அதன்படி பிரமா, இந்திரன், அக்கினி முதலிய எண்திசைப் பாலகர்கள் அவ்விடத்தில் வந்து வசிக்கும்படியாக பூமியைச் சுத்திகரிக்கிறார். அதன் பொருட்டு வாஸ்து சாந்தி என்ற கிரியையைச் சிவாச்சாரியார் செய்கிறார்.

(3) விக்கிரக பிரதிஷ்டை:- உருவத் திருமேனி புதிதாகத்தாபிக்கப்படுவதாயின் குரு சிற்பியைக் கொண்டு (நயனோன்மீலனம்) கண்திறத்தல் என்ற கிரியையைச் செய்கிறார். உருவத்திரு மேனியைச் சுற்றி திரையிட்டு சிற்பி குருவின் கையிலிருந்து ஆயுததத்தைப் பெற்று முதலில் நெற்றிக் கண்ணையும், அடுத்து சூரியநேத்திரத்தையும், அதன்பின் சந்திர நேத்திரத்தையும் இறைவனைத் தியானித்துக் கொண்டு திறக்கிறார். வாய், மூக்கு, காது, தொப்புள், நகங்கள் முதலிய ๑ இடங்களில் சிறு துவாரத்தை உண்டுபண்ணுகிறார். பின்பு குரு பிம்ப சுத்தி முடித்து பால், நெய், தேன், நெல், கண்ணாடி, யானை, அந்தணர், கன்னிப்பெண், தீபம், பசு, எசமானன், பஞ்சராத்திரிகம் இவைகளை இறைவனுக்கு முன்வைத்து தரிசிக்கச் செய்கிறார். அதனால் செல்வம், தானியவளார்ச்சி, இன்பவாழ்வு, வீரியம், மனோபலம், வேதநெறி, கற்பு, அறிவுச்சுடர், சிவதர்மம், ஐந்தொழில்கள் இவையாவும் நாட்டில் சிறப்பாக விளங்கும் என்பதாகும்.

பின் உருவத்திருமேனியை தண்ணீரில் மார்பளவு வைத்து சக்திவடிவமாக இருந்தால் காதுகள் வரை தண்ணீரில் வைத்து விஷேவுபூசை, அபிஷேகம் இவைகளை ஆசாரியார் செய்கிறார். இதனை ஜலாதிவாஸம் என்பர். பின்பு தண்ணீரிலிருந்து எடுத்து தானியவாஸம் என்ற கிரியையை ஆசாரியார் செய்கிறார் சுத்தமாக தானியத்தை எடுத்து புண்ணியாக நீரால் தெளித்து முன்கூறியளவு அத்தானியத்தால்மூடி எண்மலரால் அர்ச்சித்து ஒரு முகூர்த்தகாலம் அவ்வாறு வைத்திருந்து பின் பிம்பத்தை எடுத்து ஒரு பீடத்தில் வைத்து அடியார்களால் வீதிவலம் கொண்டுவரப்படுகிறது. கோபுர வாயிலை அடைந்ததும் (திருஷ்டி தோஷம் நிவர்த்தி) கண்ணூறு நீங்குதல் என்ற கிரியையைச் செய்கிறார். பின் மாலையில் சயனோபனம் என்ற கிரியையும் செய்து முடிக்கிறார்.

கண்திறத்தல், நீரில்வைத்தல், நெற்குவியலில் வைத்தல், வீதிவலம், படுக்கைவைத்தல் இவ்வைந்து காரியங்களையும் செய்துமுடிக்கிறார்.

அருவமாக பஞ்சபூதங்களில் வியாபித்து நிற்கும் இறைவனை உருவத்திருமேனியில் உறைந்து அருள்பாலிக்க வேண்டப்படுகிறது. கண்திறப்பதால் என்றால் ஒளியிலிருந்தும், நீரில் வைப்பதால் ஜலத்திலிருந்தும், நெற்குவியலில் வைப்பதால் நிலத்திலிரந்தும், வீதிவலம் வருவதால் ஆகாயத்திலிருந்தும், படுக்கையில் கிடத்தலால் ஆகாயத்திலிருந்தும் இறைவனுடைய சக்தி உருவத்தில் இணைந்து கொள்கிறது. ஆகவே புதிய உருவத்திருமேனிக்கு இவ்வைந்து திருமேனிகளையும் ஆசாரியார் செய்து முடிக்கிறார். பின் சுப வேளையில் யந்திர ஸ்தாபனஞ் செய்து பீடத்தில் உருவத்திருமேனியை ஸ்தாபித்து அஷ்டபந்தனம் என்ற கிரியையை நிகழ்த்துகின்றார். எட்டுப் பொருள்கள் சேர்ந்து இடித்து குழைவாக்கி அதனால் பீடத்திற்கும் உருவத் திருமேனிக்கும் இதனை உண்டு பண்ணுகிறார். அடுத்தது பிம்பசுத்திஎன்ற கிரியை நிகழும். தர்ப்பை அடிமண், புற்றுமண், நாவலடிமண், ஆலடிமண், வில்லவமரத்தடிமண், துளசி அடிமண் இவைகளை ஒரு மண்கலசத்திலிட்டு நீர் நிறைத்து அதேபோல் அரசு, அத்தி, வில்வம், நாவல், மா இவைகளின் தளிரை ஒரு கலசத்திலும் இவற்றின் பட்டைகளை இன்னொரு கலசத்திம் வைத்து நீர் நிறைத்த ஆத்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்ற தத்துவ திரவியத்தைப் பூசித்து அக்கலசநீரினால் பிம்பத்தை அபிஷேகம் செய்தல் பிம்பசுத்தியாகும்.

பாலிகை செய்வதற்காக புண்ணிய பூமிக்கச் சென்றுமண் எடுத்து வருதல் எப்பதையும், பின்பு அங்குரார்ப்பணம், பாலிகை தெளித்தல் என்பதையும் குரு செய்கிறார். இபை படைப்பு எனும் தத்துவத்தை விளக்குகிறது. ஆகவே தான் பூமாதேவியைப் பூசித்து வழிபட்டு பிராத்தனைமுடித்து பூமாதேவியின் வயிற்றிலிருந்து மண் எடுக்கப்படுகிறது. படைப்புக்குரிய இடம் வயிறாகும். அது போலவே பாலிகை தெளித்து நன்கு வளருவதால் நாட்டின் தானியவளர்ச்சி உணடாகிப் படைப்புகள் வளர்ச்சி பெறும். பின்பு ஆச்சாரி யார் பாலாலயம் செய்து இறைவனுக்கு பிரஸந்நாபிஷே கம் செய்கிறார். அதன்கருத்து பாலாலயத்திலிருந்து யாகசாலைக்கு அழைத்துச் செல்ல கருதியுள்ளோம். இறைவா எங்கள் அழைப்பை ஏற்று யாகசாலைக்கு எழுந்தருள வேண்டும் என்று குருபிரார்த்திக்க இறைவன் மகிழ்ச்சியுடன் யாகசாலைக்கு எழுந்தருள ஆயத்தமாகின்றார் என்பதாம். பின் கடஸ்தாபனம் என்ற கிரியை நிகழ்கிறது. குடத்தை மாவிலை, தேங்காய்க் கட்கம், வஸ்திரம் மாலை இவைகளால் வேதமந்திர பாராயணத்துடன் நன்கு அலங்கரித்து பாலாலயம் சென்று இறைவனுக்கு முன் கலசத்தை வைத்து பிம்பத்திலிருந்து கலசத்தில் வந்து சகல கலைகளுடன் அமரும்படி பிரார்த்தித்து பூசித்து யாத்திரஹோமம் முடித்து வேதபாராயணத்துடன் சகல வாத்திய கோஷங்களுடன் வலமாகயாக சாலை சென்று கலசங்க ளைத் தானிய பீடத்தில் சிவாச்சாரியார் தாபிக்கிறார். உருவத் திருமேனியாயிருந்த இறைவனை அருவுருவத் திருமேனியாக அமைந்த கலசத்தில் ஆகர்ஷித்து விஷேஷபூசை, ஹோமம், ஜெபம் முதலியவற்றைச் செய்து வழிபட யாகசாலைக்கு அழைத்தச் சென்றதாகக் கருத்தாகும்.

(5) யாகசாலையில் கும்பம் ஸ்தாபித்தபின் விதிப்படி ஆசாரியார் அக்கினியை உற்பத்தி செய்கிறார். மறுநாளான காலை தொடங்கி காலை, மாலை இரு நேரங்களிலும் பூசை, ஹோமம், ஜபம், பாராயணம் முதலியவற்றால் திருவருள் நிறைவு உண்டாகிறது. அந்நிலையில் செய்யப்படும் ஹோமத்தால் இறைவன் பூரண திருப்தி அடைகிறார்.

யாகசாலையில் வழிபடும் அருவுருவத் திருமேனி க்கும், தருணாலயத்தில் வீற்றிருக்கும் உருவத்திருமே னிக்கும் முப்பரிமாணநூல் அல்லது தர்ப்பைக்கயிற்ற நூல் தொடர்பு படுத்தி சிவாக்கினியில் ஆகுதிசெய்து அருக்குச் சுருவத்துடன் முப்புரிநூலைக் தொட்டுக் கொண்டு தருணாலயம் சென்று உருவத்திருமேனியை பிரமபாகம் விஷ்ணுபாகம் உருத்திரபாகம் என மூன்றாகப்பிரித்து பூசித்து சுருக்கி சுருவத்தில் எஞ்சியிருக்கும் நெய்யை அந்தரித்துப் பாகத்தில் ஹோமம் செய்கிறார். இவ்வாறு மூன்று முறை நடைபெறுகிறது.

உருவமான சிவாக்கினிலில் ஹோமம் செய்து பின் பரஞ்சோதியான உருவத் திருமேனியில் எஞ்சிய நெய்யை ஹோமம் செய்து யாகசாலையில் நிகழ்த்திய ஹோமத்தின் பலன்கள் யாவும் இந்த உருவத்திருமே னியில் நின்று அருள்புரியட்டும் என்பது கருத்தாகும். இவ்வாறு ஹோமம், ஜபம் பூசை முதலியவற்றால் யாகசாலையில் வேதிகையில் வைக்கப்பட்ட கலசநீர் அருளமுதமாக மாறுகிறது.

கும்பாபிஷேகம்:- விஷேஷபூர்ணாகுதி முடித்து தீபாராதனை செய்து, யாத்திரதானம் முடித்து கும்பம் தூக்கி அடியார்கள் புடைசூழ மேள வாத்தியங்களுடன் தருணாலயம் சென்று சுபமுகூர்த்தத்தில் கலசத்தின் அருளமுதை உருவத்திருமேனியில் சிவாச்சாரியார் அபிஷேகம் செய்கிறார். படிகநிறம் வாய்ந்த சிவலிங்கம் பாதாளத்திலிருந்து வானளாவி புவனம் முழுவதும் வியாபித்து நிற்கிறது. கூடிக்குறையாத பூரணசந்திரன் சிவலிங்கத்தின் சிரசில் விளங்குகிறது. அதிலிருந்து அமுத நீர் பெருகிக் கொண்டே இருக்கிறத. அக்காட்சியை உள்ளத்தால் சிவாச்ச்ாரியார் தியானித்துக் கொண்டே ஸ்ரீ ருத்திரத்தை ஜெபித்துக் கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற விதி முறையை பின்பற்றி இயற்கையாகவே இறைவன் முடியிலிருந்து இடைவிடாது அரளமும் பொழுயப் பூசை, ஹோமங்களால் அருளமுதமாக மாறிய கலசநீரை அத்துடன் சேர்த்து அபிஷேகம் செய்வதாக அமைந்தபடியால் மகாகும்பாபிஷேகம் என்று பெயரிட்டு வழங்கலாயிற்று.

மகாபிஷேகம்:- கும்பாபிஷேகம் முடிந்தபின் பால், தயிர், இளநீர் முதலிய விஷேச திரவியங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் மகாபிஷேகம் ஆகும். இறைவன் அக்கினியை முகமாகஉடையவர். அந்த அக்கினிக்கு 7 நாக்குகள் உண்டு. அந்த சிவாக்கினியில் பால், தயிர் பழவகை முதலியவை விஷேசமாக ஹோமம் செய்யப்பட்டுள்ளன. அதனால் இறைவன் கலசத்தில் அருள்பாலிப்பவராய் விளங்குகிறார். பின் கும்பாபிஷேகம் முடிந்ததும் உருவத்திருமேனியில் மறைந்திருப்பது பரஞ்சோதி. அந்த அக்கினிக்கு ஆயிரம் நாக்குகள் உள. அகவே ஏராளமாக பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம் முதலியவற்றால் அபிஷேகம் செய்து ஆசாரியார் திருவருள் நிறைவை உண்டுபண்ணுகிறார். இதனால் சிவன் அபிஷேகப் பிரியர் எனப் போற்றப்படுகிறார்.

மண்டலாபிஷேகம்:- 48 நாட்கள் தொடர்ந்து அபிஷேகம், பூசை நடைபெறுகின்றன. வசதிக்கேற்ப 20, 10 நாட்களிலும் அபிஷேகம் செய்து முடிப்பர். கும்பாபிஷேகம், மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் ஆகிய மூன்று கிரியைகளிலும் அபிஷேகம் வருவதால் இறைவன் அபிஷேகத்தில் விருப்பமுடையவர் என்று புலனாகிறது. மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் இவ்விருகிரியைகளிலும் இறைவனின் திருவருள் நிறைவை உண்டு பண்ணுவதாய் (சாந்நித்தியம்) அமைகிறது.

மண்டலாபிஷேகப்பூர்த்தி சங்காபிஷேகத்தில் நிறைவுறும். 108, 1008 என மகாசங்காபிஷேகம் இருவகையாக அமையும்.

-திருச்சிற்றம்பலம்-

பிருமேந்திரனின் “பகவத் ஸாரம்” தத்துவநூலிலிருந்து........

- ஒருமுக விளக்கு, ஏகதீபம். இறைவன் ஒருவனே என்பதைச் சொல்லுகிறாய். இதை ஆண்டவனின் முன் சொல்லு.
- இரண்டுமுக விளக்கு. த்விமுகதீபம். இதை ஏற்றிக் காட்டும்பொழுது ஜீவன், பிரும்மம் என்ற இரண்டுண்டு. இதை அறிவாய் இறைவனே என்று சொல்லு.
- மூன்று முக விளக்கு. த்ரிஜோதிதீபம். இதை ஏற்றிக் காட்டும் பொழுது முக்குணமும் மனிதனுக்கு சுகமே. பிரும்மா, விஷ்ணு , உருத்திரன் மூவரும் இதை அறியட்டும் என்று சொல்லி ஏற்றிக் காட்டு.
- சதுர்முகதீபம். ரிஷிஜ்வாலா; நான்குமுக விளக்கு இதை ஏற்றிக் காட்டும்பொழுது நான்கு வேதங்களும் நீயே. ஒவ்வொரு நான்கு யுகங்களிலும் நான் உனக்கு அடிமையே என்று சொல்லி எடுத்துக்காட்டு.
- ஐந்துமுகவிளக்கு. பஞ்சஜோதி; ரிஷப ஜோதி இதை ஏற்றிக் காட்டும்பொழுது பஞ்ச பூதங்களுள் இறைவனே வஞ்சனை இல்லாமல் என்னை ஏற்றுக்கொள். ஒளியில் நான் தெரிகிறேன். என்னைப்பார் என்று சொல்லு.
- ஆறு தட்டு சிறிய அடுக்கு தீப ஆராதனை. என் அகத்திற்குள் ஆத்மஜோதி ஒளி அல்லது ஆத்மஜோதி ஜ்வாலா உன் பெருமையால் கோபுரம் போன்று தெரிகிறது அதைப் பார் என்று சொல்லு. பிறகு சிறிய தட்டில் ஏற்றுகின்ற தீபம் உனது சொந்த ஜோதியை இறைவனுக்குக் காட்டும்.
- ஐந்துகுழித்தட்டு. இதற்குள் ஐந்து திரி தனித்தனியாய் இட்டு ஏற்றிய ஐந்து தட்டுத் தீபங்களுக்கு கடவுளே எனக்குக் கதி என்று பொருள். இதைச் சொல்லு. பூஜை செய்.

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# நவநாதேஸ்வரம்

வாகீசகலாநிதி கனகசபாபதி - நாகேஸ்வரன் M. A.
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
சபரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுலோயா.
பரம்பரை அறங்காவலர், ஸ்ரீ நகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

மத்தியமலையகத்திலே குயின்ஸ்பரியில் அமையும் சிவத்தலம் ஸ்ரீ நவநாதேஸ்வரம் ஆகும். ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் இணைந்த திருத்தலம் நவநாதேஸ்வரம் ஆகும். சித்தர்கள், பக்தர்களை ஈர்க்கும் வழிபாட்டிடமாகவும், தியான நிலையமாகவும் அமைவது இந் நவநாதேஸ்வரம்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த சித்தர்களுள் நவநாதச் சித்தரும் ஒருவர். சித்தத்தைச் சிவன் பால் வைத்தவர்கள் சித்தர்களாவார்.

நவநாதேஸ்வரத்தின் அற்புதம் என்னவெனில் சுயம்புலிங்கத் தோற்றப்பா டாகும். ஈஸ்வரங்கள் ஈழமணித் திருநாட்டிலேயும் உள. திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும், முன்னேஸ்வரமும், நகுலேஸ்வரமும், தான்தோன்றி ஈஸ்வரமும் பிரசித்தி பெற்ற சிவாலயங்களாகும். பஞ்சபூதத்தலங்களும் தாமே தோற்றம் பெற்ற ஈஸ்வரத் திருத்தலங்களாகும். பஞ்சமுதத் தலங்களுக்கும் அப்பால் விசேடமான தொரு பிரத்தியேக வரலாற்றோடு அமைவது குயின்ஸ்வர் நவநாதேஸ்வரமாகும். கருவறையில் அமைந்துள்ள லிங்கள்களின் வரலாறே இவ் வேறுபாட்டைக் கிளர்த்தி உணர்த்தி நிற்கின்றன.

"மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது" என்ற வாசகமொன்றுண்டு. இம் மகாவாக்கியம் சிவலிங்கத் தத்துவத்தப் புரிந்து கொள்ள உதவுகின்றது. பரிபூரணப் பொருளான சிவனது திருவருளாடலை உலகினர் உணர்வது அரிதே. சூக்குமமான பரம்பொருளின் தத்துவங்களைக் கற்றும், அனுபவித்தும், எண்ணியும் மகிழ்வோர் தொகை மிகவும் சொற்பமே. காரணம்



உணர்வனுபவம் என்பது நம்முள்தோன்றிவளர "உலகியலின்பம்" என்னும் தடை ("உணர்வனுபவத்தை") அனுபவிக்கவிடாது தடுத்து விடுகிறது. எனவே "உளஆனந்தம்" ஏற்பட இடர் உண்டாகி விடுகிறது. ஆனால் "உலகினர்" வாழ்வுக்காக இறைவன் எப்பொழுதும் தோன்றியவாறே இருப்பான். அன்பர் பின் புறம்புறம் திரிந்து ஆன்மஉணர்வு நீக்கிப் பேரின்பநிலையினை அருள்வான். இவ்வுண்மையையே காலத்துக்குக் காலம் உற்பத்தியாகும் ஆலயங்களினூடாகவும், உருவ வெளிப்பாடுகளினாலும் உணர முடிகிறது. எனவே

மலையகத்தில் தோன்றிவரும் நவநாதேஸ்வரம் புதுமையானதாகவே கருதப்படுகிறது. நவநாதச் சித்தரினது சித்தத்திலுறைந்த சிவன் இன்று பக்தர்க்கு வெளிபட்டுத் திருவருளைப் பரப்பி நிற்கின்றான். இவ்வாலய வரலாறு அற்புதமானது. சச்சிதானந்த சுழுமுனைச் சூத்திரம்; என்னும் நூல்,

"அடுத்துப்பார் அதன் மேலே யானைநாதம்
அதன் மேலே வளை என்ற கங்கநாதம்
தொடுத்துப்பார் அதன் மேலே வேய்ங் குழலின் நாதம்
தொகுத்ததன்மேல் துடிப்புடைய இடடையின் நாதம்
கொடுத்துப்பார் செவியதனைப் பாம்பு நாதம்
குமரனே மணி வயிரத் தும்பி நாதம்
எடுத்துப்பார் யாழுடன் பேரிகையின் நாதம்
இத்துடனே தொகையதுதான் பத்துமாச்சு"

என்று நாதத்தின் தன்மைகளை வரிசைப்படுத்திக் கூறுகிறது.

கொல்லி மலையில் கதிகாலியிலிருந்து நாவலப்பிட்டி, கட்டபுலா, குயின்ஸ்பரியில் நிர்விகற்ப நிலை அடைந்து, இன்று சுயம்பு லிங்கமாகத் தோன்றும் நவநாதச் சித்தர் மகானது சிவாலயமே ஸ்ரீ நவநாதேஸ் வரம் என்னும், ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம் என்றும் அழைக்கப்படும் தேவஸ்தானமாகும்.

மத்தியமலையகத்திலே நாவலப்பிட்டியை அடுத்து கொத்மலை வீதியில் தலவாக்கல்லை நோக்கிச் செல்லும் நெடும்பாதையில் அமைந்துள்ளது குயின்ஸ்பரி. இன்று மலையகத்தில் எழுச்சிபெற்றுவரும் ஆலயம் நவநாதேஸ்வரமாகும்.

சித்தர்கள் எப்போதும் சிவனையே எண்ணுபவர் கள். உலகப்பற்று நீங்கியவர்கள். சித்தானைக்குட்டிச் சுவாமிகள், பெரியானைக்குட்டிச் சுவாமிகள், நவநாதச் சித்தர் மூவரும் சமகாலத்தினர். மட்டக்களப்பிலே சித்தியெய்திய ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகள் ஸ்ரீ நவநாகச் சித்தரது சீடராவார். யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சிவயோகசுவாமிகள் எனப்படும் யோகர் சுவாமிகள் ஸ்ரீ நவநாதச் சித்தர் சிவாலயத்திற்கு வந்து தரிசித்து அதன் மகிமையையும் சிறப்பையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

ஸ்ரீ நவநாதேஸ்வரம் "சர்வமத சந்நிதி" எனப்பரிண மிக்கவுள்ள பீடமாகும். குறிப்பாகச் சைவமதத்தினர் இதயத்திலிருந்து வழிபடும் சிவாலயம் இதுவாகும். "உயர்தியானபீடம்" நவநாதேஸ்வரம். குயின்ஸ்பரியும் கொல்லிமலையும் நவநாதச் சித்தரது உணர்விலே ஒரே இடமாகவே கருதப்பட்டது என்பது இத்தலவரலாற்றி லேயிருந்து அறியமுடிகிறது. "சூழல்" அல்லது அமைவிடம் தான் "தலம்" என்ற கருத்தில் பயன்படுகிறது. ஆலயத்தின் விசேடணத்திலே முதன்மை பெறுவனவே மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றுமாகும்.

நவநாதேஸ்வரம் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றாண்டுகள் "சமாதி" நிலைநின்ற ஆலயமாகவு ள்ளது. அறுபதாண்டுகள் சமாதி நிறைவு அடையு மானால் "சமாதி" ஆலயம் என்று அழைக்காது "சிவாலயம்" என்று அழைப்பது மரபு என்று விளக்குகிறார் நயினைச் சிவாச்சாரியார் "ஆகமப்ரவீண" கைலை. வாமதேவக் குருக்கள்.

சமுதாயம் கூடுமிடம் ஆலயங்களே. விழாக்களே மாக்களையும் மக்களாக்குகின்றன. நவநாதேஸ்வரத் திலே தைப்பொங்கல் தினத்தில் காட்டிலேயமைந்துள்ள குகைக்கருகிலே "வனபோஜனம்" என்னும் சிறப்பு வழிபாடு நடைபெறுவதுண்டு. இன ஒற்றுமையின் சின்னமாக இவ்விழா இவ்வாலயத்திலே நடைபெறு வதுண்டு. வருடாவருடம் பங்குனி உத்தரத்தினத்தன்று நவநாதேஸ்வரத்தில் அபிஷேகமும் விசேடபூசைகளும், அன்னதா னமும் இடம்பெறுகின்றன.

ஸ்ரீ நவநாதேஸ்வரம் கீர்த்தி வாய்ந்த சிவத்தலமா கும். சிவன் மைந்தன் முருகன் பாலசுப்பிரமணியனாக அருகிலே கோயில் கொண்டுள்ளான். நடைமுறைச் சமயாசாரங்களுடன் இவ்வாலயம் பிணைப்புக் கொண்டுள்ளது! திருவருளீர்ப்புமிக்கது.

இலங்கையின் முதல் கவர்னர் சோல்பரிப் பிரபுவின் மகனான ஜேர்மன் சுவாமிகள் சந்நியாசம் பெற்றது குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதச் சித்தர் சிவாலயத்திலேயாகும். அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஆச்சிரமம் நடத்தும் கண்டியில் வாழ்ந்த யோகி சச்சிதானந்த சுவாமிகளைக் கவர்ந்த இடமும் நவநாதேஸ்வரமாகும். யோகி சச்சிதானந்த சுவாமிகள் இலங்கை வரும்போதெல்லாம்

தமது அமெரிக்க சீடர்களுடன் இத்தலத்தை தரிசித்தே செல்வார் என்று அறியமுடிகிறது. கவியோகி சுத்தானந்தர், சுவாமி ரெங்கானந்தாஜி, லேடி இராமநாதன், முன்னாள் அமைச்சர் மகாதேவா, முன்னாள் சபாநாயகர் வைத்திலிங்கம் துரைசுவாமி போன்றவர்களையும் ஈர்ந்த சிவத்தலம் குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதேஸ்வரமாகும்.

கொழும்பு மாநகரிலே ஸ்ரீ சம்மாங் கோட்டார் கோயிலைக் கட்டிய சிற்பிகளே 1928 ஆம் ஆண்டு குயின்ஸ்பரி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தையும் அழகுற அமைத்தனர் என்பது இத்திருத்தலத்தின் பூர்வீகவரலாறு. இதற்கான கற்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

திருமதி நாகன் பெருமாள் அம்மையாரும் அவரின் வழித்தோன்றல்களும் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வந்தனர். இன்று இவ்வாலயத்தின் பரம்பரைத் தர்மகர்த்தா திரு. இரா. இராஜகோபால் அவர்கள். நவநாதேஸ்வரத் தேவஸ்தானத்தில் "மகாகும்பாபிஷேகத் திருப்பணிச் சபை" என்ற பெயரில் பொதுமக்களால் சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது. "நவநாதச்சித்தர் வாழ்வும் வரலாறும்" இன்று உயர் கல்வித் திட்டத்து இந்துநாகரிக பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளமை அவரை மகான்கள் வரிசையில் முதனிலையில் அறிய வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. ஈழ மணித்திரு நாட்டின் சமயப் பெருமையை எடுத்தியம்பும் தேவஸ்தான மாக நவநாதேஸ்வரம் பரிணமித்துவருகிறது.

நவநாதச்சித்தர் வரலாறுகளிலே பின்வரும் கதையும் உண்டு. இக்கதை சித்தரின் ஒருமுகப்பாட்டை உணர்த்தும்.

திருச்சி ஜில்லா பச்சைப் பெருமாள்பட்டி என்ற கிராமத்தில் சமீபமுள்ள கரிகாலி என்ற கிராமத்தில் பிரபல கங்காணியாக இருந்தவர் நாகன் கங்காணி யாவார். அவரது பத்தினியாராகிய பெருமாளம்மாள் என்ற அம்மையாரும், கொல்லி மலைச்சித்தர் குழாத்துள் ஒருவராகிய நவநாதச்சித்தர் என்ற – மானம்பாக்கிச் சுவாமிகளை அன்போடு ஆதரித்து உபசரித்து வந்தனர். பச்சைப் பெருமாள் பட்டியில் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிவகாமசுந்தரி என்ற பெண் குழந்தையை எடுத்து அணைத்து உச்சி மோந்து ஸ்பரிச, வாசக, நயன தீட்ஷைகளால் அருள்புரிந்தார் ஸ்ரீ நவநாதசித்தர். ஏட்டுக்காவடி, தச்சிட்டசதகம் முதலிய நூல்களைத் தானாகவே சிவகாமசுந்தரி மனனஞ் செய்தாள். ஐந்தாமாண்டின்பின் பேரூர் சந்நிதிமுறை, அடங்கன்முறை, பன்னிருதிருமுறை முதலிய அரிய நூல்களை வாசிக்கவும், வாசித்தவற்றை உடனே பாராமற் சொல்லும் ஆற்றலும் கண்டனர். இவை நவநாதச் சித்தர் கொடுத்த "வித்யா" தானங்கள்.

ஸ்ரீ நவநாதச்சித்தர் சஞ்சரித்த கொல்லிமலை இந்தியாவில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ளது. இம்மாவட்டத்திலே "நெசவுத்தொழில்" பிரசித்தி வாய்ந்தது. நூல் ஆடையையே சித்தர்களும் உடம்புமுழுவதும் மூடியவாறு அணிந்துள்ளனர்.

நவநாதச்சித்தர் விசேடமாக அறுசுவை உண்டியிலே விருப்பமில்லாதவர். வீரம், பூரம், பாஷாணம் முதலியவற்றை பலக்கணக்கில் (ஓரளவு) கொண்டுவரச் செய்து அவற்றை உணவாக அருந்துவார். நவநாதச் சித்தரிடம் சமானியமனிதர்களைப் போல நித்திய நியமங்கள் எவற்றையும் காணமுடியவில்லை. நவநாதச்சித்தர் பரிசுத்தமான பூதபௌதிக உடலாகத் தோற்றினும் என்றும் பெருமணங்கமழும் தேஜசோடு கூடியவடிவமாகவே காணப்படுவார். சித்திபெற்ற உடல் வடிவினராகையால் அணிமா, மகியா, கரிமா, லகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எண்வகைச் சித்துக்களும் நவநாதச் சித்தரிடம் காணப்பட்டன.

பாலர், பேயர், பித்தரைப்போல் நடித்து மழலைச் சொற்களால் வசனிப்பார். நவநாதச் சித்தர் காமக்குரோதத்தினாற் பீடிக்கப்படாமல் அநவரதமும் பரவெளியே நாட்டமாகக் கருவி கரணங்களை அடக்கி இமையா நாட்டத்தோடு சாம்பவி முத்திரை தாங்கி சச்சநிட்டையில் வீற்றிருப்பார். இவ்வாறு ஆறு மாதங்கள் சென்று ஒரு தினம் அன்பர்கள் அனைவருங்கூடிச் சித்தருக்கு விசேடமான அபிஷேகம் செய்யக் கருதி நூற்றெட்டுக்குடம் காவேரித் தீர்த்தம் கொண்டுவந்து அபிஷேகத் திரவியங்கள் அனைத்தும் சேகரித்துச் சித்தருக்கு அபிஷேகித்துப் பல ஏழைகளுக்கு அன்னமிட்டு வாத்திய கோஷத்துடன் ஆராதனைகள்

செய்யும் போது அதனைத் தரிசிக்க வந்த சேலம் வாசி ஒருவர் இந்த நவநாதசித்தரை ஆறுமாதத்திற்கு முன் தாங்கள் சேலப்பக்கத்தில் சமாதிசெய்ததாக தெரிவித்தார். அதனை சித்தரிடம் விசாரித்ததில் சித்தர் புன்சிரிப்புடன் "இருக்குமப்பா" என்றனர்.

"நவநாதசித்தர்" உலக விவகாரங்களில் ஈடுபட்ட பெத்தான்மாக்களிடம் வீண்வார்த்தை இடுவதில்லை. இவரது இமையா நாட்டத்தைக் கண்ணுற்ற மக்களும் விசேஷமாக இவர்பால் அணுகுவதில்லை. அநுபூதிச் செல்வர்களும் உண்மைப்பற்றுடை.யாருமே இச் சித்தரைப் போற்றிப் பாதுகாத்து அருள்பெற்றறானந்தி த்துவந்தனர். நவநாதச்சித்தர் ஏககாலத்தில் குளித்தலையிலும், கரிகாலி முதலிய அன்பர்கள் நிறைந்த இடங்களிலும் அவரவர்க்குத் தரிசனம் தந்துகொண்டு வீற்றிருக்கும் இயல்புடையவர். ஆலத்துடையான் பட்டியில் ஊற்றில்லாத கிணற்றுக்கு சக்கரமொன்றைத் தகட்டில் வரைந்து கிணற்றிலிட்டு நீர் வற்றாது ஊறச் செய்தார்.

பச்சைப்பெருமாள்பட்டியில் ரெட்டியார் ஒருவர் நவநாதச் சித்தரைப் பரிகசித்த போதும், "அவர் மிகவும் நல்லவர்" என்று புகழ்வது போற் பழித்தார். சிறிகுகாலத் திலேயே அக்குடும்பம் நாசமானதை யாவரும் அறிவர் என்றும் கூறப்படுகின்றது. நவநாதச்சித்தர் "வானம்பா கிச்சுவாமி" என்றும், எட்டிக்கொட்டைச் சுவாமி என்றும் அழைக்கப்படார் என்று கூறுவர் பச்சைப்பெருமாள்பட்டி ம. பெரியசாமிப்பிள்ளை. பச்சிலையாற் பிணி தீர்ப்பதில் நிகரற்றவர் நவநாதச்சித்தர். எப்போதும் யோகநிஷ்டை யில் இருப்பது நவநாதச்சித்தரின் இயல்பு. சுமார் மூன்று தினங்கள் கூட நிஷ்டையிலே இருக்கும் பேராற்றல் இவருக்குண்டு. எட்டிக் கொட்டையை நவநாதச் சித்தர் அடிக்கடிசாப்பிடுவதுண்டு. நவநாதச்சித்தர் எங்கள் வீட்டிலும் சாப்பிடுவதுண்டு. ஒவ்வொரு வீட்டிலும் இரண்டொரு கவளத்துக்குமேல் சாப்பிடுவதில்லை. சில தடவைகளில் கிருஷ்ணா, கிருஷ்ணா என்று பக்தியுடன் சொல்லுவார்.

மாடுகள்மீது நவநாதச்சித்தருக்கு மிகுந்த வாத்சல்யமான அன்புண்டு. "சொக்குமந்திரம்" என்பது அவர் ஆடுமாடுகளுக்குசெய்த மருந்து மந்திரமாகும். தின்னக்கூடாத இலைகுழைகளைத் தின்று சோர்ந்து போனால் "சொக்கு மந்திரம்" மூலம் வருத்தந்தீர்ப்பார். சிவன் வைத்தியநாதன் என்பதுமுண்மை. "ஜெய் சீதாராம்" என்று அடிக்கடி கூறுவார்.

சிவசங்கரரெட்டியாரும், வைத்திலிங்கபண்டாரமும் 'எட்டிக் கொட்டை சுவாமிகள்' என்றும் 'வானம்பாக் கிச் சுவாமிகள்' என்றும் ஜனங்கள் சொல்லுவார்கள். சுவாமிகளின் அனுபவ நிலை சதாயோக நிஷ்டையோடு ஆகாய நோக்கத்தோடும், பிரணவ உச்சரிப்போடும் இருப்பதைத் தரிசித்துள்ளோம் என்று எழுதியுள்ளனர்.

நவநாதச்சித்தர் சிறுபிள்ளைகளைக் கண்டபோதெ ல்லாம் மண்ணினால் கற்கண்டு, கடலைப்பருப்பு, என்பன வரும்படி செய்து கொடுப்பதுண்டு. சங்கிலிச் சுவாமிகளின் சீடர் நவநாதசித்தர் என்ற வழக்கமுண்டு. நவநாதசித்தர் உலகத் தோற்றத்தைப் பிரம்மமாகப் பார்ப்பதால் அவரிடத்தில் ஜீவபேதம் கிடையாது. நவநாதச் சித்தருக்குப்பிரியமான ஆகாரமான எட்டிக் கொண்டை, எருக்கம்பால், எருக்கம்பூ, மணல், என்பவற்றுடன் குப்பைமேனித் தழையையும் உண்பார். நவநாதச் சித்தர் அகமுகநாட்டத்தில் இருப்பார்.இவர் பரம் ஏழைகளிடமும், தனவந்தர்களிடமும் சமநோக்கே தவிர வேறில்லை.

நவநாதச்சித்தர் ஒரு சர்வசமய சமரசஞானி. பணிவு என்ற பண்பையும், உயர் குணமென்ற பெருமையையும் தன் வாழ்விலேயே விளங்கச் செய்தார். உயர் குணங்களின் ஒளிபரவச் செய்தவர் நவநாதச் சித்தர். ஆன்மிகத் திருச்சுடர் கொழுந்துவிட்டெரியச் செய்பவர் நவநாதச்சித்தர்.

எளியவாழ்வு, உயர்ந்த நினைப்பு,பரந்த உள்ளம், ஆழ்ந்த அன்பு ஆகிய நான்குமே ஒரு மனிதனுக்கு இம் மண்ணுலகத்திலேயே விண்ணுலக வாழ்வளிக்கவல்லன.

"முப்பெருஞ்சித்தர்கள்" என்ற நூலிலே என்பேரா சான், ஞானகுரு "ஆத்மஜோதி" நா. முத்தையா அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

"நவநாதச்சித்தர் அடியார் பெருமையைப் பேணிப்பாதுகாக்கும் முறையைத் தாம் இருந்த இல்லத்தின் மூலமாகத் தம்மை நாடி வந்தோர்க்கெல்லாம் விளங்கவைத்தார். ஒருவருக்குச் சமைத்த உணவை

ஒன்பதின்மருக்குக் கொடுக்கமுடியும் என்பதைக் செயலிற் காட்டியவர்கள். உள்ளன்போடு கொடுக்கும் போது எவ்விதக் குறையும் ஏற்படுவதில்லை என்பதை விளக்கியவர்கள் ஈத்துவக்கும் இன்பத்தை மக்கள் மத்தில் காட்டிவைத்தவர்கள்".

"முருகனைப் போற்றும் பெருமை நாதசித்தர் களைச் சார்ந்ததாகும்" என்று எழுதியுள்ளார் நயினை, இல்லறஞானி க. இராமச்சந்திரா அவர்கள். தூற்றுத லையும் போற்றுதலையும் ஒன்றாக மதித்தவர் நவநாதச் சித்தர்.

பேராசிரியர், கலாநிதி, சு. வித்தியானந்தன் அவர்கள் "முப்பெருஞ்சித்தர்கள்" என்ற நூலுக்கு வழங்கிய ஆய்வுரையில்,

"சித் என்று அறிவது சித்தை உடையவர்கள் சித்தர்கள். எனவே அறிவுபடைத்தவர்கள் சித்தர்கள், அவர்கள் அறிஞர்கள், மேதைகள், நுண்ணறிவு படைத்தவர்கள், மெய்ஞ்ஞானிகள். சித்தர்கள் சாதாரண மக்களாற் செய்யமுடியாத பல அரிய செயல்கைச் செய்பவர்கள். அவற்றை அற்புதங்களெனப் பொதுமக்கள் போற்றுவர். நாம் எவற்றையெல்லாம் அற்புத காரியங்களெனக் கொள்கிறோமோ அவற்றைச் செய்யும் ஆற்றல் சித்தர்களுக்குண்டு. இதனாலேயே சித்தர்கள் இயற்கைக்கு மாறான பல அற்புதங்களைச் செய்தனரெனக் கதைகள் வழங்குகின்றன".

–என்று எழுதியுள்ளமை மனதில் கொள்ளத்தக்க தாகும். அருணகிரிநாதசுவாமிகள். பாடிய மயில்வகுப்பில்,

"பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்

பூரண கணங்களொடு வந்துதொழவே"

என்று தேவலோக அடியார்களே நவநாதர்கள் என்று கருதியுரைக்கின்றார். இங்கு ஓர் பேருண்மை பெயர்களிலே பொதிந்துகிடப்பதையும் நாம் கூர்ந்து நோக்குதல் வேண்டும். அருணகிரிநாதர் என்பதிலும் நாத(ம்) வருகிறது. "நவநாதர்" என்பதிலும் நாத(ம்) வருகிறது. கலைஞானம், கல்விஞானம், நாதஞானம், தருபவர் நவநாதசித்தசிவன். வழிபடுவோமாக.

–திருச்சிற்றம்பலம்–

**சத்குரு சதாசிவ பிரும்மேந்திரர் திருவாய் மலர்ந்தருளிய "பகவத் ஸாரம்" தத்துவநூலிலிருந்து........**

- ✏ மனிதனிடத்தில் தோன்றுகிறது இந்த யோக ஜோதியே யோகியாக நீ சித்தி பெற்றவுடன் சமாதி அடையும்பொழுது உச்சந்தலை வெடித்து அதன் வழியாக இறைவனின் திருப்பாதம் சேரும்.
- ✏ ஆத்ம வழிபாடுகள் அனைத்தும் ஜோதி ரூபம். ஜோதியைத் தாங்குகின்ற தீபங்கள் மனித உடல். ஆகையால் அவைகளை முதலில் பூ இட்டு பூஜை செய்தால் ஆத்மபலம் வரும்.
- ✏ பெரிய அடுக்கு தீப ஆராதனைத் தட்டு. இதை ஏற்றிக் காட்டும்பொழுது ஈரேழு பதினான்கு புவனங்களில் நான் எங்கு இருந்தாலும் ஆன்மா, ஆன்மஜோதி என்ற இந்த கீழ்நிலைகளை எல்லாம் கடந்து பெருஞ்சோதியின் வடிவமாகவே உன்முன் திகழ்ந்து வாழ்கிறேன். இதனால் ஒவ்வொரு முறையும் உனது ஆணையிருந்தால் ஞானத்துடன் பிறந்து பிறந்து வருவேன்.
- ✏ ஐந்துகிளை கற்பூர தீப ஆராதனைத் தட்டு. முடிவில் காட்டும்பொழுது பஞ்ச பூதங்களாய் இறைவன் தனித்தனியாக இருந்து எரிவான். எரியவேண்டும் என்று காட்டு. ஞானிகளின் இந்த விளக்கத்தை பக்தியுடன் படித்துப் பூஜை செய்யலாம்.

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சித்தரும் சிவனும்

நயினை
சுப்பிரமணியம் கனகரத்தினம்

சத்தியம் நேர்மை பணிவு நன்றியுணர்வு போன்ற தெய்வ குணங்களைக் கொண்டவர் பலர் நற்கதியடைய இறைவன் மனித உருக்கொண்டு இப்பூவுலகில் அவதரிக்கின்றார். மேன்மையான நற்குணங்கள் கொண்டவர்கள் வினைப்பயனால் அவதியுறாமல் ஈசன் திருவடியை அடைகின்றனர். திருக்கைலாய நாதன் தனது அருமைப் பக்தர்களை இப்பூலவுலக துன்பங்களிலிருந்து மீட்டிட சித்தர் வடிவம் கொண்டு பூவுலகம் வருகிறார்.

உடல்நலக் குறைபாட்டால் தெய்வத் திருவருளை வேண்டி நின்ற கண்ணற்றவர், செவிடர், வாய் பேசாதவர், முடவர், தீராத நோய் கொண்டவரான பலரும் சிவபிரானின் பேரருள் நிறைந்த சித்தர்களினால் குணமடைந்துள்ளனர். இந்த வரிசையில் சைவ சமயச் சிவநெறிச் செல்வர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரர், மாணிக்கவாசகப் பெருமான் ஆகியோரைப் பற்றி நன்கு அறிவோம். பல அற்புதங்களை இறைவன் அருளால் செய்து காட்டியுள்ளனர். சைவ சமயத்தில் எத்தனையோ நூற்றுக்கணக்கான சித்தர்கள் வாழ்ந்து சிவனுடைய பாதார விந்தங்களை சிந்தையில் நினைத்தவாறு மோன நிலையை அடைந்துள்ளனர்.

சித்தர்கள் வரிசையில் திருமூலர், போகர் அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஸ்ரீ இராமகிருஷ்ணர், விவேகானந்தர் இரமண மகரிஷி ஸ்ரீ சேஷாத்திரி போன்றவர்கள் மிகவும் சிறப்பானவர்கள். மிகச் சிறந்த தொண்டு செய்த சித்தர்கள் மிக உன்னதமான மருத்துவ முறைகளையும் கண்டுபிடித்து ஞானிகளாகவும் வாழ்ந்தார்கள். சித்தர்கள் சிவன்பால் பக்தி நிறைந்து பித்துப்பிடித்து ஆண்டிகளைப் போலவே வாழ்ந்தனர். சிவனின் மேல் ஆழ்ந்த தியானம் கொண்டு உலகையே மறந்து இடபிடவைகளையோ கழற்றி வீசி, கௌபீனத்துடனும், நிறைந்த அமுக்காடைகளுடனும் திரிசடை வளர்த்துத் தாடியும் கையில் தடியுடனுமாய் மலைச் சாரல்களிலும் குப்பைகூழ இடங்களிலும், சேறு சாக்கடை போன்ற இடங்களிலும் வாழ்ந்து பல அற்புதங்களையும் செய்துள்ளனர். எல்லா மதங்களிலும் சித்தர்கள் பலர் வாழ்ந்தும், வாழ்ந்து கொண்டுமிருக் கிறார்கள். சமயத்துக்கு மிகச்சிறந்த தொண்டு செய்த ஞானிகளாகிய சித்தர்கள் மனித உடலின் நலனுக்காக மிக உன்னதமான மருத்துவ முறையையும் எழுதிவைத்திருக்கிறார்கள். அகத்தியர் நிருமூலர், சட்டநாதர், இடைக்காடர் மச்சமுனி புலிப்பாணி கொங்கணர் போன்ற சித்தர்கள் இவ்வாறு வகுத்துக் கொடுத்துள்ள மருத்துவ சாஸ்திரம் மிக அருமையானது. இன்று நாம் உபயோகிக்கும் பல்வேறு இயந்திரங்கள் கருவிகள் ஆகியவற்றின் துணை ஏதும் இன்றி அவர்கள் கண்ட மருத்துவ அடையாளங்களும் வியாதிக்கான நிவர்த்திகளும் ஆச்சரியப்படத்தகனவாகும்.

புலத்தியர்:-

இவரைப் பிரமன் புத்திரன் என்பர். இவர் திரண பிந்துவின் தவச்சாலையில் தவம் செய்கையில் அரம்பையர் நீர் விளையாட அச்சோலையில் வரக்கண்டு கோபித்து "ஓ பெண்களே! இனி என்னெதிரில் யாராவதுவரின் கருப்ப முறுக" எனச் சபிக்க பெண்கள் பயந்து வராது இருந்தனர். இதனையறிந்த திரண பிந்துவின் குமாரி இவருடைய ஆச்சிரமத்திற்குச் செல்ல கருப்பமுற்று தந்தையிடம் கூறிப் புலத்தியரை மணந்தார். இவர் கார்த்தவீரியனால் சிறையிடப் பெற்ற இராவணனை மீட்டவர். பராசர முனிவர் அரக்கரைக்

கொல்லச் செய்த வேள்வியைத் தடை செய்தவர். இவர் சரஸ்வதியிடம் செல்ல அவள் புத்திரவாஞசை இல்லா திருந்தமையால் அவளால் அரக்கர் குலத்தில் விபீஷணனாகச் சாபடைந்தவர். பிரமதேவன் காதில் புகுந்தவர். இவர் தேவி ஆவிர்ப்பூ. இவருக்கு விசிரவஸ் அகத்தியர் என இரண்டு குமாரர் உண்டு. புலம் என்றால் வேதத்தில் தவத்தை அறிவிக்கும். இவர் தவத்தால் புகழ் பெற்றாராதலின் இப்பெயர் பெற்றார் என்னும் குறிப்பு அபிதானசிந்தாமணியில் காணப்படுகிறது. இவரே முதலில் புராணங்களை வெளிப்படுத்தியவர் என்னும் கருத்தைப் பெயர்ச் சொல் அகராதி கூறுகிறது.

புலிப்பாணியர்:-

இவர் புலியை நட்பாக்கிக் கொண்டு ஜலத்தைத் திரட்டிக் கையில் கொண்டதால் இப்பெயர் பெற்றார் என்னும் குறிப்பு அபிதானசிந்தாமணி என்னும் நூலில் காணப்படுகின்றது. பரணி என்பது புலியைப் போல் பாதத்தோடு விளங்கியவர் என்பதும் இதன் பொருள். வியாக்கிரபாதர் என்ற பெயரோடு விளங்கியவரே இச் சித்தர். ஒன்று தமிழ்ப்பெயர், மற்றொன்று அப்பெயரின் வடமொழியாக்கம். பொழுது விடிவதன் முன்னம் வண்டின் எச்சிற் படாத பூக்களைப் பறிப்பதற்காக பூமரங்களில் ஏறுவதற்கு வாய்ப்பாக புலியின் பாதத்தோடு விளங்கியவர். ஆதலால் இப்பெயர் பெற்றார் என்பது சித்தர்கள் மத்தியில் உலவிய கருத்து. இவர் திருமூலர் காலத்தவர். ஆதலால் இவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டாகலாம்.

இவரது ஆசிரியரான போகரும் இவரும் பழனியடிவாரத்தில் உள்ள வைகாவூரில் வாழ்ந்தனர் என்பதனை கொங்கு மண்டலச் சதகம் 36ஆம் பாட்டால் அறியமுடிகிறது.

ரமண மகரிஷி:-

1879 மார்கழி மாதம் 30ஆம் திகதி நடராசப் பெருமானுக்குரிய திருவாதிரைத் திருநாள். அழகம்மாள் என்ற தெய்விகத் தாய்க்கு பிரசவவலி எடுத்ததும் அவருடைய கண்பார்வையற்ற தாதி உதவி செய்ய வந்து விட்டாள். பிரசவவலியின் உச்சக் கட்டத்தில் குழந்தை ரமணர் பிரசவமானதும் அம்மணி உங்கள் குழந்தையுள்ள இடத்தில் அபூர்வமான ஓர் ஒளி எனக்கே தெரிகிறது. நிச்சயமாக இவன் “தெய்விகம் நிறைந்த ஒரு மகானாக விளங்குவான்” என்றாள். தாதி திருச்சுழிக்கிராமத்தில் ஆருத்ரா தசரிசனம் முடிவுற்று விக்கிரகம் கோவிலுக்கு கொண்டு வரப்பட்ட இரவு 1 மணி வேளையில் சுந்தரம்மை யரிடம் ஒரு நண்பன் ஓடி வந்து உங்களுக்கு ஒரு மகள் பிறந்திருக்கிறான் என்று சொன்னார். அது அவருக்கு உங்கள் வீட்டில் ஒரு மகான் பிறந்திருக்கிறார் என்றே கேட்டது. சுந்தரமையர் சிறந்த வக்கில் பிள்ளைக்கு வெங்கடராமன் என்று பெயர் சூட்டினர். ஆறு வயதில் வெங்கடராமன் மழை வெள்ளத்தில்காகிதத்தில் கப்பல் செய்து தண்ணீரில் விட்டுக் கொண்டிருந்தான். வெளியில் சென்று வீடுதிரும்பிய சுந்தரம்மையர் அந்தக் கப்பலை எடுத்துப் பார்த்தார். அது அவருடைய பழைய வழக்குப் பத்திரங்கள். அவர் உனக்கு வேறு கடதாசி கிடைக்க வில்லையா என்று கூச்சலிட குழந்தை பயந்து போய் பூமிநாதர்கோயில் சகாயவல்லி மூலத்தானத்தில் அம்மனின் விக்கிரகத்திற்குப் பின்னால் மறைந்து உட்கார்ந்து கொண்டான். குழந்தைகள் பிழை செய்யும் போது தந்தை கண்டித்தால் குழந்தை தாயிடம் சரணடைந்து விடுவார்கள். வெங்கடராமன் தெய்வீகக் குழந்தையானபடியால் அம்பிகையிடமே சரணடைந்து விட்டான். வெங்கடராமன் நன்றாக நீந்துவான். திருச்சுளியை ஒட்டி இருந்த சௌண்டில்ய நதியில் நீராடுவான். பிறகு குடத்தில் தண்ணீர் கொண்டு வந்து கோயில் லிங்கத்துக்கு நீராட்டுவான். எந்த உணவு கிடைத்தாலும் சுவாமிக்கு நைவேத்தியம் செய்து அதன் பிறகே சாப்பிடுவான். அவனிடம் ஓர் அபூர்வமான பழக்கம் உண்டு. தூங்கினால் அது ஆழ்ந்த நித்திரையாக இருக்கும். லேசில் எழுப்ப முடியாது. நண்பர்கள் அவருக்கு கரியால் மீசை வைப்பார்கள். தூக்கிக் கொண்டு போவார்கள். எதுவுமே தெரியாமல் காலையில் எழுந்திருக்கும்வரை மெய்மறந்திருப்பான். தூக்கம் தெளிந்து எழுந்தபின் தூக்கத்தில் எனக்கு ஜோதிமய மாக ஒளி வீசும் மலை ஒன்று தெரிகிறது என்று கூறுவார். சிறுவயதிலேயே தெய்விக அருள் செறிந்திருந்தபடியால் அவரை நண்பர்கள் விளையாட்டில் தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்வார்கள். அப்போ அவர்கள் வெற்றிய டைந்து விடுவார்கள். தெய்வீகச் செயல்கள் பெருக் கெடுத்தன. ஒருநாள் மதுரை மீனட்சியம்மனின்

சந்நிதிக்குச் சென்று அம்பாளுக்கு முன் நீண்ட நேரம் மனமுருகிப் பிரார்த்தனை பண்ணிய பின் வீடு திரும்ப ஓர் வித்தியாசமான உணர்வு ஏற்பட அவர் திருவண்ணா மலைக்குப் போகத் திட்டமிட்டு பரீட்சைக்கு கொடுத்த ஐந்து ரூபாவில் மூன்று ரூபாவை எடுத்துக் கொண்டு மீதி இரண்டு ரூபாவையும் ஒரு கடிதத்தையும் எழுதி தனது தமையனர் கண்ணில் தெரியும்படி வைத்து விட்டு புனித யாத்திரையைத் தொடங்கினார். தான் புனித யாத்திரை போவதாகவும் தன்னைத்தேடி அலைய வேண்டாமென்றும் கடிதத்தில் எழுதி வைத்து விட்டார்.

வீட்டில் இருந்து புறப்பட்டு ரயிலில் விழுப்புரம் வரை சென்று பின் அங்கிருந்து நடந்து அரையாணி நல்லூர் என்ற இடத்திற்கு வந்து பசிக்களைப்பால் சோர்வடைந்து கோயிலுக்குப் போய்த் தூண்களுக்கு நடுவில் உட்கார்ந்து விட்டார். பிரசாதம் கிடைக்குமா என்று காத்திருக்க அங்கே அபூர்வமானதோர் ஒளி உண்டாயி ற்று. ஒளி எங்கிருந்து வந்ததென்று தெரியவில்லை. மூலஸ்தானத்தில் உள்ள விக்கிரகத்தைப் போய்த் தரிசித்தார். அந்த ஒளி அங்கிருந்து வரவில்லை. மீண்டும் திரும்பி வந்து உட்கார்ந்து கொண்டார். ஒளிமறைந்து போயிற்று. அது ஒரு தெய்விக ஒளியாகவே தோன்றியது. அறுபத்து மூன்று நாயன்மார்களை ஒட்டி ஞானசம்பந்த ரின் திரு உருவத்துக்கு அருகே தான் அமர்ந்திருப்பதை உணர்ந்தார். நைவேத்தியம் தயார் செய்த பரிசாரகர் அவரை எழுப்ப அவர் பிரதாதம் எதுவும் கிடையாதா என்று கேட்டார். அடுத்த கோவிலுக்குப் போகிறோம். அங்கே கிடைக்கு என்று கூட்டிச் சென்றார். பரிசாரகர் அங்கே பிரசாதம் கொடுத்தனர். ஆனால் அதுவும் தவறிக்கீழே விழுந்து விட்டது. அவரைச் சுற்றிப் பலர் கூடினார்கள். இப்படிப்பல கஷ்டங்களுக்கு மத்தியலும் சலியாது நடந்து திருவண்ணாமலையை அடைந்தார். நேரே ஆலயத்தில் நுழைந்தார். கோவில் வாசல்கள் அனைத்தும் திறந்திருந்தன. அவர் லிங்கத்தைக் கட்டிக் கொண்டு மனமுருகி கண்ணீர் வடித்தார். அவருடைய அளவற்ற வேகம் தணிந்தது. அவர் அங்கே மௌனியா கத் தவமிருந்தார். அங்கு தலைமுடியை மொட்டையாக்கி கையில் இருந்த பணத்தையும் வீசி ஆயிரம் கால் மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டார். சிறுவர்கள் அவரைத் துன்புறுத்தியதால் பாதாள லிங்க குகைக்குப் போய் அங்கு எறும்பும் களையானும் குடி கொண்ட இடத்தில் நிஷ்டையில் ஆழந்து விட்டார். சில காலம் கழத்து பவளக்குன்று என்னும் இடத்தில் இருக்கும் வேளையில் தாயார் அழகம்மாள் அவரைத்தேடி வந்து தன்னுடன் வருமாறு கேட்க அவர் தாயுடன் போக மறுத்துவிட்டார். மலைக்குகையை நாடி மக்கள் வெள்ளம் வர ஆரம்பித்தனர். தங்களின் தீராத பிரச்சனைகளை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டு இரமணரிடம் வந்தவர்கள் மனவேதனையின்றித் திரும்பினார்கள். சுவாமி விருபாட்ச ஆச்சிரமம் என்ற இடத்தில் சில காலம் இருந்தார். அவர் இருந்த இடத்திற்கு கந்தா சிரமம் என்று பெயரிட்டார்கள். கணபதி முனி என்ற பெரியவர் அவரை வணங்கி ஆசி பெற்ற போது அவரைப் பகவான் ரமண மகரிஷி என்றே அழைத்தனர்.

திருவண்ணாமலையில் மலை அடிவாரத்தில் தங்கியிருந்த பகவானின் தாய் மிகுந்த நோய்வாய்ப் பட்டாள். அவருடைய இறுதி நேரம் வந்தது. உயிரி பிரியும் வேளையில் சுவாமி தாயின் அருகில் இருந்து தலையிலும் நெஞ்சிலும் கையை வைத்து அமைதிப் படுத்தினார். தாயின் உயிர் பிரிந்த அந்த இடத்திலேயே பீடத்தை எழுப்பினார். தாயின் பீடம் மாத்ரு பூரே சுவர் ஆலயமாக உருவாக்கப்பட்டது.

தாயின் பீசடத்திற்குப் பக்கத்தில் 28 ஆண்டுகள் அருள் ஒளிபரப்பும் ஞானியாக வாழ்ந்தார். பக்தர்கள் மட்டுமன்றி பசு, குரங்க போன்ற உயிரினங்களும் அவருடைய அன்புக்குப் பாத்திரமாயின. அவை உயிர் துறந்த வேளையில் அவரும் அருகில் இருந்து அவற்றுக்கு உரிய கிரியைகளைச் செய்யவும் பீடம் அமைக்கவும் அருளினார். மகரிஷியின் எழுபத்தொன்றா வது வயதில் அவருக்கு கையில் கட்டி உண்டாயிற்று. அதை மருத்துவர்கள் புற்றுநோய் என்று கண்டறிந்து மயக்க மருந்து ஏதும் இன்றிக் கட்டியை வெட்டியெடுத்த போதும் அவருக்கு எந்த வலியும் ஏற்படவில்லை. மகரிஷியின் இந்த அற்புத மெய்ஞ்ஞான உணர்வு மருத்துவர்களையும் அதிசயிக்க வைத்தது. அந்தக் கட்டியை நீக்கியும் குணமடையாமல் 1950ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் (சித்திரை) 14ஆம் திகதி பக்தர்கள் சூழ்ந்து "அருணாசல சிவ" என்று பாடி முழங்கிக் கொண்டிருந்த

வேளை மகரிஷி மகா நிர்வாண நிலையை எய்தி விட்டார். அந்த வேளையில் வான் சுடர் ஒன்று வானில் சீறி எழுந்து மலையின் பின் விழுந்து மறைந்தது. அந்த இடத்திலேயே அவருக்குப் பீடம் எழுப்பப்பட்டு இன்றும் பக்த கோடிகள் அங்கு வந்து அவரை நினைந்து மௌனமாயிருந்து அருள் பெற்றுப் போகிறார்கள்.

அகிலமெலாம் புகழும் திருவண்ணாமலையில் இறைவன் சோதிவடிவில் காட்சி அளிக்கிறார். பிறக்கமுத்தி திருவாரூர். தரிசிக்க முத்தி சிதம்பரம், இறகக் முத்திகாசி, நினைக்க முத்தி திருவண்ணாமலை. முத்தியின் பெருமைக்குப் பேர்போன திருவண்ணாமலை யை நாடி சித்தர்கள் கூட்டம் சென்றனர். அந்த வரிசையில் ஸ்ரீ சேஷாந்திரி சுவாமிகளும் அவர் அமர்ந்த பீடமும் பெருமை மிக்கனவாகும். இரமணாச் சிரத்திற்கு சமீபமாக அமைந்துள்ளது. சுவாமிகளின் பீடம் திரு வரதராசரும் மரகதம்மாளும் இல்லறம் நடத்திட குழந்தையில்லாக்குறை ஏற்பட்டதைக் கண்ணுற்ற காமகோடி தேவியிடம் முறையிட்டார். வேண்டுதல் கேட்டு காஞ்சி காமாட்சி தேவியும் கனவில் தோன்றி "நவநீதம் கொடு ஞானக்கலை உதிக்கும்" என்று கூறிமறைந்தாள். காலையில் காமகோடிச் சாஸ்திரியார் தேவியைத் துதித்து பசுவெண்ணையை மரகதம்மா ளுக்கும் வரதராஜருக்கும் உண்ணக்கொடுத்தார். மரகதம் தேவியின் அருளால் கர்ப்பம் தரித்தார்.

சேஷாத்திரி:-

1870ஆம் ஆண்டு தைமாதம் 22ஆம் நாள் சனிக்கிழமை திருவரதராஜருக்கும் மரகதம்மாளுக்கும் வழூர் என்ற கிராமத்தில் மகான் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் அவதரித்தார். இவரைப் பெற்றோர் சேஷாத்திரி எனத் திரும்பேர் சூட்டி வளர்த்தனர். இவர்கள் தங்கள் கிராமத்தைவிட்டு காஞ்சிபுரத்திற்கு வந்து அங்கு வாழ்க்கை நடாத்தினார்கள். மரகதம்மாள் குழந்தையை திருக்கோவிலுக்குக் கொண்டு செல்வது வழக்கம். ஒருநாள் கோவிலுக்குச் செல்லும் வழியில் ஓர் வியாபாரி வெண்கலத்தினால் செய்யப்பட்ட நவநீத பொம்மைகளை விற்க ஆரம்பித்தான். குழந்தை சேஷாத்திரி இரண்டு மூன்று நவநீத சிலைகளை எடுத்து கிருஷ்ணபூசை செய்யப் போகிறேன் என்றார். கடைசியில் ஒன்றைமட்டும் வைத்துக் கொண்டார். வியாபாரி பணமில்லாமலே அதனை குழந்தைக்குத் கொடுத்து, குழந்தையின் கைபட்டதே போதும் என்றார். என்ன ஆச்சரியம் அன்று அவனுடைய கடைகளில் இருந்த பொம்மைகள் அனைத்தும் விற்பனையாகி விட்டன. மறுநாள் வழமைபோல மரதம்மாள் குழந்தையுடன் கோவிலுக்குவர இந்த அதிசகத்தைக் கூறி குழந்தையை "தங்கக்கை சேஷாத்திரி" என்று அழைத்தனர். குழந்தை சிறுவயதிலேயே நன்றாகப் பாடவும், எல்லாவற்றையும் நுணுக்கமாக ஆராயவும் தொடங்கியது. இவருடைய 14ஆம் வயதில் தந்தையார் இறந்து விட்டார். 17ஆம் வயதில் இவருக்குத் திருமணம் செய்ய சோதிடம் பார்த்தபோது திருமணம் நடைபெறாது என்றும் சந்நியாசி ஆவார் என்றும் கூறியதைக் கேட்டு தாயார் மரகதம்மாள் மனம் வருந்தினாள். இதனால் நோய்வாய்ப்பட்டார் மரகதம்மாள்.

ஒருநாள் சேஷாத்திரி தியானத்தில் இருக்க "சில்" என முதுகில் ஊர்வது போன்ற உணர்வு. மெல்ல அவ்வுணர்வு மேலேறிக் கழுத்தைச் சுற்றியது. கண்ணைத் திறந்து பார்த்த போது சுற்றியிருப்பது பச்சை நிறப் பாம்பெனத் தெரிந்து கொண்டார். மீண்டும் கண்களை மூடிக் கொண்டார். பச்சை நிறத்தில் பற்றியது பராசக்தியென அறிந்தார். உலகத்தின் தாய் நம்மைப் பற்றிக் கொண்டாள். உதிரத்தின் தாய் நம்மை விட்டுப் பிரியப் போகிறாள் எனப்பொருள் உணர்ந்தார்.

ஒரு கார்த்திகை மாதம் சுக்கிலபட்சத்து தசமியில் சேஷாத்திரியை அழைத்தார். சுவாமி தாயாரின் முன் அமைதியாக நின்றார். எழுந்து உட்கார்ந்த தாயார் மிக மெல்லிய குரலில் இரண்டு சுலோகங்களை மகனின் மார்பில் அடித்து அடித்து மூன்று முறை சொன்னார். காமகோடி சாஸ்திரியார் எழுதிய "அம்பசிவ" என்ற கீர்த்தனையை மகனைப் பாடச்சொல்லி தானும் கூடப்பாடினார். இறுதியில் "அருணாசல" "அருணாசல" "அருணாசல" என்று மூன்று முறை உரக்கக் கூவி சேஷாத்திரியின் மடிமேல் தலைசாய்ந்து இயற்கை யெய்தினார். அதன் பின் திருவண்ணாமலையை மனதில் நினைந்து சிகரங்களுடன் ஓர் அட்டையில் மலையை வரைந்தார். அதோடு இராமர், காமாட்சி படங்களையும்

வைத்துப் பூஜித்தார். அறையில் உள்தாளிட்டு தியானம் பண்ணு வார். நேர காலத்திற்கு சாப்பிடமாட்டார். தாயாரின் "அருணாசல" என்ற மந்திரத்தை ஓதுவார். கோயிலுக்குப் போய் காமாட்சி சக்கரத்தாழ்வார் சன்னிதியில் தியானம் பண்ணுவார். அடிக்கடி குளிப்பதும் சூரிய நமஸ்காரமும் அவர் செய்தபடியே இருப்பார். எண்ணெய் தேய்பதில்லை. முகச்சவரம் செய்வதில்லை. எந்த வீட்டிலும் போய் இருப்பார். திருத்தொண்டு செய்வதோடு கொடுக்கும் சாப்பாடு களை காகம் நாய்க்கு கொடுப்பார். தந்தையாரின் நினைவு நாள் வந்ததும் சித்தப்பா இவரை வீட்டிற்கு அழைத்தார். இவர் மறுக்கவே இவரை தூக்கிப் போய் வீட்டு அறையில் விட்டுக் கதவைப்பூட்டி விட்டு திதி செய்து விட்டு வீட்டைத் திறந்து பார்த்த பொழுது சுவாமியைக் காணமல் வியப்படைந்தனர். அவருடைய 19ஆம் வயதில் எல்லாம் துண்டித்து துறவியாகி திருவண்ணாமலைக்கு வந்தார். திருவண்ணாமலைக்கு வடக்கில் இருந்துதான் உள்ளே நுழைந்தார். இதுவரை பாராமல் வரைந்த பஞ்ச முகத்தை வழிபட்டவர் தான் சேஷாத்திரி. இப்போது அதை நேரில் பார்த்துப்பிரமித்தார் திருவண்ணாமலைக்கு வந்த பிறகு கோயிலில் கம்பத்து இளையனார் பாதாளலிங்கம் ஆகிய இடங்களில் தவம் செய்தார். யோகத்தாலும் கர்மாவாலும் உஷ்ண வியாதி ஏற்பட இரவில் முழுக்கத் தண்ணீரில் ஹடபோகம் செய்தார். தண்ணீரை அள்ளி அள்ளிக் குடித்ததும் உண்டு. திருவண்ணாமலை துர்க்கையம்மன் கோவிலில் விரும்பி தவம் செய்தார். திருவண்ணாமலையைச் சுற்றிக்காடு அடர்ந்திருந்தது. காட்டில் விதம்விதமான பாம்புகளையும் பறவைகளையும் பார்த்தார். அடிக்கடி சிரிப்பார். சில வேளை அரைமணி நேரம் தொடர்ந்து சிரிப்பார். வேகமாக நடப்பார், வானத்தைப் பார்ப்பார், மழையில் நனைவார், வெய்யிலில் அலைவார், குப்பை வண்டியில் ஏறிப் போவார், நிலையான இருப்பிடம் கிடையாது. எந்தப் பெண்களைக் கண்டாலும் என் தாய் என்பார். தூங்காவே மாட்டார். தியானத்தில் இருப்பார். யாரும் தூங்கினால் "தூங்காதே தூங்கினால் எமன் பிடித்துப் போய் விடுவான்" என்பார். சுவாமியின் இடதுகையில் மூன்று வித சூலம் அமைந்திருந்தது. மூன்று ரேகைகள் ஒன்று கூடி சூலம் அமைந்திருந்தன. இதேபோல் வலது கையில் ஒரு வட்டம் சிவப்பாக அமைந்திருந்தது. இந்த வட்டம் கோள்போல - கிரகம் போல - அமைந்திருந்தது. இதனை அவருடைய தாயாரும் அறிந்திருக்கவில்லை.

இவர் பக்தர்களின் வேண்டுதலுக்கு இணங்க மழைபெய்யச் செய்வார். பல இடங்களில் ஒரே நேரத்தில் காட்சியளித்தல் போன்ற பல்வேறு அற்புதங்களையும் காட்டி பராசக்தி வடிவமாகவும் காட்சி கொடுத்துள்ளார். தன்னைப் பார்வதி தேவியென்றே அழைப்பார். அன்னையின் அருள் ஆட்சி நிறையப் பெற்றவர். திருவண்ணாமலை பாதாள லிங்கத்தின் அருகில் தவம் செய்த ரமணரைப் பார்த்து "இவர் என்பிள்ளை" என்றார். நான் பார்வதிதேவியானபடியால் என்பிள்ளை இரமணர் கந்தன் என்றார். பாமர மக்களில் இருந்து படித்தோர் வரை சேஷாத்திரி சுவாமியாரை பெரி சேஷாத்திரி என்றும் ரமணரை சின்ன சேஷாத்திரி என்றும் அழைத்து மகிழ்ந்தனர். தன்னைச் சுட்டிக்காட்டி "இதுவே சிவலிங்கம் இதையே பூஜித்தால் போதும் ஞானமடைந்து மோட்சத்தைப் பெறலாம்" என தன் சீடர் ஒருவரிடம் உரைத்தார். இது குருபக்தியே மோட்சத்தைத் தருகிறது என்பதின் சுருக்கமாகும். "சாதி பேதம், பொன்னாசை இரண்டையும் விட்டால் நிட்டை கூடும்" என்றார். மேலும் "ராம ராம மகாபாகோ என்று சொன்னால் மோட்சமடை யலாம்" என்றும் நிலையாமை குறித்து "நாமல்லாம் ஒரு நாளைக்குப் போகத்தானே போகிறோம்" எனவும் நமக்கு ஒரு வஸ்துவும் சொந்தமில்லை என பலவாறு அருள் உரைக்ள கூறியுள்ளார். தன் தாயாரின் கட்டளைப்படி அண்ணைமலை அடிவாரம் சேர்ந்தவர். 1889ஆம் ஆண்டிற்குப்பிறகு முத்தியடையும் வரை திருவண்ணா மலை எல்லையைத் தாண்டிப் போகாதவர். தாய் சொல்லைத் தட்டாத தவப்புதல்வர்.

1928ஆம் ஆண்டு மார்கழி மாதம் பக்தர்கள் சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்ய ஆசைப்பட்டு அவரை உட்காரவைத்து முகச்சவரம் செய்து பன்னீர் பால் இளநீர் அபிஷேகம் நடந்தேறின. நாலைந்து பக்தர்கள் குடத்தில் நீர் கொண்டு வந்து ஊற்றினார்கள். "வேண்டாம் குளிர் காய்ச்சல் வருமென்று தவிர்க்க முற்பட்டார் சுவாமி. பக்தர்கள் பலர்கூடி குடம் குடமாய் தண்ணீர் கொண்டு வந்து சுவாமிக்கு ஊற்றினார்கள்.

சுவாமிகள் கூறியது போல அன்றைக்கே குளிர் காய்ச்சல் வந்தது. மருத்துவர்கள் வந்தனர். யாராலும் குணமடையச் செய்ய முடியவில்லை. சுவாமிக்குக் குளிர் காய்சல் ஏற்படவில்லை. சிவனும் சக்தியும் அண்ணாமலையார் உண்ணாமுலையம்மன் ஆகிய இருவரும் வநது சுவாமியின் உடலில் புகுந்து ஐக்கியமானார்கள். சிவனும் சக்தியும் உடலில் இறங்கியதும் பரவச நிலையும் பேரானந்தமுமடைந்தார் சுவாமிகள. தன் உடலில் சிவனும் சக்தியும் உறைந்த நிலையிலேயே அவர்களைத் துதிக்க உத்தரவும் கேட்டார். உடனே முத்தி கொடுக் காமல் "உன் உடலிலேயே எங்களை வைத்து துதித்துக் கொள்" என்ற உத்தரவு கிடைத்தது. சிவன் வெப்பத்தின் வடிவம் சக்தி குளிர்மையின் சொரூபம். சிவனும் சக்தியும் சுவாமியின் உடலில் இரண்டறக் கலந்திருந்தனர். இதுவே உண்மைநிலை சுவாமிகள் 1929ஆம் வருடம் தைமாதம் 4ஆம் நாள் பரம்பொருளில் கலந்தார். பக்தர்கள் திரண்டனர். மலையடிவாரத்தில் அக்கினிலிங்கமும் தீர்த்தமும் அருகே சூழ்ந்த நிலையில் திருமந்திரக் கூற்றுப்படி சமாதி வைக்கப்பட்டார். ரமண மகரிஷியும் வந்து சிறிது நேரம் இருந்து போனார். குருவே சிவனிடம் சேரவழிகாட்டி, குருவைப் பின் தொடர்ந்தால் சிவனை இலேசாக அடையலாம். ஆகையினால் நாம் அனைவரும் நம் குருவோடு சேர்ந்து குருபக்தி பூண்டு இறைவனடி சேர சிவனோடு ஐக்கியப்பட்ட நவநாத சித்தா சிவனைத் துதிப்போமாக.

-திருச்சிற்றம்பலம்-

## இகழ்; புகழ்

"ஒருவன் தன் வயிற்றை வளர்க்கும் பொருட்டு கை நீட்டி வாங்குவானானால் பிச்சை எடுக்கின்றான் என்று உலகம் நிந்திக்கும் ஏற்பது இகழ்ச்சி என்று நீதி நூல் புகலும். மற்றொருவன் ஒரு பள்ளிக்கூடம், மருத்துவசாலை, திருக்கோயில் முதலிய நற்பணிகளைச் செய்யும் பொருட்டு கைநீட்டி வாங்குவானானால் உயர்பணி புரிகின்றான் என்று உலகம் வந்திக்கும். இரண்டும் யாசகமானாலும் தனக்கென்று யாசிப்பதுஇகழ். அறப்பணிக்கு என்று யாசிப்பது புகழ். செயல் ஒன்றாய் இருப்பினும் கருத்தால் அஜகஜம் போன்ற வேற்றுமை உண்டாகிறது.

- திருமுருக கிருபானந்தவாரியார்-

## முந்து தமிழ்

"உலகிலுள்ள மக்கள் உடம்பையும், உணர்வையும், உயிரையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். உடம்பை உணவினாலும், உணர்வைக் கலைகளாலும், உயிரைக் கடவுள் நினைவாலும் வளர்க்க வேண்டும். கலைகள் மொழிகளால் சிறப்படைகின்றன. மொழிகளுள் முதன்மை பெற்றது தமிழ் 'முந்துதமிழ்' என்கிறார் அருணகிரிநாதர்.

இத்தகைய தமிழ் நமது உணர்வைச் செம்மைப்படுத்துகின்றது. அதனால் 'செந்தமிழ்' எனப்பெற்றது. இவ்வாறு செம்மை என்ற அடைகொடுத்து தமிழையன்றி வேறு எம்மொழியையும் கூறுவதில்லை".

-திருமுருக கிருபானந்தவாரியார்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# எம் குல தெய்வம் குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாத சித்தர்

இரா. இராஜகோபால்
பரம்பரை அறங்காவலர்

தன் அருமை மகன் மகிந்தாவையும் அருமைத் திருப்புதல்வி சங்கமித்தையையும் இலங்கைக்கு அனுப்பி இந்நாட்டில் புத்தர்பிரான் அருள் பொங்கி வழிந்தோட செய்தவர் இந்திய மாமன்னனரான சாம்ராட் அசோகச்சக்கரவர்த்தி. அன்று தொட்டு இன்றுவரை இந்நாடு பௌத்தத்தில் தழைத்தோங்கிச் செழிப்புற்று வளர்ந்துள்ளது. திரு ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலியோர் தமிழ் நாட்டிலிருந்தே தென்திசை நோக்கி நம்நாட்டில் இருக்கும் திருக்கேதீஸ்வரம் திருக்கோணேஸ்வரம் முதலிய திருத்தலங்களைத் தேன் பிலிற்றும் தங்கள் திருப்பாக்களாற் பாடிச் சிறப்பித்திருக்கின்றார்கள். பின் அருணகிரிநாதர் போன்ற சீவன் முக்தர்கள் இன்றும் கதிர்காமத்தில் குடி கொண்டிருக்கும் முருகனுக்குத் தங்களின் திருப்புகழ் அருள்மாலை புனைந்திருக்கின்றார்கள். இதற்குப்பின் வந்த பல மகான்கள் இந்நாட்டில் அருள்ஒளிபரப்ப வழி வகுத்திருக்கின்றார்கள். தொடர்ச்சியாக அக்காலங்களில் வந்த அருள் அலைகள் ஆன்மிக வளர்ச்சியடைய வலுப்படுத்தியிருக் கின்றது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வாறு வந்த ஒரு ஆன்மிக அலையின் உருவம் மகான் ஸ்ரீ நவநாத சித்தராவார்.

இவர் வந்தடைந்த இடம் எழில் கொஞ்சும் மலையகத்தின் மத்தியில் குயில் கூவும் இயற்கைச் சோலைகள் நிறைந்த மலைசூழ் குறிஞ்சி நிலம் வளமிகு குயின்ஸ்பரி பெருந்தேயிலைத் தோட்டம்.

இவர் உலாவி வந்த திருத்தலம் தமிழ் நாட்டிலே நடுநாயகமாக விளங்கும் கொல்லிமலை என்று கூறப்படும் சதுரகிரி மலையாகும். இது ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் ஓர் உற்ற உறைவிடமாக இருந்து வருகின்றது என்பது பழம்பெரும் தமிழ் நூல்களான புறநானூறு, அறப்பளீச்சுர சதகம் முதலிய. நூல்களில் பரந்து கிடக்கக் காணலாம். இங்குள்ள ஞானிகளும் சித்தர்களும் ஈசத்துவம் அடையவும்., மற்றவர்களுக்கு அதை அடையும் மார்க்கங்களையும் வழிவகுத்துத் தந்திருக்கிறார்கள். இக்குழாத்தில் சித்தி பெற்ற ஒருவர்தான் ஸ்ரீ நவநாசித்தர். அவர் எவ்வாறு இந்நாட்டில் திடிரென்று தோன்றினார். அவர் எவ்வாறு வந்தார் என்பது அறிய முடியாதிருக்கிறது. திடீரென ஒருநாள் குயின்ஸ்பரி தோட்டத்தில் தோன்றி அங்கு வசித்து வந்த பெருமாளம்மாள் என்னும் மூதாட்டியின் இல்லத்தில் தங்கியிருந்தார். இக்காலத்தில் தலவாக் கொல்லை, கொட்டகலை, பத்தனை, அப்புத்தளை முதலிய இடங்களில் தன் சித்தின் பெருமையைக் காட்டி தெய்வ பக்தியை வளத்தார். இவரின் அருளால் தீராத நோய் தீர்ந்தவர்களும் பாவச் செயலிலிருந்து நீங்கி நல்வழி அடைந்தவர்களும் பலர் உண்டு. அட்டமா சித்திகள் செய்து பெரும்புகழ் ஈட்ட வல்லவராக இருந்தும் அடியாருக்கு அடியராகத் தோன்றிப் பாமர மக்களின் மத்தியில் தான் ஒரு பாமரனாகவே தோன்றிப் பக்தியை வளர்த்தார். இவ்வாறு சில ஆண்டுகள் உலாவிய பின் 1902ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் பூரணையில் நிரம்பிய உத்தர நட்ஷத்திரத்தில் தாம் ஏற்கனவே குறிப்பிட்ட நேரத்தில் நிர்விகர்ப்ப நிலையையடைந்தார்.

சித்தரின் வேண்டுகோளின்படி அவர்குறிப்பிட்டிருந்தபடி நிஷ்டையில் அமர்ந்தார். பெருமாளம்மையாரும் ஸ்ரீ பால சுப்பிரமணியருக்கு ஒரு திருத்தலத்தை அமைத்தார். இவரது இத்திருத்தலம் மூர்த்தி, தலம் தீர்த்தம் இவ்வம்சங்களை முறையே அடையப் பெற்று

ஆயிரக்கணக்கான பக்தர்கள் சென்று வணங்கும் திருத் தலமாக விளங்குகின்றது. ஸ்ரீ நவநாதசித்த சிவனின் சுயம்புலிங்க சக்தி பல பெரியார்களையும் ஈர்த்துவருகி ன்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து சிவயோக சுவாமிகள் அடிக்கடி இச்சமாதிக்கு வந்துள்ளார். இந்நிலையத்தின் சக்தியை மற்றவர்களுக்கு விளக்கியுமுள்ளார்.

காரை நகரில் வசித்து சித்திபெற்ற சித்தானைக் குட்டி சுவாமிகளும் ஸ்ரீ நவநாதசித்தரின் அருள் பெற்றவர். ஜெர்மன் நாட்டவரான சுவாமி கௌரிபாலா குயின்ஸ் பரியிலே பல ஆண்டுகள் தங்கியிருந்து அண்மையில் யாழ்ப்பாணத்துச் செல்லச் சந்நிதியிலே சித்தியெய்தினார். இவ்வாறு வேறுபலரும் அருள் ஒளியால் சித்திபெற்றவர்கள். முன்னாள் கவர்னர் சோல்பரிப் பிரபுவின் மைந்தன் திரு ராம்ஸ்போதம் இவரது மகிமையை கேள்வியுற்றுக் காவியுடையுடுத்துத் துறவறம் பூண்டு சித்திபெற்று தற்சமயம் அமரிக்காவில் ஆச்சிரமம் நடத்தி வருகின்றனர். கடந்த 95 வருடமாக பல மதத்தவர் களையும் இத்திருத்தலம் ஈர்த்து அருள்பாலித்து வருகின்றது. மகான் சித்தர் சமாதியடைந்த பங்குனி உத்தரத் தினத்திலும் திரள் திரளாக பக்தர்கள் இத்திருத்தலத்திற்கு யாத்திரை செய்து அருள் பெற்று வருகின்றார்கள்.

ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம் 1928இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றத. கொழும்பு சம்மாங் கோட்டார் கோவிலைக் கட்டிய சிற்பிகளைக் கொண்டே மேற்படி ஆலயமும் அமைக்கப்பட்டது மற்றுமொரு சிறப்பான அம்சம். இதற்கான கற்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டனவாம்.

ஆலயங்களை நிர்மானித்துப் பராமரித்து வந்த பெரு மூதாட்டி திருமதி பெருமாளம்மையாரும் அவரின் வழித்தோன்றல்களும் இவ்விடத்தை விட்டுச் சென்றபின் பராமரிப்பின்றிச் சிதைவுற்றன.

இன்றுதோட்டத் தொழிலாளர்களின் ஒற்றுமையா லும் இவ்வாலயம் புத்துயிர் பெற்றுச் சிறப்புறுகின்றது. அத்துடன் இத் தெய்வீக வழிபாட்டுத்தலம் இந்நாட்டின் இன ஒற்றுமைக்குச் சான்றாக விளங்க இந்துமக்களின் ஒன்றுபட்ட செயலாக்கம்மிக முக்கியம்.

சித்தரின் பெருமையை உணர்ந்து நமது இந்து மரபுகளைப் பேணுவதற்கு இந்து நிறுவணங்களும் இந்துக்களும் ஐக்கியத்துடன் உதவ முன்வருவார்களா?

-திருச்சிற்றம்பலம்-

## விதியும் மதியும்

- "விதியானது என்றும் அழிவில்லாமல் ஏற்பட்டிருக்கிறது. மதியினால் அவனவனுடைய செய்கையினால், சீக்கிரம் இறந்து விடுகிறான்".
- மனிதர்களுக்குச் சிறந்தது குணம்".

-ஞானயோக சக்தி-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# மகான் நவநாத சித்தர்

அமரர். எம். ஜெயராம்



மலையகத்தில் மகாபுருஷர்கள் வாழ்ந்துவந்துள் ளனர். குணப்பெருங் குன்றாக வாழ்ந்து வழி காட்டிய மகான்களில் சிறப்புற்று விளங்கியவர் நவநாதசித்தர் ஆவார். இப்பெரியார் மலைநாட்டின் மத்திபகுதியாகிய நாவலப்பிட்டி நகருக்கு அண்மையில் அமைந்துள்ள குயின்ஸ்பரி என்ற தேயிலைத்தோட்டத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டார். இதன் சுற்றவட்டாரத்தில் உலாவி வந்தார். தொழிலாளர்கள் மத்தியிலும், மற்றும் ஆன்ம ஈடேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு தன்னை அணுகிய பக்தர்களிடத்தும் சேவையின் பண்பாட்டினை உயர்த்தி உயர்குணங்களைத் தன் சித்தின் மகிமையால் தெளிவுபடுத்தி.... உள்ளங்களுக்கு பணியையும் பண்பாட்டையும் புகட்டி ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கினார். சாத்திரக் குப்பையிலும், கோத்திரக் கோளாறிலும் ஈடுபடாமல் பாமர மக்களிடம் பரிவுகொண்டு வாழ்ந்து காட்டி எல்லோரையும் நல்வழிப் படுத்தினார்.

இந்நூற்றாண்டின் துவக்கத்திலேயே அதாவது 1901 ஆம் ஆண்டு திடீரென்று தான் இலங்கையில் தென்பட்டதாக வரலாறு கூறப்படுகிறது. தமிழகத்தில் "தேன் சொரியும் கொல்லிமலை" என்று கம்பனாற் புகழப்பட்ட சதுரகிரிமலைத் தொடர்களிலிருந்து தான் இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

தன்னைப் பேணி தன் போதனைகளைச் சிரமேற்கொண்டு நடந்துவந்த பெருமாளம்மாள என்ற மூதாட்டியின் அகத்தே சிறப்புற்றிருந்தார்.

நவநாதசித்தர் ஒரு சர்வசமய சமரசஞானி. தலவாக்கொல்லையில் ஒருமுறை சமயஅறிவில் பண்புற்ற ஓர் இஸ்லாமியப் பெரியார் இஸ்லாமிய சமயநூல்களில் நுணுக்க அறிவுரைகளை நம் சித்தர்பால் கேட்டுத் திகைப்புற்றதாக நேரிற்கண்ட பெரியார்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். அவ்வண்ணமே அப்புத்தளை தோட்டத்தில் உத்தியோகத்தராகப் பணியாற்றிய ஒரு வைதிக கிறிஸ்தவ அன்பர் நோய்வாய்பட்டிருக்கையில் சித்தர் இவர் முன் தோன்றி இயேசுபெருமானின் தத்துவங்களை விளக்கிய வரலாற்றையும் சித்தரை நேரில் கண்டதால் தான் பூரண குணமடைந்த வரலாற்றையும் மனமுருகக் கேட்டறிந்தோர் பலருண்டு.

சித்தர் குழாத்தில் ஒருவராகி தான்பல சித்திகள் பெற்றவராகக் காணப்பட்டார். பணிவு என்ற பண்பையும் உயர் குணமென்ற பெருமையையும் தன் வாழ்விலேயே விளங்கச் செய்தவர் நவநாதசித்தர். பல சித்திகளைச் செய்ய வல்ல சக்திகளை உடையவராக இருந்தும் பணிவுடன் தொழிலாளர்கள் மத்தியிலே அடியார்க்கு அடியாராக வாழ்ந்து தனது உயர் குணங்களின் ஒளிபரவச் செய்தார்.

சிலகாலம் இவ்வாறு வாழ்ந்து பின் தான் பெற்ற பேறு இந்நாட்டின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவ வேண்டு மென்ற உயர் நோக்கத்தால் மலையகத்திலேயே 1902 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் உத்தரத்தன்று குயின்ஸ்பரி தோட்டத்தில் அசம்பிரஞானநிர்விகற்ப மகாநிட்டையடைந்தார் நவநாதசித்தர்.

நவநாதரின் மகிமை கடந்த 95 ஆண்டுகளாக இந்நாட்டின் எல்லாத் திசைகளிலும் ஏன் தமிழகத்திலும்கூட பரவி பக்தர்களையும் தத்துவ அறிவில் சிறந்தார்களையும் தன்பால் ஈர்த்த வண்ணமிருக்கிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொடங்குவதற்கு குன்றநாட்டிலே வசதிகள் உண்டென்பதை குயின்ஸ்பரியில் சிறப்புற்று விளங்கும் திருக்கோயிலும் சமாதியும் உணர்த்தி வருகிறன. இப்புனித நாட்டிலே ஏனைய பகுதிகளில் தோன்றிய சற்குருக்களாகிய கடையில் சுவாமிகள், யோகர் சுவாமிகள், ஆனைக்குட்டி சுவாமிகள் இவர்களின் வரிசையில் நவநாதசித்தரும் சிறப்புற்று விளங்குவது மலையகத்தின் ஆன்மிகவளர்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

காய கற்பங்களின் பலனையும் மற்றும் அபூர்வ மூலிகைகள் பாஷாண வகைகளாகியவற்றின் உபயோக த்தையும் உணர்ந்து அனுபவித்து சித்திபெற்ற மகான் நவநாதசித்தர்.

புறநூ ற்றில் விரித்துரைதிருக்கும் கொல்லிமலை யைக் காவலாகப் பெற்ற சதுரகிரியில் விளங்கும் சித்தர் தபோவனத்தில் பல நூதன மூலிகைகளும் தகுந்த சக்திவாய்ந்த பூண்டுகளும் காணப்படுவதனைப் போன்று செழுமை நிறைந்த நம்மலையகத்தில் அந்நாளிலிருந்து அடர்ந்த காடுகளில் கிடைக்கக் கூடியதாக இருந்தி ருக்கலாம். இந்தவித இயற்கை ஒற்றுமையே நம் சித்தரை இங்கு ஈர்த்ததிற்கு ஓர் காரணமாகவும் இருக்குமெனக் கருத இடமுண்டு. மதிவளர்த்த மகான்கள் பலர், செல்வர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள். மகா மனிதசக்தியில் ஒளிர்விடும் ஞானத்தால் பிரசித்திபெற்ற பதினெண் சித்தர்கள் எவ்வாறு தமிழக திருக்கோயில் கள் தோறும் தங்கள் சமாதிகளால் ஆன்மிகச்சுடர் கொழுந்துவிட்டெரியச் செய்தவர்களே. அவ்வாறே நவநாதசித்தரின் சிவாலயமுமாம்.

"சித்தநிருவிகற்பம் சேர்ந்தார் உடல் தீபம்
வைத்தகர்ப்பூரம் போல் விளங்கும் பராபரமே"

என்ற தாயுமானவரின் திருவாக்கிற்கிணங்க குயின்ஸ்பரி தோட்டம் குன்றநாட்டில் ஆன்மிக சிகரத்திற்கு மணிமுடியாக திகழ்கிறது. ஆன்மிக வளர்ச்சியைத் தேடி ஜேர்மன் சுவாமி அவர்களும் இலங்கையின் முன்னாள் ஆளுநர் சோல்பரிபிரபுவின் செல்வத்திருக்குமாரரும் துறவுபூண்டு ஆனைக்குட்டி சுவாமி என்று தவப்பெயர் பூண்டு இலங்கையில் வசிக்கும் கௌரவ ராம்ஸ்போதம் பிரபு அவர்களும் இச் சமாதியின் மகிமையை உணர்ந்து இங்கு பல நாட்கள் தங்கி அருள் பெற்றவர்களில் சிலராவார்கள்.

ஆருயிர்க் கெல்லாம் அன்பு செய்வதன் மூலமும் எப்பாரும் எப்பதமும் எங்கவினும் சென்று தெய்வீக அருட்புகழை இயம்புதல் மூலமும் அருள் பரப்பி ஒளிபெறச்செய்யவல்ல தனிப் பெருந்தன்மை தமிழர்களுக்கே உரிய ஆன்மிக பண்பாடாகும்.

அவர்களின் வாழ்க்கையின் சித்தாந்தத்தைத் தாயுமான சுவாமிகள் தன் பராபரக் கண்ணியில் "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லா மல் வேறென்றறியேன் பராபரமே" என்று கூறி விளங்கவைத்திருப்பது சிந்தனைக்குரியது.

இலங்கை வானொலி உரை
23.05.1973

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# தமிழ்ச் சித்தர்கள்

செல்வி ரேவதி ஜெயராம்
நாவலப்பிட்டி.

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்தி பெற்றவர் கள் என்பது பொருள். அதாவது மற்றையோரால் பெறற்கரிய பேறுபெற்றவர்கள் என்று கூறலாம். இன்னும் தெளிவாகக் கூறினால் வீட்டின்பம் பெற்றவர்கள் எனலாம். மனிதன், மகாத்மா ஆகலாம். கடவுள் தன்மை பெறலாம் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் சித்தர்கள். அவ்வழி நின்று அநுபூதிநிலை பெற்று முன்மாதிரி காட்டியவர்கள்.

அருக சமயத்தவர்களும் சித்தசரணம் பாடுகின் றனர். முருகப்பெருமானுடைய கோயிலுக்குச் சித்தன் வாழ்வு என்பது பெயர். சிவபெருமான் சித்தராக எழுந்தருளிக் கல்லானையைக் கரும்பு சாப்பிடச் செய்தார் என்று திருவிளையாடற் புராணம் கூறுகின் றது. கடவுளைக் காண முயல்கின்றவர்களைப் பக்தர்கள் என்றும், கண்டு தெளிந்தவர்களைச் சித்தர்கள் என்றும் தேவாரம் வேறுபிரித்துக் கூறும்.

சித்தர்களின் அநுபூதி அனுபவத்தில் வேற்றுமை இல்லை. அதைக் கூறும் வருணனையிலேயே வேற்றுமை உள்ளது. ஆதலின் சித்தர்கள் எல்லாச் சமயத்திற்கும் அப்பாற்பட்ட சர்வசமய சமரச சன்மார்க்கத்தினைப் பாடக்காண்கின்றோம். திருமூலர், நால்வர், ஆழ்வார்கள், கருவூர்ச்சித்தர், குகைநமச்சிவாயர், குருநமச்சிவாயர், மெய்கண்டார், சிவப்பிரகாசர், தாயுமானவர் இவர்கள் எல்லாம் இந்த வகையில் சித்தர்களேயாவர். ஏறக்கு றைய 95 ஆண்டுகளுக்கு முன்பு மலைநாட்டில் குயின்ஸ் பரி தோட்டத்தில் மகாசமாதி அடைந்த நவநாதசித்தரும், கொழும்புத்துறை யோகர்சுவாமிகளும், கடையிற்சுவாமி களும் இந்தச் சித்தர் பரம்பரையைச் சேர்ந்தவர்களே!

அஷ்டமாசித்திகள் கைவரப்பெற்றவர்கள் தான் சித்தர்கள் என்ற வழக்கமும் வழக்கில் உண்டு. அணு வைப் போலச் சிறிதாகும் 'அணிமாவும், பேருவைப் போல பெரிதாகும் 'மகிமாவும்', காற்றைப்போல இலேசாகும் 'இலகுமாவும்', பொன்போலப் பளுவாகும் 'கரிமாவும்', எல்லாவற்றையும் ஆளுதல் செய்யும் 'பிராப்தியும்', எல்லாரையும் வசப்படுத்தும் 'வசித்துவமும்', கூடுவிட்டுக் கூடுபாயும் 'பிரகாமிமும்', விரும்பியதனை யெல்லாம் செய்து முடித்து அனுபவிக்கும் 'ஈசத்துவமும்' என்ற எட்டுவகைப் பெரும் பேறுகளை அஷ்டமாசித்திகள் என்பர்.

வாசி என்ற மூச்சினை அடக்கி ஆண்டு யோகசித்தியினால் உடலில் உள்ள மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலைமுடி என்ற ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலியை எழுப்பிப் பலபல அனுபவமும் வெற்றியும் கண்டு, அப்பால் உள்ள எல்லாம் ஆனபொருளில் நிலைத்துச் சித்தி பெறுபவரே சித்தர் என்ற வழக்கம் பரவியுள்ளது.

சாத்திரக் குப்பையிலும் கோத்திரக் கோளாறிலும் ஈடுபடாமல், அவற்றினை இகழ்ந்து தள்ளி, மக்களிடம் பரிவுகொண்டு, அவர்களிடையே வாழ்ந்து, அவர்களை எல்லாம் நல்வழிப்படுத்த முயன்ற நவநாதசித்தர்களைப் பற்றி வடநாட்டில் பேசி வருகின்றனர். மச்சேந்திரர், கோரக்கர் முதலானவர்களின் சமாதிகள் அங்கே காட்டப் பெறுகின்றன. இவர்கள் பெயரையும் தமிழ்ச் சித்தர்கள் வரிசையில் காண்கின்றோம்.

இஸ்லாம் மதத்தையும் இந்து மதத்தையும் சமரசப்படுத்த வேண்டும் என்று விரும்பி மஸ்தான்கள் என்னும் இஸ்லாமிய ஞானிகள் பலர் வேதாந்த அனுபவக் கருத்துக்கு ஒப்பப் பாடி, மக்களிடையே வாழ்ந்து, அவர்கள் மனத்தினைக் கவர்ந்துள்ளனர். குணங்குடி மஸ்தான்

போன்றவர்கள் தமிழ்நாட்டில் பலர். மற்றொன்றும் உண்டு. அரேபிய நாட்டிலிருந்து மேனாட்டிற்கு ரசாயனமும் இரசவாதமும் பரவி இந்நாளைய விஞ்ஞான முன்னேற்றத்திற்கு வழிகோலின. அராபியர் தமிழரோடு சேர்ந்து கப்பலோட்டிப் போர்த்துக்கேசியரோடு போராடினர். அரேபிய நாட்டுத் தொடர்பு, இங்கு வளர்ந்த சித்த மருத்துவ முறையை மேலும் ஓங்கிவளரச் செய்தது. காயற்பட்டினத்துக்குத் தமிழ் முஸ்லீம்கள் சித்தவைத்திய முறையைக் கூறும் நூல்களைக் கையாண்ட புலவர்களாயிருந்தனர். ரூமி முதலிய இஸ்லாமிய சூபி சித்தர்கள் போக்கும் தமிழ்ச்சித்தர்கள் பாக்களில் புகுந்தது. பீருகம்மது என்ற இஸ்லாமியப் பெரியவர் பாடிய ஞானரத்தினக் குறவஞ்சி, சித்தர்ஞானக் கோவையில் சேர்ந்திருக்கிறது. கோரக்கர் முதலானோர்களுக்கு வேற்றுநாட்டையும் தாயகம் என்று கூறுவதுண்டு. ரோமரிஷி என்ற பெயர் ரோமாபுரியோடு தொடர்புடையதோ என்பது விளங்கவில்லை.

கோஹர், புண்ணாக்கீசர், கருவூரார், சுத்தானந்தர், மூலர், கொங்கணர், பிரமமுனி, ரோமமுனி, கமால்முனி, கோரக்கர், சட்டைமுனி, மச்சைமுனி, இடைக்காடர், சைவஅடியார், வைணவஅடியார் என்று அருணாசலக்குரு கூறுகிறார். கமால்முனி என்பது இஸ்லாமியப் பெயராதல் வெள்ளிடை. கைலாயக் கம்பளிச்சட்டை முனிநாயனார் தாம் பாடிய ஞானத்தில் தம்மைத் திருமூலர், சண்டீசர், சனகாதிநால்வர், வியாக்கிரபாதர், பதஞ்சலி என்பவர்களோடு எண்ணி நவநாதராக்கி விடுகின்றார்.

கேளப்பா மூவர்க்கு காலங்கிபிள்ளை கெட்டியான காலாங்கிமைந்தர் போகர்நீளப்பா போகர்பிள்ளை கொங்கணர்தான் என்று ஒரு சித்தர் பரம்பரையைச் சட்டைமுனி பாடுகிறார். காகசுண்டர், ராமதேவர், வான்மீகி, மார்க்கண்டர், ஜகதீசர், சுப்ரமணியர், அகத்தியர், சிவபாக்கியர், திருவள்ளுவர் முதலிய பெயர்களையும் சித்தர் வரிசையில் சேர்த்துள்ளனர்.

வைத்திய நூல்களில் தேரையர், அவருடைய சீடர் யூகிமுனி, அவருடைய குரு தருமசௌமியர் என்ற பெயர்களும் வருகின்றன. தேரர், தேரையர் என்பன தேரவாத பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குறிக்குமோ என்பதனை ஆராய்தல் வேண்டும். தருமசௌமியர் என்ற பெயரும் இத்தகையதே. இந்தப் பெயர்களை எல்லாம் கண்டால் அதில் பலமதத்தினரும் பல நாட்டினரும் இருக்கக் காண்கிறோம். முன்னோர் பெயரால் பின்னோர் எழுதிய நூல்கள் பல. வைத்தியம், இரசவாதம், ஞானம், மந்திரம் முதலியவற்றைப் பற்றி எல்லாம் இவர்கள் எழுதியிருப்பதாகக் கூறக் காண்கிறோம்.

இவர்கள் பாடல்கள் வல்நடை, மெல்நடை என இரண்டு நடைகள் உண்டு. வன்மையாகப் பாடியவை எளிதில் பொருளாவதில்லை. கேளப்பா, நீளப்பா என்று பாடுவன மெல்நடையில் வருவன. தங்களுடைய கொளள்கையை மறைவாக வைத்துக் கொள்வதற்கு இவர்கள் ஒரு குழூஉக்குறியினைப் படைத்துக் கொண்டனர். திருமந்திரத்தில் சூனிய சம்பாஷணை என்னும் பகுதியில் இதனைக் காணலாம். வைத்திய நூல்களிலும் குழூஉக்குறிகளே உள்ளன. இவ்வாறு பாடுவதால் அவர்கள் குழூஉக்குறியை அறிந்தாலன்றி இந்த நூல்களை அறிவது அருமையாயிருத்தலின், இந்நூல்கள் இந்நாளில் பயன்தராது கிடக்கின்றன. வேருருகைச் சில்வெட்டு என்றால் வெல்லம் என்றும், சைவம் என்றால் தானிசபத்திரம் என்றும், தாலமூலசூரணதைலம் என்றால் ஒடியல்கூழ் என்றும், ஆடாதோடை என்றால் பாவட்டை என்றும் பொருள்கொள்வதனை இங்கு எடுத்துக் காட்டலாம்.

இவர்கள் எல்லாம் காயசித்தி பெற்றுச் சாவை வெல்லமுயன்று வெற்றிபெறுவதே வீடென்பார். இயமநியமாதி வழியில் ஒரு சிறிதும் தவறாது வாழ்ந்து சட உணவைக் குறைத்துக் கொண்டு, உடலியக்கத்தைக் குறைத்து, வாசியினை அடக்கி நாடிகளைத் தூய்மையாக்குவதால் உடலிலுள்ள ஒவ்வோருயிரணு வையும் தூய்மையாக்கிப் பின்னர் மனன வழிபாட்டால் அனுவியக்கம் முற்றி, ஒளிவடிவம் என்னும் திவ்விய வடிவம் வளர்ந்து வரும்போது, மாறிவரும் சவிகற்ப நிலையும், பின்னர் நிலயாக ஒளிரும் நிர்விகற்ப சகஜநிலையும் தோன்ற உடலினை இவ்வாறு ஞான ஒளிமயமாக்கி நாதத்துவத்தோடு இணைத்துச் சாவினை வெல்வோம் என்பர் ராசேஸ்வரவாதிகளாம் நாதசித்தர்கள். இதுவே காலதகனமாகும். சட்வுடலைச் சடம் நீக்கிப் படிப்படியாய்ச் சித்தாக்கு முறையில் அதனைப் பிரணவ தனுவாக்கியும், ஞானதனுவாக்கியும்

பரத்தில் வாழ்வது மகேஸ்வரசித்தாகும்.

சித்தர்கள் பாடலெனப் பொதுமக்கள் தெருவழியே பாடிப்போவனவோ பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், அழுகணிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர் முதலியோர் பாடல்களாம்.

'ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே
உதிரப்புனலிலே உண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் பண்ணு ம் பாண்டம் வரை
ஓட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே'

என்று பிறப்பினை இகழ்கின்றார்.

இவ்வாறு உவமைகள் பழியாகப் பொதுமக்கள் மனத்தைக் கவர்கின்றன. இப்பாடல்கள்,

தாந்திமிதிமி தந்தக்கோனாரே
தீந்திமிதிமி திந்தக்கோனாரே
என்று இடைக்காட்டுச் சித்தர் ஆடி,
ஆதிபகவனையே - பசுவே, அன்பாய் நினைப்பாயே
சோதிபரகதிதான் - பசுவே, சொந்தமதாகாதோ

என்று ஒரு பசுவோடு பாடுகிறார். பசு என்பது உயிர். சித்தர்கள் உடல் வருந்தி வாடி உயர்நெறி சேர்வர். ஒளி ஒன்று தோன்றி மறையும்.

-திருச்சிற்றம்பலம்-

## யம பயம்

யமன் நேரே வரமாட்டான். யமன் ஒரு பெரிய ராஜா. அவனுக்குக் கீழே பல தூதர்கள் இருக்கிறார்கள். அந்தத் தூதர்களைத்தான் அவன் ஏவி விடுவது வழக்கம். மிகப்பெரியவர்களானால் அவனே நேரில் வருவான். மார்க்கண்டேயனை இழுத்துப்போக அவனே நேரில் வந்தான். மார்க்கண்டன் எம்பெருமானைத் தழுவிக் கொள்ள எம்பெருமானையும் சேர்த்து யமன் பாசக்கயிற்றைப் போட்டு இழுக்க, எம்பெருமான் தன் காலாலே காலனை உதைத்துத் தள்ளினான்.

மார்க்கண்டேயனைப் பிடித்துப் போக முதலில் எமதூதர்கள் வந்தார்களாம். ஆனால் அவர்கள் அவனை அணு கமுடியவில்லை. கூற்றுவன் தூதர்களின் தலைவன். அதைக்கேட்டு எமன் சீற்றம் கொண்டானாம். "நானே அவனைப் போய்க் கொண்டு வருகிறேன்" என்று மீசையை முறுக்கிக் கொண்டு கரிய எருமை வாகனத்தில் புறப்பட்டு வந்தான். திருக்கடவூர் வந்து சேர்ந்தான். தமிழ்நாட்டில் திருக்கடவூர் என்ற தலம் இருக்கிறது. உனக்குத் தெரியுமா?"

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்
(காலையும் மாலையும், பக். 8-1957)

## குறிஞ்சிப்பூ

"அகப்பொருளின் முதல் திணை குறிஞ்சி. புறப்பொருளின் முதல் திணை வெட்சி. இந்த இரண்டும் இரண்டு மலர்களால் பெயர் பெற்றவை.

குறிஞ்சிப்பூ என்பது மலையில் விளைகின்ற பூ. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் மலரும். அது குறிஞ்சி நிலத்திற்கு அடையாளம். குறிஞ்சி நிலத்துக்குத் தெய்வம் முருகன். அதனால் குறிஞ்சிப் பூவை விரும்புகிறவன் அவன். அது போலவே புறப்பொருளின் முதல் திணையாகிய வெட்சிக்குரிய பூவும் முருகனுக்கு ஏற்றது. அகப்பொருள் புறப்பொருளாகிய இரண்டிலும் முதலில் முருகனுக்குரிய மலர்களை நினைப்பூட்டும் திணைகள் இருக்கின்றன."

- வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன் -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சித்தர்களுள் நவநாத சித்தர்

தமிழ்மணி ந. பாலேஸ்வரி
திருகோணமலை

சித்தர்கள் பாடல்கள் பற்றி எம்மில் பலர் அறிந்துள்ளோம். அப்பாடல்கள் சிலவற்றை விரும்பிப் பாடியுமுள்ளோம். ஆனால் அவற்றைப்பாடிய சித்தர்கள் பற்றி அறிய நாம் அக்கறைப்படுவதில்லை.

மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்க
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? – குதம்பாய்

என்ற பாடல் அனைவரும் அறிந்த ஒரு பாடல். இதைக் குதம்பைச்சித்தர் என்பவர் பாடியதாக அறிகிறோம். இப்பாடல் போதைப் பொருள்களை உண்ணும் போலிச் சித்தர்களுக்காகப் பாடப்பட்ட பாடலாகும்.

இப்பாடலின் உயர்ந்த பொருளுக்கு இப்போது வருவோம். இயற்கையான முறையில் யோகாப்பியாசம் செய்து மூளையின் நடுவேயிருக்கும் அமுதகலசத்தை அசைத்து அந்த அமுத கலசத்திலிருந்து மாங்காய் வடிவமாக இருக்கும் இருதயத்துக்கு வந்து சேரும் இரத்தம் போன்ற மாங்காய்ப்பாலை உண்டு கொண்டு பரமாத்மாவோடு கலந்து நிற்கிற மிக உயர்ந்த யோகிகளுக்கு யோகத்துக்குதவாத தேங்காய்ப் பாலாகிய கள்ளு எதற்கென்று கேட்கிறார். இந்த மிக உயர்ந்த போதனையான கருத்து அந்தப் பாட்டில் அடங்கியிருப்பதை சாதரணமாக எவரும் கண்டு பிடிக்க முடியாது. அவரது இன்னொரு பாடலை எடுத்துப் பார்ப்போம்.

"தாவரம் இல்லை தனக்கு ஒரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி – குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி"

தா என்றால் துன்பம். அந்தத் துன்பத்தில் நாம் பங்கு கொள்வதில்லை. தனக்கு என்ற தன்னலத்தில் இருந்து ஏதுக்கடி என்கிறார் குதம்பைச் சித்தர். பிறருக்கு நேரும் துன்பங்களில் பங்குகொண்டு உதவி செய்வதும், தான் என்ற அகங்காரத்தையும் ஆசைகளையும் விட்டுவிடுவதுதான் உண்மையான தெய்வ பக்தியாகுமே தவிர வெறும் தோத்திரங்களைப் பாடி விடுவது மட்டும் பக்தியாகி விடமுடியாது என்ற பொருள்பட அருமையாகப் பாடியுள்ளார் குதம்பைச் சித்தர்.

இந்தவகையில் பல சித்தர்கள் எம்மிடையே தோன்றி மறைந்துள்ளனர். அவர்களில் ஒருவர்தான் நவநாதசித்தர். நாவலப்பிட்டிப் பட்டணத்திலிருந்து நுவரேலியா செல்லும் கொத்மலை நெடுஞ்சாலை வீதியில் பதினமூன்றாவது மைல் தூரத்தில் உள்ளது குயீன்ஸ்பரி என்ற தேயிலைத் தோட்டம். அத்தோட்டத்தல் இந்தியா கரிகாலியிலிருந்து வந்து குடியேறிய நாகன் குடும்பத்தினர் பெரிய கங்காணியாக இருந்து வந்தனர். நாகனுடைய அன்பு மனைவியாராகிய பெருமாள் அம்மையார் அடியார் பக்தியில் மகிவும் சிறந்து விளங்கினார்.

அடியார் பக்தியில் மட்டுமன்றி நிர்வாகத் திறமையிலும் சிறந்து விளங்கினார் பெருமாள் அம்மையார். இவர் ஆறுமாதம் கரிகாலியிலும் ஆறுமாதம் குயீன்ஸ் பெரியிலும் காலம் கழித்து வந்தார்.

தமிழ்நாட்டில் கொல்லிமலை என்னும் குன்றுத் தொடரில் ஞானவல்லியும் அறக்கடவுளும் விளங்கும் அறப்பள்ளிநாதர் சந்நிதியொன்றுண்டு. ஆதிசங்கராச் சாரிய சுவாமிகள் அங்கு விஜயம் செய்தபோது முருகக்

கடவுளை பிரதிஷ்டை செய்தார். அம்மையில் உள்ள குகைகளில் பல சித்தர் குழாங்கள் வசிக்கின்றனர்.

இவர்களில் ஒருவரே நவநாதசித்தர் என்று கூறுப்படுகிறது. சித்தர்கள் என்றால் சித்துக்கள் செய்பவர்கள் என்று பொருள்படும். நீண்ட காலத்தவத் தினால் பலசித்துக்களைச் செய்யலாம் என்பதை மெய்ப்படுத்தியவர் நவநாத சித்தர். இவர் ஒரே நேரத்தில் பல இடங்களில் தோற்றம் அளிக்க வல்லவர். கொல்லி மலைச் சித்தர்களுள் மிகச் சிறந்தவராகப் போற்றப்பட்ட வர். அயல் கிராமங்களில் உள்ள மக்கள் இவரை மானம் பாக்கி சுவாமிகள் என அழைத்தனர். சுவாமி குகையில் தவம் புரிந்த நாட்களில் பசித்தால் அடிவாரத்திலுள்ள கிராமங்களுக்கு வருவது வழக்கம். அத்தகைய கிராமங் களில் கரிகாலியும் ஒன்று. பெருமாள் அம்மையாரின் அடியார் பக்தியால் கவரப்பட்ட நவநாதசித்தர் அடிக்கடி அம்மையாரிடம் வந்து உணவு பெற்று உண்பார். அம்மையாரை அன்புடன் ஆயா என்றழைப்பார்.

அம்மையார் ஒருநாள் சுவாமிக்கு உணவு கொடுக்கும் போது சிலோனில் தாம் ஒரு கோயில் கட்டுவதாகவும் அது சுப்பிரமணியர் கோயில் என்றும் சுவாமி கட்டாயம் கும்பாபிஷேகத்துக்கு வரவேண்டும் என்றும் வேண்டினார். அதற்கு சுவாமி 'ஆயா நெனெச்சா அடிமை வரும்' என்று கூறினார்.

அம்மையாரும் குயீன்ஸ்பெரி வந்து மாதக்கணக்கா கியது. கோயில் புனருத்தாரண வேலைகளும் முடிவடை ந்து கும்பாபிஷேகம் செய்ய ஆயத்தங்கள் நடைபெற்றன. அம்மையாருக்கு சுவாமியின் எண்ணம் மனம் நிறைந்தி ருந்தது. அதனால் தனது மூத்தமகனை அழைத்து சுவாமிக்கு ஒரு கடிதம் வரையும்படி கூறினார். எழுதி னாலும் சிலோனுக்கு வர இரண்டு மூன்றுவாரம் பிடிக்கும் எனமகள் கூறியும் அதை செவியுறாது கடிதம் எழுதிப்போடும்படி பணித்தாள். மகனும் தாயின் வற்புறுத்தல் தாங்காமல் கடிதத்தை எழுதிப் போட்டான். சுவாமி அவர்களின் அருட் சக்தியை நன்குணர்ந்த அம்மையார் சுவாமியார் எப்படியும் வருவார் என நம்பினாள்.

அடுத்தநாட்காலை கும்பாபிஷேகத்துக்குரிய பொருட்களுடன் கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்த போது எதிரே சுவாமியார் வந்து கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். ஆனந்த மேலீட்டினால் ஓடிச் சென்று சுவாமியின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி னாள். சுவாமி அவர்களும் அம்மையாரை ஆசீர்வதித்து கரத்தைப் பிடித்துத் தூக்கி விட்டார்.

"சுவாமி நேற்றைக்குத்தானே கடிதம் எழுதினேன். தாங்கள் எப்படி வந்தீர்கள்? என்று அம்மையாரைக் கேட்க "ஆயா நினைச்சுது அடிமை வந்திட்டுது" என்றார் சுவாமி.

இருவரும் நடந்து சென்ற போது கோயிலுக்கு முன்னாக வலது பக்கத்தில் கோணத்திசையாக உள்ள ஒரு இடத்திற்தான் அடியேனைச் சமாதிவைக்க வேண்டும் என்று சுவாமி கூற அதைப்பற்றி எல்லாம் இப்போதே ஏன்பேசவேண்டும் என்று அன்பாகக் கடிந்து கொண்டார் அம்மையார்.

குயின்ஸ்பரி தோட்டத்தில் இருந்த சுவாமியைப் பற்றி மலையகம் எங்கும் பேச்சடிபட்டு நாளாந்தம் சுவாமியைப் பார்க்க ஜனங்கள் குவிந்த வண்ணம் இருந்தனர். குயின்ஸ்பரி ஒரு யாத்திரைத்தலமாக மாறியது. இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் பலர் சுவாமியைப் பார்க்க வந்தனர். இந்தியாவில் இருந்து வந்தவர்களில் சிலர் சுவாமியைத் தரிசித்தவுடன் இவர் அந்த ஊரில் சமாதியானனவராவார் என்று பேசிக் கொண்டனர். அது பற்றி சுவாமிகளிடம் விசாரித்த போது சுவாமிகள் சிரித்தபடியே 'இருக்கும் அப்பா' என்றார்.

சித்தர்களுக்கு அவர்கள் செயல்கள் எல்லாம் இயற்கை. சாதாரண மக்கள் அவற்றை அற்புதமாகக் கருதுகிறார்கள். தோட்டத்தொழிலாளருடன் சுவாமிகள் அன்புடன் பழகினார். தொழிலாளரும் அவருடன் அன்புடனும் மரியாதையுடனும் பழகினார். சுவாமிகளின் சித்துக்களைப் பார்த்துத் தோட்டத் தொழிலாளர் ஆச்சரியமடைந்தனர்.

சுவாமி அவர்கள் ஒருநாள் தோட்டத்துக் கங்காணி ஒருவரைச் சந்திக்கத் தனிமையாகச் சென்றார். அவ்வேளை தேயிலைச் செடிநடுவில் கஞ்சா குடிப்பதற்காக மூவர் மறைந்திருந்தனர். சுவாமியைக் கண்டதும் அவரை கஞ்சாகுடிக்கும்படி வற்புறுத்தினர்.

சுவாமிகள் மறுத்தார். அவர்கள் விடாததால் சுவாமியும் இணங்கிக் குடித்து அப்புகையை அவர்கள் முகத்தில் ஊதிவிட்டார். அவர்கள் மூவரும் மயங்கி வீழ்ந்தனர். அந்த மூவரின் உற்றார் உறவினர் அவர்களைத் தேடி ஊரெங்கும் அலைந்தனர். கடைசியாக மூவரும் மயங்கிய நிலையில் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கும் உணர்வு வராததால் அவர்கள் கண்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் சுவாமியுடன் தகாத முறையில் நடந்து கொண்டதற்காகத்தான் இப்படி ஏற்பட்டது என்ற செய்தி வெளியாகிப் பரவியது.

அதைக் கேள்வியுள்ள உறவினர் சுவாமிகளிடம் சென்று விசாரிக்க அப்படி எதுவும் நடைபெறவில்லை யென்று சுவாமி கூறிவிட்டார். நான்கைந்து நாட்கள் சென்றும் மயக்கம் தெளியாததால் மீண்டும் உறவினர் சுவாமியிடம் சென்று மன்றாடினர். சுவாமிகள் அவர்களின் நிலைக்காகப் பரிந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துப் புகையை ஊதிவிட்டு நீங்கள் கவலையில் லாமற் செல்லுங்கள் என்றார். அதே நேரம் வைத்தியசாலையில் மயங்கிய மூவரும் மயக்கம் தெளிந்து எழுந்தனர்.

இதற்குப் பின் தோட்டத்தொழிலாளர்களுக்கு சுவாமி மீது பெருமதிப்பும் மரியாதையும் உண்டாகின. சுவமிகளைத் தரிசிக்க யார்வந்தாலும் கங்காணியார் குடும்பத்தினர் அவர்களை ஆதரித்து உணவும் தங்குமிட வசதியும் அளித்து வந்தார்கள்.

சுவாமிகளுடைய மிகநெருங்கிய பக்தர்களுள் திருக்கடம்பத்துறை சி. குருசாமியும் ஒருவர். குருசாமிக்கு சுவாாமிகளுடைய தொடர்பு ஏற்பட்ட பின் கொல்லிமலைச் சித்தர்களைப் பார்க்க வேண்டும் என்றொரு ஆசை ஏற்பட்டது. அதை அவர் சுவாமிகளிடம் கூறினார். அமாவாசை நாளன்று ஒருநாள் இரவு இரண்டுமணிக்கு குருசாமியைக் கொல்லிமைக்கு வரும்படி பணித்தார். குருசாமிக்கு இருட்டாகவும் பயமாகவும் இருந்ததாலும் சுவாமிமேல் உள்ள நம்பிக்கையால் அவரைப் பின்தொடர்ந்து நடந்தார். குருசாமியின் பயத்தை உணர்ந்த சுவாமிகள் குருசாமியின் வலது கையைத் தமது இடதுகையாற் பற்றிக் கொண்டு கண்களை இறுக மூடித் தான் திறக்கச் சொல்லும் போது திறக்கும்படியும் பணித்தார். ஒரு சில நிமிடங்களில் கண்களைத் திறக்கும்படி சுவாமி பணிக்க அவரும் திறந்தார். அவரால் தன்னையே நம்ப முடியவில்லை. கொலலி மலையின் உச்சியிற்தான் இருப்பதை உணர்ந்தார். சுவாமிகள் பெரியதொரு பாராங்கல்லை இலகுவாகக் கையால் அகற்றி உள்ளே அழைத்துச் சென்றார். ஏழு சித்தர்கள் ஆழ்ந்த நிஷ்டையில் இருப்பதைக் கண்டு தரிசித்தார் குருசுவாமி.

பச்சைப் பெருமாள் பட்டியென்ற இடத்தில் ஒரு ரெட்டியாரின் புறத்திண்ணையில் சித்தர் இமையா நாட்டத்தோடு யோகத்தில் இருந்தார். அவர் பொய் வேட சுவாமி என்பது ரெட்டியாரின் எண்ணம்.

புறத்திண்ணையிலே ஒருவர் செத்த ஆடு விழிப்பது போல் விழித்து வேடம் போடுகிறார் என்று வீட்டில் உள்ளோருக்கும் வெளியாருக்கும் கூறி சுவாமியை அவமானப்படுத்தினார். சுவாமியின் தலையில் நெருப்புடன் கூடிய ஒரு கொள்ளிக் கட்டையைக் கொண்டுவந்து வைத்தார். இதனைக் கண்ட வேறொரு ரெட்டியார் கொள்ளிக்கட்டையை எடுத்துவிட்டு சுவாமியை வணங்கி நின்றார். கண்விழித்த சுவாமியார் எதிரே நின்றவரைப்பார்த்து 'என்னப்பா' என்றார். 'சுவாமி' இந்த வீட்டு ரெட்டியார் தங்கள் தலையில் ஒரு கொள்ளிக்கட்டையை வைத்தார். நான் அதை எடுத்துவிட்டேன்' என்றார். அப்படியானால் "அவர் மிக நல்லவர்" என்று கூறிவிட்டுச் சித்தர் சென்றுவிட்டார். அதன் பின் அந்த குடும்பமே இருந்த இடம் தெரியாமல் அழிந்ததை யாவரும் அறிவர்.

இவற்றில் இருந்து நாம் அறிவது எல்லாச் சித்தர்களும் போலிகளும் அல்ல எல்லாசித்தர்களும் அசல்களும் அல்ல. அவர்களை இனங்கண்டு நாம் தெளிந்தால் எல்லாம் நலமாக முடியும்.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்கள்

சைவப்புலவர்
நா. விசுவலிங்கம்

பெறற்கரிய மானிடப்பிறவி எடுத்த மக்களில் வாழ்வாங்கு வாழ்ந்தும் இறந்தும் இறவாதவர் பலர். மக்களில் பெரும்பாலானோர் இச்சுகத்தை விரும்பிப் பாவபுண்ணியங்களைச் செய்து பிறவிப்பிணியை நீக்காது வருந்துகின்றனர்.

ஒரு சிலரே இறைவன் திருவடிகளே சரணம் எனநம்பி இகவாழ்வை வெறுத்து சிவனடியே சிந்திக்கும் பேற்றினைப் பெறுகின்றனர். இவர்களைத் துறவிகள், ஞானிகள், யோகிகள், அடியவர்கள், இருடிகள், சித்தர்கள் எனப்பலவாறு போற்றி வணங்குகின்றனர். இவர்கள் உலக வாழ்க்கையைத் துறந்தவர்களைப் போல நடந்து கொண்டாலும் மக்கள் தம் பிறவித் துயர் நீங்க இறைவனைச் சதா வேண்டியபடியே உள்ளனர்.

இவ்வாறு உலகப் பற்றைத் துறந்து வாழ்பவர்களில் சிலரைச் சித்தர்கள் என அழைக்கின்றனர். தமது அரிய தவப்பேற்றினால் சாதாரண மக்கள் செய்ய முடியாத காரியங்களை இறையருளால் செய்து முடிக்கின்றனர். இதனைப் பாமர மக்கள் "சித்து விளையாட்டு" என அழைக்கின்றனர். இவர்களைக் கண்கண்ட தெய்வம் என மக்கள் போற்றி வழிபடுகின்றனர்.

இறையருள் கைகூடப் பெற்றுப் பல சித்துகளையும் செய்யும் ஆற்றல் உடையவர்களை மக்கள் சித்தர்கள் என அழைக்கின்றனர். இவ்வாறு செய்யும் சித்து விளையாட்டுகள் எட்டுவகைப்படும். இவற்றை அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம் வசித்துவம் என்பர். இவற்றுள் முதல் மூன்றும் தேக சித்தியான ஐசுவரியங்களாகும். அணிமா ஆவது பரமாணுவிலும் சூக்குமமான தேகத்தை உடையதாயிருத்தல். மகிமா ஆவது தேகேந்திரியாதிகளினால் வியாபியாய்ப் பிரமலோக பரியந்த முள்ள தேகத்தை உடையதாயிருத்தல். கூடுவிட்டுக் கூடுபாய்தல் பரகாயப் பிரவேசம் முதலாகச் சித்திகை விளக்கில் பெருகும். இந்த அட்டமாசித்திகளைத் தாயுமான சுவாமிகள் செந்தமிழில் அழகாகப் பாடியுள்ளர். அது பின்வருமாறு,

'கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலிவாயையும் கட்டலாம்
ஒரு சிங்கம் முதுகின் மேற்கொள்ளலாம்
கட் செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலில் இரதம் வைத்து ஐந்து உலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறு ஒருவர் காணாமல் உகத்து உலாவலாம்
விண்ணவரை ஏவல் கொளலாம்
சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்திலும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனன்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்'
- என்பதாகும்.

அட்டமாசித்திகளின் தெளிவான விளக்கதை இப்பாடல் காட்டுகின்றது.

இந்தச் சித்தர்பரம்பரை நந்திமுனி முதலாக ஆரம்பித்து திருமூலர் வழியாக வளர்ந்துள்ளது. இவர்களை விடப் பதினெண் சித்தர்களின் பரம்பரையும் உண்டு. அகப்பைச்சித்தர், பாம்பாட்டிச் சித்தர் முதலானோரல் பதினெண் சித்தர்கள் ஆவர். இவர்கள் பாடிய பாடல்கள் "ஞானக் கோவை" என்ற நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அப்பாடல்களும் திருமூலரின்

திருமந்திரம் போலவே தத்துவக் கருத்துக்களை அடக்கியது. வேதாந்தம் – சித்தாந்தம் – கலந்த சமரச நிலையில் அப்பாடல்கள் அமைந்துள்ளன.

இதனாலேயே தாயுமான சுவாமிகள் 'வேதாந்த சித்தாந்த – சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே' எனக் கூறிப்போந்தார்.

சித்தர்களின் பாடல்களின் உட்பொருட்கள் மிக ஆழமானது. வெளிக்கு சாதாரண பாடல்களைப் போன்று இருந்தாலும் அதற்குத் தத்துவ ரீதியான உட்பொருள் உண்டு. உதாரணமாக "நந்தவனத்திலோர் ஆண்டி" என்ற பாடல் உடம்பெடுத்த மனிதன் வீணேகாலம் கழிப்பதென உட்பொருளாகக் கூறுகின்றார். பாம்பாட்டிச் சித்தரின் பாடல்களும் ஆழமான தத்துவக் கருத்துகள் கொண்டவை. ஆடுபாம்பே, ஆடுபாம்பே எனப்பாம்பை முன்னிலைப் படுத்தி யாக்கை நிலையாமையைப் பற்றி அழகாக விகடமாகப் பாடியுள்ளனர். அப்பாடல்களில் சில அடிகளை மட்டுந்த தருகிறோம்.

'ஊத்தைக் குழியிலே மண்ணை எடுத்து
உதிரப் புனலிலே உண்டை செய்து
வாய்த்த குயவனார் பண்ணும் பாண்டம் – இது
வற ஓட்டுக்காகாதென்று ஆடலப் பாம்பே'.

'இருவர் மண் சேர்த்திட ஒருவர் பண்ண
ஈரைந்து மாதமாய் வைத்த சூளை
அருமையாய் இருப்பினும் அந்தச் சூளை
அரைக்காசுக்காகா தென்றாடாய் பாம்பே'

'பரிகாசம் போலவே கடித்த பாம்பு
பலபேர் அறியவே மெத்தவீங்கிப்
பரிகாசம் ஒருமாது பார்த்தபோது
பையோடோ கழன்ற தென்றாடாய் பாம்பே'

இவ்வாறு சித்தர்களின் பாடல்கள் பல உண்டு.

இந்தியாவில் பல சித்தர்கள் தோன்றி மக்களை நெறிப்படுத்தி உள்ளனர். பகவான் ரமண மகரிஷி – சாது ராமதாஸ் – பால்குடிபாபா – இராமகிருஷ்ண பரஹம்சர் சேஷாத்திரி ஐயர், பாம்பன் சுவாமிகள் முதலாகப் பல சித்தர்கள் காலத்துக்குக் காலம் தோன்றியுள்ளனர். தற்போது உயிருடன் இருக்கும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா போன்ற சித்தர்களும் இருக்கின்றனர்.

நமது இலங்கையிலும் பல்வேறு சித்தர்கள் தோன்றியிருக்கின்றனர். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஆனைக்குட்டிச் சுவாமி, கடையிற் சுவாமி, செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமி, முதுதுலிங்க சுவாமி, குயின்ஸ்பரி தோட்டத்து நவநாதசித்தர் போன்றோர் இன்றும் மக்களால் வழிபடப் பெற்று வருகின்றனர்.

சுருக்கமாகக் கூறினால் சித்தர்களின் பால் நம்பிக்கை கொண்டு அவர்களை வழிபட்டால் நமது சித்தம் தெளிவுறும். எண்ணியனவெல்லாம் சித்திக்கும். 'எனவே சித்தர்களின் பால் சித்தத்தை வைப்போம்'.

–திருச்சிற்றம்பலம்–

"விபூதியை அடுத்து புனித மாலைகள் எங்கள் மதத்திற்குப் பிரியமானது. உருத்திராட்சம், சந்தனம், துளசி, ஸ்படிகம் ஆகிய மாலைகள் அணிவது கட்டாயமில்லை. ஆனால் அணிந்தால் நல்லது. ஆயினும் ஒன்று அம்மாலையை அணிபவர் கட்டாயம் சைவ உணவு புசிப்பவராக இருக்க வேண்டும். மாமிசம் சாப்பிடுபவர் உருத்திராட்சம் அணிந்திருந்தால் நரகத்திற்குப் போவர் என்று ஆறுமுகநாவலர் சொன்னார். இது உண்மை."

– சுவாமி தந்திரதேவா –

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# இலங்கையும் சித்தர் சிவாலயங்களும்

சிவமயச் செல்வி, சைவ நன்மணி
**விசாலாட்சியானந்த மாதாஜி**
ஆஸ்தானப் புலவர், ஸ்ரீ பூபாலவிநாயகர் ஆலயம்
பேலியகொடை, கொழும்பு.

'சித்தர்கள்' என்ற சொல்லுக்குச் சித்தி பெற்றவர்கள் என்பது பொருளாகும். இறை நாட்டம் கொண்ட முனிவர்கள் முக்கரண சுத்தியுடன் உணவு நீர் முதலியன இன்றிக் காடுகளிலும், ஒதுக்குப் புறங்களிலும் நீண்ட காலம் தவம் செய்து சித்தி பெறுவர்.

'சித்தர் போக்கு சிவன் போக்கு' என்பர். இவ்வாறு தவமிருந்து சித்தி பெற்ற ஞானிகள் வேதகாலந் தொட்டுப் பூவுலகில் வாழ்ந்த போதும், சிறப்பாக பாரத தேசத்தில் வடபகுதியில் வாழ்ந்தனர்.

வசிட்டர் விசுவாமித்திரர் போன்றவர்களும் சித்தர்களாவர். அக்காலத்தில் தவமிருந்து சித்திகள் பெறுவதே பெருவாழ்வாக முனிவர்கள் கருதினார் என்பதை சித்தர் வரலாறுகள் கூறுகின்றன.

இந்தியாவில் தென்பகுதியாக இருக்கும் தமிழ் நாட்டிலும் பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், பத்திரகிரியார் போன்ற பதினெண் சித்தர்கள் இருந்ததாக அறிய முடிகின்றது. சித்திகள் எட்டு வகைப்படும். இதனால் அட்டமா சித்திகளென்று அவற்றை அழைப்பார்கள்.

ஒருமுறை எல்லாம் வல்ல எம்பெருமானாகிய சிவபெருமானே சித்தராக இருந்தது பற்றித் திருவிளையாடற் புராண மூலம் அறியக்கிடக்கின்றது. பொன்னனையாள் ஒருத்தி, நடராசப் பெருமானைப் பொன்னில் வடிக்க விரும்பினாள். அவளிடம் பொன் போதியளவு இருக்கவில்லை. எம்பெருமான், அவளிடம் சென்று, அவளிடமிருந்த இரும்புப் பொருள்களை மூலிகை மருந்துளைப் பூசி நெருப்பிலிட்டுப் பொன்னாகச் செய்தார் என்றும் கல்லானைக்குக் கரும்பு கொடுத்து உண்ணச் செய்தாரென்றும் திருவிளையாடற் புராண மூலம் அறிய முடிகின்றது.

சித்தர்கட்குச் "சாதி சமய வேறுபாடுகள் கிடையாது. ஒன்றே குலம் ஒருவனே தேவன். யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கோட்பாடுகளுடன் வாழ்பவர்கள். இதனால் அவர்கள் எல்லா உயிர்களிலும் இறைவனைக் காண்பார்கள்.

வாழ்வில் இருவகையுண்டு. ஒன்று அகவாழ்வு, மற்றையது புறவாழ்வு. அகவாழ்வு வாழ்பவர்கள் இறையோடு இசைந்து வாழ்வார்கள். எல்லா உயிர்களிலும் இறைவனைக் காணும் ஒன்றையே இலக்காகக் கொள்வார்கள். பண்டைக் கால மக்கள் பெரும்பாலும் அகவாழ்வில் திளைத்தமையால், இன்று போன்ற பிரச்சனைகள் அன்று இருக்கவில்லை. இன்றைய மனிதன் புறவாழ்வு அதாவது போக வாழ்வை இலக்காக் கொண்டமையால் இரத்தக் கனலிகட்கு இடமாகியுள்ளது. மனிதனை மனிதன் இனம் காண முடியாது இருக்கின்றது.

மனிதன் சமயவாழ்வு வாழ வேண்டும். அந்தச் சமய வாழ்விற்குச் சித்தர்களும் வழிகாட்டியாக அமைந்தார்கள் என்பதை மூவர் தேவாரஸ்கள் மூலம் அறியக் கிடக்கின்றது.

பரந்த பரப்பையுடைய பாரத தேசத்தைப் புண்ணிய பூமியென்று இன்றும் என்றும் அழைக்கின்றார்கள். காரணம் பாரத நாட்டின் பலபாகங்களிலும் சித்தர்கள் வாழ்ந்தமையாகும். இன்று இந்தியா வல்லரசாகவும், பல

மேதைகள் ஆத்மீக ஞானத்திற் சிறந்தவர்களாக இருக்கக்காரணம் அந்த நாட்டின் 'பக்திவளம்' என்றால் மிகையாகாது.

இந்திய நாட்டில் நான்கு திசைகளிலும் மடலாயங்கள் காப்பரண்களாக விளங்குவதை இன்றும் காண முடிகின்றது. வடக்கில் ஸ்ரீ சிவான ந்த சுவாமிகளின் ஆசிரமம், தெற்கில் ஸ்ரீ இரமண ஆசிரமம், கிழக்கில் ஸ்ரீ அரவிந்த ஆசிரமம், மேற்கில் ஆனந்தா ஆசிரமம்.

அவ்வாறு இலங்கையின் வடபகதியில் யாழ்ப்பாண நீராவியடியிற் கடையிற் சுவாமிகளின் சமாதி இருக்கின்றது. மேற்கில் நாவலப்பிட்டி குயின்ஸ்பரியில் நவநாத சித்தரின் ஆசிரமமும் சமாதியும் இருக்கின்றது. மேற்குத் திசையில் கொழும்பு முத்துவாரத்தில் பெரியானைக்குட்டி சமாதி இருக்கின்றது. கிழக்கில் சின்ன யானைக்குட்டி சுவாமிகளின் சமாதி இருக்கி ன்றது. இலங்கையின் கிழக்கு தெற்கு மேற்கு வடக்கில் சித்தர்களின் சமாதிகள் அமைந்துள்ளமையால், அவர்களது ஆன்மிக அலை இலங்கை மாதாவைப் பாதுகாக்கின்றது என்பது துணிபாம்.

இலங்கைச் சித்தர்கள்,

1) கடையிற் சுவாமிகள்
2) பரமகுரு சுவாமிகள்
3) குழந்தைவேல் சுவாமிகள்
4) அருளம்பலச் சுவாமிகள்
5) சிவயோக சுவாமிகள்
6) நவநாத சித்தர் சுவாமிகள்
7) பெரியானைக் குட்டி சுவாமிகள்
8) சித்தானைக் குட்டி சுவாமிகள்
9) சடைவரத சுவாமிகள்
10) ஆனந்த வரத சுவாமிகள்
11) செல்லாச்சி அம்மையர்
12) தாளையான் சுவாமிகள்
13) மகாதேவ சுவாமிகள்
14) சடையம்மா
15) நயினாதீவு தவத்திரு முத்துக்குமார சுவாமிகள்

"சொல்லரிய சித்தர் குழாம் நிறை கொல்லீர் சிகரமதிற்
கருதிமுடி வானஒளி வெளியை நாடி
அல்லறுத் தானந்த பேரமுதம் அனுதினமும்
அருந்தியடி பணிந்தவரை அன்பாற் போற்றி
வெல்லரிய சித்திகளோ ரெட்டினையும் சிறுமகவு
போலியற்றிப் பித்தரைப்போல் வெளிவந் திந்நான்
மல்லல்வளம் கரிகாலி நாகன்மனைக் கான்முளைகள்
வழுத்துநவ நாதனடி வணக்கஞ் செய்வாம்".

இந்தியாவில் தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் குன்றுத் தொடர்கள் உண்டு. கொல்லிமலை உச்சியில் உயிர்களுக்கு ஆன்ம ஞானத்தைத் தர்மம் செய்து அஞ்ஞான இருளைப் போக்கும் அறப்பள்ளிநாதர் கோயில் ஒன்று கொல்லி மலை உச்சியில் இருந்தது. இக் கோவிலின் மகிமைகளை அறிந்த ஸ்ரீ சங்கராச் சாரியார் இவ்வாலயத்திற்குச் சென்றார். அம்பாளின் அருளையும் பிரகாசத்தையும், திருவருட் பொலிவையும் கண்டு வியந்தார். அதனால் அம்பாள் முன்னிலையில் முருகன் கோவில் ஒன்று கட்டுவித்தார்.

கொல்லி மலையின் அடிவாரத்தில் பல குகைகள் காணப்பட்டன. அந்தக் குகைகளில் பல சித்தர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவரே நவநாதச் சித்தராவார். இவர் குகையில் தவம் இருப்பார். பசித்தால் மட்டும் கிராமப் புறங்கட்கு வருவார். அங்கு காணப்பட்ட கிராமங்களில் கரிகாலியும் ஒன்றாகும். அந்த ஊரில் பெருமாள் அம்மையார் விரும்தோம்பலிலும் சிறந்தவர். நவநாதர் பசித்து வந்ததைக் கண்டால் உடனே, சுவாமிகளின் பாதங்களைச் பூசை செய்து உணவளிப் பார். சுவாமிகள் அம்மையாரைச் செல்லமாய் "ஆயா" என்று அழைப்பார்.

ஒருநாள் சுவாமிகள் கௌபீனத்துடன் அம்மை யாரின் முற்றத்தில் வந்து "ஆயா" என்று அழைத்தார். சுவாமிகளின் இன்னருட் தீங்குரலைக் கேட்டதும் அம்மையார் எல்லா வேலைகளையும் விட்டுப் பூவும் தண்ணீருடனும் வந்தார். சுவாமிகளின் பாதங்களைக் கழுவிப் பூவால் பூசைசெய்தார். பின்னர் ஆயத்தமாக இருந்த உணவைக் கொடுத்தார். சுவாமிகள் நின்ற

நிலையிலே சாப்பிட்டார். கை கழுவவும் குடிக்கவும் அம்மையார் தண்ணீர் கொடுத்தார்.

பின்னர் அம்மையார் சுவாமிகளை இலங்கையில் இருக்கும் தங்கள் பாலசுப்பிரமணியர் கோவில் கும்பாவி ஷேகத்திற்கு வரும்படி கேட்டார். "ஆயா நினைச்சா இதுவரும்" என்றார் சுவாமிகள்.

நாவலப்பிட்டியில் இருந்து நுவரெலியா செல்லும் கொத்மலை வீதியிலிருந்து பதின்மூன்றாவது மைல் தூரத்தில் குயின்ஸ்பரி என்ற தேயிலைத் தோட்டம் இருக்கின்றது. அத்தோட்டத்தில் கரிகாலியில் இருந்து நாகன் குடும்பத்தினர் குடியேறினர். நாகன் என்பவரே அத்தோட்டப் பெரியகங்காணியாவார். பெரிய கங்காணி நாகனின் மனைவிதான் பெருமாள் அம்மையார்.

அவர்கள் தான் குயின்ஸ்பரியில் முருகன் ஆலயம் ஒன்றைக் கட்டி மகாகும்பாபிஷேகம் செய்ய இருந்தார்கள். இந்த மகா கும்பாபிஷேகத்திற்கு வரும்படி அம்மையார் சுவாமிகளை வரும்படி கேட்டார்.

கும்பாபிஷேக நாள் குறித்து, மறுநாள் கும்பாபிஷே கம் நடக்க இருந்தது. அப்போது அம்மையார் சுவாமிக ளுக்குக் கடிதம் எழுத வேண்டுமென மகனுக்குக் கூறினார். தந்தி அடித்தாலும் உரிய நேரத்தில் சுவாமி வரமுடியாது என்று மகன் கூறினார். எது எப்படியாக இருந்தாலும் நீ கடிதமெழுது என அம்மையார் பணிக்க மகன் கடிதமெழுதித் தபாற் கந்தோரிற் சேர்த்து விட்டார்.

மறுநாள் மகாகும்பாபிஷேகம் அதிகாலையில் ஆரம்பமாக இருந்தது. வீட்டிலிருந்து மகாகும்பாபிஷேகத் திற்குப் பொருட்களை எடுத்துக் கொண்டு அம்மையார் புறப்பட்டார். அம்மையாரின் முன்னிலையில் சுவாமிகள் நவநாதச் சித்தர் வந்து நின்றார். அம்மையார் ஆச்சரியத்தால் அதிர்ந்து விட்டார். "நேற்றுத்தானே கடிதம் போட்டேன் எப்படிச் சுவாமிகள் வந்தீர்கள்" என்று அம்மையார் வியப்புடன் கேட்டார். "ஆயா நினைச்சுது இது வந்திட்டுது" என்றார் சுவாமிகள். பின்னர் குயின்ஸ் பரி பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள இடத்தைக் காட்டி "ஆயா இந்த இடத்தில் தான் இந்த அடைமையைச் சமாதி வைக்க வேண்டுமென்றார்.

நாட்கள் உருண்டோடின. குயின்ஸ்பரி வந்திருக் கும் நவநாத சுவாமிகள் அற்புதம் மலையகம் எங்கும் பரவி விட்டது. இதனால் இலங்கையின் பலபாகங்களில் இருந்து மக்கள் சுவாமிகளைத் தரிசிக்க வருவார்கள். சுவாமிகளை முக்கரண சுத்தியுடன் வணங்கித் திருவருட் பிரசாதம் பெற்றுச் செல்வார்கள். இந்தியாவிலி ருந்தும், சிறப்பாகச் சேலத்திலிருந்தும் சுவாமிகளைத் தரிசிக்க வருவார்கள். சேலம் இருந்து வந்த பக்தர் சுவாமிகளைக் கண்டு ஆச்சரியப்பட்டார். பின்னர் சித்தரை வணங்கி "சுவாமிகளே சென்ற வருடம் சேலத்த ருகில் சமாதி வைத்தோம்" என்றார். இருக்கலாம் எனச் சுவாமிகள் புன்சிரிப்புடன் கூறினார்.

சுவாமிகள் குயின்ஸ்பரி தோட்டம் மட்டுமன்று அயலிலுள்ள தோட்டங்களிலும் உலாவி வருவார். குயின்ஸ்பரி தோட்டத் தொழிலாளரிடம் சுவாமிகள் பல சித்துக்கள் காட்டுவார். ஒருநாள் மூன்று காடையர்கள் சுவாமிகளைக் கஞ்சா குடிக்கும்படி வற்புறுத்தினார்கள். அக்கஞ்சாக்குள் ஆளைக் கொல்லும் நச்சு இலைச் சருகுகள் சேர்த்திருந்தமையைச் சுவாமிகள் அறிவார். அதனால் முதலில் அந்தக் காடையர்களைக் குடிக்கும்படி கூறினார். காடையர்கள் விட்டபாடில்லை. சுவாமிகள் தான் முதலில் கஞ்சாப் புகையை இழுக்க வேண்டும். பின்னர் நாங்கள் கஞ்சாப் புகையை இழுப்போமென்று பிடிவாதமாகச் சுவாமிகளை வற்புறுத்தினார்கள். சுவாமிகள் கஞ்சாப்புகையை நன்றாக இழுத்து அந்த மூன்று பேரின் முகத்தில் ஊதி விட்டார். அந்த மூவரும் உடனே சுருண்டு மயங்கி கீழே விழுந்து விட்டார்கள். சுவாமிகள் தன்பாட்டுக்குப் போய்விட்டார்.

அந்த மூவரும் கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். சுற்றத்தவர்கள் சுவாமிகளை மீண்டும் மீண்டும் பிரார்த்தனை செய்தார் கள். அவர்களின் உயிருக்காக மன்றாடினார்கள்.

சுவாமிகள் திருவுளமிரங்கி ஒரு பீடியை வாங்குவித்து ஊதினார். என்னாச்சரியம் அப்பீடியின் புகை சுழன்று சுழன்று ஆஸ்பத்திரியில் படுத்திருந்த அந்த மூவரையும் ஓர்முறை வலம் வந்தது. அந்த மூவரும் துள்ளி எழுந்து சுவாமிகளிடம் வந்து சுவாமிகளை வணங்கினார்கள்.

இவ்வாறு மிக மிக அண்மையில் தவத்திரு சிவயோக சுவாமிகளும் அற்புதம் செய்தார். வேலணையில் திரு. பாலசுப்பிரமணியம் என்று ஒருவர் இருந்தார். அவர் சிவயோக சுவாமிகளிடம் மிகுந்த பக்தியுடையவர். ஒருநாள் திரு பாலசுப்பிரமணியத்தின் மனையில் பாம்புகள் புற்றிடம் கொண்டு மலிந்து சீறின. இதனைக் கண்ட அடிகளாரின் மனைவி மக்கள் தூர விலகிவிட்டார்கள். அடிகளார் தன் குருநாதன் சிவயோக சுவாமிகளிடம் சென்றார். பக்தனின் குறைபாடுகளைக் குருநாதன் உணர்ந்து விட்டார். தாம் இருந்த இடத்திலிருந்தே பாம்புகளை பாவனையால் விரட்டிச் சுடலைக்கு அனுப்பினார். பின்னர் பக்தனும் மனைவி மக்களும் மீண்டும் தம் மனையில் இருந்தார்கள். இந்த நிகழ்ச்சி 1960 ஆம் ஆண்டு நடந்ததாகும்.

தவத்திரு நவநாத சித்தர் நடந்து கொண்டே செல்வார். எங்கே தியான நிலை கைகூடும் உணர்ச்சி உருவாகிறதோ அந்த இடத்தில் அமர்ந்து விடுவது வழக்கம். இது போல ஒருநாள் சுவாமிகள் நடந்து கொண்டிருக்கும் போது தியானநிலை உணர்ச்சிகள் உருவாகும் போது ஒரு வீட்டுப் புறத்திண்ணையில் அமர்ந்து தியானத்தில் மூழ்கிவிட்டார்.

அது ரெட்டியார் வீடு. அவருக்குச் சித்தரைக் கண்டால் பிடிக்காது. அதனால் ஒரு கூலியாளைக் கொண்டு சுவாமிகளின் தலையில் நெருப்பைக் கொட்டுவித்தார். அதனால் அந்த ரெட்டியாரின் குடும்பம் வேருடன் அழிந்தது என்றும் இன்று ஓர் கதை உலாவி வருகின்றது. சில நாளின் பின் சுவாமிகள் தாம் காட்டிய அதே இடத்தில் மகாசமாதியடைந்தார். சுவாமிகளின் சித்தின் பெருமை உலகெங்கும் பரந்துவிட்டது.

வாழ்க சுவாமிகளின் திருவடிகள்

வளர்க! பெருகுக! சித்தர் பரம்பரை.

-திருச்சிற்றம்பலம்-

✌ "திருஞானசம்பந்தர் ஜேசுநாதர் மறைந்து அறுநூறு வருடங்களுக்குப் பின் தோன்றினார். ஆனால் அவர் ஜேசுவைப் பற்றி ஒன்றும் பாடவில்லை."

✌ "எல்லா மனிதர்களிடத்தும் பேதமின்றி அன்பு காட்டவேண்டும். எந்த மதங்களாயினும் சமாதானத்துடன் ஜீவிக்க வேண்டும். இன்னும் இந்துக்கள் தமது புனித பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை மதிக்கவேண்டும். இந்துக்கள் ஏனைய சமயச் சின்னங்களை வழிபடவேண்டும் என்பது வேதாந்தமில்லை. ஒரு நொண்டியானவர்க்கு நாங்கள் நல்ல அன்பு காட்டவேண்டும். அதற்காக அவர் நடப்பதைப் போன்று நாமும் நடக்கவேண்டியதில்லை."

✌ "எல்லா மதங்களுடைய நோக்கமும் நல்லவர்களை உண்டாக்குவது. ஆகவே எல்லா மதங்களும் சமம் என்று சிலர் சொல்கிறார்கள். இக்கருத்துப் பிழையானது."

- சுவாமி தந்திரதேவா -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சித்தரின் நினைவில் சிவாலயம்

**நாகமுத்து யோகநாதன் B. A. (Cey)**
நிறைவேற்று அலுவலர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், நயினைதீவு

'ஆன்ம இலட்சியம்' என்பது அகில அண்ட சராசரங்களுக்கும் முழுமுதற் பரம் பொருளான இறைவனது திருவடிக்கீழ், நிலையான இன்ப வாழ்வைப் பெறுதலேயாம். பரம் பொருளை அடைவதற்கு பராசக்தியின் திருவருளும் வேண்டும். சக்தியும் சிவமும் பிரிக்க முடியாத வண்ணம் ஒன்றுக்குள் ஒன்று அடக்கமாகி, இரண்டறக் கலந்தவை. "சக்த்தியாய் சிவமாய் தனிப்பர முத்தியான முதல்" என்பதால் இதை உணரமுடிகின்றது. இன்பம் என்பது பேரின்பமே, அதுதான் சக்சிதானந்த இன்பம். இதை அனுபவிப்ப வர்களே மகான்கள். இவ்வாறான மகான்களைக் கொண்டுதான் ஆசீர் வாதங்கள் மூலம் அனுக்கிரகங்கள் வேண்டப்படுகின்றன.

உடல் இந்திரியங்களின் ஆக்கிரமிப்பால் உயிர் உலோகாயதத்தை நாடி நிற்கின்றது. உடலிலுள்ள ஆத்மாவானது ஞானத்தை வேண்டித் தங்கி இருக்கின் றது. ஆனால் மனிதனோ மாயாசக்திகளான உலோகா யத சிற்றின்பங்களில் சிக்குண்டு, பேரின்பத்தைத் தரும் ஆத்ம ஞானத்தின் மேன்மையை அறியாமல் தடுமாறி வாழ்நாளை வீணாக்கிக் கொண்டிருக்கின்றான். பஞ்ச பூதங்களிலான உடல், எப்போது அப்பூதங்களின் தாக்கத்தை எதிர்த்து நிற்க,மனமானது ஆத்மஞானங்க ளுக்காக அதற்குரிய ஒழுக்க நெறிகளில் ஈர்க்கப்படுகின் றதோ, அப்போதுதான் ஆத்ம ஞானம் பிறக்கும். அவ்வாறு ஆத்மஞானம் பெற்றவன் மகானாகி, உலகின் மகாபுருஷனாகி விடுகின்றான். அவனது உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகும் போது, வாக்கினிலும் ஒளி உண்டாகி விடுகின்றது.

'ஆத்மிகம்' என்பது மிக யதார்த்தமாக நமக்குள்ளே யுள்ள உண்மை இயல்பினைக் கண்டு கொள்வதாகும். 'அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு' பெற்றதும், 'மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரை' அங்கே காணலாம். அதாவது தன்னை உணரும் தனிப்பெரும் நிலை அது. இவ்வாறு தன்னை உணர்வது, வாழ்வில் ஒருவனைச் சரியான பாதையில் நெறிப்படுத்த, உதவுகின்றது. வாழ்வியல் துன்பங்களிலிருந்து விடுபடவும், அது வழிகாட்டுகின்றது. தன்னைப் பிரம்மத்துடன் ஒன்றாகக் காணும் ஒருவன், குறுகிய இன, மத, பேத எல்லைகளால் கட்டுப்படுவதில்லை. அவன் தன்னைத் துறந்து உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொள்கின்றான். எவனொருவன் எல்லாவற்றிலும் தன்னையும், தன்னில் எல்லாவற்றையும் காண்கின்றானோ? அவனே பிரம்மஞானி, அவன் யாரையும் வெறுப்பதில்லை. ஏனெனில் பற்றற்றான் பற்றற்றினை, அவன் பற்றியதால் உலகப் பற்றுகளிலிருந்து அவன் விடுபட்டு,விடுதலை பெற்றவனாகி விடுகின்றான்.

'ஞானநாட்டம்' கொள்ளும் போது இரண்டாம் முறை அவன் பிறக்கின்றான் என்பர். முற்பிறப்பு எல்லா உயிர்க்கும் ஒத்தது. ஆனால் ஞான நாட்டம் கொள்ளும் அடுத்த பிறப்பு எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. அந்தணர்களை இரு பிறப்பாளர் என்னும் மரபு உண்டு. உண்மைதான். பூணூல் சடங்கு இரண்டாவது பிறப்பையே குறிப்பதாகும். அதிலிருந்து அவன் ஞானப் பிறவி எடுக்கின்றான் என்பதே பொருள்.

அரனடி சேர விரும்புவோர் இம் மண்ணுலகில் பிறந்து அன்பால் அவனை வழிபட்டுய்ய வழியுண்டு. இதனை நன்கு வாழ்ந்து காட்டி, நமக்கு நிரூபித்துச் சென்ற ஞானப் பரம்பரை உண்டு. விண்ணவர் மண்ணுலகின் மீது விருப்புக் கொள்ளும் அளவுக்கு,

இப்பூமி 'சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' – சிறப்புடையது. இந்த உண்மையை நாம் அறிகின்றோமில்லை. சிவனடியார்களை ஆட்கொண்டு, அருள் செய்யும் இடம் இம் மண்ணுலகே. "புவனியிற் போய் பிறவாமையால் நாள் நாம் போக்குகின்றோம் அவமே". என எண்ணுமளவுக்கு இப்பூமி மேன்மை பெறுகின்றது. "அன்பர்கள் பின் உம்பர்குழாம்" என்னும் சேக்கிழார் திருவாக்கில் உம்பர்களுக்கு முன், இவ்வுலகத்தின் அன்பர்களுக்கு முன்னுரிமை கொடுத்திருக்கும் பாங்கு சிந்திக்க வேண்டியதாகும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தால் எண்ணில் நல்ல கதிக்க யாதுமோர் குறை வில்லை எனக் கண்டவர்கள் நம் அனுபூதிச் செல்வர்கள். அந்த வகையில் பேறு பெற்றவர்களில் நவநாதச் சித்தர் பெருமானும் ஒருவர். ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்றித் திருக்காட்சி கொடுத்த தெய்விகத் தோன்றல் அவர்.

இறந்தும் இறவாப் புகழ் பெற்றவர்கள் நம் ஞான சீலர்கள். "சாகாத வித்தைக்கு இலக்கண இலக்கியம் தானாய் இருந்த பரமே" என்பது வள்ளலார் வாக்கு. அவனருளாலே அவன் தாழ் வணங்கி அவனுடன் இரண்டறக் கலந்து விட்டவர்களுக்கு, மரண மில்லாப் பெருவாழ்வு சித்திக்கும். இதுவே பிறப்பின் நோக்கமுமாகும். நம்பிக்கையோடு இறைவனைக் கும்பிட, வாய்த்த நற்பிறவி மனிதப் பிறவி. கும்பிடக் கும்பிட, அன்பு கூடிடும். அடியார்கள் அப்பேறு பெற்றவர்கள். "கூடும் அன்பில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறல்" என்பர் சேக்கிழார் பெருமான்.

தொண்டு புரியவும் தொழவும் வாய்த்த, மனிதப் பிறப்பின் மாண்பு சொல்லும் தரமன்று. வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்தின் திருவடிகள் சாருதலே, மனிதப் பிறப்பின் பண்பும் பயனுமாகும்.

இத்தகைய பிறவி வாய்த்த போதே, நாம் பெறுதற்கரிய பெரும் பேற்றினைப் பெறுதல் வேண்டும். மனிதப் பிறவி மாண்புடையது என்பதை மதித்து, அடியாரொடும் கூடி, ஆணவம் நீங்கிச் சித்தம் சிவமாகும் திருப்பேறு பெறுதலே, உத்தம இலட்சிய வாழ்வின் உறுபயனாகும். இதனைப் பெறவே "வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்றார் அப்பர் அடிகள்.

சிவநெறியில் சிந்தை பதித்து பிறைசூடிய பெம்மான் மேல் பித்தனாகியும், பித்தர்க்குப் பத்தனாகியும் நின்ற மெய்யடியார்களை நாம் நினைவில் நிறுத்திப் போற்றுவது இறைவனுக்கு மிகவும், உவப்பான செயலாகும். யோகத்தாலோ சாங்கியத் தாலோ கர்மத்தாலோ கல்வியாலோ முத்தி கதிடைப்பதில்லை. பிரமமும் தானும் ஒன்று என்ற பேருண்மையின் ஞான விளிப்பால் மட்டும் முத்தி சித்திக்கின்றது. அந்த வகையில் முத்திக்கு வித்தாகியவரே நவ நாதச் சித்தர் பெருமான் அவர்கள். அவர்களிடம் தெய்விகம் நடமாடியது. அந்த ஆத்மிக தெய்விகமே திருக்கோயில் உருவாகவும் வழிவகுத்தது.

பக்குவமுடைய பழுத்த மெய்ஞ்ஞானிகளே பரம் பொருளைக் கண்டுணரக் கூடியவர்கள். அருட்தாகத் துடன் கூடிய, அவர்களின் அருளுணர்வு, அவர்கள் சுவைக்கே உதவியது. தாங்கள் பெற்ற அருளமுத இன்பத்தை, இன்ப அனுபவத்தை, இவ் வையகத்திற்கு வழங்க அவாவியும், இயலாமைகண்டு, வேதனைப்பட்டு மிருக்கின்றார்கள்.

"முகத்திற் கண் கொண்டு கான்கின்ற மூடர்காள்
அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்"
"மகட்குத் தாய் தன் மணாளனோடாடிய
சுகத்தைக் சொல்லெனின் சொல்லுமா றெங்கனம்"

என்ற திருமூல மந்திரத்தின் மூலம். மெய்ஞ்ஞானக் கண் கொண்ட வர்களின் மனத் தெளிவும், அஞ்ஞானக் கண்ணுடையோர்க்குத்தம் நிலையை வெளிப்படுத்தி, விளக்கிக் கொள்ள முடியாத வில்லங்கமான நிலையும் புலப்படுத்தப்படுகின்றது. சிவனடியாரும் சிவனே தான் என்பது சித்தாந்தம். சிவபெருமான் திருவருள் குருவடிவிலே தான் கிடைக்கும் என்பர். இதற்கு ஆன்மிக ஞானிகளினதும் அனுபூதிச் செல்வர்களினதும் வரலாறுகள் நமக்குச் சான்றாக உள்ளன. "யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற வடிவு தோன்றும்" என்பதை அனுபவரீதியாகக் கண்டவர்கள் நம் ஆன்மிகச் செல்வர்கள்.

நான் யார்? என் உள்ளம் ஆழ்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் ஏன் பிறந்தேன்? இந்த உடம்பு தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் தன்

பொருட்டுத் தந்தானா? என் பொருட்டுத் தந்தானா? நான் எங்கே போக வேண்டும்? இந்த உடம்பைத் தந்தவன் தன்மை யாது? அவனை அடையும் வழியாது? அடைந்தவர்கள் யார்? இவற்றிற் கெல்லாம் விடைகண்டவர்களே ஆத்மிக ஞானிகள்.

புலன் வழிப்பட்டு அலையும் மனிதனை, ஒருமனப்படுத்தும் ஆரம்பஇடம் ஆலயம். அவன் ஒரு மனப்பட்டுப் புனிதனாகும் போது தெய்விகம் அவனில் குடி கொள்கின்றது. "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன். நினையாதொரு போதும் இருந்தறியேன்" என நெஞ்சுருகிப் பக்தி பரவசத்தோடு பாடிப் பரவும் போது, சிறந்தடியார் சிந்தனையில் தேனூறி நிற்கின்றான் இறைவன். தன்னை மறந்து தன் நாமம் கெட்டு, இறைவன் தலைப்பட்டு நிற்கும் உள்ளத்தினை, இறைவன் கோயிலாகக் கொண்டு விடுகின்றான்.

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே"

என்கிறார் திருமூலர். நீண்ட காலமாக ஆலய வழிபாடு எமது சமயத்தில் வேரூன்றிய ஒன்றாகும். ஊர் முழுவதும் ஆலயம் அமைத்து வழிபாடியற்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவர்கள் நம் ஆன்றோர்.இந்து ஆலயங்கள் வாழ்க்கை நடைமுறைகளின் சீரிய பிரதி பலிப்புகளாகவும் திகழ்கின்றன. ஆலய கோபுரங்களில் வாழ்க்கைப் பேருண்மைகளை விளக்கும் உயர்ந்த சிற்பங்கள் வடிக்கப்பட்டிருப்பதே இதற்குச் சான்றாகும். ஆண்டவனின் திருவிளையாடல்கள் கூட வாழ்க்கையை ஒட்டி அமைந்தன. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ வேண்டுமென இந்து தர்மம் உபதேசிக்கின்றது. அப்படி வாழத் தெய்வபக்தி அவசியம் என்று இந்து மதம் வலியுறுத்துகின்றது. அந்த தெய்வ பக்தியை நினைவுபடுத்தும் உயர்ந்த இடங்கள் தான் இந்து ஆலயங்களாகும்.

இறைவனை வழிபட ஆலயத்திற்குச் செல்வதில் தனிச் சிறப்புண்டு. அனைவருடையபக்தியுணர்வும் ஒரு முகப்பட்டு ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவன் மீது லயிப்பதும், அந்தத் திருக் கூட்டத்தில் நம்மையும் ஒரு அங்கமாக்கிக் கொண்டு வழிபாட்டில் ஈடுபடுவதும், ஒரு தனி அனுபவமாகும். இந்த அனுபவத்தைப் பெறுவதற்காக இந்துக்களுக்கு ஆலயதரிசனம் அவசியமாக அமைகின்றது. இந்த அனுபவத்தால் வாழ்க்கைத் துன்பங்களை மறக்கவும் சுமைகளைக் குறைக்கவும், மனோரம்மியமான சாந்தியும் அமைதியும் கலந்த ஒரு தெய்விக நிலை உருவாகவும் ஏதுவாகின்றது. மனித உணர்வுகளூடாக அதை ஊடுருவ வைத்து ஆன்மிக உணர்வுகளை ஊட்டு விக்கும் அமைவிடங்களாக ஆலயங்கள் அமைகின்றன. ஆலய அமைப்பிலும் ஆலயக் கிரியைகளிலும் கூட ஆகம விதியும் தத்துவக் கருத்தக்களும் இழையோடி இருக்கின்றன என்பதை உணரவேண்டும். ஆலயங்கள் வெறும் பிரார்த்தனை மண்டபங்கள் மட்டுமல்ல. கோபுரத்தாலும், சிற்பத்தாலும் நாதத்தாலும் வேதத்தாலும் வேறுபல தெய்வீகப் பிரதிபலிப்புகளாலும் ஆன்மிக உணர்வுகளையும், தத்துவக் கருவூலங்களையும் தந்து கொண்டு இருக்கும் அற்புதமான ஆன்மிக ஊற்றுக்களாகும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாக பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் பரம்பொருள், ஒரு நாமம் ஒருவரும் ஒன்றுமில்லாத வனாக பேராயிரம் பரவிவானோர் ஏத்தும் பெம்மானாகப் போற்றப்பட்ட போதும் பரிபூரணானந்தமாய் பரந்து விரிந்து எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் ஆன்மாக்கள் உய்தி பெறும் பொருட்டு உருவத் திருமேனி கொண்டு காட்சி தரும் இருப்பிடங்களே திருக் கோயில்கள் என்பதை நாம் என்றென்றும் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆன்மா ஒடுங்குமிடம், ஆன்மா இலயித்திருக்கும் இடம், ஆன்மா விடமுள்ள மலமாகிய ஆணவம் அடங்கும் இடம் என்றெல்லாம் ஆலயத்திற்கு அர்த்தம் கூறப்படுகின்றது. சமய மரபும், கலை மரபும் சங்கமமாகுமிடமாகவும், ஆசார சீலர்களாகவும் அனுட்டான சீலர்களாகவும் அடியார்கள் கலந்து கொள்ளுமிடமாகவும், நமது பழம் பெரும் பண்பாடும் கலாச்சாரமும் சமய நெறிகளும் கட்டிக் காப்பாப்பாற்றப் பட்டுக் கொண்டிருக்கும் இடமாகவும் ஆலயம் மிளிர்ந்து கொண்டிருப்பதையும் நாம் உணர்கின்றோம்.

எண்ணரிய பிறவிகளில் இனிதாகிய அரிதாகிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பதைக் கருத்திற் கொண்டு கோவில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம் என்றும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் அன்றொருநாள் அறிவுப் புயலாய் வீசி மறைந்த ஔவை மூதாட்டியின் மந்திர வாக்கியத்திற்கு மதிப்பளித்து ஆலய வழிபாடியற்றி வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் நாம் வானுறையும் தெய்விக நிலைக்கு உயருவோம். உயர்த்தப் படுவோம். என்பதை உணர்வோமாக.

## தொண்டு

தொண்டருடைய உள்ளத்தில் இறைவன் இருக்கின்றான். ஆகவே தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிது. தொண்டுக்குப் 'பணி' என்றும் பெயருண்டு. இறைவன் பணித்த வற்றைச் செய்யத் தெரிய வேண்டும். பணி செய்பவனுக்குப், பணிவு முக்கியம். பணி செய்பவன் பணிந்து போகின்றான். எல்லார்க்கும் பணிதல் நன்றாம். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் அப்பர் பெருமான். பணி செய்வது பெருமையல்ல. பணிசெய்து கிடப்பது தான் பெருமை. கிடப்பது என்ற சொல்லை நினைக்க, நினைக்க ஆணவத்தின் தலையில் அடி விழுந்து கொண்டே இருக்கின்றது. தொண்டனுடைய இலக்கணம் கிடப்பது என்ற சொல்லிலே தான் அடங்கியுள்ளது. "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என மணிவாசகர் வேண்டியது சிந்திற்கப்பாலது. நாரதர் ஒரு தொண்டர். கண்ணபெருமான், நீரும் ஒரு தொண்டர். என்று சொன்னபோது தான், நாரதருக்குத் தானும் ஒரு தொண்டர் என்பது தெரிய வந்தது. ஆகவே, நாமும் தொண்டு செய்வோம். தொண்டுக்குள் நம்மை மறைத்துக் கொள்வோம். ஆண்டவன் எம்மைத் தன் அருளுக்குள் அழைத்துக் கொள்வான். தொண்டு செய். பலனை எதிர்பாராதே. ஏன? பலன் அவனுக்குரியது. பலன் இறைவனுக்குச் சமர்ப்பணமாக வேண்டியதாகும்.

பக்தி நெறியுடன் கூடிய சமூகப்பணியே இன்று எமது சமயத்திற்குத் தேவை. காலத்தின் தேவையும் அதுவே. என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற தாரக மந்திரம் நமக்கும் நமது சமயத்திற்கும் உத்வேகத்தையும் உணர்வையும் ஊட்டுவதாக.

"ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும் சோதிக்க வேண்டாம் சுடர்விட்டுளன் எங்கள் சோதி". உணர்க; உய்க.

-திருச்சிற்றம்பலம்-

- "அண்மையில் பிரான்ஸ் நாட்டில் சுமார் 70% ஜனங்கள் மறுபிறப்புத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்."
- "சிலர் நினைக்கிறார்கள் அதர்மம் மூலம் தர்மத்தைத் ஸ்தாபிக்கலாம் என்று. இக்கருத்துப் பிழையானது."
- "சாத்விக குணத்தின் தன்மை என்பது சமரசம், பொறுமை, வாய்மை, நீதி முதலியன. இத்தன்மையுடைய உணவு மரக்கறிவகை. ராஜஸ தன்மை என்பது பேராசை, பொய்மை, பொறாமை முதலியன. இதனுடைய உணவு காரம், வெங்காயம் அளவுக்கு மீறிய வகையான உணவுகளின் தேவை. தாமஸ குணம் என்பது மிருகத் தன்மை. இத்தன்மை உடைய உணவு மாமிசம்."
- "இந்துக்கள் தமது புனித மதத்தை ஒரு மலிவான விஷயமாக ஒருபோதும் மதிப்பிட வேண்டாம்."

- சுவாமி தந்திரதேவா -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# நமினைச் சித்தரும் நவநாத சித்தரும்

தமிழ்நாவலர்
**க. இ. க. கந்தசுவாமி**
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

உலக மக்கட் குலம் வாழ்வாங்கு வாழ்ந்து இம்மை, மறுமைப் பயன்களை அடைய வழிவகுத்தவர்கள் பலவகையினர் ஆவர். இவர்களுள் சித்தர் என்பவர்கள் மிக உயரிய நிலையில் உள்ளவர்கள், சிந்து – அறிவு; ஞானம், இவர்கள் மெய்ஞ்ஞானம் உள்ளவர்கள்; ஆதலின் சித்தர்கள் என்னும் பெயர் பெற்றனர். சித்து என்னும் சொல் நாளடைவில் அதி அற்புதச் செயல்களைக் குறிப்பதாயிற்று. இத்தகைய ஆற்றலை இவர்கள் பெற்றிருந்ததினால் இப்பெயர் இவர்களுக்கு வழங்குகிறது.

சித்தர்கள் உயர்யோக ஞான நெறிகளில் நின்றவர்கள். உயர் அறிவாற்றலும் அருளாற்றலும் உள்ளவர்கள். உயிர், உடல், அண்டவெளி ஆகியவற்றை ஆராய்ந்து உயர் உண்மைகளை வெளிப்படுத்திய வர்கள். "உடம்பார் அழியில் உயிரார் அழிவர்; உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே" எனும் கோட்பாடு உள்ளவர்கள். இதனால் உடல் ஓம்பும் நுண்ணிய மருத்துவ முறைகளை வெளிப்படுத்தினர். அண்டத்து இறைவனை உடம்பினுள் கண்டவர்கள். இதனால் உண்முக வழிபாட்டையும், உயிர் ஓம்பும் முறைகளையும் வெளிப்படுத்தியவர்கள். இவற்றின் பேறாகச் சேய்மை நிகழ்வை அறிதல், வான்வெளி ஏகல், உடல்விட்டு உடலுட் புகுதல், இறந்தவர் உயிர்பெறச் செய்தல், பிறர் உளநிலை அறிதல், திடீரெனத் தோன்றி மறைதல் முதலாய அதிஅற்புதமான எண்வகைச் சித்திகளை உலகிற்கு அறிவுறுத்தியவர்கள்.

சித்தர்கள் தாம்பெற்ற உயர் அனுபவமுறைக ளையும் கோட்பாடுகளையும் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். இப்பாடல்களில் உடல், உயிர் ஓம்பும் முறைகளும், இறையியல் உண்மைகளும் தெளிவாக உள்ளன. இப்பாடல்கள் சித்தர் பாடல்கள் என்னும் நூலாக வெளிவந்துள்ளன. இந்நூல் உலக மக்கட் குலம் பிறவாப் பெருநிலைக்கு நெறிப்படுத்தும் உயர்நூல். சித்தர்கள் உயர் அருளாளர், உலக மக்கள் அனைவராலும் போற்றப்பெறுகின்றன. சித்தர் பாடல்கள் உயர் ஆகமநூல்.

உலகத் தொடக்க காலத்தில் இருந்து சித்தர்கள் இருந்து வருகிறார்கள். அனாதிநாதர், ஆதிநாதர் முதலாய நவசித்தர்கள் உலகத் தொடக்க காலத்தில் தோன்றி உலகை இடைக்காலத்தில் திருமூலர், யோகர், பாம்பாட்டி, குதம்பை முதலாய பதினெண் சித்தர்கள் தோன்றினர். இவர்கள் சித்தர் பரம்பரையையும், சித்தர் பெருமைகளையும் உலகில் நிலைபெறச் செய்தனர். இவர்களது சமாதித் தலங்கள் பாரதநாட்டில் உயர்ந்த திருத்தலங்களாக உள்ளன. தமிழை நெறிப்படுத்திய அகத்தியரும் ஒரு சித்தரே. இதனால் தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளாக இன்னும் இளமையோடு விளங்குகின் றது. தாயுமானவரும் ஒரு சித்தரே. இக்காலத்தும் சித்தர்கள் இலைமறை காயாக உள்ளனர்.

தமிழ்நாட்டிற் போலவே ஈழநாட்டிலும் சித்தர்கள் தொடக்ககாலம் முதல் இருந்தனர். தொடக்ககால, இடைக்காலங்களில் இந்நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் பற்றி அறிதற்கில்லை. இப்போது நிலைபெற்று விளங்கும் சித்தர் பரம்பரை ஆங்கிலேயர் காலத்திற் தோன்றியது ஆகும். பெரும்சித்தர் மூவர் தமிழகத்தில் இருந்து இங்குவந்து நாட்டின் முப்பெரும் பகுதிகளிற் தங்கினர்.

ஒருவர் கடையிற்சுவாமி. இவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார். இவரது நிலையம் நீராவியடியில் உள்ளது. இன்னொருவர் ஆனைக்குட்டிச்சுவாமி. மட்டக்களப்பில் இருந்தவர். இவரது நிலையம் காரைதீவில் இருக்கிறது. இன்னொருவர் நவநாதசித்தர். இவர் மலையகப் பகுதியில் இருந்தவர். இவரது நிலையம் நாவலப்பிட்டியில் இருக்கிறது. கொழும்பு முகத்துவாரத்தில் ஆனைக் குட்டிச்சுவாமி நிலையம் உள்ளது. கடையிற்சுவாமி பரம்பரையில் வந்தவர்கள் பலர். அவர்களுள் ஒருவர் உலகப்புகழ் பெற்றுள்ள யோகர் சுவாமி. இன்னொருவர் நயினை சித்தர். இவர் வரலாற்றுப் பெருமையும், ஈழத்தின் சிறந்த சக்தித் திருத்தலமாகவும் உள்ள நயினாதீவில் அவதரித்தவர். நயினைச் சித்தர் ஞானஉருவினர். எப்பொழுதும் தியான நிலையில் இருப்பார். அரிதாகச் சில சொற்கள் சொல்வார். இவர் சொற்கள் தெய்வ அருள் உரைகள், வெண்ணீறணிந்த திருமேனியும் சடைமுடியும் உள்ளவர். குழந்தை போன்ற உள்ளத்தவர். அனைவரிடத்தும் அன்பு உள்ளவர். நயினை அம்பிகை ஆண்டுத் திருவிழாக் காலத்தில் அங்கு தங்கியிருந்து அன்பர்களுக்கு அருளுரை வழங்குவார். இதனால் இவர் அனைவரும் அறிந்த ஞானகுருவாக விளங்கினார்.

இவர் அன்பர்களின் வேண்டுதலை ஏற்று யாழ்ப்பாணத்தில் பல ஊர்களுக்கும் சென்று அன்பர்களின் இடங்களிலும் திருமடங்களிலும் தங்கி, சைவநெறியைப் பரப்பி, அன்பர்களை நன்னெறிப்படுத்தி னார். இவர் காலத்தில் பண்டைப் பெருமை பெற்ற இணுவில் என்னும் ஊரில் வடிவேற்சுவாமி என்பவர் இருந்தவர். இவர் பெரும் சித்தராக விளங்கிய பெரிய சந்நியாசியாரின் அருள்பெற்றவர். இவர் ஒரு துறவி. மகாதேவ சுவாமிகளின் சீடர். பல இடங்களில் சைவச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், திருமுறைப் பண் வகுப்புகள் நடத்தியும் தமது வதிவிடத்தை பரமானந்தவல்லி ஆச்சிரமமாக அமைத்தும் சைவநெறியைப் பரப்பியவர். கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தை அமைத்தவர். இவர் நயினைச் சித்தரின் உத்தம அன்பர்.

வடிவேற்சுவாமிகளின் பரமானந்தவல்லி ஆச்சிரமத்தில், ஈழத்திலும் தமிழகத்திலும் இருந்த துறவிகளும் பெரியார்களும் தங்கிச்செல்வது வழக்கம். விபுலாநந்த அடிகள், சுவாமி இராமதாசர் முதலியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். நயினைச்சித்தர் இணுவில் பரமானந்த வல்லி ஆச்சிரமத்தில் இடையிடையே வந்து தங்குவார். இதனால் இவ்வூரவர்களும் அயல் ஊரவர்களும் சுவாமிகளைத் தரிசித்துப் பயன்பெற்றனர். இவ்வாறு இவர் இங்கு தங்கும்போது ஊரின் எல்லைப் புறத்தே உள்ள காரைக்கால் சிவாலயம் உள்ள இடத்தில் பகல்பொழுது தங்குவார். சுவாமிகள் நடுவண் எழுந்தருளி இருக்க நாற்புறமும் அன்பர்கள் சூழ இருப்பார். சுவாமிகள் இடையிடையே அருளை வழங்குவார். அன்பர்கள் வழங்கும் நிவேதன உணவுப் பொருள்களைச் சுவாமி அனைவர்க்கும் வழங்குவார். ஒருமுறை அயல் தோட்ட அன்பர் ஒருவர் மரவள்ளிக் கிழங்கு அவித்து நிவேதனமாகப் படைத்தார். சுவாமிகள் இதுதான் சிறந்த அமுதெனத் தாமும் அருந்தி, அனைவர்க்கும் வழங்கினார்.

இணுவில் காரைக்கால் பல்வகை மரங்களும் அடர்ந்து வளர்ந்து பெருஞ்சோலையாக இயற்கை எழிலோடு விளங்கியது. சூரியஒளி பகல்பொழுதில் நிலத்தில் படாதபடி மரங்கள் உள்ள மிக அமைதியான இடம். துறவிகளும் பெரியார்களும் இங்குவந்து தங்கிச்செல்வர். பரணி புகழ் சோழப்பேரரசன் குலோத் துங்க சோழனின் படைத்தலைவனாக வட இலங்கையை வெற்றிகொண்ட கருணாகரத் தொண்டமான் இக்காரைக்காலில் சிலகாலம் தங்கியிருந்தான் என இராசநாயக முதலியார் எழுதியுள்ளார். இங்கு ஒரு பழைய சிவாலயம் உண்டு. இதனை அமைத்தவர் பெருஞ் சித்தர். பெரிய சந்நியாசியார். இவர் சமாதியடைந்த பின் இத்தலம் நன்கு கவனிப்பாரின்றிச் சிதைவடைந்து இருந்தது.

நயினைச் சித்தர் இங்கு தங்கியிருந்தபோது இச் சிவாலயத்தில் நித்தியபூசை நிகழவேண்டுமென அருளிச்செய்தார். இதனை வடிவேற்சுவாமிகளும் அன்பர்களும் ஏற்று நாள்தோறும் ஒருநேரப் பூசை நிகழ ஒழுங்கு செய்தனர். பல ஊரவர்கள் இவ் ஆலய வளர்ச்சிக்கு உதவினர். உடற்பிணியும், உயிர்ப்பிணியும் நீங்கும் திருத்தலமாக இன்று புகழ்பெற்று விளங்குகின்றது. தெய்வ அருள்பெற்ற அம்பலவாண சுவாமிகள் இங்கு தங்கியிருந்து இத்திருத்தல வளர்ச்சிக்குப் பெரும்பணி

செய்துள்ளார். இங்கு மூலமூர்த்தியாக உள்ள சிவலிங்கம் மிகப் புராதனகால அமைப்பாக உள்ளது.

நயினைச் சித்தர் இணுவில் காரைகாலில் தங்கியிருந்த போது ஒருநாள் அவரைத் தரிசிக்கச் சென்றேன். அப்போது ஆறாம் வகுப்பு மாணவன். துறவிகளைத் தரிசிக்கும் ஆர்வம் இளமையில் என்னிடம் இருந்தது. அயல் மாணவர்களும் என்னோடு அங்கு வந்தனர். தூரத்தே நின்ற என்னைச் சுவாமிகள் தம்முன் அழைத்து "கல்வியில் வல்லவன் ஆவேன் எனவும் உயர்நிலைக்கு வருவேன் எனவும் பணிகள் பல செய்யவேண்டியவன்" எனவும் அருள் செய்தனர். தங்களுக்கும் ஏதாவது சொல்லும்படி உடனிருந்தவர்கள் கேட்டபோதிலும் அவர்களுக்கு எதுவும் சொல்ல மறுத்துவிட்டார். நயினைச் சித்தர் எனக்கு வழங்கிய அருளுரை ஊரில் பரவி எனக்கு பெருமதிப்புப் பெற்றுத் தந்தது. நயினைச் சித்தர் எனக்கு அருளிய அருளுரை கள் என் வாழ்வில் பலன் தந்துள்ளன. இதனால் நயினைச்சித்தரை எனது முதல் ஞானகுருவாக அகத்தே போற்றி வருகின்றேன். நயினைச்சித்தர் இந்நாட்டில் இந்நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் ஞானியும் சித்தரும் ஆவார்.

நவநாத சித்தரின் பெருமைகளைச் சமய ஆத்மிகத்துறைகளிலும் சமுதாயப்பணிகளிலும் வழிகாட் டியவரும் எமது உறவினரும் ஆகிய வடிவேற்சுவாமி அவர்கள் எனக்குப் பலமுறை சொல்லியுள்ளார். வடிவேற் சுவாமிகள் நாவலப்பிட்டித் தோட்டத்து உரிமையாளர் ஒருவரோடும் ஆத்மஜோதி நிலையத்தோடும் சமய ஆத்மிகப் பணிகளினால் மிகத் தொடர்பு உள்ளவர். நவநாதசித்தர் பெரும்ஞானியும் பெருஞ்சித்தரும் ஆவர். இவர்செய்த அற்புதங்கள் பல. இந்நாட்டின் வடபால் பெரியகடையிற் சுவாமியும், கிழக்கில் ஆனைக்குட்டிச் சுவாமியும், தென்மேற்குப் பகுதியில் நவநாத சித்தரும் ஆத்மிக ஞானத்தைப் பரப்பியவர்கள் ஆவர். இந்நாட்டிற்கு உயர்வும் சிறப்பும் தருவதாகும்.

நவநாதசித்தர் சமாதிநிலையம் சிறந்த சிவாலயமாக விளங்குவது பேருவகை தருகிறது. தமிழக த்தின் உயர்வுக்குச் சித்தர்களின் அருளாற்றல் காரண மாதல் போல இந்நாட்டின் உயர்வுக்கு இம்முப்பெரும் சித்தர்களின் அருளாற்றல் வழிவகுக்கும். 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்பது தொல்காப்பியம். உயர்ந்தோர் பெரும் சித்தர்கள். 'உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து 'என்பத திருக்குறள். 'அச்சாணி அன்னார்' எனக் குறிப்பிடப்பெறுபவர்களும் சித்தர்களே ஆவர்.

நவநாதசித்தர் சிவாலயக் குடமுழுக்கு நிகழ்வதும் இந்நிகழ்வுக்காக 'நவநாதம்' சிறப்புமலர் வெளிவருவதும் போற்றத்தக்க ஆத்மிகப் பணிகள். இப்பணிகளில் பங்கேற்பவர்கள் அனைவரும் நவநாத சித்தரின் அருளுக்கு உரியவர்கள். நாட்டுமக்கள் அனைவரும் துன்பங்கள் நீங்கி நலமும் வளமும் பெறவும் நாட்டில் நல்லாட்சி விளங்கவும் நவநாத சித்தர் அருளை நாளும் வேண்டுவோமாக. நவநாத சித்தர் நிலையம் சிறந்த சமய ஆத்மிக சமுதாயப் பணிகளைச் செய்து இந்நாட்டிற்கு வழிகாட்டுவதாக. 'நின்னருள் வேண்டுகின்றோம் எங்கள் நீதியும் தருமமும் நிலைப்பதற்கே' என மகாகவி பாரதியார் வேண்டுதல் போல நவநாத சித்தரை நாங்கள் அனைவரும் வேண்டுதல் செய்வோம். 'வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்' என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு.

–திருச்சிற்றம்பலம்–

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# நயினை – ஸ்ரீமத் முத்துலிங்கசுவாமி அவர்களின்

# திவ்விய சரித்திரச் சுருக்கம்

*(இப்பெரியாரின் தோற்ற வரலாற்றை எமக்கு எட்டிய அளவில் சுருக்கமாக இங்கு வரைந்துள்ளோம்.)*

இவரை நயினாதீவு சுவாமியார் என்றும் முத்துக் குமாரசுவாமியார் என்றும் சொல்வர். ஈழமண்டலத்தில் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாய் விளங்கும் ஸ்ரீ நாகபூஷணி அம்மை கோயில் கொண்டு எழுந்தருளி அருள் புரியும் நயினையம்பதியிலே முத்துலிங்கசுவாமி அவர்கள் ஓர் அவதார புருஷரென சிவபக்தி அடியார் பக்தி மேம்பட்ட திரு. ஆறுமுகம் அவர்களுக்கும் பார்வதி அம்மையாருக்கும் தபோதிருக்குமாரராய் இக்கலியுகத் திலே சிப்பிக்குள் முத்துப்போல் வந்துதித்தார்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க இவர் பால்ய வயதிலே பக்தி மார்க்கத் தில் ஈடுபட்டிருந்தார். தம் பன்னிரெண்டாம் வயதிலேயே இவ்வுலக பந்த பாசங்களை வெறுத்து மாயையில் அமிழ்ந்தாமல் யாத்திரா தரிசனங்களில் ஈடுபட்டுப் பின் யோகசாதனைகளிலும் திறன் அடைந்து ஐம்புலனையும் ஒடுக்கி பஞ்சேந்திரியங்களையும் ஜெயித்து நைஷ்டிகப் பிரமச்சாரியராய் யோகமுத்திஞான நிலையடைந்து பச்சிளங் குழந்தை போல் வாழ்ந்து வந்தார்.

குலதெய்வமாகிய ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருஞான அருள் ஒளியை மிகச் சிறந்த பிராயத்திலேயே பெற்றவர். திரிகாலமும் உணர்ந்த முற்றும் துறந்த முழு ஞானியராய் இருந்தும் தம் அரும்பெரும் பக்குவ நிலைகளை உலகத்தார்க்குக் காட்டாமல் பாண்டவர் அஞ்ஞாத வாசம் செய்தது போல் ஏறக்குறைய இருபது வருஷ காலமாக யாழ்ப்பாணத்திலும், நயினையம் பதியிலும், கோயில்களிலும், அடியார் இல்லங்களிலும் சாந்தமே வடிவமாய் அடியார்க்கு நல்லறிவை ஊட்டியும், அவர்களின் இன்னல்களை நீக்கி மன ஆறுதலை அளித்தும், சைவசமயத்தின் உண்மையையும் பஞ்சாட்ச ரத்தின் மகிமையையும் விளக்கியும் சைவ ஆகம புராணங் கள், வேதசாஸ்திரங்கள் முதலியவற்றின் உண்மைப் பொருள்களை விரித்துரைத்தும் சீவராசிகளிடத்தில் தாயன்புடையராய் திருவருள் புரிந்து கொண்டிருந்தார்.

இவர் தம்முடைய அவதாரம் என்ன அம்சம் பொருந்தியதென்று அடியார்கள் எவரும் கண்டுபிடிக்க முடியாத வண்ணம் பலவிதமான அம்சங்களோடும் காட்சியளித்து வந்தார். இவருடன் நெருங்கிப் பழகிய அடியார்களுக்கே அவரின் மகிமையும் திருவருட் செயல்களும் ஓரளவு விளங்கியிருக்கும். அவரின் திருவருட் செயல்கள் எண்ணிறந்தன. நயினையம் பதியில் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் உற்சவ காலங்களில் வரும் சனங்களுக்குப் பெரும் அன்னதான கைங்காரியத் தைச் செய்வித்தார். அம்பாள் தீர்த்தம் கொடுப்பதற்கும் சனங்கள் வசதியாய் ஸ்நானம் செய்வதற்கும் வாய்ப்பாக கங்காதரணி என்னும் சங்கம தீர்த்தக்கேணி ஒன்று உண்டாக்குவித்தார். வைரக்கல் கொண்டு கட்டுவேலை களும் செய்யப்பட்டிருக்கிறது.

யோகம் செய்வதில் சிவஞானிகள் எவரும் ஈடாகமாட்டார்கள். குழந்தைப் பிள்ளைகளுடன் சிரித்து விளையாடிக் கொண்டிருப்பார்; அடியார்களுடன் சம்பாஷணை செய்துகொண்டிருப்பார்; ஆனால் உள்ளீடாக இரவு பகல் அணு வளவேனும் தவறாது யோகம் செய்து கொண்டே இருப்பார். நித்திரையிலும் யோகம் செய்வார். அவர் வாயுவேகம் மனோவேகமாக யோகம் செய்தபடியால் கூடிய சீக்கிரத்தில் வீட்டுப்பேற்றை அடைந்தார். ஸ்ரீ நாகபூஷணி அன்னையின் திருவருட்சக்தியின் வலிமையினால் தன்னுடைய மனோசக்தியை நிலைநிறுத்தி சகல

வினைகளையும், யோகாக்கினியால் பஸ்மீகரித்து சுத்த ஸ்புடமாக்கிய தங்கமேயானார். 1949ஆம் ஆண்டு தைமாதம் 26ஆம் திகதி பிரதோஷ காலமும் உத்தராட நட்சத்திரமும் பொருந்திய தினமாகிய புதன் கிழமை இரவு 12 மணியளவில், சிவலிங்கப்புளியடி என்னுமிடத்தில், அடியார்களின் அன்பு நிறைந்த நீண்ட பேரொளியாகிய குருநாதர் அவர்களின் ஆத்மஜோதி சிவஜோதியுடன் இரண்டறக் கலந்து பரிபூரணமடைந்துவிட்டது.

பேசுந்தெய்வமாயும் கண்கண்ட தெய்வமாயும் காட்சி அளித்துக்கொண்டிருந்த குருநாதர் அவர்களின் திருமேனியை அவருடைய முன்னேற்பாடான கட்டளைப்படி நயினையம்பதியிலுள்ள காட்டுக் கந்தசுவாமி கோயில் ஆதிமூலத்திற்குப் பின்னால் சொல்லப்பட்ட விதிமுறைப்படி அடியார்கள் கொண்டுபோய் பீடம் அமைத்தார்கள். பின் அச்சேத்திரத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருள் புரியும் சோமாஸ்கந்த மூர்த்தியை எழுந்தருளப் பண்ணி இருக்கிறார்கள். அம் மூர்த்திகளை குருநாதன் அவர்கள் நிஷ்டை நிலையடையப் பத்து வருஷ காலத்துக்கு முன்னரே தயாரித்து வைத்திருந்தார்கள். அவர்கள் பரிபூரணமடைவதற்கு முன்னரே ஓர் அடியாரிடம் தம் நிஷ்டை நிலையம் பற்றிய விபரங்களை அறிவித்திருந்தார்கள். அதன்படி எல்லாம் செவ்வனே நடைபெற்றன.

அன்பர்களனைவரும் அம்பாள் திருவருளால் நயினையம்பதியில் உள்ள கங்காதரணி என்னும் தீர்த்தக் கரைக்குச் சென்று தீர்த்தமாடி உங்கள் பாவங்களைத் தீர்த்து முத்துலிங்கசுவாமி அவர்களின் சமாதி ஷேத்திரத்திற்குச் சென்று அதில் எழுந்தருள் புரியும் சோமாஸ்கந்த மூர்த்தியின் கிருபா கடாட்சத்தைப் பெற்று, அம்பாளின் திருவருளையும் பெறுவீர்களாக.

தகவல்
சைவப்புலவர்
நா. விஸ்வலிங்கம்

–திருச்சிற்றம்பலம்–

- "இந்துக்கள் விக்கிரக வழிபாடு மேற்கொள்கிறார்கள். இது அவர்கள் மனத்தை ஒருமுகப்படுத்தும் கருவியாக விளங்குகிறது."
- "எல்லாத் தர்மங்களும் சிவனின் அனுக்கிரகமாகும்".
- "இந்து சமுகத்தில் பெரும் விழிப்புணர்ச்சி தேவைப்படுகிறது."
- "இந்துக்கள் ஏனைய மதத்தவர்கள் சார்பாக பிரச்சாரம் செய்யவேண்டும் என்னும் கருத்து பிழையானது. சமணர்கள் சைவமதத்தை அழிக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அதே நேரத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் எல்லா மதமும் சமம் என்று சொன்னார்களா? இல்லை. அவர்கள் தீவிரபிரசாரம் செய்தார்கள். சைவத்தைக் காப்பாற்றினார்கள். சமயாசாரிகளின் முயற்சி காரணத்தால், சைவம் தென்னாட்டில் சிறந்த முறையில் தொடர்ந்து விளங்குகின்றது."
- "சமுதாயம் பாவம் செய்யும், பேராசைப்பட்ட காலங்களில் யுத்தம் இடம்பெறலாம். ஆயினும் அத் துரதிஷ்ட நேரங்களில் சில அடிப்படைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. ஸ்ரீமத் பாகவதத்தில் கிருஷ்ண பரமாத்மா யுத்த தர்மம் பற்றி உபதேசிக்கின்றார். 'நல்லொழுக்கமுடைய வீரன் குடிமயக்கத்தில் உள்ளவன், பைத்தியக்காரனை, முட்டாளை, உறக்கத்தில் இருப்பவனை, ஒரு குழந்தையை, ஒரு பெண்ணை, ஒரு அகதியை, ஒரு பயமுற்றவனைக் கொலை செய்யமாட்டான்."

– சுவாமி தந்திரதேவா –

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சீவன் சிவலிங்கம்

கவிஞர். முருகவே பரமநாதன்
(ஆழ்கடலான்)
கனடா

பச்சைப்பசேலென்ற தேயிலைத் கொழுந்துகள், இடையே மட்டமாய் வெட்டித் துளிர்த்த மரங்கள், உயரிய விருட்சங்கள்; வாழை, கமுகுகள். எங்கும் மலர்ச் செடி கொடிகள், பூக்கள் காடாய் மலர்ந்திருக்கும் காட்சி, நெஞ்சிற் கனல் மணக்கும் வாசனை, வளைந்து, வளை ந்து செல்லும் வழிகள். குளு குளு வென்ற சுற்றாடல்; தண்மையும், சாந்தமும் தவழும் சிற்றோடைகளின் சிலுசிலுப்பு, சலசலப்பு அரும்பித்தவழும் அருவிகள், நீருற்றுகள், பீலிகள் செறிந்த இயற்கைப் பாங்கு, வற்றாத அசைவும், தடவலும் மேனிக்கும் மனதுக்கும் இதமளிக் கும் புத்துணர்வு, கூப்பிய கரம் போன்ற தாமரை மொட்டுக் கள், தண்ணீர் இரதம் போல் பாசடைகளில் உருளும் தத்துவக் காட்சி. வெகு தொலைவிலே நின்று பார்க்கத் தெரியும். கலசத்தோடு கூடிய அருள்மிகுசுப்பிரமணியர் ஆலயம். அதனருகே சற்றுமுன்னாடி, சமாந்தரமாய், வலப்பாரிசத்தில் அமைந்திருக்கும் நவநாத சித்தரின் அதிஷ்டான நிலையம். இதன் லிங்கம் வளர்ந்து வந்ததாகப் பலரும் சொல்கிறார்கள். அங்கே அடங்கி உறங்குபவர்தான் அநுபூதிச் செல்வர் நவநாத சித்தர். நித்திய பூஜை நடைபெறுகிறது. இது சித்தர் என்பதற்கு அடையாளம்.

மகான்கள் உடலம் விட்டால் இருத்தியும், சாய்ந்தும், கிடையிலும் சமாதி வைப்பது வழக்கம். என்று மழியா அந்தமிலின்பம் பெற்று, பேரின்பப் பெருவாழ்வு எய்திய நவநாத சித்தர் போன்ற மாதவச் சிவஞானிகள் இறைவனிடம் எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தவர்கள். அர்ப்பணஞ் செய்தவர்கள், ஜீவபோதம் இவர்களுக்கு இல்லை. நான் எனது என்றநிலை, காம குரோத மத மாற்சரியங்கள் தெரியாதவர்கள். முற்றும் துறந்த முனிவர்கள். பழுத்த பழங்கள். யோக வேள்வியிலே தம்மைப் புடம் போட்டவர்கள். சுடச் சுடரும் பொன்போல ஒளிவிடுபவர்கள். உடலும் பொன்னொளிர் மேனியே. எங்குமவனைப் பார்த்து, பரமானந்தப் பழங்கடலிலே தோய்ந்து வெளியேறியவர்கள். ஓசையால் உணர்வு பெற்றவர்கள்; பற்றொழிந்த வெறும் பூஜ்யங்கள். பூரணானந்தம் பொங்கி வழியும் உடல் அவர்களது.

"கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்"

திருமந்திரம் 266

"ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி"

மேலது 273

'ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்கு வதில்லை நமனு மங்கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்று விட்டோர்க்கே'

மேலது 1624

'என்னா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணா ரமுதினைக் கண்டறி வாரில்லை
உண்ணா டிக்குள்ளே ஒளியுற நோக்கினால்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே'

மேலது 603

எனத் திருமூலர் கூறும் வாசகத்துக்கு வாச்சியமாய் நின்றவர்களுள் ஒருவர் நவநாத சித்தர். பூவினிற் கந்தம் பொலிவது போலவே, சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது

இவருக்கு. பசுவாகிய ஐம்பொறிகளும் பாலாய்ச் சொரிந்தன. மேய்ப்பானும் அவரே. வெறியுமடங்கின, அவை ஐம்புலன்கள். உள்ளம் விட்டு ஓரடி நீங்கா இறைவனை, அறிய முடியாதிருக்கும் ஜீவர்களுக்கு சுவாமிகள் ஒரு வழிகாட்டும் ஒளிவிளக்கு. கலங்கரை விளக்கம். வாழ்ந்து காட்டியவர். வையம் வளம்பெற. இவர்கள் அமைதியானாற் பரகாயம் புகுவதில்லை. தம்மை உணர்ந்து, தம்மைப் பற்றிப் பிறர்க்கு சொல்லாமற் சொல்வார்கள்.

'ஊனமின் ஞானிநல் யோகி யுடல் விட்டால்
தானற மோனச் சமாதியுள் தங்கியே
தானவ னாகும் பரகாயஞ் சாராதே
ஊனமின் முத்தராய் மீளார் உணர்வுற்றே'

திருமந்திரம் 1906

இவ்வடிப்படையிலே இவர்களின் காயத்தை அவர்கள் வாழ்ந்த இல்லம், வீதியோரம், குளக்கரை, நதிக்கரை, பூஞ்சோலை; நகரின் தூய்மையான பகுதி, மலைச் சாரல் முதலிய இடங்களில் குகை (குழி – கட்டம்) செய்து, பக்குவமாக விதிப்படி கட்டி (முக்கோணம் – நாற்கோணம்) சமாதி வைப்பது வழமை – முறைமை.

'தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூமி
உன்னருங் கானம் உயர்ந்த மலைச் சாரல்
இந்நிலந் தான்குகைக் கெய்தும் இடங்களே'

திருமந்திரம் 1915

எல்லா அம்சங்களும், பொருந்திய, இதமான, இயற்கைச் சூழலிலே, நவநாத சித்தரின் சமாதி ஒடுக்கம் நிறைவேற்றப் பட்டுள்ளமை குயின்ஸ்பரிக்கே உள்ள தனிச் சிறப்பு. இச்சூழலிலே ஆத்மிக அலைவீசுகிறது. உத்தம ஞானிகளின் அலைவீச்சு மற்றவர்களின்; ஆத்மிக சக்திக்கு ஒருமின்சூள் (TORCH) எனலாம். இச்சமாதியைத் தரிசிப்பவர்கள், வணங்குகிறவர்கள், அதைச் சூழ வாழ்பவர்கள், யாவருக்கும் குருவருளும் திருவருளும் கிடைக்கும், இச்சமாதியைப் பலர் தரிசிக்கிறார்கள். (கண்டி) இந்திய உதவித்தூதுவர் உயர்திரு அ. கறுப்பையா அவர்களைக் கவர்ந்த சமாதிக் கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

### நாமக்கல் கவிஞரும் நவநாத நாயகரும்

தமிழகத்தின் பாரதியுகத் தேசியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள். காந்தியுகக் கவிஞன் அவர். காவியப் புலவனாகவும், ஓவியக் கலைஞனாகவும் திகழ்ந்தவர். அவர் விடுதலைப் போராட்டத்தில் சிறைவாசம் செய்தவர். ஆராய்ச்சி வல்லுநர், குறளுக்குப் புத்துரை கண்டவர். அவனும் அவளும் அவரது சிறந்த காவியம். சிறையில் இருந்து விடுதலையானதும் ஓவியக் கல்வி நிலையம் ஒன்றை நாமக்கல்லில் அமைக்க ஆயத்தம் செய்து கொண்ட காலமது. (1933) ஒரு அன்பர் தாமாகவே உதவி செய்வதாக உறுதி அளித்திருந்தார். ஆனால் அவரது உதவி வேண்டியபோது தடைப்பட்டு விட்டது. மனமுடைந்த கவிஞர் நாவலப்பிட்டி குயின்ஸ்பரி (Ceylon) யில் உள்ள அருணாசலம் பெருமாளம்மாளின் இரண்டாவது மகன் (14.07.1933) எழுதிய கடிதத்தில் நவநாதர் சொப்பனத்தில் வந்து காட்சி கொடுத்த வரலாற்றை உள்ளத்தைத் தொட்டு எழுதி உள்ளார். அக்கடிதத்தில் "ஸ்ரீ நவநாத சித்தர் துணை" என முதலிற் சுவாமிகளுக்கு வணக்கம் சொல்லித் துவங்குகிறார்.

அன்று விடியற் காலையில் ஒரு ஆச்சரியமான கனவு கண்டேன். என்னவெனில் நான் முன்பின் பார்த்தறியாத சாமியார் எனக்கு முன்னே தோன்றினார். கறுத்த உருவமும், கந்தான ஒரு கோவணமும், வெகுகூரானமூக்கும், பித்துக் கொண்ட கூரியபார்வையும், நீண்டகைகளும், வெகு கட்டான உடல் உடையவராகவும் இருந்தார்". அவரை ஒரு பெரியவர் என்று நான் வணங்கினேன். உடனே அவர் "நீ கவலைப்படாதே, உன் பள்ளிக் கூடத்தை ஆரம்பித்துக் கொடுக்கப் போகிறவர்கள் நீ எண்ணி இருக்கிறவர்கள் அல்ல. உனக்கு நாள் வைத்துக் கொடுத்தவரும் அல்ல, அதை ஆரம்பித்துக் கொடுக்கக் கூடியவர்களும் அல்ல, இன்னும் அதற்கு வேண்டிய உதவி தேடிக் கொடுக்கக் கூடியவர்களும், நீதேடிப் போன யாருமல்ல. உன்னைத்

தேடி அவர்கள் வரப் போகிறார்கள். அவர்கள் இடத்தில் நான் சொன்னதாகச் சொல்லி, உன் பள்ளிக் கூடத்தை ஆரம்பம் செய், மற்நது நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றார். நான் சுவாமி எனக்கு வலியவந்து உதவப் போகிறார்கள் என்று தாங்கள் சொல்லுகிறவர்கள் யார்? என்றேன். இதற்குச் சாமியார் "அவர்களை உனக்கு அதிகம் தெரியாது, அவர்களுக்கு உன்னைத் தெரியும், நீயும் பார்த்திருக்கிறாய் இன்னும் இரண்டு நாளைக்குள் உன்னைப் பார்க்க வேணும் என்று, வேறு ஒரு நோக்க மும் இல்லாமல் அவர்களாக இரண்டு பேர்வருவார்கள், நான் சொல்லுகின்றவர்கள் அவர்கள்தான் என்று நீ அறிந்து கொள்வாய்" என்றார்.

அவர்கள் எங்கே இருக்கிறார்கள் அதையாவது சொல்ல வேண்டும் என்றேன். சுவாமி அதற்கு அவர்கள் "சமீபத்தில் உள்ளவர்கள் தான். ஆனால் அவர்கள் தெற்கே உள்ளவர்கள்" என்றார். தெற்கே எந்த ஊர் என்றேன். "தெற்கேயா - சிலோன் கண்டி என்று வைத்துக்கொள்ளேன்" என்றார். எனக்கு அவர்கள் தெரிந்தவர்களா; அதற்கு அவர்கள், அதற்குத் தான் வந்தவர்கள் என்றார். நான் அதை எப்படித் தெரிந்து கொள்வது என்றேன். அவர்கள் வந்த உடன் "நீயாக அறிந்து கொள்வாய் அவர்கள் என்னைப் பற்றிச் சொல்லுவார்கள். நான் சொன்னதை அவர்களிடம் சொல்" என்றார். அவர்கள் எப்போது வருவார்கள் என்றேன். "நாளைக்குக் கடிதம் வரும்" என்றார். எதற்கும் பயப்படாதே அவர்களால் உன்காரியம் கைகூடும் என்று அவர் சொன்ன உடன் நான் விழித்துக் கொண்டேன். இந்தச் சொப்பனத்தின்படி தபால் வந்தது. அதில் ஒரு காட் நம்ம அறிவானந்த சுவாமிகள் எழுதி இருந்தார். அதில் நண்பர்கள் ஸ்ரீ கோவிந்த சாமியும், ராமையாவும் தங்களைப் பார்க்க வேண்டும் என்று 11 ஆம் திகதி அவ்விடத்துக்கு வருகிறார்கள் என எழுதப்பட்டிருந்தது.

இக்கடிதப்படி அன்பர்கள் வந்தார்கள். கவிஞரின் நோக்கம் நிறைவேற ஆவன செய்வதாகவும் சொன்னார்க்ள என்ற செய்திகளை நாமக்கல் கவிஞர் நாவலப்பிட்டி குயின்ஸ்பரி அவர்களுக்கு பிள்ளைக்கு எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார்.

## நாதமும் நாத சித்தரும்

"கடலின் பாடல் முடிவது கடலிலா? அல்லது கேட்பவர்களின் இதயங்களிலா?

(கலீல் கிரான்)

இருளிலே பிடித்து நடப்பதற்குக் கைவிளக்கு வேண்டும். இது போலவே வெளிச்சம் இருந்தாற்றான் மனிதனுக்கு எல்லாமே விளங்குகிறது. இந்த வெளிச்சத்துக்கு உரிய மூலம் எங்கே இருக்கிறது.

பகலிலே சூரிய ஒளியின் உதவியால் மனிதன் தமக்கு முன்னால் இருப்பது எனன் என்பதை அறிந்து கொள்கிறான். உதவியால் மனிதன் செயற்படுகிறான். சந்திரனும், சூரியனும் இல்லாத போது என்ன நடக்கிறது. புமியில் உள்ள நெருப்பின் உதவியால் வெளிச்சத்தை உண்டாக்கி, தன் வாழ்வை மேற்கொள்கிறான். இம்மூன்றும் இல்லாத இடத்தில் வாக்கில் இருந்து வரும்ஒலி, ஒளியாய்ப் பயன்படுகிறது. வாக்கு வெளிச்சமாக, ஒளியாக எப்பப் பயன்படும்? பெரியவினா? இரவிலே மின்சாரம் நின்று விடுகிறது. ஒரு வீட்டிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேச்சு ஒலியைக் கொண்டு மனித இனம் செயற்படுகிறது. இருட்டிலே போகும் போது - யாரோ ஒருவர் வரும் அசுகை தெரிகிறது. யார் என்று கேட்கிறோம். வருவர் "நான் இராமன்" எனப் பதில் அளிக்கிறார். அவரது வாக்கில் இருந்து வெளிவந்த சொற்களைக் கொண்டு நாம் விளக்கம் பெறுகிறோம். இப்படியானதே. எனவே ஒலியும் ஒளியாய் அமையும் நிலை இது. இந்த நான்கும் (சூரியன் - சந்திரன் - நெருப்பு - ஒலி) இல்லாத போது ஆன்மாவின் ஒளியே உண்மையானது. அது ஒன்றே மனிதன் இயங்குவதற்கு உதவியாய் உள்ளது. அது ஒன்றே மனிதன் இயங்குவதற்கு உதவியாய் உள்ளது. பிரபஞ்சத்தைக் காட்டும் புற ஒளி அவை. அவற்றால் தன்னை அறியமுடியாது. "உள்ளொளி பெருக்கி" என்றார் மாணிக்க வாசகர். "இருட்பிழம்பற எறிந்தெழு ந்த சுடர்மணி விளக்கின் உள்ளொளிவிளங்குந் தூயநற் சோதியுட் சோதீ" என்கிறார் திருமாளிகைத் தேவர். தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற சோதி அது. எனவே, ஐந்தாவது ஒளி ஆன்மா. ஆன்மாவுக்கு

ஆன்மாவாய் இருப்பது பரமாத்ம ஜோதி. இறைவன் எனப்படும் பரஞ்சோதியை (பரமாத்ம ஜோதியை) உணர்ந்து நாதவடிவாய் அனுபவித்தவரே நவநாத சித்தர்.

ஞானயோகியின் உணர்வு விரிந்து, ஒவ்வொரு பரிமாண வட்டத்துக்குள்ளும் புகுந்து போகும். அப்படிப்போகும் போது, அந்த வட்டங்கள் விரிந்து கொண்டே இருக்கும். அதற்கு அப்பாலும் விரிந்து எல்லயற்ற புலனாகிக் கொண்டே போகும். ஞான யோகிகளின் அறிவு முதலிற் சிறிய விதையாகவே இருக்கும். அதிலிருந்து எல்லையற்ற அறிவு அகன்று அகன்று விரிந்து விரிந்து வெளிக்குள், வெளியில் சென்று கொண்டே இருக்கும். எல்லையற்ற அந்த அறிவே பேரறிவு. இதைத்தான் இறைவன் என்கின்றனர். ஞானயோகப் பரிணாம சித்தி பெற்றவர்கள். வரம்பற்ற எல்லையிலே விரிந்த பரந்து விளங்கும் இறைவனை ஞானயோகிகள் தம் ஞானயோகப் பயிற்சியின் மூலமாக அறிந்து, எல்லையற்ற பேரறிவாகிய இறைவனுடன், எல்லையற்ற விதத்திலே ஒன்றி நின்று பேரின்படைகிறார்கள். பேரின்பப் பெருவாழ்வே ஆத்ம இலக்கு.

நன்றி

நவநாதசித்தர்

(பக் 42-50)

-திருச்சிற்றம்பலம்-

❁ "பாரில் உயர்ந்தது பக்தி"

- சித்தர் -

"வானப்பிரஸ்தனாக இருந்து கொல்லிமலை, பச்சைமலை, தலைமலை, யானைமலை, சூழமலை, தென்மலை, வடமலை, குடமுருட்டிமலை, மருந்துவாழ்மலை, சிக்கிரி கிரிமலை, தாடகைமலை, விராலிமலை, சதுரகிரிமலை, முக்கோணமலை, மண்மலை முதலிய மலைகளில் சென்று சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்திருப்போம்"

- நவநாதசகாயம் -

❊ "எல்லா மதங்களிலும் ஒரு கலாச்சாரம் மற்றும் ஆன்மிகத் தத்துவம் அடங்கியுள்ளது. ஆகவே ஒரு மனிதன் தன்னுடைய விரும்பிய கலாச்சாரம் மற்றும் சமய தத்துவத்தை அடிப்படையில் கடைப்பிடிக்க வேண்டும். அநியாயமாக ஒரு சிலர் சுயமரியாதையை இழந்து ஒரு தற்காலிக பொருளாதார முன்னேற்றத்திற்காக மதம் மாறுவார்கள்."

- சுவாமி தந்திரதேவா -

❊ "தமிழ் எது? மொழியா? நாடா? அன்று, வாழ்க்கை. தமிழ் வாழ்க்கை இயற்கையோடியைந்து ஒழுகுவது."

- திரு. வி. க. -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# தேவாரம் வேதசாரம்

**முத்தமிழ்மணி சு. கணேசசுந்தரன்**
நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்

ஆண்டவன் அருளின் மூலவேர். அடியார்களின் துன்பங்களைத் தீர்த்து வைப்பவன் இறைவன். நம்முடைய வாழ்வில் நாம் நலம் அடைய வேண்டுமானால் இறைவன் நாமத்தை இடையறாது ஓதிக் கொண்டிருக்க வேண்டும். இறைவன் தாயைவிடத் தயவுடையவன். தாயானவள் தனது குழந்தைகளின் துன்ப துயரங்களை உணர்ந்து உறுதுணை புரிவது போல இறைவன் எமது தேவைகளை அறிந்து அருள்புரிகின்றான். துன்பம் வரும் போது இறைவன் எமது தேவைகளை அறிந்து அருள்புரி கின்றான். துன்பம் வரும் போது குழந்தைகள் எப்படித் தாயிடம் தமது துன்பங்களைக் கூறித் தாயினால் துன்பம் தீர்ந்து பயனடைகின்றார்களோ அதுபோல இறைவ னைப் பணிந்து முறையிட்டால் அருள் கிடைக்கும்.

நமக்குப் பல பகைவர்கள் இருக்கின்றார்கள் வெளியே இருந்து உபத்திரவம் தரும் பகைவர்களை ஓரளவு சமாளிக்கலாம். ஆனால் நம் உள்ளே இருந்து கொண்டு கூடவே இருந்த ஐந்து பகைவர்கள் நமக்கத் துன்பந்தந்து நாம் ஈடேற முடியாமல் தடைசெய்கி றார்கள். அவர்கள் யார்? மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐவருமே நமக்கு அப்பகைவர்கள். நாம் இறைவ னை அடைய முடியாமல் இவர்கள் தான் இடையூறு செய்கிறார்கள். இவர்களை இவர்களின் வழியிலே போக விடாமல் இவர்களை நாம் அடக்கவேண்டும். அவர்கள் அடங்கி விட்டால் நமக்கு உற்றவர்கள் ஆகிவிடுவர்.

இதையே ஞானசம்பந்தப் பெருமான்,

"தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்
ஆயு நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்ற துள்ளம்
ஆயமாய காயந்தன்னில் ஐவர் நின் றொன்ற வொட்டார்
மாயமே யென்று அஞ்சுகின்றேன் வலிவல மேயவனே"

என்னும் தேவாரம் மூலம் இறைவனை வேண்டுகின்றார்.

இவர்களை ஒருமைப்படுத்த வேண்டுமானால் மன அடக்கம் வேண்டும். மனம் அடங்கிவிட்டால் அங்குள்ள மாசுகள் அகன்றுவிடும். மாசில்லாத அதாவது குற்ற மில்லாத இடத்தில்தான் இறைவன் குடியிருப்பான். அகவே நாம் மனத்தை அடக்க வேண்டும். அப்படி அடக்கிவிட்டால் இறைவன் வந்து உறைந்தவிடுவான். அவன் வந்து குடி யேறிவிட்டால் அங்கு என்ன நிகழும்.

"உள்ளம் பெருங் கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே"

என்று திருமந்திரம் மூலமாக திருமூலர் நமக்கு விளக்கம் தருகின்றார். இந்தப் பாடல் மூலம் திருமூலர் இன்னுமொரு உண்மையையும் எமக்கு உணர்த்துகின் றார். நான் இறைவனது சன்னிதானத்தைக் கோவில் என்கிறோம். ஆலயம் என்கிறோம். திருமூலரோ கோவில் வேறு ஆலயம் வேறு என்கிறார். உள்ளத்தைப் பெருங்கோயில் என்றார். உடம்பை ஆலயம் என்கிறார். அப்படியானால் கோவில் வேறு ஆலயம் வேறு என்றல்லவா பொருள்படுகின்றது. திருமூலர் பொய் பேசுவாரா? கோவில் என்றால் என்ன? ஆலயம் என்றால் என்ன? என்பதை நாம் தான் உய்த்து உணரவேண்டும்.

கோ+ இல் = கோவில் அதாவது கோவென்றால் இறைவன். இல் என்றால் உறையுமிடம். பெரிய கோபுரங்கள் மண்டபங்கள் அமைந்த பிரமாண்டமான கட்டிடங்கள் அமைந்தாலும் இறைவன் அமருமிடம்

கருவறை. அதாவது மூலஸ்தானம். இந்த மூலஸ்தானத் தையே திருமூலர் கோவில் என்றார். ஊன் பொருந்திய உடம்பு தான் ஆலயமாகும். மூலஸ்தானம் இருதயஸ் தானமாகும். அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், வசந்த மண்டபம், இராஜ கோபுரம் எல்லாம் சேர்ந்ததுவே ஆலயம். அதாவது மனிதனின் உடம்பே ஆலயமாக மதிக்கப்படுகிறது.

மனம் அடங்க வேண்டுமானால் முதலில் நாவை அடக்கவேண்டும். நாவை அடக்க இறைவன் நாமத்தை இடையறாது செபிக்க வேண்டும். அப்படிச் செபிக்கச் செபிக்க நா நம் வழி வந்துவிடும். பின்பு நாம் இறைவன் நாமத்தைச் சொல்ல மறந்தாலும் நாக்கு மறக்காது சொல்லும். இதையே சுந்தரமூர்த்தி நாயனார்

"நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லு நா நமச்சிவாயவே"

என்று பாடுகின்றார். நா அடங்கிய பின்பு நல்ல செய்திகளையே அது சொல்லும். ஒரு வேடன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன். காட்டு மார்க்க மாக வரும் வழிப்போக்கர்களை வருத்திக் கொன்று வழிப் பறி செய்வான். ஒரு நாள் நாரத முனிவர் அப்பாதை யால் வந்தார். அவரைக் கொடுமைப் படுத்த அப்பாதகன் துணிந்தான். நாரதர் பார்வையினாலே அவன் அங்கி னான். தீய குணம் அடங்கவில்லை. 'மகனே நீ ஏன் பிற உயிர்களைக் கொல்கின்றாய்' என்றார் நாரதர். 'அது எனக்குப் பொழுது போக்கு' என்றான் வேடன். மகனே நீ செய்யும் செயல் இம்மையிலும் மறுமையிலும் உனக்குத் துன்பந்தரும் செயலாகும். நான் சொல்கிறபடி நீ செய் தால் இம்மையிலும் துன்பம் நீங்கும் மறுமையிலும் துன்பம் நீங்கும். அம்மையில் இறைவனை அடையலாம் ஆனந்தம் பெறலாம். இக்கருத்தினை சுந்தர மூர்த்திசுவாமிகள்,

"தம்மையே புகழ்ந்திச்சைபேசினும் சார்பினும் தொண்டர்தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாற்வதற்கு யாதும் ஐயுள் வில்லையே"

என்னும் தேவாரம் மூலம் விளக்கியுள்ளார் என்றார். வேடன் பெட்டிப் பாம்பானான். சுவாமி நான் என்ன செய்ய வேண்டும் என்றான் வேடன். நீ ராம நாமத்தை இடைவிடாது சொல்லு. அது இம்மைக்கும் மறுமைக்கும் அன்பந்தரும் என்றார். இராமநாமம் ஒரு தாரக மந்திரம். நமசிவாய என்பது சிவமந்திரம். நாராயணா என்பது விஷ்ணு மந்திரம். நாராயணா என்ற நாமத்துக்கு உயிர் கொடுப்பத இரண்டாவது எழுத்தாகிய "ரா" என்னும் எழுத்து. அந்த எழுத்தை நீங்கி விட்டால் நாயணாய என்று வந்து விடும். அப்படி அமைந்தால் ஒன்றுமே இல்லை என்ற பொருள்வந்துவிடும். "ம" அதை நீக்கி விட்டால் நசிவாய என்று வந்து விடும். அப்படி அமைந்தால் இறைவன் இல்லை என்ற பொருள் வந்து விடும். ஆகவே நாராயணமந்திரத்திலுள்ள "ரா"வும் நமசிவாய மந்திரத்திலேயுள்ள "ம"வும் சேரும் போது "ராம" என்ற நாமம் உருவாகிறது. ஆகவே அந்த நாமத்தைத் தொடர்ந்து சொல் என்றார்.

அவன் சொல்லிப் பார்த்தான் அவனால் சொல்ல முடியவில்லை. நாரதர் ஒரு மரத்தைக் காட்டி இது என்ன மரம்? என்றார் மரா மரமென்றான் வேடன். சரி அந்த மரத்தின் பெயரைத் தொடர்ந்து சொல் என்றார். அவர் மரா, மரா என்று தொடர்ந்து சொன்னான். அதிலே இன்பங்கண்டான். தொடர்ந்து சொல்லும் பொழுது இராம நாமம் ஒலித்தது. அதனால் ஞானமடைந்தான். அவனே ராம காவியத்தை நமக்குத்தந்த வால்மீக முனிவராகும். ஆகவே நாவை அடக்கினால் நாயகனை உள்ளத்திலே அடக்கலாம். இந்த உண்மைகளைத்தான் திருமுறைகள் நமக்கு விளக்கு கின்றன. தேவனுக்காகச் சூட்டும் ஆரம் (மாலை) தேவாரம். நமக்கு இறைவனை அடையத் திருமுறைகள் மூலம் வழி காட்டியவர்கள் நால்வர். அதாவது அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் ஆகியோர். அவர்கள் நாலுவழி களைக் காட்டியுள்ளனர்.

1. தெண்டு செய் இறைவனை அடையலாம் என்றார் அப்பர்.
2. நண்பனாகி நயம்படப்பேசு நாயகனை அடையலாம் என்றார் சுந்தரர்.
3. இனிமையாகப் பேசு; பாடு. இறைவனை அடையலாம் என்றார் ஆளுடையபிள்ளை.
4. அழுதால் ஆண்டவனை அடையலாம் என்றார் மணிவாசகர்.

ஆகவே வேதத்தின் சாரமாகிய தேவார(ம்) திருவா

சகங்களைப் பாடி நின்றால் இறைவன் அருள் கட்டாய மாகக் கிடைக்கும் என்பது திண்ணம். பாடுவது என்பது வாயோடுசரி. ஓதுவது என்பது உடலையெல்லாம் சேர்ந்தது.

"காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது"
"வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

என்றார் ஞானசம்பந்தப் பெருமான். உள்ள முருகிப்பாடுதலையே ஓதுதல் எனக் கொள்க. திருமுறை இசைப்பவர்களுக்கு ஓதுவார் என்று பெயருண்டு. இன்னும் கொஞ்சம் மேல் நோக்கினால் தமிழ் நாட்டில் ஓதுவாமூர்த்திகள் என்று அவர்கள் போற்றப்படுகின்றா ர்கள். வேதம் எப்படி ஓதப்படுகிறதோ அப்படி ஓதப்படுவதே திரு முறைகள்.

வேதம் ஓதுபவர்கள் எப்படி ஆசாரசீலர்களாக சிவசின்னமணிந்து அட்சர சுத்தமாக ஏற்ற இறக்கத்தோடு ஓதுகிறார்களோ அப்படித் திருமுறை ஓதுபவர்களும் ஆசாரசீலர்களாக சிவசின்னமணிந்து ஏற்ற இறக்கத்தோடு திருமுறைகளை ஓதவேண்டும். இராசிகள் பன்னிரெண்டு, மாதங்கள் பன்னிரெண்டு. அதுபோல திருமுறைகள் பன்னிரெண்டு. முதல் மூன்று திருமுறைகளும் ஞானசம்பந்தரால் ஓதப்பட்டது. ஏழாவது திருமுறை சுந்தரரால் ஓதப்பட்டவை. எட்டாந் திருமுறையாக மணிவாசகரின் திருக்கோவையார் ஓதப்படுகிறது. திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை. திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறை. காரைக்கால் அம்மையார் போன்ற ஆன்றோர் பாடல்கள் பதினோராம் திருமுறையாகவும், சேக்கிழார் அருளிய அடியார் பெருமை பேசும் பெரியபுராணம் பன்னிரெண் டாம் திருமுறையாகவும் ஓதப்படவேண்டும். இதனா லேயே தேவாரம் வேதசாரம் என்றனர் ஆன்றோர்கள். தேவாரங்களுக்கு பண் முறை வகுக்கப்பட்டுள்ளது. தேவார அமைப்பு, சந்தர்ப்பம் ஆகியவற்றிற்கு அமைய வகுக்கப்பட்டது பண். ஒவ்வொரு பண்ணுக்கு உரிய இராகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நம்நாட்டு மூதறிஞர் விபுலானந்த அடிகள் எழுதிய யாழ் நூல் தனிலே பண்களும் இராகங்களும் என்பவற்றை நன்கு விளக்கியுள்ளார்கள். அந்த அந்தப் பண்களுக்குரிய இராகங்களில் பாடினால் பாடலில் சுவை கெடாதிருக் கும். சங்கீத மும் மூர்த்திகளில் ஒருவரான தியாகப்பிரம த்தின் பாடல்கள் உரிய இராகத்திலே பாடும் போது சுவையாக இருக்கிறது. இராகத்தை மாற்றிப் பாடினால் சுவை குன்றி விடும். பலன் கெட்டுவிடும். அதுபோலத் தான் பண்களை அதற்குரிய இராகங்களிலே பாட வேண்டும். இன்று சிலர் தம் இஷ்டம் போல இசை அமைத்துப் பண்களைப் பாடுகின்றார்கள். அவை தவிர்க்கப் படவேண்டும். அப்படிப்பாடினால் அது நாம் இறைவனு க்கும் எமக்கும் செய்யும் துரோகமாகும். திருமுறைகள் முறையாக ஓதினால் முறையாக ஓதப்படும் வேதங்களால் என்ன பயன் கிடைக்கின்றதோ அதே போன்ற பலன் கிடைக்கும் என்பதற்கு ஐயமில்லை. தேவாரம் வேத சாரம் என்பதை உணர்ந்து திருமுறைகளை ஓதி நாம் நலம் பெறுவோமாக.

-திருச்சிற்றம்பலம்-

வேள்வித் தீயில் அழிகின்ற கட்டையப் போன்றதல்ல எனது தொண்டு. உனது வீட்டு அடுப்பில் உனது பக்குவத்திற்கு பயன்படுகின்ற தொண்டனே நான்.

- ஞானச்சேரி ஞானிகள் -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சிவன் தடுத்த சுந்தரர்

அருள்மாமணி
**ப. க. கனகசபாபதி,**
செயலாளர், மணிவாசகர் மன்றம், கனடா.

"வேரோடு வினைகளையும் வித்தகனே வினாயகனே மலரோடு உன் மலர்த்தாள் மகிழ்வோடு பணிகின்றேன்".

சுந்தரர் திருக்கயிலாய மலையிலே சிவபிரானது அணுக்கத் தொண்டராகச் சேவை செய்யும் பெரும் பேறுபெற்றவர். பாற்கடலிலே ஆலகாலவிஷம் தோன்றியது கண்டு பிரம, விட்டுணுக்களும் தேவர்களும் ஏனையோரும் அஞ்சிய போது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடைய ஏவலின் பிரகாரஞ் சென்று, அவ்விடத்தைத் தமது உள்ளங்கையில் அடக்கிக் கொணர்ந்து இறைவனிடம் கொடுத்த செயற்கருஞ் செயலைச் செய்தவர். இதனால் இவர் ஆலால சுந்தரர் எனப்பெயர் பெற்றார்.

இத்தகு பெரும் பேறு பெற்ற ஆலாலசுந்தரர் ஒருநாள் நந்தவனத்திலே இறைவனுடைய பூசைக்கு மலர்கொய்யச் சென்றிருந்தார். அப்பொழுது அம்பிகையின் சேடியர் இருவர் அம்பிகையின் பூசைக்கு மலர் எடுக்க வந்திருப்பதைக்கண்டு அவர்கள் மேல் மையல் கொண்டார். அவர்களும் சுந்தரர் மீது காதல் கொண்டனர். இந்த மையலைப் பூவுலகிலே மானுடராய்ப் பிறந்து இரு பெண்களுடனும் இன்பம் துய்த்து மீளுமாறு இறைவன் ஆணையிட்டபோது தேவரீர் அடியோனைத் தடுத்து ஆட்கொள்ளவேண்டும் என்று சுந்தரர் வேண்டிக் கொண்டார்.

இருவினைகளைச் செய்தற்கும் அவற்றை அனுபவிப்பதற்கும் உரிய இடம் பூமி; நல்வினைப் பயனை அனுபவித்தற்குரிய இடம் சுவர்க்க முதலிய மேலுலகங்கள்; தீவினைப் பயனை அனுபவித்தற்குரிய இடம் இருபத்தெட்டுக் கோடி நரகங்களாகுமெனச் சைவ வினாவிடை கூறுகின்றது.

"பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்;
மற்று நிலையாமை காணப்படும்"

என்பது குறள். ஒருவன் பற்று அற்ற பொழுதே அவன் பிறப்பு அறும் என்பதாகும்.

சிலந்தி தனது உடலிலிருந்து நூல் எடுத்துக் கூடுகட்டுகிறது. அதுபோல இறைவனும் தனது திருவருட்சக்தியால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கின்றார்.

சடையனார் இசைஞானியாருடைய புதல்வர் சுந்தரர். நரசிங்க முனையர் என்ற அரசனால் வளர்க்கப் பட்டவர். சகல கலைகளிலும் வல்லவராய், மணப்பருவம் எய்தினார்.

புத்தூர் சடங்கவி சிவாசாரியரது மகளுக்கும் நம்பியாரூரருக்கும் திருமணம் நடைபெற ஏற்பாடானது. மணப்பந்தலில் இருந்த சுந்தரருக்குக் கைலாசபதியாகிய சிவன் தான் முன்கொடுத்த வாக்குப்படி அவரைத் தடுத்து ஆட்கொள்ளவேண்டி முதிய வேதியர்வடிவங் கொண்டு வாதிட்டுத் திருமணத்தைத் தடுத்தும் விட்டார். வாதிலே வேதியரை நீர் பித்தனோ என்றும் கேட்டு விட்டார் சுந்தரர்.

வேதியர் தனது இருப்பிடங் காட்டப் போய் திருவருட்டுறை என்னும் ஆலயத்துள் புகுந்து மறைந்தார். நம்பியாரூரர் பின் தொடர்ந்து கூப்பிடுகின்றார். சிவன் அம்மையோடு காட்சி கொடுத்து "நீகேட்டுக் கொண்டவண்ணம் உன்னைத் தடுத்தாட் கொண்டோம்" என்றார். ஐந்தொழில் புரியும் ஆண்டவன் அவரைத்திருநோக்கம் செய்து நீ நம்மோடு வன் சொற்களைச் சொல்லி வன்றொண்டன் என்ற பெயரைப்

பெற்றாய். இனி உன்னால் செய்யத்தக்க அர்ச்சனை என்னைப் பாடுதலேயாகும் என்றார்.

சுந்தரர் "தேவரீருடைய எண்ணிறந்த குணங்களில் எதையறிந்து பாடுவேன்" என்றார். நீ முன்பு என்னைப் பித்தன் என்று கூறினாய் ஆதலின் பித்தனென்றுபாடு என்று கூற நம்பியாரூரரும் 'பித்தாபிறைசூடி' என்ற முதலையுடைய திருப்பதிகும் பாடினார். சடங்கவி சிவாசாரியருடைய புத்திரியும் மணம் நிறைவேறாமை யால் ஆருரரைத்தியானித்து சிவனடி சார்ந்தார்.

ஆளுடைய நம்பி திருநாவலூர், திருத்துறையூர், சிதம்பரம் முதலிய தலங்களைத் தரிசித்து தேவாரப் பதிகங்கள் பாடினார். சித்தவட மடத்தில் சிவபெருமான் விருத்த வேதியராய்ச் சென்று அவருக்குத் திருவடிதீட் சை செய்தார். நாவலூரார் சிதம்பரத்தில் சபாநாயகரை வணங்கி ஆங்கமர்ந்தார். அப்போது திருவாரூருக்கு வருமாறு ஓர் அசரீரி கேட்டது. சீர்காழி, திருப்புன்கூர் முதலிய தலம் பணிந்து நம்பியாரூரர் திருவாரூர் அடைந்து வான் மீகநாதரை வணங்கிப்பாடினார். வான்மீகநாதர் "நாம் உமக்குத் தோழர் ஆனோம்" என்றும் திருமணக்கோலத்துடன் இருக்கும் படியும் அனுக்கிரகஞ் செய்தார். இவர் கயிலையில் காதலித்த கமலினி என்பாள் பரவையார் என்னும் பெயருடன் ஆருரில் அவதரித்திருந்தார். திருவருளால் சுந்தரருக்கும் பரவையாருக்கும் திருமணம் நடந்தது.

இங்கேயிருக்கும் நாளில் ஒருநாள் தேவாசிரிய மண்டபத்தில் சிவத் தொண்டர்கள் இருப்பது கண்டு நம்பியாரூரர் அவர்களுக்கு அடியவன் ஆகக் கருதினார். இறைவன் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க அவர் திருத் தொண்டர் தொகை பாடினார். இதுவே பெரிய புராணத்துக்கு மூலமாக அமைந்தது.

தம்பிரான் தோழருக்குக் குண்டையூர்க்கிழார் அரிசி, பருப்பு முதலியன கொடுத்து வந்தார். மழைக்குறைவால் வளம் குன்றியது. குண்டையூரார் தியாகராசப் பெருமானைப் பணிந்து வேண்ட அவர் அருளால் குபேரன் மூலமாக நெல்லானது பெருமலை யாக நிறைந்தது. நம்பியாரூரர் இந்நெல்மலையைத் திருவாரூருக்கு மனிதரால் கொண்டு செல்லமுடியாது என்று கருதி 'நீள நினைந் தடியேன்' என்னும் பதிகம்பாட பூதங்கள் பரவையார் வீட்டுக்கு மட்டுமன்றி எல்லா வீடுகளுக்கும் நெல்கிடைக்கச் செய்தன.

பரவையார் பங்குனி உத்தரச் செலவுக்குப் பொன் வேண்டுமென்றார். திருப்புகலூரில் சுவாமி தரிசனஞ் செய்து சுந்தரர் செங்கற்களைப் பொன்னாகப் பெற்றார். பின்னர் திரப்பாண்டிக் கொடுமுடி என்னும் திருப்பதியில் மற்றுப்பற்றெனக்கின்றி, என்னும் முதலுடைய பஞ்சாட்சரப்பதிகத்தைப் பாடினார். அதன்பிறகு திருமுதுகுன் றீசர் பன்னீராயிரம் பொன் கொடுக்க அதனை மணிமுத்தாநதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தார். சுந்தரர் திருக்குருகாவூருக்குச் செல்லுங்கால் அவர் பசிதீர்க்க "தாயாய் முலையைத்தந்த தயாபரன்" நீரும், பொதிச் சோறும் அளித்தார்.

நிலையான இன்பந்தரவல்லது எது என்பதை நாவுக்கரசர் கூறுவார்.

"கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க்குழற்பாவை நல்லாரினும்
தனிமுடிகவித்து ஆழும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கே"

எவ்வளவு அரிய பெரிய ஆழ்ந்த கருத்தாழமிக்க பாடல்களின் சுவையை விடுத்து மாயையெனும் சேற்றிலகப்பட்டு உழலுகின்றோம். புலன்களை அடக்கி ஆளமுடியாமையே காரணம். யாவும் வினை வழியே.

சுந்தரர் பின்பு பல தலங்களையும் தரிசித்துப் பாடித் திருவொற்றியூர் சேர்ந்தார். அங்கு அனிந்திதையார் ஞாயிறு கிழவருக்குப் புத்திரியாய்ப் பிறந்து சங்கிலியார் என்னும் பெயருடன் திருத் தொண்டு செய்து கொண்டு வந்தார். ஒருநாள் சங்கிலியார் திருக்கோவிலுக்குப் போகும்போது சுந்தரர் கண்டு ஆசை கொண்டார். 'தொல்லையோர் இருவர்தேடும் சோதி'யாகிய இறைவரும் சங்கிலியார் கனவில் தோன்றி "நின்னைப் பிரியாதிருக்கும்படி கேட்டுச் சுந்தரனை மணந்து கொள்" என்று கூறி மறைந்தார்.

அதன்படி மகிழடியில் சத்தியம் செய்து சுந்தரர் சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்டார். சில நாட்களின்பின் சுந்தரருக்குத் திருவாரூர் நினைவு வரவே சங்கிலியாரை திருவொற்றியூரிலே விட்டு, விட்டு சபதத்துக்கு மாறாகப் புறப்பட்டதால் கண்பார்வை மறைந்தது.

காஞ்சிபுரத்தையடைந்து கனிந்துபாடி இடது கண்பார்வை பெற்றார். திருவாரூரையடைந்து ஆண்டவனைப் பாடுங்காலத்து வலது கண்பார்வையுங்

கிடைத்தது. சங்கிலியாரை மணந்தமையை அறிந்த பரவையார் வருத்தமடைந்து இவருடன் கூடியிருக்க மறுத்தார். அவரூடலைத் தீர்க்க இறைவனே இருமுறை தூது சென்று சமாதானஞ் செய்தார்.

சேர மண்டலத்துச் சேரமான் பெருமான் நாயனாரும் நம்பியாரூரரும் நட்பினராயினர். இதனால் சேரமான் தோழர் என்னும் ஓர் பெயரையும் பெற்றார். சேரமானும், சுந்தரரும் பல சிவஸ் தலங்களைப் பணிந்தனர். சிலகாலம் சேரமான் நாட்டில் சுந்தரர் இருந்தார். பின் மீண்டும் வந்து ஆரூர் சேர்ந்தார். கொங்கு நாடுபோய்த் திருப்புக் கொளியூர் அடையும் போது ஒருவீட்டில் மங்கல ஒலியும் இன்னொரு வீட்டில் அழுகை ஒலியுங்கேட்டது. அதன் காரணத்தை நம்பியாரூரர் கேட்டறிந்து முதலை விழுங்கிய பிராமணப்பிள்ளையை "உரைப்பார் உரையுகந்து" எனத் தொடங்கிக் "கரைக் கால் முதலையைப்பிள்ளை தரச் சொல்லுகாலனையே" எனத் திருப்புக் கொளியூர் அவிநாசிப் பெருமாளை வேண்டிப்பாடி முதலைவாயினின்றும் பிள்ளையை அழைத்துக் கொடுத்தார்.

சுந்தரருடைய பாடல்கள் படிக்கப்படிக்க நாவூறும் அருந்திருமுறைகள். அவற்றுள் சான்றாக ஒன்றாப் பார்ப்போம்.

அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்
அதுவும் நான்படற்பால தொன்றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பனாகிலுந் திருவடி பிழையேன்
வழுக்கி வீழினும் திருப் பெயரல்லால்
மற்று நான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந்துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறைவானே.

எவ்வளவு அமிழ்தினுமினிய அரும்பாடல். வழுக்கிவீழினும் திருப் பெயரல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம் என்னும் நிலைவரவேண்டும்.

சுந்தரர் பின் சேரமானிடம் போய்ச் சின்னாள் இருக்கும் போது, திருவஞ்சைக் களத்து ஆலயத்துள் புகுந்து சந்நிதானத்தில் பேரன்புடன் பணிந்து எழுந்து நின்று "ஆண்டவனே அடியேனை உலகவாழ்க்கையினின்று நீக்கித் தேவரீருடைய திருவடியில் சேர்த்தல் வேண்டும்" என்னும் குறிப்போடு தலைக்குத் தலைமாலை என்னும் பதிகம்பாடினார். கைலாசபதி தேவர்களுடன் வெள்ளையானையை அனுப்பிச் சுந்தரமூர்த்தி நாயனாரை வரச்செய்தார். அப்போது அவருக்கு வயது பதினெட்டு.

இதனையறிந்த சேரமான் பெருமான் நாயனார் ஒரு குதிரையின் மீது ஏறி அக்குதிரையின் காதில் ஐந்தெழுத்தை ஓதிக் கயிலாயத்துக்குச் சென்றார். இது நிகழ்ந்தது ஒரு ஆடிமாதத்து சுவாதி என்னும் நன்னாளாகும். பரவையாரும், சங்கிலியாரும் முறையே கமலினி, அனிந்திதை என்னும் பழம் பெயருடன் கயிலை சேர்ந்தனர்.

இவர் பாடிய தேவாரப் பதிகங்களின் தொகை 37000. இவற்றுள் இப்பொழுதுள்ள பதிகங்கள் ஸ்தலப்பதிகம் 96, பொதுப்பதிகம் 4, மொத்தம் 100. இவருடைய பதிகங்கள் 7ஆம் திருமுறைகளாகும்.

சுந்தரனின் மறுபெயர்கள்:- நம்பியாரூரர், ஆளுடைய நம்பி, நாவலூரரார், வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான்தோழர், சிங்கடியப்ப வனப்கையன், திருத்தொண்டத் தொகையாளி என்பனவாம்.

(அவர் செய்த அற்புதங்களில் சில)

'வெங்கராவுண்டபிள்ளையை நங்குமே
வெள்ளை வாரண மீதில் இருந்துமே
மருவியாறு வழிவிட்டு நிற்குமே
செங்கல்லானது தங்கமதாகுமே
திகழுமாற்றிட்ட செம்பொன்னளிக்குமே
துங்கவாம் பரிசேரர்க்கு நல்குமே
துலங்கு நாவலூர்ச் சுந்தரர் பாடலே'.

'மற்று நீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை. நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்'. பெரிய புராணம்

'வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி'

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# ஜெய் சீத்தாராம்

**அருணாசலம் வைத்திலிங்கம், J.P.**
தலைவர், மலையக ஆன்மிக கலைஇலக்கிய மன்றம்,
நாவலப்பிட்டி

"கொல்லி மலை உதித்து
கொத்மலை மண் மிதித்து
நானிலம் செழிக்க வந்த
நவநாத சித்தர் பாதம்
மானசீகமாய்த் தொழுதேன்
மண்டியிட்டு கண்ணில் ஒற்றி"
'ஜெய் சீத்தாராம்' – 'ஜெய் சீத்தாராம்' – 'ஜெய் சீத்தாராம்'

ஈழத்தில் வாழ்ந்த சித்தர்களுல், கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தைவேல் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், யோகர் சுவாமிகள், நவநாத சித்தர், பெரியானைக் குட்டி சுவாமிக்ள, சித்தானைக்குட்டி சுவாமிகள், சடைவரத சுவாமிகள், ஆனந்த கூட்சரகுரு, செல்லாச்சி அம்மையார், தாளையான் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், சடையம்மா, நாகநாத சித்தர், நயினா தீவுச் சுவாமிகள் என்று பல சித்தர்களும் சிறப்புப் பெறுவதாக நாவல் நகரிலே வாழ்ந்த 'ஆத்ம ஜோதி' நா. முத்தையா அவர்கள் எழுதியுள்ளார்.

மனிதராகப் பிறந்தாலும் வேறு மனிதர்கலாள் செய்ய முடியாத காரியங்களைச் செய்பவர்களைச் சித்தர்கள் என்று சிறப்பிப்பது வரலாறு. எட்டிக் கொட்டையை உண்பதும், கருங்குன்றி மணியும் குப்பை மேனி தளிரும் உணவாக கொண்டு உயிருடன் வாழ்ந்து அதிசயம் நிகழ்த்தியவர். எட்டிக் கொட்டை சுவாமியென்றும், தென் இந்தியாவில் ஆலத்துடையாள் பட்டியிலும், பச்சைப் பெருமாள் பட்டியிலும் சிறப்புப் பெயரால் நவநாதசித்தர் அவர்கள் போற்றப்பட்டார்கள்; பூஜிக்கப்பட்டார்கள்.

'ஜெய் சீத்தாராம்' என்ற ராம நாமத்தை தாரக மந்திரமாகச் சொல்லிக் கொள்ளும் சுவாமிகளைக் கண்ட சிறுவர்கள் ஜெய் சீத்தாராம்! ஜெய் சீத்தாராம்! என்று கோஷமிட்டார்கள். அவ்வாறு கோஷமிடும் சிறுவர்களுக்கு கற்கண்டும் கடலையும் மண்ணிலிருந்து வரும்படிசெய்து வழங்கி மகிழ்விப்பார். தாமும் மகிழ்வார் என்று அவரது வரலாறு கூறுகின்றது.

தூங்காத கண்களும் தொலை நோக்கும், கொண்டவர், தம்மை அழைக்கும் அனைவரையும் மகிழ்விக்க அவர்கள் இல்லம் சென்று உணவு உண்பார். ஒரே இலையில் காகமும், நாயும், தாமும் உணவருந்தக் கூடிய உயரிய பரிபக்குவ நிலையடைந்த நவநாதசித்தர் அவர்களை சிந்தையிற் தெய்வமாய்ப் போற்றி வழிபட்டோர் சிறப்படைந்தார்கள்.

மூலிகை கொண்டு கொடிய நோய்களை நொடிப் பொழுதில் குணமாக்கி மக்களைக் காத்த மகான். தாயை இழந்த "சிவகாம சுந்தரியை" நயன தீட்சையால் அருள் பாலித்து சகல கலைகளிலும் சிறப்புரச் செய்தவர். கோவில் கிணற்றில் நீர் இல்லாது போனபோது சக்கரத்தை தகட்டில் வரைந்து கிணற்றில் இட்டு நீர் பெருகச் செய்தார். நெருப்பைத் தலையில் இட்டபோதும் அதைப் பொருட்படுத்தாத நவநாதசித்தர் சுவாமிகளை அந்த நெருப்பே சுட மறுத்துச் சுகமளித்தது. சிலருக்குச் சமைத்த உணவைப் பல நூறு பேர் உண்ணும் அளவு அள்ள அள்ளக் குறையாது அமுது உண்டாக்கி

உணவளித்து அற்புதம் செய்தவர் நவநாத சித்தர்.

இயற்கை அழகும் செழித்து வளர்ந்த தேயிலைச் செடிகளால் சிறப்புறும் மலையகத்தே கொத்மலை பிரதேசத்தில் "குயின்ஸ்பரி" தோட்டத்தில் குடி கொண்ட முருகப் பெருமானோடு சங்கமம் ஆன சித்தர் ஆலயத்தின் அருகிலேயே சமாதியடைந்தார்கள். சமாதியின் பின்னரும் சமாதியில் சிவலிங்கம் வளரச் செய்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் நவநாத சித்தரின் பாதம் பணியப் பலநூறு பக்தர்கள் பனியையும் மழையையும் பாராது, "வன போஜனம்", செய்யவரும் விந்தையை இன்றும் காணலாம்.

துயருறும் மலையக மக்களோடு மக்களாய் வாழ்ந்து சித்துகள் செய்து சித்தராய்ச்சிறப்புற்று சிவலிங்கத் தோற்றப் பேறுபெற்ற நவநாதச் சித்தரின் சீரடி போற்றிப் பணிந்து பூஜிக்கும் பாக்கியம் பெற்றோர் சிறப்படைய வேண்டும். நவநாதசித்தர் பால் நம்பிக்கை கொண்டோர் தும்பிக்கையான் அருளைப் பெறுவார்கள். நம்பிக்கையோடு நவநாத சித்தரின் நல்லடி போற்றிப் புகழ்ந்து நற்பயன் அடைவோமாக.

ஜெய் சீத்தாராம் - ஜெய் சீத்தாராம் - ஜெய் சீத்தாராம்.

-திருச்சிற்றம்பலம்-

## சாம, பேத, தான, தண்டம்

ஒருவனுக்கு சாமவேதமாகிய சங்கீதம் தேவாரம், திருவாசகம் முதலிய கீதங்களைக் கற்றுக் கொடுத்து பக்தி மார்க்கத்தில் ஜனங்களைத் திருப்பவேண்டும். அதற்கும் திரும்பவில்லையானால் யசுர் வேதவிதிப்படி அநேக பேத ரூபமான விஷயங்களைப் பற்றிப் பேசி, தூசி, கூறி பூதமென்று அவர்களுடைய இஷ்டப்படியெல்லாம் உபதேசித்து பக்திமார்க்கத்தில் திருப்பவேண்டும். அதற்கும் திரும்பவில்லையானால் ரிக்வேதவிதிப்படி அக்கினி தேவன் யாகங்களைப் பற்றி பேசி திருப்பவேண்டும். அதற்கும் திரும்பவில்லையானால், அநேக காசுபணத்தை தானஞ்செய்து பக்தி மார்க்கத்தில் திருப்பவேண்டும். அதற்கும் திரும்பவில்லையானால் தண்டமாகிய உதை 'அடி' கொடுத்து திருப்பவேண்டும். ஒன்றுக்கும் கட்டுப்படவில்லையானால் அவனை விட்டுவிடுவதே வேதத்தின் சம்மதம்".

-ஞானயோக சக்தி-

- "பஜனை அப்புறம் போஜனை"
- "பசுவைப் பாதுகாக்காதவன் ஒரு இந்துவாக இருக்கமுடியாது."
- "சனி வியாழன் போன்ற கிரகங்கள் மாறலாம். எங்கள் விசுவாசம் அசையாமல் இருக்கவேண்டும்."
- "நவீன உலகத்தில் மாணவர்களுக்கு கல்வி மிகமுக்கியமானது. ஆயினும் கல்வி தார்மிக அடிப்படையில் நடைபெற வேண்டும். தற்காலத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் வர்த்தகம் (கொமர்ஸ்) படிப்பதைக் காண்கிறோம். உண்மையில் இப்பாடத்திட்டத்தின் சாராம்சம் என்ன? கருணை வேண்டாம், பேராசை வேண்டும், இலாபம் வரும் என்பதாகும்."
- "ஆசிரியர்களை மாணவர்கள் மரியாதையுடன் "Sir" என்று சொல்லவேண்டும். ஆனால், அந்த ஆசிரியர்கள் கல்விக்குமட்டும் முக்கியத்துவம் கொடுத்து, சமய வழிபாட்டுச் சம்பிரதாயங்களை அவமதிக்கின்றார்கள். இத்தகையோரை "சேறு" என்றுதான் சொல்லலாம்."

- சுவாமி தந்திரதேவா -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்
"சர்வரும் ப்ரும்ம மயம்"
ஓம் ஸ்ரீமத் சாதசிவ ப்ரும்மேந்திராய நமஹ

# புண்ணிய பூமியில் ஞானப் பயிர்கள்

## "நடமாடும் தெய்வம் ஞானச்சேரி நெரூர் ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரர்"

பெ. சு. இராஜேந்திரன்
ஞானிகளின் தொண்டன்

எப்படியும் வாழலாம் என்று பலர். இப்படித்தான் வாழ வேண்டும் என்று சிலர். எப்படி வாழ வேண்டும் என்று தெரியாத மனிதர்கள் வாழ்வே சுக்கான் இல்லாத படகுக்குச் சமனாகும். இப்படியும் எண்ணற்றோர். நல்லவர்கள் வாழ்வை நாசம் செய்ய சிலர். இப்படியான திக்குத் தெரியாத காட்டில் வாழும் எமக்கு வழிகாட்டி நல்வாழ்வளிக்க வந்த வள்ளல் பெருமான் தான் ஞானச்சேரி நெரூர் ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரர்.

சென்னை மந்தைவெளியில் ஞானச்சேரி என்ற அமைப்பை ஏற்படுத்தி ஜாதி சமய சம்பிரதாயங்களைக் கடந்து பக்தியையும் அன்பையும் கருணையையும் மாத்திரம் தாரகமந்திரமாக உபதேசிக்கிறார். ஞானச்சேரியில் ஞானிகள் நடத்தும் இறைபணி வேள்வி வித்தியாசமானது. இன்றுவரை ஞானச்சேரியில் ஞானிகள் ஞானமழை பொழிந்து இறைபணி செய்து வருகிறார்.

பிரும்ம ஞானிகள் உலகம் உய்வதற்காக மீண்டும் மீண்டும் அவதரிப்பார்கள் என்பதற்கிணங்க, பகவான் பிரும்மேந்திரர் ஞானப் பிறவிகளாகவே தோன்றி இறையுணர்வினை மக்களிடம் வலியுறுத்தி வந்துள்ளார் என்பதனை அவரின் சரித்திரங்கள் இன்றும் ஆதாரபூர்வமாக எடுத்தியம்புகின்றது.

ஞானிகள் தனது முதற்பிறப்பில் அத்திரி முனிவருக்கும் கற்பில் சிறந்த அநசூயைக்கும் தத்தாத்ரேயராய் அவதாரம் கொண்டார். சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய முத் தெய்வங்களின் தன்மையுடையவர். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற உலக விவகாரங்களுக்கு அப்பாற்பட்டவராக மும்மூர்த்தி



முகங்களுடன் அவர் காணப்படுகின்றார். இச்சை, கிரியை, ஞானம் இந்த மூன்று சக்திகளை உடையவர். பசியால் அழுத குழந்தைக்குத் தாய் பாலுக்கு வழி செய்வது போல, முக்திக்கு அழும் முமுட்சுவிற்கு குருவான தத்தாத்ரேயர், தாய் போல பிரும்மாம்ருதத்திற்கு வழி கூறுகிறார். பிரும்மாம்ருதம் எனப்பட்டதே பிரும்மானந்தம். தான் அடைந்த

ஞானத்தை தன்னோடு மட்டும் வைத்துக் கொள்ளாது கருணையால் அனைவருக்கும் பிறபந்தம் விலகாத ஜீவர்களுக்கும் கொடுக்கிறார். இமயம் போன்ற உயர்ந்த ஆன்மிக கருத்துக்களை எட்டு அத்தியாயங்களில் 271 சுரோகங்களில் "அவதூத கீதை" என்னும் உயர்ந்த தோர் பொக்கிஷத்தை அருளியுள்ளார்.

அதில் "எல்லாவித கருமங்களுக்கும் அப்பாற்பட்டவனின் கருமாக்களை எரிக்கும் தீ நான். எல்லாத் துன்பங்களுக்கும் அப்பாலிருப்ப வனின் துன்பங்களைச் சுட்டெரிக்கும் நெருப்பு நான். உடலற்றவனின் உடலை எரித்துப் பொசுக்கும் அக்னி நான். நானே ஞானாம்ருதம் ஆகாயம் போன்ற தனியாக இருக்கும் இருப்பு" இவ்வாறு பகவான் பிரும்மேந்திரர் தத்தாத்ரேயராக இருந்து நேரிடைய பேசுகிறார்.

தனது இரண்டாவது அவதாரத்தில் உக்கிரபாண்டி யராக தோற்றம் கொண்டு சிவனுக்காக பாண்டிய நாட்டை – மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார். அப்போது சிவபெருமானின் அறுபத்துநான்கு கலைகளுக்கும் புதிய வடிவம் கொடுத்து பல சாஸ்திர புத்தகங்களை அருட்பாக்களாகப் பாடி நூல்களைச் செய்து முடித்தார். அவற்றில் ஒரு காமசாஸ்திர நூலை கோட்சடை என்னும் ஊரில் ஒரு ரகசியப் பெட்டியில் பாதுகாப்பாக வைத்திருந்தார். அதனை அவரின் மனைவி காந்திமதி தனது கணவனுக்குத் தெரியாமல் திறந்து பார்க்கலானாள். அதுசமயத்தில் உக்கிரவர்மர் செங்கோலைப் பிடித்து ஆட்சி செய்து கொண்டிருந்தார். திடீரென சிவபெருமானை நினைத்தார். அவருக்கு கோட்சடையில் தனது மனைவி செய்துவிட்ட காரியம் தெரிந்தது. கடுமையான கோபம் கொண்டார்.

இனிமேல் நான் தவக்கோலத்தில்தான் ஆட்சி செய்வேன். மனைவி உடனே கயிலாயம் அடைவதே சிறந்தது என்று சிவனை வேண்ட, கோட்சடையில் இருந்த காந்திமதிக்கு சிவபூதங்கள் பல்லக்கின கொண்டுவந்து நின்றன. அதிலே மகிழ்வோடு ஏறி அமர்ந்த காந்திமதி "நான் மீண்டும் பிறப்பேன்" என்று கூறி மறைந்தாள். அதன்பின் சிவனுக்காக சில ஆண்டுகள் யோகியாகவே இருந்து மதுரையை ஆண்டார். பின் ஒரு நன்நாளில் மதுரைக் கோயிலுக்குள் நுழைந்து மறைந்தார்.

மூன்றாவதாக ஆனாய நாயனாராக தோற்றம் கொண்டார். மேல்மழ நாட்டில் மங்களம் என்னும் கிராமத் தில் ஆயர்குடியிலே அவதரித்தார். பசுக்கூட்டத்தை மேய்க்கும் ஆயர்கள் குழலூதி மகிழ்வதைக் கண்ணுற் றார். தானும் குழலிசைக்க ஆவலுற்றார். ஓடக் குழலெடுத்தால், அதுக்கோலக் குமரன் கண்ணையல் லவா குறிப்பிடும் என எண்ணி, அதைவிடுத்து தம் கழுத்தில் அணிந்திருந்த உருத்திராட்ச மாலையைக் கழற்றி ஒன்றாக இணைத்து அதில் துளையிட்டார். உத்திராட்சக் குழலிசையில் இனிமை தவழ்ந்தது. ஒரு நாள் அவர் காட்டில் கொன்றை மர நிழலில் நின்று பஞ்சாட்சரக் குழலை இசைத்தார். அன்று அக் குழலிசை நிற்பனவும் நடப்பனவுமான எல்லா உயிர்களையும் இசையில் மயங்க வைத்தது. சுருங்கச் சொன்னால் உலக இயக்கமே நின்றுவிட்டது. அப்போது சாமகானப் பிரியனான வேதநாயகன் விடைமீதமர்ந்து விண்ணில் தோன்றினார். ஆனாயரின் பக்திச் சிறப்பையும் திருக்குழலிசையையும் மெச்சிப் புகழ்ந்தார் என்றும் 'சிவலோகத்தில் குழலூதிய வண்ணம் நம்பால் இருப்பாயாக' என்று அருளுரை புகன்றார். ஆனாய நாயனாரும் இறைவனோடு சிவலோகம் சென்று சிறிது காலம் இன்புற்றிருந்தார்.

பின் கேரளத்தில் வில்வ மங்கள ஸ்வாமிகளாக தோற்றம் கொண்டார். குருவாயூரப்பனை பலமுறை நேரில் தரிசனம் செய்துள்ளார். அக்காலத்தில் ஞானமே ரூபமாகக் கொண்டு ஞானியாகவே திரிந்தார். திவ்ய ஞானத்தைப் பெற்றிருந்த இவரிடம் பல சீடர்கள் உபதேசம் பெற்று பிற்காலத்தில் அவர்களும் ஞானத்தை போதிக்கும். ஞானகுருவாகவே திகழ்ந்தனர். இன்றும் ஞானிகளின் கருத்துக்கள் மலையாள மொழியில் கேரளத்தில் பல்வேறு நூல்களில் உலாவிவருகின்றது.

ஸ்ரீ அமிர்தகடேசுவரர் ஸ்ரீ அபிராமி பிராட்டியார் அழகுற வீற்றிருந்து அருள்சுரக்கும் அமிர்த பூமி திருக் கடவூர். இவ் ஊரின் கண்னென்ற ஒழுக்கமும், நிறைந்த கல்வியும் பரந்த அறிவும், சிறந்த ஆற்றலும், கனிந்த பக்தியும் பொருந்திய அந்தணர் மரபில் ஞானக் கொழுந்தே போல் தோன்றினார் அபிராமிப் பட்டர் கருவிலே திருவுடையராய்த் தலைமுறைத்

தலைமுறையாக வந்து இசைக்கருவியிலே வல்லவராய் அம்பிகையின் அருளானந்தக் கடலில் மூழ்கிச் சக்தி வணக்கத்தில் கருத்தொன்றி நின்ற இவரை இத் திருத்தலத்தில் வாழ் அம்பிகையின் திருநாமத்தைச் சேர்த்து அபிராமி சித்தியெய்தி என்றும் சதாகாலம் பொருந்துவதாகும். ஸ்ரீ அபிராமி அம்மை மீது இவர் கீர்த்தனம் ஒன்றும் பதிகமும் பாடியிருக்கின்றார். இவர் சக்தி பூஜையையும் யோக நெறியும் செவ்வனே பயின்று வந்தார். அதனால் யோக சித்தி எய்தி என்றும் சிதாகாசத்தே அம்பிகையை ஒளிவடிவாகக் கண்டு பேரின்பத்தில் ஆழ்ந்திருந்தார். காலத்தோடு கற்பனை துவாத சாந்தப் பெருவெளியில் துரியாதீதமாய்ப் பரநாத மூலத்தலத்திலே முளைத்தெழுந்த முழுமதியாக அம்பிகையைக் கண்டு அக் காட்சிகளிலேயே மதர்த்து (சுயநினைவற்று) நின்ற பட்டர், அரசர் கேட்ட கேள்விக்கு வாய் குழறிக் கூறியதையும் மெய்யென நிறுவினாள் அபிராமி பிராட்டியார். இச் சம்பவத்திற்காகவே அவர் அபிராமி அந்தாதியைப் பாடினார். அபிராமி அந்தாதியை முழுவதும் முறையுடன் ஓதி வருபவர் இம்மையில் எல்லா நலன்களும் பெற்று மறுமையில் முக்திபேறும் அடைவர் என்பது திண்ணம். இவ் வந்தாதி மோக்ஷ சாதனமாகவே அமைந்தள்ளத. கண்ணும் கருத்தும் எட்டாப் பேரின்பப் பெருநிலையை எளிதாகக் கைகூட்டும் அருந்தமிழ் பாக்கள் சிறு சிறு துன்பங்களைப் போக்கி, முக்தி நெறிக்கு முதற்படியான பக்திநெறியைக் கூட்டுவது ஒரு வியப்பே! ஐந்தாவது பிறவியில் அவர் காட்டிய வழி இன்னும் பின்பற்றப்படுகிறது.

18ஆம் நூற்றாண்டு சதாசிவ பிரும்மேந்திரர் 16ம் நூற்றாண்டில் அவதரித்தார். சோமசுந்தரக் கடவுள் கோயில் கொண்டருளிய மதுரையம்பதியின் விசேஷங் கள் பல. தமிழ்ச் சங்கம் தழைத்தோங்கிய பதி மதுரையே! அப்பகுதியில் ஆந்திர அந்தணர் குடும்பத்தில் சோமநாத அவதானியருக்கும் பார்வதி அம்மையாருக்கும் ஆறாவது பிறவியாக வந்துதித்தார்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் இயற்றிய சந்நியாசி என்ற நூலில் சுகப்பிரமம், இராமகிருஷ்ண மரமஹம் சரின் குருதோத்தபுரி, சதாசிவ பிரும்மம் ஆகியோர் சரீரத்தை மறந்தவர்களாக இருந்தனர் எனக் குறிப்பிட்டு ள்ளார். அத்துடன் தாயுமான சுவாமிகள் சதாசிவ பிரும்மேந்திரரின் சம காலத்தில் வாழ்ந்திருக்கின்றார். கடைசிக் காலங்களில் மௌனியாகவும், அவதார ஞானியாகவும் இருந்த சதாசிவ பிரும்மேந்திராரை அடிகளார் தன்னுடைய மௌனகுருவாகக் கொண்டார் என்பதனை தாயுமானவர் “மௌனகுரு வணக்கம்” என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார். பரமசிவேந்திர சுவாமிகளிடம் உபதேசம் பெற்று 200 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தவர் எனக் காஞ்சி மடலாயக் குறிப்புகள் சிறப்பாகக் கூறுகின்றன.

பூர்வ புண்ணியமும், ஜன்மாந்தர சமாஸ்காரமும் பெற்றிருந்த ஞானிகள் பல திருவிளையாடல்களையும் காட்டியுள்ளார். அஷ்டமா சித்திகளை அடைந்த அவர் அச் சித்திகளைப் பெரிதாக பாராட்டியவரென்றும் அவைகளை அவசியமானபோது தம் இலட்சியமாகிய ஆத்மானுபூதியை அடைய ஒரு சாதனமாகவே பயன்படுத்தி வந்தார். அவ்விதம் சித்து விளையாடல்கள் செய்ததைப் பற்றி பல வரலாறுகள் வழங்குகின்றன. சதாசிவர் கோகுலாஷ்டமி, சிவராத்திரி முதலிய விசேஷ நாட்களில் பல ஷேத்திரங்களில் ஏக காலத்தில் தரிசனம் கொடுத்துள்ளார். அவர் மனதில் அர்ச்சனை சொல்லும்போதே மேலிருந்து புஷ்பங்கள் முறையாக மூர்த்தி மேல் விழுந்துள்ளது. அதே போல் திண்டிவனம் அருகே ஞானிகள் வெட்டுண்ட கையை மீண்டும் ஒட்டிக் கொண்டு சென்றுள்ளார்.

மதுரையில் தேன்றி ஆரூரில் சிலரின் காழ்ப்புணர்ச்சியால் காஞ்சிச் சங்கரரின் ஆணையால் அன்று பிரசாரத்தை நிறுத்தி உடனே மௌனியானவர்.

“மனிதனை மனிதன் என்று கூறுவதில் எந்த உயர்வும் இல்லை. உன்னால் சமுதாயத்திற்கு என்ன பயன் என்று பார்” என்ற கருத்தின்படி சாதி மத வேறுபாடுகளை உடைத்து, சாஸ்திர சமய உணர்வுகளைக் கடந்து, இறையுணர்வு, இறையுணர்வு என்ற ஒன்றே மனிதனுக்கு வேண்டும் என்ற ஞானப் பிரசாரத்தை புரட்சிகரமாக செய்து வரும் சமயம்தான் அவர் மௌனியாக்கப்பட்டார். சண்டமாருதமாக வந்த புயல் ஓய்ந்தது. அனுபவித்த தெளிவை எழுதி எழுதி மௌனப் புரட்சி செய்தார்.

மௌனத்தில் பணி செய்ய இயலாது என்பதால்

பெரும் திரளான மக்கள் முன்னிலையில் உடலை உகுத்து, விதேக கைவல்யம் பெற்றுவிடத் தீர்மானித் தார். உடலை உகுக்க முன் மண்ணில் எழுதிக் காட்டி யது "நான் விதேக கைவல்யடைந்து ஒன்பதாம் நாள் வில்வ மரமாய்த் தோன்றுவேன். நெரூர் நான் மீண்டும் பிறக்கும்வரை ஜீவனுடனேயே விளங்கும். இருபதாம் நூற்றாண்டில் மீண்டும் பிரும்ம ஞானியாக அவதரிப்பேன். நான் நிஷ்டையடைந்த பன்னிரெண்டாம் நாளில் காசியிலிருந்து ஒருவர் ஒரு லிங்கத்தை எனது குகை யில் வைத்து விட்டுச் செல்வார்" என எழுதியுள்ளார்.

அவரின் கூற்றுப்படியே காசியிலிருந்து பன்னிரன் டாவது நாள் ஒரு பாணலிங்க் நெரூருக்கு வருகின்றது. குருநாதனே அதைப் புதுக்கோட்டை மன்னன் குடும்பத் தின் முன்னிலையில் குகையில் வைத்த பிரதிஷ்டை செய்து உயிர் கொடுக்கிறார். பதின்மூன்றாவது நாள் ஊர் மக்களின் முன் பாணலிங்கத்தன் பின்னே ஒரு வில்வ மரம் காட்சிதருகிறது. ஞானிகள் அசரீரியாகப் பலரின் காதுகளில் மொழிகிறார். "நான் ஜீவனுடன் வில்வ மரமாவேன். அதனடியில் எனது ஆசாரியான் ஒரு லிங்கத்தைச் செய்து வைப்பார். மண் லிங்கம் எனது தேகமென்ற உடல், எனது ஜீவ குகை வில்வமரம், எனது ஆன்மா என்ற சூட்சும சரீரம் பாலஸ்தீனத்தில் வாழும்"

இவரது குகைக் கோவில் கரூர்க்கருகில் நெரூரில் விளங்குகின்றது. வைகாசி மாதம் தசமி திதியன்று பெரும்திரளான மக்கள் முன்னிலையில் நிஷ்டை அமர்ந்து உடம்புடன் மறைந்தார்.

இவரின் குருவான காஞ்சி சங்கரர் பரமசிவேந்திரர் குகையின் முன்னே ஈரமான தரையில் சீடன் பிரும்மேந் திருக்குச் சில விஷயங்களை பெரிய எழுத்துக்களில் எழுதிவைத்தார்.

"காலமெல்லாம் அடங்காத சீடனாய் வாழ்ந்த பிரும்மேந்திரா என்னை பார்ப்பதற்கு முன்னாலேயே மண்ணில் ஜீவனுடன் அடங்கிவிட்டாய்". நான் உன்னை பண்டிதர்களின் தூண்டுதலினால் திருவாரூரில் மௌனியாக இரு என்றேன். அதை இறைவனின் ஆணையாய் ஏற்று கடைசிவரை மௌனத்திலேயே அடங்கிவிட்டாய். தக்ஷிணாமூர்த் தியை உன்னுள் கண்டேன். பூரணம் அடைந்த பிரும்ம ஞானியாகிய நீ குகையில் இருந்தபடியே மீண்டும் என் வாக்கிற்கு கட்டுப்படு என்று எழுதியுள்ளார்.

இன்றும் அவரின் குகைக்கோயில் மானா மதுரை, நெரூர், கராச்சி ஆகிய இடங்களில் விளங்குகின்றது. வைகாசி தசமியில் லட்சோப லட்சக்கணக்கான மக்கள் பிரும்மேந்திரருக்கு ஆராதனை செய்கின்றனர்.

அதுமட்டுமன்றி ஸ்ரீ தத்தாத்ரேயருக்கு மைசூரில் தனியான ஆலயமும் உள்ளது. மதுரையில் உக்கிர பாண்டியருக்கு விழா எடுக்கப்படுகின்றது. மயிலையில் 63 நாயன்மார்களுக்கும் ஒரே நேரத்தில் உற்சவம் நடாத்தப்படுகின்றது. அதில் ஆனாயருக்கும் சிறப்பான பூஜை செய்யப்படுகின்றத. குரு பூர்ணிமா தினத்தில் வில்வ மங்கள் சுவாமிகளுக்கு சிறப்பான பூஜைகள் சேரளத்தில் எடுக்கப்படுகின்றன. அபிராமி அந்தாதியை கோடிக்கணக்கான மக்கள் பாடித்துதிக்க, திருக்கடவூரில் பட்டருக்குப் பட்டாடை உடுத்தி, செய்யும் அபிஷேகங்களைக் காண எமது கண்கள் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நெரூரில் காசி விஸ்வநாதரும் காசி விசாலாட்சியும் வீற்றிருக்க, வில்வமரமும் அதன் கீழுள்ள பிரும்மேந்திராள் தேகம் என்னும் லிங்கத்ததுக்கும் நித்திய பூஜைகள் நித்தம் நடைபெற்று வருகின்றன.

இத்தனை பெருமைகளையும் கொண்ட பகவான் பிரும்மேந்திரர் சென்னை மயிலையில் பிரத்தியட்ச தெய்வமாகத் தோற்றம் கொண்டுள்ளார். விட்ட பணியைத் தொடர ஞானச்சேரி என்ற பக்தர்களின் அமைப்பில் நுழைந்த ஞானிகள், கடந்த 18 ஆண்டுகளாகப் பாமர மக்களுக்குப் புரியும் வண்ணம் ஜாதி, மத எண்ணங்களையும் சமய சாஸ்திரங்களையும் நீக்கி மேலான இறையுணர்வினை உணர்த்தி வருகின்றார். தெளிவுடன் வாழ்க்கை நடாத்த இறையுணர்வு அவசியம் என்ற எண்ணத்தை நம்முன் தூண்டி விடுகிறார். வாயமுதம் ஞானிகளின் வாயிலாக சொற்பொழிவுகளாகவும் ஞானிகளின் பாடம் என்ற வகையிலும் சமுதாயத்துக்குத் தெய்விக சொற்கள் அற்புத செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன.

"பிரதோஷ காலம்" என்பது மக்களுக்கு இறைவன்

கொடுத்த ஒரு பிரசாதம். இதனை மக்களுக்கு எடுத்துக்கூறி ஒவ்வொரு மனிதனையும் இப் பூஜையில் விரும்பிய இடத்தில் ஈடுபடக்கூறி பூஜையைச் செய்யும் விதத்தையும் காட்டித் தருகின்றார். இங்குள்ள அருள்மிகு பசுபதீஸ்வரருக்கு நாம் ஒவ்வொருவரும் நேரிடையா வில்வார்ச்சனை செய்யலாம். அதேபோல் வைஷ்ணவர்கட்கு அருள்மிகு வரதராஜப் பெருமாளும் வீற்றிருக்கின்றார். இன்னும் மற்ற மதத்தவர்கட்கும் அவரவர்கள் எண்ணியவாறு அவரவர்கள் விரும்பும் இறைத் தோற்றங்களுக்கு வழிபாடு செய்யலாம். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று மேடைப் பேச்சில் முழங்காமல் செயல்பட்டால் முழங்குமிடம்தான் ஞானச்சேரி. ஞானிகள் சென்னை கேளம்பாக்கம், திருவெளிச்சையில் சர்வமத சமரச ஆலயம் ஒன்றையும் நிர்மாணித்துள்ளார்.

1. அன்னதானம் ஒரு வேளைக்குத் திருப்தி
2. கல்விதானம் ஒரு பிறவிக்குத் திருப்தி
3. ஆத்ம ஞான தானம் எல்லா பிறவிக்கும் திருப்தி

எம்மை எல்லா பிறவிகளிலும் சந்தோஷத்துடன் வாழ வைக்கவே எமக்கு இறைவன் பகவான் பிரும்மேந்திரரை ஒரு பிரசாதமாக தந்திருக்கின்றார்.

கோடை வெப்பத்தில் நடந்து களைத்து கால்கள் குளிர்ந்த ஆற்றுத் தண்ணீரில் நனைந்தவுடன் சுகம் தெரியும். சிறிது நேரத்தில் குளித்து விட்டே போகலாம் என்றும் தோன்றும். தண்ணீர் காலில் பட்டதைப் போன்று உங்கள் அறிவில் எங்காவது ஒரு இடத்தில் ஞானருசி பட்டால் போதும் பிறகு நீங்களே மூழ்கி விடுவீர்கள்.

'ஆடு நனைந்தால் ஓநாய் அழாது' நீ எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும் உன் கஷ்டத்தைப் போக்கப் பிறர் முன் வருவார்கள் என்று எண்ணுவதும் ஏமாந்தபின், உலகை ஏசுவதும் தவறு.

பார்க்கும் பொருளிலெல்லாம் பரம் பொருளைக்கண்டு ஞானம் என்ற தெளிவை இயற்கை யாகக் கொண்டு பரம்பொருளின் அனுபவமாகவே விளங்கும் நெரூர் ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரரை இன்றும் லட்சோபலட்ச மக்கள் ஆராதனை செய்கின்றனர். ஒருவருளும் திருவளும் வாய்க்கப் பெற்றவர்கள், இவ்வையகத்தில் வாழும் போது அவர்களை துன்பம் நெருங்குவதில்லை. நாமும் எமது துன்பத்தீயிலிருந்து விடுபட எல்லாம் வல்ல பகவான் பிரும்மேந்திரரை அணுகி அனுக்கிரகத்தைப் பெற்று உயருவோமாக.

"தில்லையம்பலம் " "திருச்சிற்றம்பலம்" "கருத்தில் சஞ்சலம்" "திருத்தித் தந்தருள்"
"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்"

-திருச்சிற்றம்பலம்-

"எல்லா மதங்களும் சமம் என்று ஆதிசங்கரர் கூறவில்லை. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மதமாற்றத்தைத் தடுத்தார்கள். சைவத்தைக் காப்பாற்றினார்கள்."

- சுவாமி தந்திரதேவா -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# மெய்யடியார்கள் சொல்லும் பொய்யும் மெய்யாகும்

திருமதி வாமதேவன்
நாவலப்பிட்டி

உலகம் தோன்றிய காலந்தொட்டு முனிவர்கள், சித்தர்கள், நாயன்மார்கள், அறிவாளிகள் வருவதும் போவதுமாய் காலங்கள் நகர்ந்து கொண்டேயிருக்கிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் தான் நம் வழிபாட்டுக்குரி யவை என்பதுதான் நம் முன்னோர் வகுத்த வழி. "குருவில்லா வித்தை பாழ்" என்பதற்கேற்ப நாம் ஒரு குருவின் உபதேசப்படி நடந்தால்தான் இறைவனை அடையலாம். எத்தனையோ சித்தர்மார் தோன்றினாலும் அனைவருமே தங்கள் சித்துக்களை வெளிப்படுத்துவ தில்லை. ஒருசிலர் காடுகள் மலைகளில் வாழ்ந்து தியானத்தில் மூழ்கி இறைவனடி சேர்ந்து விடுகிறார்கள். ஒருசிலர் நாட்டில் வாழ்ந்து மக்களோடு சேர்ந்து தாங்களும் மானிடராய் நடித்து மக்களை பாவ வழியில் செல்லாது தம் வழிக்கு இழுத்து ஒருசில சித்துக்களையும் காட்டி அருள் பரிபாலிக்கின்றார்கள்.

அப்படி மக்களோடு சேர்ந்து வழி காட்டியவர்களில் ஒரு மாணிக்கமே எங்கள் குருநாதன் யோகசுவாமிகள் ஆவார். அவரை அடியேன் கண்ணால் காணாது போனா லும் அவரின் அருளைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக் கிறோம். எனது தந்தை அவரைப் பின்பற்றியதால் எதற்கும் குருநாதன் இருக்கிறார் என்றே சொல்லுவார். அவருக்கும் ஒன்றைப் பற்றியும் கவலையில்லை; பயமுமில்லை. அதேபோல் என் குருநாதனின் படத்தை நிஜமாக என்னோடு இருப்பவராகவே நினைத்து ஒன்றுக்கும் பயப்படுவதில்லை. இப்படி இருக்கும்போது நானும் என் வயோதிபத் தாயாரும் ஒரு வீட்டில் தனிமையில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. ஓர் இரவு இரு கள்வர்கள் வழிதவறிய ஒரு வியாபாரியை வழிகாட்டுவதாகக் கூட்டிக்கொண்டு வந்து எங்கள் வளவுக்குப் பக்கத்தில் வைத்து அவருடைய பொருட்க ளையும் பணத்தையும் பறித்தார்கள். அந்த வியாபாரி தன்னை விடுவித்துக் கொண்டு அவ்வொழுங்கையின் முன்பக்க வளவுக்குள் ஓடி அவ்வழியால் தெருவை அடைந்து பொலிஸ்ரேஷனுக்குப் போய் முறையிட்டு அவர்களின் உதவியோடு ஜீப்பில் அவ்வொழுங்கைக்கு வர ஒழுங்கு செய்திருக்கிறார். அவர் தப்பி முன்வளவால் ஓடியதும், இத்திருடர் இருவரும் இருட்டில் ஒன்றும் செய்ய இயலாமல் எங்கள் கேற்றடியில் வந்து அம்மா என்று அழைத்தார்கள். நான் போய் விசாரித்ததில், அவர்கள் தங்களை ஒரு திருடன் ஏமாற்றிப் பொருட்களைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும், ஒரு ரோச்சும் யாராவது ஆண் உதவியும் தங்களுக்குத் தரும்படி கேட்டார்கள். ஒரு கல்லில் இரு மாங்காய் மாதிரி. ஒன்று எங்கள் வீட்டில் ஆண்பிள்ளை இருப்பதை அறிதல், மற்றது ரோச் அவர்கள் கையில் போய்விட்டால் எங்கள் வீட்டுக்குள் புகுந்தும் களவு எடுக்கலாம். அவர்களின் திட்டத்தை எனக்கு என் குருநாதன் தான் உணர்த்தினார். நான் உடனே ஒரு பொய்தான் சொல்லவேண்டி ஏற்பட்டது. ஆபத்திற்குப் பாவமில்லை யல்லவா? தம்பிமாரே சற்றுத் தாமதித்து நில்லுங்கள், என்னுடைய தம்பி ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர், அவர்தான் ரோச்சையுங் கொண்டுபோய் விட்டார். இன்னும் 10 நிமிடத்தில் வந்துவிடுவார். உங்களுக்கு வேண்டிய உதவியும் செய்வார் என்றேன். இந்நேரம் பொலிசுக்குப் போன வியாபாரியும் அவ்வழியால் ஜீப்பில் வர, இக் கள்வர்களும் அவ்வழியால் அவர்கள் முன்செல்ல வியாபாரி இவர்களை பொலிஸ்காரர்களுக்கு காண்பிக்கச் சரியாயிருந்தது. கள்வர்களைப் பிடித்த பொலிஸ்காரர் அந்த இடத்திலேயே வைத்து அவர்களை அடித்து வியாபாரியின் பொருட்களையும் திருப்பி எடுத்துக்கொடுத்து கள்வரை பொலிஸ் ஸ்ரேஷனுக்கு

ஏற்றிச் சென்றுவிட்டனர். கள்வரைப் பிடிக்கும்படி நான்தான் சொல்லியனுப்பியதாக அவர்கள் கருதியதால் பின்பு அக்கள்வர் அவ்வொழுங்கையுள் வருவதே இல்லை. நான் அவர்களை வெருட்டச் சொன்ன பொய் மெய்யாகி விட்டது. நற்சிந்தனை மூலம் என் குருநாதன் எவ்வளவோ விஷயங்களை இரத்தின் சுருக்கமாக விளக்கியிருக்கிறார்கள். வாழ்க்கையும் வழிகாட்டலும் என்ற புத்தகத்திலும் எவ்வளவோ விஷயங்களை விளக்கியிருக்கின்றார்கள். வாழ்க எம்குருநாதன்! வளர்க சிவதொண்டன்!

சித்தர்கள் மக்களோடு வாழ்ந்து வழிகாட்ட வந்தவர்கள். சிலவேளைகளில் தங்கள் சித்துக்களை மக்களுக்குக் காண்பிப்பார்கள். இறைவன் தங்களிலிருப் பதை மக்கள் அறிதற்கு இதுவுமொரு வழியாகும். கற்கண்டை உமிழ்பவர்க்குத் தான் கற்கண்டின் அருமை தெரியும். குருவின் அன்பையும் அருளையும் பெற்றவர்களுக்குத்தான் தன் குருவின் அருமை விளங்கும். சீனக்காரத்தை வாயுள் போட்டு ஏன் கற்கண்டு இனிக்கவில்லை என்று சொல்ல முடியுமா? இதேபைல் போலி வேஷதாரிகளை நம்பி ஏமாந்து, நிஜக்குருவின் அருமையை இழக்கலாமா? சைவ மக்கள் வீடுகளில், ஒருநாளைக்கு ஒரு முறையாவது சிவபுராணம் பாராயணம் பண்ண வேண்டும் என்பதுதான் எம் குருநாதனின் ஆணை. அதன்படி அடியேன் காலை மாலை இரண்டுநேரம் பாராயணம் பண்ணு வதால்தான் நாம் நினைக்கும் காரியங்கள் நடந்துகொண்டு வருகின்றது. இது எம் சொந்த அனுபவம். 'நான்' என்று கதைப்பதும் ஆணவத்தைக் குறிக்கின்ற படியால் 'நாம்' என்று கதைக்க வேண்டும் என்றும் சொல்லியிருக் கின்றார்கள்.

-திருச்சிற்றம்பலம்-

பிருமேந்திரனின் "பகவத் ஸாரம்" தத்துவநூலிலிருந்து........

- முதற்குழித்தட்டு தீபத்தை ஏற்றி இறைவனுக்குக் காண்பி. எனது கண் எரிகின்ற உனது முதல் இந்திரியம் இறைவா என்று சொல்.
- காது எனது இரண்டாவது இந்திரியம். இறைவா உனது காதாக இந்தத் தட்டில் எரிகிறது என்று சொல்.
- மூக்கு மூன்றாவது இந்திரியம். முழுக்க முழுக்க இறைவா உனக்கே சொந்தம். இது தட்டில் எரிகிறது பார் என்று சொல்.
- நாக்கு உனது நான்காவது இந்திரியமே. எனது நாக்கு என்ற நான்காவது இந்திரியமாக பிறந்து வந்துள்ளது. இவையிரண்டும் ஒன்றாக இத்தட்டில் எரிகிறது பார் என்று சொல்லி ஆராதி.
- ஐந்தாவது எரிகின்ற குழித்தட்டு. இது எனது தொடு உணர்வு என்ற இந்திரியங்களே. இவையனைத்தும் எரிந்து உனக்கே ஆகட்டும் என்று சொல்லிக் காட்டு.
- சுவாமியின் முன் காண்பிக்கப்படுகின்ற எரிகின்ற கும்பதீபம் நானே. மூலாதாரத்தில் இருந்து கும்பித்து எழுந்த ஆத்மா குண்டலினி ஜோதியாக ஆறு ஆதாரங்களின் வழியாக மேலே புறப்பட்டு உச்சந்தலையில் உள்ள ஓட்டையின் வழியாக உனது யோக தீபத்தைக் காண்பி.

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# ஞானமது கைகூடும் ஞானத் திருத்தலம்

திருமதி கனகமாலினி சுப்புரத்தினம்
ஸ்ரீ ரங்கம், திருச்சி.

ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரர் திருத்தலம் நெரூரில் அமைந்துள்ளது. இங்கு துவாதசாந்தப் பெருவெளியில் சதாசிவ பிரம்மம் எழுந்தருளியிருக்கிறார். துவாதசாந்தம் எனில் 12 அங்குலம். அங்குலத்தை அடியாகக் கொண்டு சிவலிங்கத்தை அமைத்தனர். வில்ல விருட்சம் தானாக உண்டாகி 10 அடி உயரம் நேரே வளர்ந்து மேலே போய்க் குடையாக விரிந்திருக்கின்றது. அடிமரம் மூன்றாகப் பிரிந்திருக்கின்றது. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்று பிரிந்திருக்கின்றது. ஒரே பரம்பொருளிலிருந்து தான் மும்மூர்த்திகளின் அவிர்ப்பாலம் உண்டாகியிருக்கிறது. மேலே போய் விரிவது உலகாகாரமாக விரிந்தது என்பர்.

பாருருவி நீரெரிகால் விசும்புமாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவரமே யென்ன நின்ற
இமையவர் தம் திருவுருவே றெண்ணு ம் போது
ஒருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்று மாகடலுருவ மொத்து நின்ற
மூவுருவம் கண்டபோ தொன்றாஞ் சோதி
முகிலுருவ மெம்மடிகள் உருவந்தானே.
-திரு நெடுந்தாண்டகம்

பார் என்றால் மலை; மலை மண்தானே. மணி, நெருப்பு, காற்று, தண்ணீர், ஆகாயமாய் எல்லாப் பொருள்களாக விரிந்தது மீண்டும் பரம்பொருளாக மாறிவிட்டது. பிரம்மம் சமாதி அடைந்த இடத்திலே வில்வ விருட்சம் இந்த இலக்கணத்தோடு அமைந்திருக்கிறது. பூஜைகள் நித்தம் நடைபெற்று வருகின்றன.

மானாமதுரை; கராச்சியிலும் நெரூர் போலவே குகை அமைக்கப்பட்டது. இரு உடல்களைச் சாமக்கிரியைகளால் சாஸ்திரிகள் மூடினார்கள். வில்வ விருட்சமும் அவ்விடத்தே தோன்றியது. ஆக சதாசிவ பிரம்மம் தம்மிடம் ஆழ்ந்த பக்தி செலத்ததிய அன்பர்களுக்காக மூன்று உடல்களை மூன்று இடங்களில் உகுத்துள்ளார். ஸ்தூல உடல், சூட்சும உடல், காரண உடல் ஆகிய மூவுடல்களை மூன்று இடங்களிலே ஒரே சமயத்தில் உகுத்துள்ளார். இதனை சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீட ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ம பாரதி மகாசுவாமிகள் தமது ஆரிய விருத்தம் என்ற பாடல்களில் கூறியுள்ளர். மீண்டும் நெரூர் ஸ்ரீ சதாசிவ பிருமேந்திரராக தோற்றம் கொண்டுள்ளார்.

-திருச்சிற்றம்பலம்-

சந்தேகத்துடன் பூஜை செய்யும் மனிதனுக்கு அவன் வீட்டளவில் தான் செல்வாக்கு. சந்தேகமே வராமல் இறைவனுக்கு அனைத்தும் என்று சொல்லும் பக்தனின் செல்வாக்கு உலகமெல்லாம் பரவுகிறது. இறைவனின் அருள் உன் பக்தியைப் பொறுத்தது.
- ஞானச்சேரி ஞானிகள் -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# நீதியே சைவம்

**திருமதி விஜயலெட்சுமி ராமஜெயம்**
அறநெறிப் பாடசாலை ஆசிரியை
கிறெய்ஹெட் தோட்டம், உடஹந்தென்ன

சைவநெறி சைவநீதியின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. நீதிக்குப்புறம்பான எதுவும் சைவ நெறியில் இல்லை. நீதிதான் சிவன். நீதிதான் இறைவன். நீதிக்கு மேற்பட்டது எதுவும் இல்லை. நாம் ஒவ்வொரு வரும் எந்த அளவிற்கு நீதியைச் சார்ந்திருக்கிறோமோ அந்த அளவிற்குக் கடவுளைச் சார்ந்திருப்பவர்கள் ஆகின்றோம். நீதியைப் புறக்கணிப்பவர்கள் கடவுளைப் புறக்கணிக்கின்றனர். சிவநிந்தைக்கு ஒப்பாகும். கோயிலுக்குச் செல்லலாம். திருவிழாக்கள் நடத்தலாம். சைவ வேடங்கள் தரிக்கலாம். கோயில் அமைத்துக் கும்பாவிசேஷங்கள் செய்யலாம். ஆனால் இவர்கள் நீதியைச் சேவிக்வில்லையெனில், ஒரு போதும் சைவர்கள் ஆகமாட்டார்கள். சைவர்கள் எப்பொழுதும் நீதிமான்களாக இருப்பர். சைவர்களுக்கு நிதிபெரி தன்று நீதியே பெரிது ஆகும். எல்லா உயிர்களும் இருப்பது தான்நீதி. மனநீதி, வர்த்தகநீதி, யுத்தநீதி, அரசநீதி, குடும்பநீதி, சமூகநீதி, கணவனின்நீதி, மனவியின்நீதி, குழந்தைநீதி, உத்தியோகநீதி, போக்குவரத்து பிரயாணநீதி, வழிபாட்டுநீதி, தனிமனிதநீதி, கருத்து அபிப்பிராயநீதி, விரும்பிய இடத்தில் வசிக்கும்நீதி, மதானுஷ்டானர்கங்களைக் கடைப்பிடிக்கும் நீதி, என்பனவே மானுட ர்கட்குரிய நல்ல நீதிகள். எனவே நீதி இயற்கை இரண்டும் தொடர்புடையன. ஆகவே நீதியையும் இயற்கையையும் இணைத்து இன்றும் நீதி உரைப்பது சைவம். நீதியல்லாதவை பொய். பொய் என்பது அநீதி. அநீதி அறத்தை வெறுப்பது. நீதி அறத்தைப் பேணுவது. எனவே அறவழிப்பட்டது சைவநீதி. அதனை 'மேன்மை கொள் சைவநீதி' என்பர்.

இவ்வண்ணம் அனைத்திலும் அங்கிங்குகானாதபடி வியாபித்திருப்பது நீதி. ஒழுங்கு, முறைமை, நேர்மை, உண்மையாக நீதி விளங்குகிறது. நீதி மாறாதது. நீதி எப்பொழுதும், எவ்விடத்திலும், எந்நிலையிலும் ஒரே தன்மையதாய் உள்ளது. அது மாற்றத்திற்குள்ளாவதில்லை. அழிவதும் இல்லை. நீதியைச் சார்ந்து மனிதன் நிற்குமளவிற்கு அவன் வாழ்க்கையில் உயர்வை அடைகிறான். நீதியை விட்டு விலகியிருக்குமளவு அவன் தன்னையே அழித்துக் கொள்ள வழிகேடுகிறான்.

நீதி இப்பிணபஞ்சம் முழுவதிலுமே செறிந்து காணப்படுகின்ற போதிலும், எல்லோர் கண்ணுக்கும் எளிதில் புலப்படாமலே இருக்கின்றது. ஏன் பிரமாவும் விட்டுணுவும் கூட இந்த நீதியைத் தேடி ஆகாயம் வரையும், பாதாளம் வரையும் சென்றார்களே? மாலும் அயனும் காணாத நீதியே, என்று மணிவாசகப்பெருமான் சிவபெருமானை நோக்கி விளிக்கின்றார்.

பூமியில் நின்றுகொண்டு பூமியைத் தேடுவது போலவும், மலையில் நின்ற கொண்டு மலையைத் தேடுவது போலவும், விண்ணில் நின்று கொண்டு விண்ணைத் தேடவது போலவும் அமைந்தது, பிரமவிட்டுணுக்கள் நீதிக்குள் நின்று கொண்டு நீதியைத் தேடியதான அந்தநிகழ்ச்சி. இது விந்தையிலும் விந்தையல்லவா? ஆம் இந்த விநோதச்செயல் பிரமவிட்டுணுக்களின் அறியாமையால் எழுந்த விபரீதம். எங்கும் நிறைந்த நீதியை காணவிடாது பிரமாவையும் விட்டுணுவையும் தடுத்தவை எவை? அவர்கள் இருவரிடமும் காணப்பெற்ற நான், எனது, என்ற அகங்கார மமகாரங்கள் தான், எங்கும் பிரகாசமாகவும் பிரத்தியட்சமாகவும் விளங்கிய நீதியாம் பரம்பொருளை அவர்களின் கண்களுக்குப் புலப்படாதவாறு தடுத்தன. எங்கே செருக்கும், கர்வமும், அகந்தையும், ஆணவமும் முனைப்பாக எழுகின்றனவோ அங்கே நீதி மறைந்து விடுகின்றது.

பிரமனும், விட்டுணுவும் தான் பெரிது, நீ பெரிது என்று அகந்தை கொண்டு போராடினார்கள். அகந்தை நீதியைப் பார்க்க விடாது. அவர்களின் கண்களுக்குத் திரையிட்டுவிடும். அதனால் நீதியின் ஒரு கூறு தன்னிலும் அவர்களால் காணப்படவோ, அணுகப்படவோ முடியவில்லை. இவ்வாறு களைத்து அலுத்துச்

செய்வதறியாது நின்றபோது இறைவன் தோன்றி அவர்களுக்கு அறிவொளியைக் கொடுத்தார். அவர்களின் அறியாமை இருள், அந்த அறிவுப் பிரகாசத்தின் முன் நிற்கமுடியாது அகன்றது. பிரம விஷ்ணுக்களிடம் இரந்த அகந்தையும், கர்வமும் நீங்கின. அப்பொழுது தான் எத்தனையோ காலம் தேடியும் காணமுடியாத நீதியைக் கண்குளிரக் கண்டனர். நீதியே சொரூபமான பரம்பொருளை அறிந்தனர். நீதியும் பரம்பொருளும் ஒன்றென உணர்ந்தனர். உண்மை நிலை தெளிந்தனர். நீதிக்குத் தலைவணங்கினர். நீதியைச் சார்ந்து நிற்பவர்கள் தான் சைவசமயிகள். தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பரந்த நோக்கிலேயே சைவநீதி உலகமெலாம் விளங்கவேண்டும் என்றனர். நீதி நிலைக்கும்போதுதான், உலகில் சமாதானமும், சாந்தியும் அமைதியும் நிலைகொள்ள வழிபிறக்கும். நீதியை நிலைநாட்டவதற்குச் சாத்வீக குணம் மேலோங்கி விளங்கவேண்டும். சைவம் போதிப்பது சாத்வீக குணங்களையே.

இன்று நீதியைத் தேடாது நிதியையே மக்கள் தேடி அலைந்து வாழ்கின்றனர். ஆவேசத்தோடு நிதியைத் தேட முண்டியடிக்கின்றனர். நீதியைக் குறுக்கி நிதியைப் பெருக்கும் முயற்சிகளே பெரிதும் நடைபெறுகின்றன. இவ்வாறு பெறப்படுகின்ற நிதி, மனிதர்களுக்குக் செருக்கையும், கர்வத்தையும், தலைதடுமாற்றத்தையும், மயக்கத்தையும், நோயையும், அவமதிப்பையும், நிந்தனையையும், இகழ்ச்சி மனப்பாங்கினையும் வழங்குகின்றது. நீதியை மறைக்கின்றது. நிதி மிகும்போது நீதி மறைவது வாழ்க்கை முறையாகிவிட்டது. எத்தகைய குற்றங்களையும் புரிந்தபின்னர் அவற்றை நியாயப்படுத்தவே நிதி உதவுகின்றது. நீதிவேறு, நியாயம் வேறாகத் தோன்றுகின்றன. வாழ்க்கைக்கு நிதி தேவை. ஆனால் நிதியே வாழ்க்கையாக இருக்கக் கூடாது. வாழ்க்கை யின் நோக்கமே அறம்தான். இதனால் தான் "இல்லறம்" என்றார் வள்ளுவப் பெருமான். நிதி நீதியின் பாற்பட்டதாக அமையவேண்டும். நிதி நீதியை நிலைநிறுத்த உதவவேண்டும்.

"நீதி" போதும் என்ற உணர்வை வளர்க்கும். நிதி "போதாது" என்ற அவாவை மேலும் ஆவேசத்துடன் பெருக்கும். நீதியைப் பாதுகாக்கும் கவசங்கள் சிவசின்னங்களாகும். திருநீறு செம்மையாகிய நீதியை வளர்க்கும். திருநீறே சைவநீதியை வளர்க்க உதவும் குறியீடு. மந்திரமும், தந்திரமும், மருந்துமாக உடல் நோய்களைத் தீர்க்கவும் மனத்திலே மகிமையை விளங்கவைக்கவும் உதவுவது திருநீறு. திருநீறுதான் செல்வம். சைவர்களுக்கு "நீறு" தான் "நிதி" அது "நீதி" யை வளர்க உதவுகிறது. இன்று நெற்றியிலே "நீறுபூசுவது" சைவத்துக்கு மேன்மை என்று நினைத்துச் சிலர் "மன அழுக்குகளை" வளர்த்துக் கொண்டு போலிச் சைவர்களாக வாழ்கின்றனர். இன்னுஞ் சிலர் திரநீற்றினை ஒருவரால் நிலத்தை நோக்கியவாறு பூசி அலங்காரம் என்று நினைத்து அழிக்கின்றனர். மேலும் சிலர் திருநீற்றைத் தரித்துக் கொண்டு "பஞ்சமாபாதகம்" புரிகின்றனர். வேறு சிலர் திருநீறே பூசாது வெறுத்து வெறுஞ் சைவர்களாக முகத்தில் எண்ணைவழிந்தாற் போற் திரிகின்றனர். "அகத்தின் அழகு முகத்திற் தெரியும்" என்பதால் "உள்ளம்" செம்மைபெறுவதே நீதி, நிதி, உண்மை. அதற்காகவே சைவம் திருநீற்றைக் கொண்டு உயரறங்களைப் போதிக்கின்றது. திருமுறைகள் திருநீற்றையே சரியான சாதனம் என்று விதந்துரைக்கின்றன. எனவே இப்போது யார்நீதிவான்? எது நீதி? நீதியின் இலக்கணம் என்ன? எனவே உயர்ந்த தத்துவங்களையும், தகைமைகளையும் எடுத்துரைக்கும் சைவதத்துவங்களை அறிந்தும், தெரிந்தும், புரிந்தும், மகிழ்ந்தும் ஏற்று "நீதி" வார்வு வாழ்வது மிகமிகக் கடினமான நடைமுறையாகும். இதனாலேயே சிவ வணக்கம், சிவவழிபாடு, சிவதத்துவம் "கடினம்" என்ற கொள்கை உருவாகியது. இதனாலேயே எளிமை வழிபாடும் சிறுதெய்வவழிபாடுகளும் பெருகின. முறைகள் பிறழ்ந்தன. கட்டுப்பாடுகள் நெகிழ்ந்தன. சைவநீதி மறைந்தது. மனிதர்கள் மறந்து கெட்டொழிந்தாலொழிய என்றும் மங்காது எப்பொழுதும் கருணைபுரிந்து மனிதர்கள் வாழ உறுதுணைபுரிவது திருவருளாகிய பரஸ்பரங்கருணையேயாகும். அதுவே சைவநீதியின் உயர் பயன். எனவே திருவருள் வழி நின்று வாழ்வதே சைவர்களத கடமையாகின்றது. அதுவே நீதி.

-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# ஞானச்சேரி ஸ்ரீ யோக ஆனந்த மயி மாதா



கடவுளைக் கண்ட துண்டா? என்று கேட்டுப் பலரிடமும் சென்ற விவேகானந்தருக்கு ஆம் பிள்ளாய். கடவுளைக் கண்டுள்ளேன். உனக்கும் காட்டுவேன் என்று கூறி கடவுளை அவருக்குக் காட்டியும் கொடுத்தார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் . இது நூறு வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். தக்க பக்குவமுள்ளவர்களுக்கு அப்படிக் கடவுளை காட்டவும் மற்றவர்களுக்கு வாழ்க்கைப் பிரச்சனை. நோய் துன்பம் உலக அல்லல் என அவரவர்க்குரிய சிரமம் எதுவானாலும் அதை அறவே அகற்றி அவர்களை ஆண்டவன் சந்நிதியில் அமர்த்தவும் வல்ல ஒருவரை நாம் இப்போதும் காணலாமே. யார் தெரியுமா? அவர்தான் "ஸ்ரீ மாதா யோக ஆனந்த மயி". கருணையுள்ளம் கொண்ட ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் அம்சம் அவர் அன்புள்ளம் கொண்ட அகிலாண்டேஸ்வரி. மாங்கல்யம் காக்கும் மகேஸ்வரி பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவர் மனமுருகிப் பாடப் பாட சகல ஜீவராசிகளும் அந்த நாத பிரம்மத்தில் தன்னுடலையும் மறந்து விடுவதைக் கண்குளிரத் தரிசிக்கலாம்.

எவ்வித கட்டுப்பாட்டையும் விரும்பாத அன்னை பிச்சைக்காரன் முதல் கோடிஸ்வரன் வரை குஷ்டரோகி முதல் அழகு மேனி படைத்தவர் வரை யார் வந்தாலும் நம் கண்ணில் படும் காட்சி என்ன தெரியுமா? அவர்களை அன்பால் அரவணைத்துத் தம் மடியில் வந்தவரது சிரசை வைத்துத் திருக்கரத்தால் தடவிப் பாவ வினைகளைத் துடைத்துத் தள்ளும் காட்சியே. அம்மா ஸ்ரீ இராஜராஜேஸ்வரியாக காட்சி கொடுத்து அவரவர் தீ வினையைக் களைந்து புதிய ஜீவனாக மாற்றிப் புதுப் பிறவியைத் தந்து விடுகிறார். இந்த உலகத்தில் பெற்றெடுத்த தாயும் செய்யாத உதவியை காட்டாத கருணையை, அன்பை ஞானச்சேரி அம்மாவிடம் பெறலாம். இது என்குறுகிய கால அனுபவம்.

ஆதி தத்தாத்ரேய சீடர்குழாத்தில் தோன்றி நெரூர் சதாசிவ பிரும்மேந்திரரிடம் ஸ்பரிச தீட்சையுடன் ஸ்ரீ மாதா யோக ஆனந்த மயி என்கிற தீட்சா திரு நாமத்தையும் பெற்று மக்களின் பக்திக்காக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு

பூஜையும் நிகழ்த்தி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியையும் மேருவையும் பிரதானமாகக் கொண்டு பக்தர்களுக்கு அனுபவ அருளை வழங்கி வருகின்றார்கள். செவ்வாய் தோறும் இராகுகால பூஜை, முழுமதி நன்நாளில் திருவிளக்கு பூஜை, வெள்ளி தோறும் அம்பாளுக்கு சிறப்பான அபிஷேகம் போன்றவைகளுடன் சனி ஞாயிறு நாட்களிலும் விஷேட அபிஷேகங்கள் மூலம் மெய்யன்பர்க ளுக்கு சிறப்பான பலனளிக்கின்றார்கள். அம்மாவை தரிசித்த மெய்யன்பர்கள் தியான நிலை, பரவசநிலை அடைந்து பல தெய்வங்களின் காட்சிகளை கண்டு அனுபவித்து வருகிறார்கள்.

தூய அன்னையின் அருளுரைகள் அற்புத சக்தி வாய்ந்தது. மனிதன் பல எண்ணங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இறைவனை மறந்த நிலையில் வாழும் அவன் பல பிறவிகளை எடுக்க வேண்டியுள்ளான். ஒருவன் எத்தனைபிறவியெடுத்தாலும், நற் பிறவியெடுத் தால் நமக்கும் நாட்டுக்கும் உலகத்துக்கும் நல்லதே. ஒரு முறைமனிதப் பிறவி எடுத்தால் அப்பிறவியிலேயே இறைவனை நினைத்து இறையுணர்வுடன், வாழ வேண்டும். மகான்கள், ஞானிகள், குருநாதர்கள், மெய்யடியார்கள் போன்றோர்களை மதித்து, ஆசி பெற்று முக்திபெறவேண்டும். இல்லையேல் எல்லாப் பிறவிக ளிலும் அல்லல் பட வேண்டியிருக்கும்.

ஆஸ்திகராயினும் நாஸ்திகராயினும் ஒரு தடவை அன்னையைப் பார்த்து அன்னையின் அருளுக்குப் பாத்திரராகி விட்டால் வாழ்வில் புதிய அத்தியாயம் நிச்சயம் பிறக்கும். எல்லோர் உள்ளத்திலும் ஞான விளக் கேற்றி எல்லாரும் சந்தோஷமாகவும், அருளும், பொரு ளும் பெற்று ஆண்டவன் சந்நிதியில் திளைத்திருக்கவும் ஞானசேரி அம்மா அவதரித்தள்ளார்கள்.

**பெ. சு. இராஜேந்திரன்**
ஆன்மிகம் மற்றும் மருத்துவ எழுத்தாளர்
(தினகரன் 5 - 10 - 1992)

-திருச்சிற்றம்பலம்-

ஞானசேரி ஞானிகள் சத்குரு சதாசிவ பிரும்மேந்திரர் திருவுள்ளம் மலர்ந்தருளிய "பிருமேந்திர உபநிஷத்"திலிருந்து........

- தரிசனத்திற்குத்தான் ஞானி என்றால் ஞானி கடவுளைக் காட்டிவிடுவான். வழிபாட்டுக்குத்தான் ஞானி என்றால் ஞானி சாத்திரத்தைக் காட்டிவிடுவான். சிந்தனைக்குத்தான் ஞானி என்றால் "ஞானியே" சிந்தனை என்பான்.
- தும்பைப்பூ, கொசுவைக்காட்டிலும் மிகச்சிறியது. அது சிவபெருமானின் தலையிலும் கால்களிலும் கிடக்கின்றது. நீயும் அதுவானால் நீயும் அவன் தலையிலும் பாதங்களிலும் வாழலாம்.
- நல்லவர்கள் வாழ்த்தில் இறைவன் புகுந்துகொண்டு வாழ்த்துகிறான்.
- ஜோதி அணைந்தபின் மீதி இருக்கும். ஆராதனை செய்ய அரிய வடிவம் லிங்கமாய் நின்ற ஈசனே வருவான். யோக ஆற்றலாக அஷ்டமா சித்தி. ஞானி ஆற்றலாக கடவுளைப் பார்ப்பாய். உலகை நேசிக்க உள்ளத்தைத் தருவான். பாபத்தைப் போக்க ஆற்றலைக் கூட்டு நினைவிலுள்ள தடைகளை அகற்று. ஆற்றல் குறைந்தால் மனமுழுதும் பாபம். அறிவுக்குள் அடங்குவது அளவேயாகும். அளவுள்ள மனிதனின் மரியாதை மாறும். அளவுள்ள பொருட்களை அன்புடன் அண்டினால் அளவிலா நிலையை அவனே தருவான். அளவைத் தாண்டிய ஆதாரம் அவனே. அளவிலா ஆண்டவனை அண்டாத மனிதன் கண்களால் பார்க்கும் காட்சிகளில் விழுவான்.

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# சைவசமய அனுட்டானங்கள்

**திருமதி மா. கனகலெட்சுமி**
(ஆசிரியை, கட்டபுலா த. ம. வி.-கட்டபுலா)

சைவ சமயத்தவர் சைவ அனுட்டானங்களை அனுட்டிக்க வேண்டியவர்கள். அரிதாகக் கிடைத்த மானிடப் பிறவியின் நோக்கம் மாதா உதரத்துள் புகுந்து பத்துமாதம் இருட்டறையாகிய கருவறையிலிருந்து மீண்டும் பிறவி எடுக்காது 'இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என அறியமுடியாதவர்களாகிய நாம் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியிலேயே இறையருளை நாடி நிற்றற்குரிய வழிவகைகளைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும். எமது சமய அனுட்டானங்களைப் பின்பற்றி எமது வாழ்வின் நோக்கெல்லையை அடைவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

சைவசமயத்திலே பிறக்கப் பெரும் புண்ணியம் வாய்க்கப் பெற்றவர்களாகிய நாம் ஆறு அல்லது ஏழு வயதிலாவது அன்றி ஒன்பது வயதிலாவது குருமூலம் சமயதீட்சையைப் பெற்று அனுட்டானம் செய்வதற்குச் செவ்வையாகப் பழகி, சைவநெறி நின்று அன்றாட வாழ்வில் அதனைப் பின்பற்றி வருதல் வேண்டும்.

தீட்சை என்றால் சமய வாழ்வில் நுழைதல் என்னும் பொருளைத் தரும். சமயகுரு உபதேசக்கிரம மூலம் ஒருவரைச் சமயவாழ்விலே தொடக்கி வைத்தலையே தீட்சை என்று வழங்குவர். சமயாசார நெறிப்படி வாழும் ஒருவர் சாதாரண வாழ்க்கையிலுள்ள ஒருவரைச் சமயவாழ்வில் நுழையச் செய்வதற்குச் சில சமயாசாரமுறைகள் பின்பற்றப்படுகின்றன. முறைப்படி சமயவாழ்வில் ஈடுபட விரும்புபவர் தாம் சமயாசார வாழ்வில் புகுவதற்கு முதலிலே தீர்மானித்தல் வேண்டும். அதன்பின் தகுந்த குருவை அண்டி, நல்லதொரு நாளைத் தெரிந்து முதல்நாள் விரதமாக ஒருநேர உணவை உண்டு மறுநாள் அதிகாலை நீராடி தோய்த்துஉலர்ந்த ஆடை அணிந்து குருவினிடம் சென்று பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கற்பூரம், காணிக்கை, அரிசி, காய்கறிவகை முதலியவற்றுடன் குருவுக்கு வணக்கம் செலுத்தித் தம்மை மாணவராக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுதல் செய்தல் முறை.

குரு அவரை மாணவராக ஏற்று விபூதி அணிவித்து, மந்திர உபதேசம் செய்து நித்திய கரும அனுட்டான முறைகளைக் கற்பிப்பார். மாணவர் ஒரு மண்டலம் அதாவது 45 நாட்கள் காலை தொடக்கம் மாலைவரை குருவுடன் இருந்து நியம அனுட்டானங்களைச் செய்யப் பழகிக் கொண்டபின் தமது வீட்டிற்கு வந்து நாள்தோறும் தவறாது அந்த அனுட்டானங்களைச் செய்துவரக் கடப்பாடுடையவர் ஆகின்றார்.

### சிவசின்னங்கள்:

ஒருவர் சைவசமயத்தவர் என்று பார்த்தவுடனேயே அறிந்துகொள்ள உதவுவன நெற்றியில் அணியப் பெற்றிருக்கும் விபூதியும் சந்தணமுமே. இவை சிவ சின்னங்கள் எனப்படும். உருத்திராக்கமும் சிவசின்னங்களுள் ஒன்றாகும்.

### விபூதியை அணியும் முறை:

விபூதியை இரண்டு விதமாக அணியலாம். வலதுகை விரல்கள் மூன்றினால் நெற்றிமுழுவதும் பரவி அணிதல் 'உத்தூளனம்' எனப்படும். விபூதியை நீரிலே குழைத்து விரல்களினாலே குறியிட்டு அணிவது 'திரிபுண்டரம்' எனப்படும்.

குரு மூர்த்தமாக உபதேசம் பெற்று அனுட்டான முறையினைப் பின்பற்றிச் சைவவாழ்வு மேற்கொள்வோர் காலையும் மாலையும் தியானம் செய்யும்போது விபூதியை

நீரிலே குழைத்து அணிவர். ஏனைய வேளைகளிலே உத்தூளானமாக அணிவர்.

### விபூதியின் சிறப்பு:

விபூதி பசுவின் சாணத்திலிருந்து பெறப்படுகிறது. பசு என்றால் உயிர் என்பது பொருள். ஒவ்வொரு உயிரும் பிறவி எடுத்தற்குக் காரணம் அறியாமை (மாயை) என்னும் மலத்தினின்றும் விடுபட்டு முக்தி அடைதற் பொருட்டேயாகும். மலம் பசுவுடன் தொடர்புடையது. அம்மலம் வலிகெடுதலே முக்திக்கு வழி. உயிர் தவம்செய்து மலத்தை வலிகெடச் செய்யும்போது உயிர் பேரின்பப் பெருவாழ்வு பெறுகின்றது. இதனை விபூதி அணியும்போது நாம் நினைவில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும். பசுவின் சாணம் அக்கினியிலிடப்பட்டதால் விபூதியாகின்றது. அவ்வாறே உயிரும் தவம் என்னும் அக்கினியில் இட்டுப் புடம் செய்யப்படுவதால் பேரின்பப் பெருவாழ்வு எய்துகிறது என்பதை நினைவுறுத்துகிறது.

தவம் என்றால் காட்டிற்குச் சென்று மூச்சை அடக்கி, நீரில் நின்று, அக்கினி வளர்த்து, உடலை வருத்திச் செய்ய வேண்டும் என்பதில்லை. தவத்திற்கு வரைவிலக்கணம் கூறவந்த திருவள்ளுவர் குளிலே,

"உற்றநோய் நோற்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

என குறிப்பிடும்போது தனக்கு வருகின்ற துன்பங்கள் யாவற்றையும் தாங்கிக் கொண்டு பிற உயிர்க்கு எவ்வித துன்பமும் செய்யாதிருத்தலே தவம் என்றும் கூறுகின்றார். எனவே "தவம் செய்வார் தங்கருமம் செய்வார்" என்றும் பிற உயிரிரைக் கொல்லாமலும் பிற உயிரைக் கொல்வதற்குத் தான் க்ாரணமாகாதிருத்தலும் தவ வாழ்வாகும்.

சைவசமயத்தவர்கள் சைவ உணவு உண்பவர்களாக இருத்தல் சிறந்ததாகும். நல்லார் இணக்கம் ஏற்படல், நல்லவர்களது வாழ்க்கை நெறியை நாமும் பின்பற்றுவதாலும் உலக சம்மசார சாகரத்தில் ஆழ்ந்தும் பந்த பாசங்களிலிருந்து நீங்கச் சைவமார்க்கத்தை அனுசரித்து முக்தியின்பம் பெறலாம்.

பிறவி எடுத்த மானிடருக்குத் தொடர்பு தானாகவே வந்து சூழ்கிறது. பெற்றோர் என்றும் பிள்ளைகள் என்றும் பாசத் தொடர் மனதைப் பந்தப்படுத்துகிறது. இவை அனைத்தும் உடலைவிட்டு உயிர் பிரியும்போது உடன் வருவதில்லை. "தந்தை, தாய், தாரம், மகவு என்னும் இவையெல்லாம் சந்தையிற் கூட்டம்" என்ற உண்மை தெளிவாகும்போது தாமரை இலையிலே தண்ணீர்போல வாழப்பழகுதல் சைவநெறியில் உய்திபெறும் வழி என்று கூறப்படுகிறது. தண்ணீருக்குள் இருந்தாலும் தண்ணீருடன் ஒட்டாத நிலை தாமரை இலைக்கு உண்டு. அதே நிலையில் வாழ்க்கையை வகுத்துக் கொள்வது உயர்ந்த நெறியாகும்.

"ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்".

-திருச்சிற்றம்பலம்-

---

## சைவசித்தாந்தம்

"பெண்ணு க்கு நல்ல மாப்பிளையாகத் தாய் தேடலாம், சிறப்பாகக் கல்யாணம் பண்ணலாம். ஆனால் அவள் கணவனோடு சேர்ந்து அடையும் இன்பம் எப்படி இருக்கும் என்று மகள் கேட்டால் சொல்ல முடியுமா?
'மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல் எனிற் சொல்லுமா றெங்ஙனே'
அந்த இன்பத்தை மகளே அநுபவித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும்." சைவசித்தாந்த தத்துவமும் அவ்வாறே.

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்
(காலையும் மாலையும் பக். 50)

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# அகங்காரம் தவிர் நெஞ்சே

இணுவில், வி. என். தில்லைநாதன்
நாவலப்பிட்டி

"தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற் கிருக்க நிழலாகாதே
தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை

தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர், புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே
பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியருமல்லர்"

- நறுந்தொகை -

என்ன அழகான பசுமையான ஆலவிருட்சம் அது; கொப்பும் கிளையுமாக, நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் சென்று, நிழல்பரப்பி, பச்சிலைகள் ஈன்று, காயும் பழமுமாக நின்ற காட்சி கண்டோரின் கண்களை எல்லாம் கவர்ந்தது; பெற்றோரைப் பேணும் பொறுப்புள்ள பிள்ளைகள் போல ஆயிரமாயிரம் விழுதுகள் அதனைத்தாங்கி நின்றன. இதன்விதைகளோ அபூர்வமானவை; மிகமிக நுண்ணியவை; ஆனால் அஃது தந்த மரமோ ஆலவிருட்சம். அதன் நிழலிலே ஆறியமர்ந்து தங்கி, இதமான காற்றைச் சுவாசித்து, நிம்மதியும், ஆனந்தமும், நிறைவும் பெற்றவர்கள் இன்று நேற்றல்ல நாளைக்கும், பின்பும் எத்தனையெத்த னையோ பேர். மனிதர்களென்ன, பறவைகள் பட்சிகள் பறந்து வந்து, வள்ளலைநாடிய பாணர், விறலியர், கவிஞர் போல பயன்பெற்றுப் பாடிப் பரவிய ஓசை விண்ணிலே மிதந்தது. மிருகங்கள் கூட அப்படியேதான்; பாங்கரிலுள்ள வயலிலே உழுது, இளைத்த எருதுகளும், உழவர்களும் அதோ உறங்கிக் கிடக்கும் காட்சி; தாமரைக்குளத்திலே கிடந்த மேதிகள் வெயிலவனைக்கண்டு, வெதும்பி, வாயிலே தாமரை இலையும், பூவுமாய் வந்து படுத்துக் கிடக்கின்றன. ஆண்டியென்ன அரசனென்ன ஆலின் கீழ் ஒன்றே; சமரசம் உலாவும் தொட்டிற் பண்ணையது. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருநிழலே. ஒரு புது அனுபவம் கண்ண னும் இந்த ஆலிலையிலே தானே பள்ளிகொண்டான். அவனே வடபத்ரசாமி அதனருகே ஒருவேலமரம், அதைச்சீண்டுவாரே இல்லை. ஆலும் வேலும் பல்லுக் குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்றார்களே இதன் பொருள் என்ன? நாலும் இரண்டும் ஆறு; எனவே ஆறெழுத்து மந்திரமான சடாட்சமரமே சொல்லுக்குறுதி, வாழ்வுக்கு உறுதி. இந்தச் சடாட்சரத்துள் ஒரு கோடி மந்திரமும் அடக்கும் அல்லவா?

இந்த ஆலமரத்தை அண்டி ஒரு பனைமரம், நுங்கும் குலையுமாக நீண்டு நிமிர்ந்து நெம்புக் கெம்பீரமாக முகிலை தொட்டது. அது தன்னைவிடப் பெரியவன் இல்லை என்ற செருக்கிலே சொக்கி ஆடியசையும். பக்கத்திலே அமைதியாக சாந்தமே வடிவாக நின்ற ஆலமரத்தைப் பார்த்து ஒரே போட்டி பொறாமை. எனவே தன்னைப் புகழ்ந்து பேசிக்கொண்டே இருக்கும். மனிதர்கள் தான் பொறாமைப் படுகிறார்கள் என்றால் மரம்செடி கொடிகளும் கூடப் பழகிவிட்டனவே கலிகாலம் செய்த கோலமோ என்னவோ. எனவேதான் வள்ளலார் "உண்டிலேன் எனினும் உடுப்பனேன் எனினும் உலகரை நம்பிலேன்" எனப்பாடினார் போலும். அந்த நெடும் பனை ஆலைப்பார்த்து நீ மிருகங்களைப் போல பக்கவாட்டிலே வளர்ந்தது தான் மிச்சம்; நானோ ஆறறிவு மனிதன் போலே நெடியவனாய் வளர்கிறேன். என் நுங்கு

எவ்வளவு இனிமையானது, பதனீர் எவ்வளவு தித்திப்பானது, என்னை மனிதருக்கே தியாகம் செய்கிறேன். வீடுகட்ட என்னையே பயன்படுத்துகிறார்கள் எனத் தன் பெருமையை வாயோயாமற் கொட்டிக் கொண்டே இருந்தது. அந்த ஆலோ என்றும் பணியுமாம் பெருமை என்ற பாணியில் நிறைஞானிபோல் மோனமாய், அமைதியாய் இலைகளை மேலும் துளிர்த்து; பசுமைகாத்தது.

திடீரென ஒரு தினம் எங்கும் இடியிடித்தது. மின்னல் கொடியாய் ஒளிர்ந்தது. சோவென மழை கொட்டி ஓய்ந்ததும், கொண்டல் காற்று சட்டுச்சடசட வென அடித்தது. இந்த ஊதைக்காற்றால் பனை அங்குமிங்குமாய் நெளிந்து, ஆடியசைந்தது. திடீரென்ற ஒரு பயங்கர ஓசை. அந்த கரிய நெடும்பனை மூன்று துண்டுகளாய் முறிந்து, சிராயும், கூருமாய், சீராம்புமாய் குப்புற மண்ணைத் தொட்டது! நுனிக்கொம்பர் ஏறினார். அஃதிறந்தூக்கின் தனக்கிறுதியாக்கி விடும் என்ற வள்ளுவன் வாய்மொழி இந்தப் பனைக்கு எங்கே தெரியப்போகிறது என ஆலமரம் முணுமுணுத்துக் கொண்டு கலாபம் தோகையைச் சிலுப்புவது போலத் தன்உடம்பை ஒருமுறை உலுக்கிக் கொண்டு சாந்தம் தவழ்ந்தது. அதன் உள்ளம் இறுமாப்பு, அகங்காரம் அழிவுக்குக் கால் என்பதை இன்னும் இந்த மனிதர்கள், ஏன் சைவ சமயிகள் உணரவேயில்லையே என்று கொடுப்புள் சிரித்துக் கொண்டது.

வாழ்க்கை புனிதமானது, ஆயின் இதற்குளே எத்தனை வித்தாரமும் கடம்பும் ஆதலின் செத்தாரைப் போலே திரி என்றார் பட்டினத்தார்; செத்தே போனாற் சிரியாரோ என்றார் மணி மொழியார். நீர்க் கோல வாழ்வில் நாம் எவ்வளவு பெரியது அர்த்தமானது. இந்த இயல்பான, இயற்கைதரும் படிப்பினையை நாவுக்கரசர் வாக்காக வரும்போது எவ்வளவு அனுபூதி பிறக்கிறது. இந்த ஐஸ்வரியமே மேலான செல்வம்.

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
அகங்காரந் தவிர் நெஞ்சே யமரர்க்காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்றவன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச்செந்தீமூழ்க
நினைத்தபெருங் கருணையன் நெய்ததான மென்று
நினையுமா நினைந்தத்தாலுய்யலாமே
நான் எனதற்ற இடமே திருவடியாம்

- கந்தர்கலி வெண்பா -

அகங்கார மமகாரங்கள் என்னும் நான் எனது என்னும் மனித சுபாவங்களை அகந்தை இறுமாப்பு என்பர். இந்த இரண்டும் சைவம் பேசும் வைரிகள் எனவே இவற்றை விட்டு இறைபதம் காண ஆற்றுப் படுத்தும் ஜனாதனதர்மமான வைதீக சைவம் ஒவ்வொன்றிலும் உணர்த்தும் உட்பொருளென்ன என்பதை மனதிற் பதித்து வாழ்வதே நமது தூய சமய நெறி.

-திருச்சிற்றம்பலம்-

- "செய்யும் காரியம் தாமதமின்றிச் செய்வார் சித்தர்களா மென்றிங் கூதெடாசங்கம்."
- "ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ ஞானகுரு புகழினை நாம் வகுக்கலாமோ"
- "எப்போதும் குரு சரணம் நினைவாய் நெஞ்சே".
- "ஓர் தாயின் வயிற்றிற் பிறந்தோர் – தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ".

- பாரதி -

- "படமுடியாதினித் துயரம் படமுடியாதரசே"
- "அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் அம்மையப்பா இனியாற்று கிலேனே".

- வள்ளலார் -

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# உழைப்பாளிகளின் உயர்வுக்காக தன்னையே தியாகம் செய்த

# கல்விமான் அமரர் ஜெயராம்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவன் வாக்கிற்கொப்ப கருவிலே திருவுடையவர்தான் ஜெயராம் அவர்கள். அவர்கள் ஒரு பேரறிஞராய் வாழ்ந்தாலும் தன்னை ஓர் கல்விமான் என்று காட்டிக் கொள்ளாமல் இறுதி மூச்சுவரை வாழ்ந்தார்கள். 1914ம் ஆண்டிலே பிறந்து ஆரம்பக கல்வியை நாவலப்பிட்டியிலும் பின்பு கொழும்பு புனித பெனடிக்ற்கல்லூரியிலும் மேற்கல்வியைப் பெற்ற அவர் ஆங்கிலத்திலும், செந்தமிழிலும் வியுக்தி மானாகத் திகழ்ந்தார்கள். அவருடைய ஆழமான கல்வியறிவுக்குச் சான்றாக அவர் சேமித்து வைத்த நூற்றுக்கணக்கான நூல்கள் இன்றும் விளங்குகின்றன.

சாதாரணமான வாழ்வியற்துறையை மேற் கொண்ட அவர் எளிமையாயும், கனதியாகவும் வாழ்வை மேற்கொர்ணடார். காட்சிக்கெளியவர் கடுஞ்சொல் தெரியாதவர். அமைதியும் சாந்தமும் அவருடைய சாண்றாண்மைக்கு அறிகுறி எனலாம். உழைப்பாளி களின் கரங்களை உயர்த்த ஒரு சமதர்மப் பாதையில் சென்று உலகைத் தொழுவார்களே என்று சேரும் பேரவைகளிலே தொழிலாளர் நலனுக்காக தம் விழுமியமிக்க கருத்துக்களை எடுத்து நிறுவினார். "பாடுபடுபவர்க்கே இந்தப் பாரிடம் சொந்த"மென்பதில் அழியாத நம்பிக்கை கொண்டவர் அவர். அக்காலக் கல்விக் கொள்கையினடிப்படையில் லத்தீன், பிரென்ஸ், கிரீக் மொழிகளையும் கற்று பன்மொழிப்புலவராயும், சிறந்த கல்வியியற் சிந்தனையாளராயும் விளங்கினார். சிறிது காலம் ஹட்டன் அர்ச் பொஸ்கோஸ் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும் சேவை செய்தார்கள். இக்காலகட்டத்திற் சமூகப்பணி, சமயப்பணியையும் கள்ளங் கபடமின்றிச் செய்தார். ஒரு சந்தர்ப்பத்தில் விவேகானந்த சபையின் உதவிச் செயலாளர் நாயகமாயுந்திகழ்ந்தார்.

தந்தை வழி தனையன் வழி என்றதற்கமைய, தந்தையாரின் மறைவையடுத்து உத்தியோகத்தை யடுத்து தான் பிறந்த குயின்ஸ்பரி தோட்டத்திலேயே வாழ்ந்தார். தம் மூதாதையர் வழி – மாபெருஞ் சித்தரான நவநாத சித்தரிலே மிக்க ஈடுபாடுடையவராய், அவரைப் பற்றிய வரலாற்று உண்மைகளை எல்லாம் திரட்டிச், சேமித்தும் வைத்துப்பேணினார். அப்பெரிய சித்தரின் மகிமைகளை இலங்கை வானொலியிலும் பேசி உலகெங்கும் பரப்பினார். அவர் சேமித்து வைத்த சுவாமிகளைப் பற்றிய செய்திகளின் அடிப்படையில் நவநாதசித்தரின் வரலாற்றை கவிஞர் முருகவே பரமநாதன் அவர்கள் எழுதி அன்னாரின் உடன் பிறவாதத் தம்பி திரு இராஜகோபாலிடம் ஒப்படைத்துள் ளாரா். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்னும் ஸ்தாபனங்களில் இவரின் செயற்பாடு மிகவிழுமியம் மிக்கதாகும். ஜனாப் அஸீசின் வலக்கரமாய் விளங்கிய அன்னார் இத்தொழிலாளர் இயக்கத்தின் பிரதிநிதியாக சர்வதேச மகாநாடுகளிலெல்லாம் பங்கு பற்றினார். ஜெனீவாவில் தொழிலாளர்களுக்காக குரல் எழுப்பினார். தொழிலாளர் நலனுக்காக அருந் தொண்டாற்றிய நடேசையர் இவரது குயின்ஸ்பரியிலமைந்த இல்லத்தில் நெடுநாட்தங்கி இருந்தாரென்று அமரர் ஜெயராமின் பெருமை பேசுந்தரமன்று என்றம் கருதினார். நடேசைய ரைக்குன்றின் குரலில் அறிமுகம் செய்தவருமிவரே.

இவ்வண்ணம் தம்புகழ் நிறீ இத்தாம்மாய்ந்த ஜெயராமவர்களின் பிற்காலத்தின் ஒவ்வொரு கணமும் காத்திரமும் கனதியும் வாய்ந்ததாகும். அவர் வாசிப்பதிலே பூரணம் கண்டவர். வீட்டிலேயே சிறந்த நூல்களைக் கொண்ட நூலகமொன்றையும் வைத்திருந்தார். வெணுமனே வாசகனாயில்லாமல் தானெடுத்துக் கொண்ட ஒவ்வொரு துறைகளிலும் ஆழங்கண்பட்டிருந்தார். காந்தியின் ஹரிஜன் பத்திரிகைகளைச் சேர்த்து நூலாக்கி வைத்துள்ளார்.

பிமகாலத்தில் தந்து வாழ்நாள் முழுதும் எதை இலக்காக் கொண்டாரோ அவற்றின் நிறைந்த சேவையிற் திருப்தி கண்டபின், ஆத்மிக நெறியையும் மேற் கொண்டார். பன்னிருதிருமுறைகள், திரு நாலாயிரம் சித்தர் பாடல்கள், பட்டினத்தார், தாயுமானார் பாடல்கள் போன்றவற்றையும் படிப்பதோடு நில்லாமல் கைவல்யம், ஞானவாசிட்டம் போன்றவற்றையும் தம் நுண்மாண் நுழைபுலத்தின் சிறப்பாற் கற்றுத் தெளிந்தார். யோக்கியராயும், நீதிமானாயும் விளங்கினார். இவ்வாறு வாழ்ந்தாலும் பேரும்புகழும் அவருக்கு எம்மாற்றமும் தரவில்லை. நிலையிற்றிரியாதடங்கியான் தோற்றம் மலையினுமாணப் பெரிதல்லவா. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராய்த் திகழ்ந்த. ஜெயராம் - அவர்களின் புகழ் நீடு வாழ்க

"அரிய வற்றுளெல்லாமரிதே பெரியாரைப்
பேணித்தமராக் கொளல்"

முருகவே பரமநாதன்
(ஆழ்கடலான்) (1991)

-திருச்சிற்றம்பலம்-

## காமமென்னும் நோய்

காமம் என்பதற்கு ஆசை என்று பொருள். இது மண் ஆசை, பெண் ஆசை, பொன் ஆசை ஆகிய மூன்றுக்கும் பொதுவானது என்றாலும் வாழ்க்கையில் மிகப்பெரிய ஆசையாகப் பெண்ணாசை இருப்பதால் அதற்கே காமம் என்ற பெயர் வழக்கில் வந்துவிட்டது. அந்த ஆசைதான் மனிதர்களுக்கு உண்டாகின்ற பெரிய நோய். இன்றைக்குத் தான் உலகத்தில் அப்படி வந்திருக்கிறது என்று சொல்லலாமா? எல்லாக் காலத்திலும் அப்படியே இருந்து வருகிறது. பெரிய பெரிய சண்டைகளுக்கு மூலகாரணம் காமம். இராம இராவண யுத்தத்துக்கு அடி அதுதான். இராமன் அயோத்தியில் இருந்து இலங்கைக்குப் போய்ச் சண்டை போட்டான். காரணம் பெண்ணான சீதை மேல் இராவணனுக்கு ஏற்பட்ட இராட்சசக் காதல். அதற்கு மூல வித்துத் தூவியவள் சூர்ப்பனகை. ஆண்மை நிரம்பிய இராமனிடத்தில் அவளுக்கு உண்டான இராட்சசக் காமம் அந்த வித்தைத் தூவியதற்குக் காரணம். ஆகவே ஆண்களுக்கும் தீய நிலையிலேயே காமம் வரும். பெண்களுக்கும் தீய நிலையிலேயே காமம் எழும். இராம இராவண பெரும்போருக்கு மூலவித்தே காமம்.

நாம் இன்று 'காமம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்கிறோமோ அப்படிப் பழைய காலத்தில் கொண்டது இல்லை. காமம் என்றால் காதலுக்குப் பெயர். பிற்காலத்தில் சரீர சம்பந்தமான ஆசையே காமம் என்று சொல்வது வழக்கமாகிவிட்டது.

அகலிகைக்கு மிகப்பெரிய துன்பம் வந்ததற்குக் காரணம் இந்திரனது காமம். இப்படியாகக் காமத்தினால் உண்டான இன்னல்கள் மிகப்பல. மனித சாதியினிடத்தில் பல வகைத் தீய குணங்கள் புகுந்து கொண்டாலும் எல்லாவற்றுக்கும் மேலாக, மிகுதியாக இருப்பது காமம். அந்த நோய் எல்லாக் காலங்களிலும் இருக்கிறது. ஆகவே மருத்துவராகிய அருணகிரிநாதர் அதற்கான மருந்தை அண்டா அண்டாவாகக் கலந்து வைத்திருக்கிறார்.

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்
(காலையும் மாலையும் பக். 56)

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

## கல்வியில் ஆர்வத்தைத் தூண்டுவது

# இதனை எல்லோரும் படியுங்கள்

தொகுப்பு:-நவரஸக் கலைஞானி

(1) வசிட்டன் என்பதன் பொருள் யாது?
பொறிகளையடக்கியவர்.

(2) திரிசங்குவின் குமாரனின் பெயர் என்ன?
அரிச்சந்திரன்

(3) கடல்படு திரவியங்கள் எவை?
உப்பு, பவளம், முத்து, சங்கு

(4) மலைபடு திரவியங்கள் எவை?
மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்

(5) மலரோன் யார்? பிரமதேவன்

(6) கந்தபுராணத்தின் ஆறு காண்டங்களும் எவை?
1. உற்பத்தி காண்டம் 2. அசுர காண்டம்
3. மகேந்திர காண்டம் 4. யுத்த காண்டம்
5. தேவ காண்டம் 6. தக்ஷ காண்டம்

(7) யார் செய்த வேள்வியில் ஆட்டுக்கடா தோன்றியது? நாரதர்

(8) கந்தபுராணத்தில் அகந்தை மிக்கவனாகக் குறிப்பிடப்படும் தேவகணத்தவர் யார்? அசுரகணத்தவர் யார்?
1. பிரமன் 2. சூரன்

(9) கந்தவேளை நினைந்து அருந்தவம் புரிந்த இரு கன்னியர்களும் யார்?
1. அமிர்தவல்லி 2. சுந்தரவல்லி

(10) சூரனின் தந்தை தாய் பெயர் யாது?
காசிபர், மாயை

(11) தாழம்பூ எப்படி மலரும்?
மின்னலின் காரணமாக மலரும்.

(12) சூரனை வென்று வாகை சூடிய சேனையோடு முருகப்பெருமான் எங்கு அமர்ந்திருந்தார்?
திருப்பரங்குன்றத்தில்

(13) முருகவேளின் சக்கரப்படையினால் மடிந்தவர்கள் யார்?
அரிமுகன், பானுகோபன், எரிமுகன், வச்சிரவாகு, நூற்றிருவர், மூவாயிரவர், தருமகோபன், பெருஞ்சேனை

(14) பானுகோபனது தாயின் பெயர் என்ன? பதுமை

(15) எரிமுகாசுரனுடைய தலைகளைப் பறித்த படையின் பெயரென்ன? வீரபத்திரப்படை

(16) திருச்செந்தூரமைந்துள்ள மலையை எப்படி அழைப்பர்? கந்தமாதனம்

(17) அதிவீரனின் தந்தை யார்? யாளிமுகன்

(18) வானவர்க்குத் தந்தை முறையிலுள்ளவர் யார்?
காசிப முனிவர்

(19) தாரகாசுரனையும், கிரவுஞ்சமலையையும் நொடிப்பொழுதிலே கொன்றொழித்தவர் யார்?
முருகப்பெருமான்

(20) யாளிமுகனுடைய மைந்தன் யார்? அதிவீரன்

(21) சூரனின் மைந்தருள் வலியவன் பெயரென்ன?
பானுகோபன்

(22) இந்திராணியின் மறுபெயரென்ன? அயிராணி

(23) எமதருமன் திருமகள் பெயரென்ன? விபுதை

(24) வள்ளி திருமணத்தை நிகழ்த்தி வைத்தவர் யார்?
நாரதமுனிவர்

(25) முருகன் வேங்கை மரமாகி நின்றான் என்று கந்தபுராணத்தில் கூறுவதன் சைவசித்தாந்த தத்துவக் கருத்தென்ன? வேதம் – அடிமரம்; சிவாகமம் – நடுமரம்; 64 கலைகள் – கிளைகள்

(26) கந்தசஷ்டி ஆறுநாளும் குறிக்கும் ஆறுபகைகள் எவை? காமம், குரோதம், லோபம். மோகம், மதம், மாற்கரியம்

(27) "சங்கரன் பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்". இதன் பொருளென்ன?
"முருகன் சட்டி திதியில் மாமரமாக நின்ற சூரனைச் சங்கரித்தார்" என்பது.

(28) கந்தப்பெருமானுக்கு உகந்த விரதங்கள் இரண்டு?
1. திருக்கார்த்திகை 2. கந்தசஷ்டி விரதம்

(29) தக்கனின் மனைவி பெயர் என்ன? வேதவல்லி

(30) ஞானம் கைகூடச் சிறந்த சாதனம் எது? விரதம்

(31) இடைநாடி, பிங்கலைநாடி, சுழுமுனைநாடி என்பன ஆறுபடை வீடுகளில் எவ்வெத் தலங்களைக் குறிக்கும்?
இடைநாடி – தணிகை; பிங்கலைநாடி – செந்தில்; சுழுமுனைநாடி – பழநி

(32) கந்தர்கலிவெண்பாவைப் பாடி ஊமைத்தன்மை நீங்கப்பெற்ற முருகனடியார் யார்?
குமரகுருபரர்

(33) முருகப்பெருமான் சிங்கமுகனை வதைத்தருளிய ஆயுதத்திற்கு என்ன பெயர்? குலிசாயுதம்

(34) மந்திரி தருமகோபனைக் கொன்றவர் யார்? வீரவாகுதேவர்

(35) சுக்கிரவாரம் என்று அழைக்கப்படும் நாள் எது? வெள்ளிக்கிழமை

(36) 'அகந்தை' என்றால் என்ன? ஆணவம்

(37) ஆட்டுக்கடா வேள்வியில் வரக் காரணம் என்ன? மந்திர உச்சரிப்பின் குறைபாடு

(38) 'பாவங்கள்' பத்தும் எவை?
தீச்சிந்தை, ஆசை, கோபம், கடுஞ்சொல், பொய்யுரை, பயனிலை கூறல், குறளை கூறல், களவு, கொலை, பயனிலசெயல்

(39) புண்ணியங்கள் பத்தும் எவை?
அருள், அவாவின்மை, தவவிச்சை, இனியவை கூறல், உண்மை கூறல், பயனுள கூறல், அறங்கூறல், வணக்கம், ஈகை, தவஞ்செய்தல்

(40) அருச்சுனனின் வில்லுக்குப் பெயரென்ன?
காண்டீபம்

(41) சிங்கக்கொடியோன் யார்? வீமன்

(42) முரசுக்கொடியோன் யார்? துரியோதனன்

(43) துரியோதனன் எந்த மிருகத்தைப் போலக் கத்தினான்? கழுதை

(44) இந்திரனுக்கும் குந்திக்கும் பிறந்தவன் யார்?
அருச்சுனன்

(45) வாயுபகவானுக்கும் குந்திக்கும் பிறந்தவன் யார்?
வீமன்

(46) அறக்கடவுளுக்கும் குந்திக்கும் பிறந்தவன் யார்?
உதிஷ்டிரன் (தருமன்)

(47) காந்தாரியின் கணவன் பெயரென்ன?
திருதராஷ்டிரன்

(48) மூவகைத் தீட்ஷைகளும் எவை?
1. சமய தீட்ஷை 2. விசேட தீட்ஷை
3. நிர்வாண தீட்ஷை

(49) முக்குற்றங்கள் எவை? காமம், வெகுளி மயக்கம்

(50) அந்தணரோம்பும் மூவகைத் தீ யாது?
ஆகவனீயம், காருகபத்தியம், தக்கினாக்கினி

(51) சம்பந்தரை வேறு எப்பெயரால் அழைக்கலாம்?
முத்தமிழ் விரகர், பரசமயகோளரி, பாலறாவாயர், சைவசிகாமணி, சண்பையர் காவலன், கௌணியர் கோன், சிவஞானக் கன்று, காழிவேந்தன், ஆளுடைய பிள்ளை

(52) திருநாவுக்கரசரது மறுபெயர்கள் எவை?
ஆளுடைய அரசு, வாகீசர், அப்பர், தாண்டக வேந்தர், வாக்கின்மன்னர், சொற்கோ, தேவர், நாவுடைப்பெருமாள்

(53) சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மறுபெயர்கள் எவை? நம்பியாரூரார், ஆளுடையநம்பி, நாவலூரார், வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், சிங்கடியப்பன், வனப்பகையன், திருத்தொண்டர்தொகையாளி

(54) மணிவாசகரின் மறுபெயரென்ன?
திருவாதவூரர், கோவை வேந்தன், தென்னவன் பிரமராயன்

(55) 'தோடுடைய செவியன்' எத்தலத்தில் பாடப்பட்டது?
சீர்காழியில்

(56) 'கூற்றாயினவாறு' எத்தலத்தில் பாடப்பட்டது?
திருவதிகை வீரட்டானத்தில்

(57) 'பித்தா பிறைசூடி' எத்தலத்தில் பாடப்பட்டது?
திருவெண்ணெய் நல்லூரில்

(58) காசியில் உச்சியில் ஸ்ரீ சக்கரம் பொறிக்கப்பட்ட சிவலிங்கத்தை ஆராதித்தவர் யார்?
ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்

(59) அன்னையின் ஒரு காதில் ஸ்ரீ சக்கரமும், மறுகாதில் சிவசக்கரமும் தோடுகளாக அமைந்துள்ளன. எத்தலத்திலுள்ள அம்மனின் திருக்கோலம் இது? திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி

(60) நாவலப்பிட்டி, கட்டபுலா, குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாத சித்த சிவனாலயத்து முருகன் கோயிலின் மூலவர் பெயர் யாது? தேவசேனாபதி

(61) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் குருபூசைத் தினம் எது? வைகாசி மூலம்

(62) திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசைத் தினம் எது? சித்திரைச் சதயம்

(63) சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசைத் தினம் எது? ஆடிச்சோதி

(64) மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசைத் தினம் எது? ஆனிமகம்

(65) விநாயகப் பெருமானின் பாசம் ஏந்திய கை எத்தொழிலைக் குறிக்கும்? படைத்தல்
தந்தம் – காத்தல்; அங்குசம் – அழித்தல்; மோதகம் – அருளல்; தும்பிக்கை – மறைத்தல்

(66) திருக்கோயிலைக் காலையில் வலம்வருவதால் ஏற்படும் பயன் யாது? நோய் நீங்கும்

(67) திருக்கோயிலைக் மாலையில் வலம்வருவதால் ஏற்படும் பயன் யாது? எல்லாப்பாவத்தையும் நீக்கும்

(68) ஆண்களுக்கு எந்தக்கண், எந்தத்தோள் துடித்தால் நன்மையுண்டு? வலதுகண்; வலதுதோள்

(69) பெண்களுக்கு எந்தக்கண், எந்தத்தோள் துடித்தால் நன்மையும் வெற்றியுமுண்டு?
இடதுகண்; இடதுதோள்

(70) பதிவிரதா சிரோன்மணிகள் ஐவர் யார்?
சந்திரமதி, தமயந்தி, அனுசூயை, நளாயினி, வாசுகி

(71) நால்வர், நால்வகைநெறி, நால்வகை மார்க்கம், நால்வகை முத்திகள் எவை?
சம்பந்தர் – சரியை; தாசமார்க்கம்; சாலோகம்
அப்பர் – கிரியை; சற்புத்திரமார்க்கம்; சாமீபம்
சுந்தரர் – யோகம்; சகமார்க்கம்; சாரூபம்
மணிவாசகர் – ஞானம்; சன்மார்க்கம்; சாயுச்சியம்

(72) அருச்சுனன் சிவனை லிங்கவடிவில் வழிபட்டு யாரை வெல்லும் வலிமை பெற்றான்?
அசுவத்தாமாவை

(73) 'அருத்தம்' என்ற சொல்லின் பொருள் யாது?
செல்வம்

(74) மந்திர தந்திரங்கள் எவை?
மந்திரம் – வேதம்; தந்திரம் – சிவாகமம்

(75) சித்தாந்தம் இலக்கணம் என்றால் அதன் இலக்கியம் எது? திருமுறைகள்

(76) தமிழ்ப்புத்தாண்டுத் தினத்தன்று சூரியன் நண்பகலில் மூலஸ்தானத்திற்கு உச்சங் கொடுக்கும் ஆலயம் எது?
மதுரை மீனாக்ஷியம்மன்

(77) அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்தவன் யார்? அபிமன்யு

(78) சசிரேகை யாருடைய மகன்? பலராமன்

(79) குந்தியின் தமையன் பெயரென்ன? வசுதேவன்

(80) உப்பு நீரிலே விளக்கேற்றி அம்மனுக்கு எடுக்கப்படும் விழா எங்கு நடைபெறுகிறது?
வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயத்தில்

(81) சுவாமி விபுலானந்தர் இயற்றிய நூல்கள் எவை?
யாழ்நூல், மதங்கசூளாமணி, நடராசவடிவம், உமாமகேசுவரம்

(82) விஞ்ஞானத்தைக் கற்று மெஞ்ஞானத்தைப் பெற்ற ஈழத்தறிஞர் யார்? சுவாமி விபுலானந்தர்

(83) கோயிற் புராண உரை, திருமுருகாற்றுப்படையுரை, சிவஞானபோதகச் சிற்றுரை, பதினோராம் திருமுறை, திருவாசகம், அகத்தியர் தேவாரத்திரட்டு எனும் நூல்களைப் பதிப்பித்தவர் யார்?
யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

(84) 'நூலளவே யாகுமாம் நுண்ணறிவு' என்று பாடியவர் யார்? ஔவையார்

(85) இந்திரனின் யானைக்குப் பெயரென்ன? ஐராவதம்

(86) "பொறுப்பரன்றோ பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினையே" என்று பாடியவர் யார்?
மாணிக்கவாசக சுவாமிகள்

(87) பஞ்சாங்கம் எவை?
திதி, வாரம், நாள், யோகம், கரணம்

(88) கல்லால் அர்ச்சித்து அருள்பெற்ற நாயனார் யார்?
சாக்கிநாயனார்

(89) விஷ்ணு எங்கிருந்து காத்தல் தொழிலைப் புரிகின்றார்? ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து

(90) செல்லப்பா சுவாமியின் சீடர் யார்?
யோகர் சுவாமிகள்

(91) யோகர் சுவாமி எப்போது? எங்கே பிறந்தார்?
1872இல் மாவிட்டபுரத்தில்

(92) கடையிற் சுவாமிகளின் நேர்ச்சீடராக விளங்கியவர் யார்? செல்லப்பா சுவாமிகள்

(93) கடையிற் சுவாமிகளின் சமாதி எங்கேயமைந்துள்ளது? வண்ணார் பண்ணையிலுள்ள நீராவியடியில்

(94) அன்னையார் தேரிழுக்கும் ஆலயங்கள் இரண்டு தருக? தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

(95) நாகபூஷணி அம்மன் எனப்பெயர் வரக் காரணம் யாது? நாகத்தினால் பூசிக்கப்பட்ட அம்பாள் எழுந்தருளியுள்ளதால்.

(96) காலத்தால் முந்திய ஈச்சரம் எது? முன்னேச்சரம்

(97) இலங்கையின் மத்தியில் சகலமதத்தினரும் சென்று வணங்கும் ஸ்தலம் எது? சிவனொளிபாதம்

(98) ஈழமணித் திருநாட்டைச் 'சிவபூமி' எனக்கூறியவர் யார்? திருமூலர்

(99) ஐம்புலன்களெவை?
சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

(100) இறைவனது அளவிலா ஆற்றலை உணர்த்துவதற்கெனச் சிவனது தலையில் இருப்பது எது? கங்கை

### தேவாரங்களில் சிவன்

* "மலையினார் மகளோர் பாகமைந்தனார்"
* "மலையான் மடமங்கை மகிழ்ந்துடனே பாகம் வைத்தார்"
* "மலைமங்கையோர் பாகமாக் கூறினார்"
* "மலைவளர்த்த மடமங்கை பாகத்தான்"
* "மலைமங்கை பாகமாக வைத்தவனே"
* "மலைமகளைப் பாகம் அமர்ந்தார் தாமே"

–சம்பந்தர்–

* "மலைப்பாவை கூறு தாங்கிய குழகரே"

– அப்பர் –

* "மலை மகளை ஒருபாகம் வைத்தலுமே"

– சுந்தரர் –

உ
சிவமயம்
ஓம்நவநாதம்
திருச்சிற்றம்பலம்

# பக்தியில் விளைத்த பாரதி

"ஆழ்கடலான்"
(கனடா)

"பக்தியுடையார் காரியத்திற்
பதறார்! மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்"

(விநாயகர் நான் மணிமாலை)

முத்துத் திரைகடற் சேர்ப்பன் மூதறிவாளர் முதல்வன்
பக்தர்க் கமுதன் அடியேன் பண்டன்ற மட்டினங்காப்பே

(பெரியாழ்வார் திருமொழி)

பாடுவ துன்றிரு நாமங்க ணாடொறும் பக்தி செய்து
சூடுவ துன்பொற் றிருவடித் தாமரை தொண்டு செய்து
கூடுவ துன்னடியர் திருக் கூடமக் கூட்டத்துட
னாடுவ துன்னிலை காண்கரு வாபுரி நாயகனே

(திருக்கருவை கலித்துறை யந்தாதி)

"இறைவனைத் தேடுகிற, உண்மையானதும், தூயதுமான நாட்டத்திற்கும் பக்தி யோகம் என்று பெயர். இந்த இறைநாட்டம், பக்தியில் முகிழ்த்து, பக்தியிலே வளர்ந்து, பின்னர் பக்தியலே முடிந்து விடுகிறது. இறைவனிடம் நாம் கொள்ளும் மிகத்தீவிரமான பக்திப் பித்து நம்மிடம் கணப்பொழுது தோன்றினாலே போதும். அது என்றென்றம் நிலைத்து நிற்கக்கூடிய அழிவற்ற முத்தியைத் தந்து விடுகிறது. நாரத முனி பக்தியை விளக்கும் தம்முடைய நூலாகிய பக்தி சூத்திரத்தில், "இறைவனிடம் நாம் பூணும் தீவிர அன்புதான் பக்தி" என்றார். "இத்தகைய இறையன்பை ஒருவன். பெறும்போது அவன் அனைவரிடத்தும் அன்பு பாராட்டுகிறான். எவரிடத்தும் வெறுப்புக் கொள்வதில்லை. எப்போதும் தன்னிலேயே நிறைவு காண்கிறான்". "உலகப் பொருட்களை அடைவதற்குரிய ஒரு சாதனமாக, ஒரு கருவியாக இந்த இறையன்பை இழிவுபடுதல் ஆகாது". ஏனெனில் உலகப் பற்றுகள் உள்ளத்திற்கு குடிகொண்டிருக்கும் வரை இத்தகைய உயர்ந்த பக்தி நம்மிடம் எழமுடியாது. "பக்தி தர்மத்தை விடச் சிறந்தது; யோகத்தைவிட மேலானது. எவ்வாறெனில் கர்மம், யோகம் என்ற இரு நெறிகளும் ஒரு பயனைநாடி ஒரு நோக்கத்தை முன்வைத்துச் செய்யப்படுகின்றன. ஆனால் பக்தியோ அவ்வாறில்லை; அதுவே அதற்குப் பயனாகவும், அதுவே அதை அடைவதற்குரிய வழியாகவும், முடிவாகவும் விளங்குகிறது.

பக்தியோகம், சுவாமி விவேகானந்தர் இறைநிலை எய்தும், இலட்சியத்தை எவ்விதமும் அடைவதற்கு பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் என்னும் மார்க்கங்கள், ஆத்மிகச் செல்வர்களாற் பெரிதும் போற்றப்படுகிறது. "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்பது நாவலர் வாக்கு. "நமக்கு இந்த மானிடம் பிறவிகிடைத்தது இனிமேற் பிறவாமல் இருக்கும் நிலையை எய்துதற்கே" என்கிறது மாண்டூக்கியம்.

நம்முடைய மனித வாழ்க்கையிலே நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள நம் அனைவராலும் முடிவதில்லை. எனினும் பக்தி, ஞானம், யோகம் என்னும் மூன்றும் ஒன்றாக இணைவதே மிக உயர்ந்த உன்னதமான பண்பாடு என்பதை நாமறிவோம். ஒரு பறவை பறப்பதற்கு மூன்று அமைப்புத் தேவை; இரு சிறகுகள், வானத்தில் உந்திச் செல்ல ஒருவால். மீனுக்குத் துடுப்பாக அமைந்தது வால்தான். இறக்கைகளில் ஒன்று ஞானம், மற்றது பக்தி. சமப்படுத்தும் வால் யோகம் ஆகும். எனவே இம்மூன்று நெறிகளிலும் தம்மை ஆற்றுப் படுத்த, பின்பற்ற

இயலாதவர்கள் பக்தி நெறி ஒன்றையே தம் இலட்சியமாகக் கொள்கின்றனர். பக்தியின் துவக்க நிலை (கொணீபக்தி) வளர்ந்து உச்சநிலை அடையும் போது பராபக்தி எனப்படுகிறது. எனவேதான் பக்தி நெறியே என்று மழியா இன்பநிலை எய்துதற்கான செந்நெறி என்பதைப் பலரும் எடுத்து ஓதியுள்ளனர்.

"பக்தி செய்யடியரைப் பரம் பரத்துய்ப்பவன்"

"பக்தி வலையிற் படுவோன் காண்க"

"அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே"

"பத்தா போற்றி பவனே போற்ற"

"பக்தி நெறியறி வித்தும் பழவினைகள் பானும் வண்ணம்"

"பக்தி மையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளி"

- திருவாசகம் -

அன்று நெறிப்படின் சித்தத்தே ஒளி பெருகுதலின் அதன் பாற்கிடந்த மலம் வேரனுதலும் மேல் பழ வினைகளின் தொகுதியாகிய மரம் மாறிக் கீழே விழுந்தழியும் என்பது இத் தொடரின் தெளிபொருள் எனலாம்)

"பக்தியால் யானுனைப் பலகாலும் பற்றியே மாதிருப்புகழ் பாடி

-திருப்புகழ்-

பக்தியின் பாலராகிப் பரமனுக்களா மன்பர்கள் சென்றபாதையும், அதன் பயனும், விளைவும், பாரதியா ரைப் பெரிதும் கவர்ந்தது. எனவே பக்தியுடையாரின் அளவற்ற ஆற்றலின் உறுதியை பக்தி உடையார் காரியத்திரை பதறார் மிகுந்த பொறுமையுடன் வித்து முறைக்குந்தன்மைபோல் மெல்லச் செய்து பயனடைவார் எனப் பாடுகிறார். பதறாத காரியம் சிதறாது இம்மந்திரத்தால் மாங்காய் விழுத்த முடியாது, வித்து முளைத்து, பயிராகி, வளர்ந்து மரமாகி பூத்துக் காய்த்துக் கனியும் வரையும் பொறுத்திருக்க வேண்டுமென்ற பக்திவயல் விளைவைப் மகாகவி பாரதியின் கவிதைகள் துலக்கக்காணலாம். பக்தியினாலே எல்லாம் என்ன பயன் கிடைக்கும் என்பதை ஒரு நீண்ட பட்டோலை தீட்டிக் காட்டுகிறார் கவியரசர் பாரதி.

பக்தியினாலே – இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ
சித்தந் தெளியும், இங்கு
செய்கை யனைத்திலும், செம்மைபிறந்திடும்
வித்தைகள் சேரும் – நல்ல
வீர ருறவு கிடைக்கும் மனத்திடைத்
தத்துவம் உண்டாம் நெஞ்சிற்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்

காமப் பிசாசைக் – குதி
கால்தொண் டடித்து விழுத்திடலாம்; இத்
தாமசப் பேயைக் – கண்டு
தாக்கி மடித்திடலாரும்; எந்நேரமும்
தீமையை எண்ணி – அஞ்சுந்
தேம்பற் பிசாசைத் திருகியெ றிந்து பொய்ந்
நாமமில்லாதே – உண்மை
நாமத்தினாலங்கு நன்மை விளைந்திடும்

சோர்வுகள் போகும் – பொய்ச்
சுகத்தினைத் தள்ளிச் சுகம் பெறலாகும் நற்
பார்வைகள் தோன்றும் – மிடிப்
பாம்பை கடித்த விஷமகன் றே நல்ல
சேர்வைகள் சேரும் – பல
செல்வங்கள் வந்து மகிழ்ச்சி விளைந்திடும்
தீர்வைகள் தீரும் – பிணி
தீரும், பலபல இன்பங்கள் சேர்ந்திடும்

கல்வி வளரும் – பல
காரியங் கையுறும், வீரிய மோங்கும்
அல்ல லொழியும் – நல்ல
ஆண்மை யுண்டாகும், அறிவு தெளிந்திடும்
சொல்லுவ தெல்லாம் – மறைச்
சொல்லினைப் போலப் பயனுளதாகும், மெய்
வல்லமை தோன்றும் – தெய்வ
வாழ்க்கை யற்றேயிங்கு வாழ்ந்திடலாம் – உம்மை

சோம்பலழியும் – உடல்
சொன்ன படிக்கு நடக்கும், முடிசற்றுங்

கூம்புதலின்றி நல்ல
கோபுரம் போல நிமிர்ந்த நிலைபெறும்
வீம்புகள் போகும் – நல்ல
மேன்மை யுண்டாதிப் புயங்கள் பருக்கும் பொய்ப்
பாம்பு மடியும் – மெய்ப்
பரம் வென்று நல்ல நெறிகளுண்டாய்விடும்

சந்ததி வாழும் – வெறுஞ்
சஞ்சலங்கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்
இந்தப் புவிக்கே – இங்கொர்
ஈசனுண்டா யின் அறிக்கையிட்டே னுன்றன்
கந்த மலர்த்தாள் – துணை:
காதல் மகவு வளர்ந்திட வேண்டும், என்
சிந்தை யறிந்தே – அருள்
செய்திட வேண்டும் என்றால் அருள் செய்திடும்

இந்தப் பக்தி முதிர்ந்த போது பக்தன் தேடாமலே ஞானம் தானாக அவனிடம் வந்து சேர்கிறது. எனவே ஞானத்தில் இருந்து தூய பக்தியைப் பிரிக்க முடியாது. பக்தி சாதாரண வழிபாட்டில் ஆரம்பித்து ஆழ்ந்த, உயரிய இறையன்பில் முடிவடைகிறது. இறைவனின் காட்சிக்காகத் தொடர்ந்து செயற்படும் மனதில் இடைவிடாத முயற்சிகளையே பக்தி என்பர். மணிமொழியார் இதற்காகவே பிடித்த பத்து பாடியுள்ளார்.

செம் பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவ பெருமானே
எம் பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே

கடைபடா வண்ணங் காத்தெனையாண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னசைச் சித்தெனப்பிடித்தேன்
எவ் கெழுந்தருளுவ தினியே

இருளிடத் துன்னைச் சிக்தெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே

இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே

ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே

எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே

யாவனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே

இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே

இதையே அப்பரடிகள் பவனெனும் நாமம் பிடித்துப் பன்னாளிங் கழைத்தால் – இவ னெனை அழைப் பொழியானென்று எதிர்ப் படுமே எனப்பாடினார்.

எனவே விழுமிய பக்தி நெறியே பெரியதிற் பெரியது. சமய மென்பது அனுபூதி ஆகும். மேலான சிந்தனையின் சாரத்தையே நாம் கடவுள் என்கிறோம். பாடுகின்ற பனு வலோர்கள் தேடுகின்ற செல்வம், நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற அழகன்.

உள்ளத்தில் உள்ள இறைவனை உணர்ந்து அனுபவிப்பதே பக்தி நெறி. எனவே இறைவன் ஒருவனை மட்டும் வழிபடுவது வணங்குவது பக்தியாகும். வேறு எந்தப் பொருளையோ, தேவர்களையோ – பிதிர்க ளையோ – மனிதர்களையோ வழிபடுவது பக்தியின் பாற்படாது என்பர் பெரியோர். மகிழ்வுடன் இருப்பவனே பக்திமான். பராபக்தி என்பது பக்தியின் முதிர்ந்த நிலை. இறையன்பு நன்கு வளர்ந்து முற்றும் போது நாமதைப் பராபக்தி அல்லது முதிர்ந்த பக்தி என்கிறோம். இங்கே கடவுள் வடிவங்கள் மறைகின்றன. மதச்சடங்குகள்

பறந்தோடுகின்றன. சமய நூல்கள் ஆரம்ப நிலை பக்தியிலிருந்து அது பிரித்தறிய முடியாத ஒன்றாக விளங்குகிறது. பக்தி முதிர்ந்த போது பக்தன் தேடாத போதே ஞானம் அவனிடம் வந்து சேர்கிறது.

இந்த உள்ளுணர்வின் கருதுகோளின் பயனாகப் பாரதியாரின் உயரிய பரிபக்குவ நிலையில் அவரை அறியாமலே எழுந்த பக்திப்பாடல்களின் ஊற்று, ஞானப் பாடல்களின் பெருக்கம் பெரும் கங்கையாகவே பிரவகிக்கிறது எனலாம். கம்பர், வள்ளுவர், இளங்கோ வைப் போற்றிய பாரதியாரின் வார்ப்புகள் நாடு, மக்கள், மொழி இவற்றையும் தாண்டி, உயிர், உலகம், இறைவன் என்ற பெருங்காப்பியப் பண்பைப் பேணிப்பாதுகாத்து எக்காலத்துக்குமுரிய மூலபண்டாரமாக விளங்குகிறது. முப்பெரும் பாடல்களில் ஒன்று கண்ணன் பாடல்கள். 23 தலைப்புகளின் கீழ் கண்ணபிரானை ஆழ்வார்களைப் போலப் பல கோணங்களில் நின்று பாவனை பண்ணியுள்ளார். முன்னைய பாடல்களிலும் ஆங்காங்கே தலைப்புகளில் கண்ணனை வாயாரப் பாடியுள்ளார். பக்திப் பாடல்களில் முதல் அமைந்திருப்பது புதுவையில் அவர் வழிப்பட்ட மணக்குளத்து விநாயகர் மேல் எழுந்த விநாயகர் நான் மணிமாலையாகும். எல்லாமே மரபு வழிப்பாடல்களாய் அமைந்துள்ளன. 40 பாடல்கள் அமைந்துள்ளன. அங்கேயும் புதுமை வழி நின்று விநாயகரை வழிபடும் பாங்கு மிக எளிமையாயும் புரட்சியாயும் மனதைக் கொள்ளை கொள்வதாயும் அமைந்துள்ளன.

வாழ்க புதுவை மணக்குளத்து
வள்ளல் பாத மணிமலரே
ஆழ்க உள்ளம் சலன மிலாது
அகண்ட வெளிக்கண் அன்பினையே
சூழ்க! துயர்கள் தொலைந்திடுக!
தொலையா இன்பம் விளைந்திடுக

வீழ்க! கலியின் வலியெல்லாம்!
கிருத யுகந்தான் மேவுகவே

புதியருஷியாவை வரவேற்ற புரட்சிக்கவி பாரதியார் இடிபட்ட சுவர் போலே கலி விழுந்தான். கிருதயுகம் எழுகமாதோ எனப்பாடின கருப்பொருளே இப்பாடலிலும் பளீச்சிட்டுச் ஜொலிக்கிறது. சத்திய யுகத்திலே மக்கள் சுபீட்சமும், சுகமும், மகிழ்ச்சியும் அடைய வேண்டுமென்ற வேட்கை இங்கே வெளிப்படக் காணலாம். இப்பாடலைப் படிப்பவர் உள்ளத்திலே வாழ்க அந்தணர் என்ற தேவார அமைப்பின் உணர்வு வரினும் வார்ப்பு புதுமை தட்டும் பாவம் நிறைந்திருக்கக் காணலாம்.

பாரதியாரின் பாடல்களிலே தாயுமாணார், ரவிவர்மா, வேல்ஸ் இளவரசர் போன்றவர்கள் இடம் பெற்றுள்ளனர். கம்பன், வள்ளுவன், இளங்கோ போற்றப்படுள்ளனர். வசனநடையிலே அப்பர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். குல சேகரரின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். பாடல்களிலே வடமொழிப் புலவர்களும் வலம் வரக்காணலாம். ஆயின் திருவாசகம் தந்தவர் பற்றித் தெரிந்து கொள்ள முடியாவிடினும் விநாயகர் நான்மணிமாலையில் இருபாடல்களில் திருவாசகப் படிவு புலப்படக்காணலாம்.

தவமே புரியும் வகையறியேன்
சலியா துறநெஞ் சறியாது
சிவமே நாடய் பொழுதனைத்தும்
தியங்கித் தியங்கி நிற்பேனை
நவமா மணிகள் புனைந்தமுடி
நாதா! கருணாலயனே! தத்
துவமா கியதோர் பிரணவமே
அஞ்சேல் என்று சொல்லுதியே

இப்பாடல் தவமே புரிந்திலன் (சதியம் 5) என்னும் திருவாசகப் பாடலின் சாயலுடைய தாய்த் தென்படுகிறது. கருணாலயன் என்ற சொற்பிரயோகம் புணர்ச்சிப்பத்தில் முதலாம் பாடலில் அமைந்த யோகம் போன்றிருப்பதையும் காணமுடிகிறது. இன்னோர் வெண்பா அன்றே என்றன் ஆவியும் உடலும் என்ற பாடலின் சாயல் நிறைந்து தொனிக்கிறது.

உனக்கே என் ஆவியும் உள்ளமும் தந்தேன்
மனக்கேதம் யாவினையும் மாற்றி – (எனக்கே நீ)
நீண்டபுகழ் வாணார் நிறைசெல்வம் பேரழகு
வேண்டுமட்டும் ஈவாய் விரைந்து (33)

காந்தி அடிகள் 120 வயது வாழ்வேன் என்று சத்திய சோதனை செய்தார். ஆனால் காலன் விநாயக் கோட்ஷே வடிவில் வந்து உயிரைக் குடித்தான். அவருடைய ஞானதீட்ஷண்யம் மக்களுக்காகத் தொண்டு செய்வதும் பழுத்த அனுபவம் பெறுவதும் ஆகும். தொண்டரடிப் பொடி ஆழ்வார் வேத நூல் பிராயம் நூறு மனிதர் தாம்பு குவரேனும் எனப்பாடினார். பாரதியாரும் தனக்கும் செல்வத்தையும் 100 வயத்தையும் வேண்டினார். ஆனால் 39 வயதின் மேல் அவருக்கு வாழக் கொடுத்து வைக்கவில்லை.

எனக்கு வேண்டும் வரங்களை
இமைப்பேன் கேளாய் கணபதி
மனத்திற் சலன மில்லாமல்
மதியில் இருள் தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலை வந்திட நீ செயல்வேண்டும்
கணக்குஞ் செல்வம் நூறுவயது
இவையும் நீ தரக் கடவாய்

காலைப் பிடித்தேன் கணபதி நின்பதம் கண்ணிலொற்றி நூலைப்பலப் பலவாகச் சமைத்து என வேண்டிய பாரதி எங்கும் கவிப் பெருமையால் தன் புகழ் நிலநாட்டப்பட வேண்டுமென்ற உறுதியை இறைவனிடமும் விண்ணப்பம் செய்யாமல் இல்லை.

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றுஞ் செய்

பக்திப்பாடல் பதிக்கத்திலே பதிக்கப்பட்ட இருபாடல்களை அனுபவிப்போர் எவரும் மறந்து விடமுடியாது என்று பராசக்திக்கு விண்ணப்பம். மற்றது முத்துமாரிப்பாட்டு.

மோகத்தைத் கொன்றுவிடு - அல்லா லென்றன்
மூக்சை நிறுத்திவிடு
தேகத்தைக் காய்த்துவிடு - அல்லா லதில்
சிந்தனை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு - அல்லா லென்றான்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத் திருந்துலகம் இங்குள்ளன
யாவையும் காப்பவளே.

பந்தத்தை நீக்கிவிடு - அல்லாலுயர்ப்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு - அல்லாலிதைச்
செத்த உடலாக்கு
இந்தப் பதர்களையே - சொல்லாமென
எண்ணி இருப்பேனோ
எந்தப் பொருளிலுமே - உள்ளே நின்ற
இயங்கி இருப்பவளே!


-திருச்சிற்றம்பலம்-

தன்னேர் இலாத தமிழ்

" ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனி ஆழி வெங்கதிர் ஒன்று; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்".
- பழம்பாடல் -



குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதசித்தர் சிவன்



குயின்ஸ்பரி கோயிலோடுறையும்
கோவிந்தசாமி பூசகர்




திரு. இரா. இராஜகோபால் அவர்கள்,
திருமதி என். பரமசாமி அவர்கள்,
திரு. எஸ். தில்லைநாதன் அவர்கள்

சுவாமி தந்திரதேவா அவர்கள்,
திரு. க. கந்தசாமி அவர்கள்,



முருகனாலயமும் ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயமும்



குயின்ஸ்பரியிலுள்ள பிரமாண்டமான தேயிலைத் தொழிற்சாலை




மகாகும்பாபிஷேகத்திற்குரிய தீர்த்தக் குடம் எடுக்கும்
பெண்களும் அடியார்களும்



பால்குடம்



சுவாமி தந்திரதேவா அவர்களை
வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
அவர்கள் மலர்மலை சூட்டி வரவேற்கும் காட்சி



திருக்குட முழுக்கு வைபவத்திற்குக் திருக்குடம்
எடுத்துச் செல்லும் காட்சி



தைப்பொங்கல் [1993]



தைப்பொங்கல் [1997]
அறங்காவலர் இரா. இராஜகோபால் சித்தரின்
திரு உருவப்படத்தைத் தேரடிக்கு எடுத்துச் செல்கிறார்.




திரு. எம் ஜெயராம் முன்னாள் அறங்காவலர்
திருமதி ஜெயராம் செல்வி. ரேவதி ஜெயராம்
பாலாபிஷேகத்தின்போது - 1983



திருப்பணி கமிட்டி சபைத்தலைவர் இறைபணிச்செம்மல்
எஸ். முத்தையாப்பிள்ளை J.P அவர்கள்
செல்வி ரேவதி ஜெயராம்
திரு நெறிய தமிழிசை செல்வர் வி. என். தில்லைநாதன் அவர்கள்
[பூர்ணாகுதி வைபவம் 1997]




நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைக் குயின்ஸ்பரியில் நிறுவ அனுமதித்த ஸ்ரீ நவநாதசித்தர் பரம்பரை அறங்காவலர்



நவநாதசித்த சிவனின் அறங்காவலர் இரா. இராஜகோபால் அவர்கள்



ஸ்ரீ மத் தந்திரதேவா சுவாமி
திருமதி சந்திரபவானி பரமசாமி
வாகீசகலாநிதி கனக. நாகேஸ்வரன்
திரு. சிவலோகநாதன் [இந்துசமயப் பேரவை, திருகோணமலை]



"சித்தன் உருவும் பக்தன் உருவும்"




குயின்ஸ்பரியல் வாகீசகலாநிதி கனகசபாபதி
நாகேஸ்வரன் திருமுறைப் பண்ணிசை



மகா கும்பாபிஷேகம் - ஆலயத்திற்கு வருகை தரும்படம் 1997
ஸ்ரீ மத் சுவாமி சுந்திரதேவா, திருமதி பரமசாமி திரு. கனக நாகேஸ்வரன், திரு. இராஜகோபால்



திரு. வி. என். தில்லைநாதன் அவர்கள் - நாவலப்பிட்டி



திரு. சுந்தரலிங்கம் - [அன்பு இல்லம்] திருகோணமலை



சுவாமி தந்திரதேவா அவர்கள் சொற்பொழி வாற்றுகின்றார்.
அருகில் திருமதி பரமசாமி



மும்மூர்த்தியின் பின்னணியில் நெஞர் ஸ்ரீ சதாசிவப்பிரும்மேந்திரர் அவர்கள்



குயின்ஸ்பரி தோட்ட கமிட்டியும் பரம்பரை அறங்காவலர், பூசகர்,
சமயப் பிரசாரகர் ஆகியோர்களும்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஓம் நவநாதம்!

# நன்றிக்குரியவர்கள்



எமது திருக்கோயிலின் ஜீர்ணோத்தாரண – அஷ்டபந்தன மகாகும் பாபிஷேகம் வெகு சிறப்பாக நிகழ்ந்தேறுவதற்கு உறுதுணை புரிந்த எல்லாம் வல்ல குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாதசித்தர் சிவன் அருளையும், பாலசுப்பிரமணிய சுவாமி (ஸ்ரீ தேவசேனாபதி) அருளையும் புதிகாக பிரதிஷ்டை செய்த ஸ்ரீ நாகபூஷணியம்பாளின் கருணையையும், அருளையும் நினைந்து நெகிழ்ந்து வியந்து மகிழ்கின்றோம். எல்லாம் வல்ல திருவருளுக்கு முதற்கண் நன்றி.

திருக்கோயில் கட்டிடச் சீர்த்திருத்தங்களைச் செய்த சிற்ப, சித்திர, ஓவிய, விக்கிரவியற் கலை நிபுணர் திரு. மயில்வாகனம் குழுவிற்கு எமது நன்றி.

திருக்குடமுழுக்கினை 19.11.1997 அன்று வெகு விமரிசையாக நிகழ்த்தி வைத்த சிவ ஸ்ரீ பிரேமகாந்தக் குருக்கள், கிரியா சிரோரத்னம் ஸ்ரீ இராமநாத ஸ்ரீ தரக்குருக்கள் இணைந்து பங்கு பற்றிய ஏனைய சிவாச்சாரிய குருமணிகளுக்கும் திருக்கோயிலின் பிரதம தேசிகர் திரு ஆறுமுகம் கோவிந்தசாமி குடும்பத்தினருக்கும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். 48 நாட்கள் மண்டலாபிஷேக கிரியை செய்து வந்த கிரியாமணி பிரம்ம ஸ்ரீ அ. சந்திரசேகர சர்மா நாவலப்பிட்டி அவர்களுக்கும் நன்றியுரித்தாகுக.

இக்கும்பாபிஷேகம் எல்லாவகையிலும் சிறப்புற நடைபெறுவதற்கு முன்னின்று பணியாற்றி ஒத்துழைப்பும் உதவியும். நல்கிய மகாகும்பாபிஷேக கமிட்டி தலைவர் இறைபணிச் செம்மல் ஸ்ரீமான் முத்தையாபிள்ளை J.P. அவர்கள் பெருமைக்கும், பாராட்டுதலுக்குமுரியவர். புலவர் விசாலாட்சி அம்மையார் தனது முதுமையிலும் குளிரையும் பார்க்காது அருள் இசைமழையும் சொற்பொழிவும் செய்து ஆலயத்தையும் மக்களையும் பரவசப்படுத்தியமைக்கு எமது நன்றி.

அறநெறி பாடசாலை ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை சங்காபிஷேகம் வரை பஞ்சபுராணம் பாடி தினமும் பண்ணிசை வகுப்பும் நடாத்தி அருள்மழை பொழிந்த ஆசிரியை திருமதி கனகலெட்சுமி அவர்களுக்கும் எங்களது பாராட்டுகளும் நன்றியும். மகாகும்பாபிஷேகக்குழு ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரை எமது மத்தியில் எல்லாவிதத்திலும் அறிவுரையுடனும் தானும் பங்கேற்று மழை வெய்யில் என்று பாராமல் ஒத்துழைப்பும் உடலுழைப்பும் நல்கிய திரு. கந்தசாமி ஆசிரியர் J.P. என்றும் எப்பொழுதும் நன்றிக்குரியவர். பத்திரிகைகளில் அவ்வப்போது செய்திகள் வெளியிடச் செய்த நிருபர்களாகிய திரு. பெ. இராமானுஜம், திரு. பொன்னுத்துரை J.P. அவர்களுக்கும் எமது நன்றி. புனருத்தாரன ஆரம்பகாலத்தில் பொருளுதவிக்கு உறுதுணை புரிந்த முன்னாள் செயலாளர் (முத்துமாரியம்மாள் தேவஸ்தானம்) உயர் திரு. இராமதாஸ் அவர்களுக்கும் என்றும் எமது நன்றி. மகாகும்பாபிஷேக செய்திகளையும், கும்பாபிஷேகத்திற்கு பிரத்தியேகமாக வருகை தந்து இலங்கை வானொலியில் ஒலிபரப்பிய திரு. உருத்திராபதி, திரு. மயில்வாகனம், சிவ ஸ்ரீ அபர்ணாசுதன் மற்றும் அனைவருக்கும் எமது நன்றி.

ஆலயதரிசனம் நெஞ்சிற்கு நிம்மதி என்ற வகையில் பண்ணிசை பாடி, அறிவுரை வழங்கியும் மக்களை தம்வசப்படுத்திய திருநெறிய தமிழிசைச் செல்வர் திரு. வி.என். தில்லைநாதனுக்கும் நன்றி.

புனராவர்த்தனம் ஆரம்பித்தகாலம் தொட்டு அயராது ஆலய திருப்பணிகளில் தம்மை அர்ப்பணித்த இளம் துடிப்புள்ள சிவத்தொண்டர்களாக இறைபணிக்காகவும், காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்றும் அயராது பாடுபட்ட குயின்பரி இளவல்கள் திருவாளர்கள் கணேசன், விஜயராஜ் வையாபுரி, நமநாதன் ஒலிபெருக்கி உரிமையாளர் குருநாதன் மற்றும் செயற்குழுவினர் அனைவர்களுக்கும் என்றும் எனது நன்றி.


எமது வேண்டுகோளை தெய்விகமுடன் எதுவித மறுப்பும் தெரிவிக்காமல் வருகைதந்து சிறப்புச் சொற்பொழிவு செய்து எழுந்தருளி உற்சவமூர்த்தி விக்கிரகம் தருவிப்பதற்கு நன்கொடையளித்தும் தனது பல வேலைகளையும் விட்டு எங்களது அறிவித்தல் கிடைத்ததும் உடன் பதிலளித்து தொடர்பு கொண்டுவரும் அமெரிக்கத் துறவி ஸ்ரீமத் தந்திரதேவா சுவாமி அவர்களுக்கும், சுவாமியுடன் வருகைதந்தும், வழிபாட்டில் ஈடுபட்டும் தங்களுடைய பணி இறைபணி என்ற கருத்துடன் ஒத்துழைப்பு நல்கிய திருமதி சந்திரபவானி பரமசாமி B.A. (Hons) அம்மா அவர்களுக்கும் நன்றி நல்கின்றோம். மற்றும் தோட்டத் துரை தி. அர்னோல்டா அவர்களின் உதவிக்கும் மற்றும் தோட்ட உத்தியோகத்தர்கட்கும் எங்களது நன்றி.

எனது தகப்பனாரால் கடந்த 15 வருடமாக பாலஸ்தாபனம் செய்யப்பட்டு நிறைவேறாமலிருந்து 19.11.1997 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற எனது தந்தையின் அபிலாஷையை நிறைவேற்றி நவநாதசித்தர் என்ற நூலுக்கு வேண்டிய ஆதாரங்களை ஆராய்ந்து சித்தரின் வரலாறும் வெளிவரச்செய்தவர் ஆழ்கடலான். அவரது பக்தியும் ஆய்வும் எமது ஆலயத்துக்கு என்றென்றும் பெருமை சேர்ப்பன. அவருக்கு எமது மனமார்ந்த நன்றி.

(நவநாதம்) பதிப்பாசிரியரும் ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயத்திற்குக் காலடிவைத்த நாட்தொட்டு இன்றுவரை இனி மேலும், சிவதொண்டனாக, பண்பாளராக, பணிப்பாளராக, திருநெறிய செந்தமிழ்ச் செல்வராக, பண்ணிசை, சொற்பொழிவு, பேருரை, அறிவுரை வழங்கி நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மனின் விக்கிரகத்தை நிறுவதற்கு ஆலோசனைபெற்று நிறுவியும், நிதியில் முக்கிய பங்கேற்று, அன்னதானம் சிறப்புற நடைபெறுவதற்கும், இக்கும்பாபிஷேகம் நடைபெறவும் முதுகெலும்பாக உழைத்தும் சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற முன்னின்று உழைத்தும் உறுதுணை புரிந்த வாகீச கலாநிதி கனக நாகேஸ்வரன் M. A. (முதுநிலை விரிவுரையாளர், சப்ரகமுக பல்கலைக்கழகம் பெலிகுல்லோயா) அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் என்றும் கடமைப்பட்டுள்ளோம். குயின்ஸ்பரி மக்கள் அவரது தொண்டினை மறக்கமாட்டார்களென நம்பி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாராவது தவறுதலாக மறக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள்வதோடு ஸ்ரீ நவநாத சித்தர் சிவனதும், ஸ்ரீ தேவசேனாபதி சுவா மியினதும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளினதும் பரிபூரணமான திருவருள் கிடைக்கவேண்டுமென்ற திருவடிகளைத் தொழுது வாழ்த்தியமைக்கின்றோம்.

இவ்வண்ணம்
**ஜெயராம் பத்மநாபன்**
அறங்காவலரும் இளையாழ்வாரும்
27.12.1997



619

உ
சிவமயம்
ஓம் நவநாதம்



திருச்சிற்றம்பலம்

"விழிக்குத்துணை திருமென் மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத்துணை அவன் பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே"

(கந்தரலங்காரம்)

திருச்சிற்றம்பலம்

Printed by: Luxmi Printer - 195, Wolfendhal Street, Col-13. Tel: 330588, 448545